# JOURNAL OF TAMIL PERAIVU

*Volume 2*

**Chief Editors:**

Professor Dr. M. Rajantheran
Kizhambur S.Sankara Subramanian.

**Editors:**

Dr. Mohana Dass Ramasamy (Malaysia)
Dr. K.Srinivasan (India)
Dr. Jeevendiren Chemen (Mauritius)
Mr. Raja Ganesan Viknarasah (Australia)
Dr. Seethalakshmi (Singapore)
Prof. V.Maheshwaran (Sri Lanka)
Mr.Vasu Aranaganathan (Pennsylvania)

December 2015

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.

ISSN: 2289-8379

**தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்**
**தொகுதி 2**

**முதன்மை ஆசிரியர்கள்** : பேராசிரியர் முனைவர் மு. இராசேந்திரன்
கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன்

**வெளியீடு** : இந்திய ஆய்வியல் துறை
கலைப் புலம் மலாயாப் பல்கலைக்கழகம்
50603 கோலாலும்பூர், மலேசியா.

© இந்திய ஆய்வியல் துறை மலாயாப் பல்கலைக்கழகம் 2015.
இந்த ஆய்விதழ் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் பதிப்புரிமைக்குட்பட்டது. இந்த ஆய்விதழையோ அல்லது அதன் எந்த ஒரு பகுதியையோ இந்திய ஆய்வியல் துறையின் அனுமதி இல்லாமல் எந்த ஊடகத்திலும் எவ்வகையிலும் மறுபதிப்பு செய்தல் அல்லது படியெடுத்தல் கூடாது.

**அச்சுப்பதிப்பு** : மாஸ் டைப்போகிராப்பிக்ஸ், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**கட்டுரைகள் சேகரிப்பு** : தேஜஸ் ஃபவுண்டேஷன், சென்னை - 61.

**விலை** : USD 5

**JOURNAL OF TAMIL PERAIVU**
*Volume 2*

Chief Editors : Professor Dr. M. Rajantheran
Kizhambur Sankarasubramanian

Publisher : Indian Studies Department,
Faculty of Arts and Social Science’s,
University of Malaya,
50603, Kuala Lumpur, Malaysia.

© Department of Indian Studies, University of Malaya, 2015.
All rights reserved. No part of this Journal may be reproduced in any form or by any means without publisher’s permission.

Printed at : Mass Typographics, Chennai,
Tamilnadu, India

Collection of Articles : Thejas Foundation, Chennai -61.

Price : USD 5

பொருளடக்கம் பக்கம்


1. வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி.....7
கிங்ஸ்டன் பால் தம்புராஜ் - கார்த்திகேஸ் பொன்னையா

2. பாரதியார் படைப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக் கோட்பாடுகள் ஒரு பார்வை.....14
பார்வதி வெள்ளைச்சாமி

3. சங்க இலக்கிய ஆய்வுகளில் குறீட்டுக் கோட்பாடு.....23
மு.இராசேந்திரன் - க.சில்லாழி

4. சிலப்பதிகாரத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் பங்கு.....33
இரவீந்திரன் ராமையா - ஆறுமுகம் சின்னசாமி

5. சங்க இலக்கியமும் ஆறு செயல் காலணிகள் கோட்பாடும்.....42
செல்வ சுப்ரமணியம் ராமையா - மு.இராஜேந்திரன்

6. மலேசியத் தமிழ்மொழிப் பாடப் புத்தகங்களில் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாட்டுத் தாக்கம்.....51
சாமிக்கண்ணு ஜெபமணி த/பெ ஈசாக்கு சாமுவேல்

7. சுவாமி விவேகானந்தர் மகாகவி பாரதியார் கூறும் பெண்களுக்கான அறிவுரைகள்.....57
முனைவர். தெ.வாசுகி

8. கம்பனிடம் கற்கத்தகு உறவல்லா உறவுகள்.....63
முனைவர் ஆ.முருகானந்தம்

9. திருமுறைகளில் இயற்கை வருணனை.....69
க.துரியானந்தம்

10. திருக்குறளும் மலேசியத் தேசியக் கோட்பாடும் - ஒரு பார்வை.....80
பரமசிவ முத்துசாமி - கயல்விழி தர்மலிங்கம் - உமா மதுபாலன்

11. மலேசிய நாவல் ஆளப்பிறந்த மருதுமைந்தன் - தனித்தன்மைகள்.....89
டாக்டர். வே.சபாபதி

# முகவுரை

**த**மிழ்ப் பேராய்வு ஆய்விதழின் இரண்டாம் தொகுதியாக இவ்விதழை மலாய்ப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. ஒரு ஆண்டுக்கு இரண்டு ஆய்விதழ்கள் வெளியிடப்படும். பல நாடுகளில் உள்ள தமிழ் அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து ஆய்விதழாக வெளியீடு செய்கிறோம்.

இவ்ஆய்விதழில் மொத்தம் 11 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தற்காலத்தில் ஆய்வு என்பது அறிவியல் ரீதியாகவும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளும்படியாகவும் இருக்க வேண்டும். எனவே, ஆய்வுக்கட்டுரைகளை மதிப்பீட்டாளர்களுக்கு அனுப்பி மிகச்சரியான திருத்தங்கள் செய்து இவ்ஆய்விதழில் கட்டுரைகளை வெளியிட்டுள்ளோம். தமிழ் கூறும் நல்உலகம் இவ்ஆய்வேட்டினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

திருக்குறள் தமிழர்களின் வேதமாகப் போற்றப்படுகிறது. வள்ளுவர் கூறும் நட்பின் மறுக்கட்டமைதி என்னும் கட்டுரையை கிங்ஸ்டன் பால் தம்புராஜ் - கார்த்திகேஸ் பொன்னையா மிகச்சரியான உதாரணங்களுடன் எழுதியுள்ளார்கள். சமீபகாலத்தில் தமிழர்களால் பெரிதும் பாராட்டப்படக்கூடிய கவிஞனாக மகாகவி பாரதி விஸ்வரூபம் எடுத்து நிற்கிறார். பாரதியார் படைப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக் கோட்பாடுகள் ஒரு பார்வை என்னும் கட்டுரையை நல்ல தமிழில் பார்வதி வெள்ளைச்சாமி எழுதியுள்ளார்.

சங்க இலக்கியம் தமிழர்களால் பெரிதும் மதித்து பாதுகாக்கப்படுவதாகும். சங்க இலக்கியம் சம்பந்தமாக பல ஆய்வுக்கட்டுரைகள் வெளியாகியுள்ளன. ஆயினும் சங்க இலக்கிய ஆய்வுகளில் குறியீட்டுக் கோட்பாடு என்னும் இக்கட்டுரை பல விஷயங்களை நமக்குப் புலப்படுத்துகிறது. இக்கட்டுரையினை மு.இராசேந்திரன் - கா.சில்லாழி சுந்தரத் தமிழில் படைத்துள்ளனர். சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகும். மக்களின் மன வளர்ச்சிதான் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வித்தாக அமையும். சிலப்பதிகாரத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் பங்கு என்ற தலைப்பில் இரவீந்திரன் ராமையா - ஆறுமுகம் சின்னசாமி கட்டுரைப் படைத்துள்ளார்கள்.

மலேசியத் தமிழ்மொழிப் பாடப்புத்தகங்களில் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாட்டுத்தாக்கம் என்னும் கட்டுரையை சாமிக்கண்ணு ஜெபமணி படைத்துள்ளார். மலேசியத் தமிழ்ப் பாடப்புத்தகங்களைப் பற்றிய நுணுக்கமான ஆய்வு இது. பெண் விடுதலையையும், ஆன்மிகச் சிந்தனைகளையும் பற்றிய நிறையப் பேசியவர்கள் சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும் ஆவார்கள். பெண்களுக்கான அறிவுரைகளை சுவாமி விவேகானந்தர், மகாகவி பாரதியார் ஆகியோர் எவ்வாறு கூறியுள்ளனர் என்பதை தெ.வாசுகி எழுதியுள்ள கட்டுரை சுவைபட விளக்குகிறது.

இதிகாசங்களில் ராமாயணம் பலராலும் பக்தியுடன் படிக்கப்பட்ட காவியமாகும். இராமகாதையில் மனிதம், விலங்கினம், அசுர இனம் இம்மூன்று இனத்தோடும் ராமனின் உறவுகள் எப்படி அமைந்தன என்பதைக் கம்பனிடம் கற்கத்தகு உறவல்லா உறவுகள் என்னும் கட்டுரையை ஆ.முருகானந்தம் பாங்குடன் எழுதியுள்ளார்.

சைவர்கள் பெரிதும் போற்றிப் பாதுகாப்பது திருமுறைகள் ஆகும். திருமுறைகளில் பலவிதமான இயற்கை வர்ணனைகள் இடம்பெற்றிருப்பதை தக்க உதாரணங்களுடன் திருமுறைகளில் இயற்கை வருணனை என்னும் கட்டுரையை க.துரியானந்தம் எளிய தமிழில் எழுதியுள்ளார். மலேசியாவில் பலராலும் பெரிதும் விரும்பிப் படிக்கும் தமிழ் இலக்கியமாக திருக்குறள் உள்ளது. இதற்குக் காரணம் மலேசியத் தேசியக் கோட்பாடுடன் திருக்குறள் பலவிதத்திலும் இசைந்து போகிறது. பரமசிவ முத்துசாமி - கயல்விழி தர்மலிங்கம் – உமா மதுபாலன் எழுதியுள்ள திருக்குறளும் மலேசியத் தேசியக் கோட்பாடும் ஒரு பார்வை என்னும் கட்டுரை பலவிஷயங்களை நமக்குப் புரியவைக்கும்.

மலேசியாவில் பல நாவலாசிரியர்கள் சிறந்த நாவல்களைத் தந்துள்ளார்கள். மலேசிய நாவல் ஆளப்பிறந்த மருதுமைந்தன் பல தனித்தன்மைகளுடன் மிளிர்வதை வே.சபாபதி பல எடுத்துக்காட்டுக்களுடன் கட்டுரை ஆக்கியுள்ளார். ஒரு சுவையான நாவலின் தனித்தன்மைகளைப் பட்டியல் போட்டுள்ளார் இவ்ஆய்வாளர்.

தமிழ் மொழி பல பெருமைகளைக் கொண்டது. தமிழில் பல இலக்கியங்கள் நம் நெஞ்சைத் தொடுவதாக அமைந்துள்ளன. அவ்விலக்கியங்களில் உள்ள பன்முகத் தன்மைகளை ஆய்வாக பல பல்கலைக்கழகங்களில் பல அறிஞர் பெருமக்கள் மேற்கொண்டு வருகிறார்கள். நல்ல தரமான ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்துத் தந்து உங்களை மகிழ்விக்க வேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணம். இவ்வாய்விதழ் வெளிவர உதவியாக இருந்த அத்தனை நல்உள்ளங்களுக்கும் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியன்**
**முதன்மை ஆசிரியர்கள்**
**25.12.2015**

# வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி

## Reframing Valluvar's claim on Friendship

**கிங்ஸ்டன் பால் தம்புராஜ்** / Kingston Paul Thamburaj[1]

**கார்த்திகேஸ் பொன்னையன்** / Karthiges Ponniah[2]

**Abstract:**

Creative thinking skill looks for many possible answers rather than one. It allows making and creating suggestions. It will treat all ideas as if they may contain the seed of useful potential. Reframing is one among the four types in creative thinking i.e. Reframing, Mind mapping, Insight, and Creative Flow. Reframing opens up creative possibilities by changing our interpretation of an event, situation, behavior, person or object. Reframing changes the way we feel, which in turn changes our capacity for action. This makes powerful creative tool for changing our own lives and influencing other people. Here in this Paper creative frames are applied under the reframing which looks into the aspects of meaning, context, learning, humor, solution and etc. found in Tirukkua a well-known literary work written by Thiruvalluvar.

*Key Words: Behavior, Conventional Thinking, Creative Thinking, Habitual Thinking, Reframing, unplesant, Meaning, Context, Learning, Solution*

### முன்னுரை:

சிந்தித்தல் என்பது உள்ளத்தில் நிகழும் ஒரு செயல்முறை. தொடர் சிந்தனைகளின் மூலமாக நமக்கு எண்ணங்கள் பெறப்படுகின்றன. இந்த எண்ணங்கள் மொழியாகவும், கணிதம், ஓவியம், இசை எனப் பல வடிவங்களில் மாற்றம் பெறுகின்றன. அதே வேளையில், சிந்தனையானது நம்மிடையே / நம்மைச்சுற்றி மலிந்துகிடக்கின்ற வெளிப்புறத் தூண்டுதல்கள், சூழல்கள், திரட்டப்பட்ட தகவல்கள் போன்றவற்றிலிருந்து பெறப்படும் அறிவிலிருந்து பெறப்படுகின்றது என்பதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். "சிந்தனை வகைகளில் ஆக்கச் சிந்தனை என்பது அகவயத்தன்மைக் கொண்டதாகவும், உணர்ச்சி தன்மைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. மேலும், ஆக்கச் சிந்தனையானது கருத்துக்களை உருவாக்கும் தன்மை கொண்டதாகவும், உருவகப்படுத்தும் தன்மை கொண்டதாகவும், உவமைப்படுத்துதல், மற்றும் கருத்துக்களை இணைக்கும் தன்மை கொண்டதாகவும் திகழ்கிறது" (Michael Michalko, 2006).

"மறுகட்டமைதி என்பது ஆக்கச் சிந்தனை வகைகளில் ஒரு பிரிவாக விளங்குகிறது. இது முன்னமே வடிவமைக்கப்பட்ட ஒருவரின் எண்ணத்தில் / ஒரு படைப்பில், தான் கூறிய கருத்துகளை மீண்டும் ஒருமுறை / பலமுறை சீர்தூக்கிப் பார்த்து, அதனைச் செப்பனிடும் நடவடிக்கையாகும்" (Ernie Schenck, 2007). அத்தகு நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பல காரணிகள் துணை நிற்கின்றன. "நமது அன்றாட வாழ்க்கை சூழல், மாந்தர் நடத்தைகளில் வேறுபாடு, காலச் சூழ்நிலை போன்றவை இதற்குக்

[1]The author is a Lecturer in the Education University of Sultan Idris, Tanjug Malim, Malaysia. fkingston@gmail.com

[2]The author is a Lecturer in the Education University of Sultan Idris, Tanjug Malim, Malaysia. kartheges@fbk.upsi.edu.my

காரணங்களாகின்றன" (David Rock, 2009). இக்காரணங்களைத் தனது சிந்தனை பாதிப்பைக் கொண்டு, முன்னமே தான் கொண்டிருந்த எண்ணங்களை மாற்றி அமைத்து அதற்கு மற்றொரு கருத்தயோ அல்லது தீர்வையோ கூற ஒருவர் முயல்கின்றார். இதனையே மறுகட்டமைதி என்று கூறப்படுகிறது. அப்படிக் கருத்துகளை மறுகட்டமைதி செய்யும் பொழுது, அங்ஙனம் புதிய எண்ணங்கள் பதிவாகின்றன. அவ்வகையில் மறுகட்டமைதியின் வாயிலாக நடப்பியல் சிக்கல்களுக்கு மாந்தர்களையும் பொருட்களையும் கொண்டு புதிய தீர்வு கூறப்படுகிறது. காட்டாக, ஒரு காலச் சூழ்நிலையால் நாம் ஒரு மனிதரைப் பற்றி எண்ணும் நினைவுகளே அவரைப் பற்றிய கட்டமைதி ஆகும்.

அவரது செயல்கள் மாற்றத்திற்குட்படும் போது, அது கடினத் தன்மை கொண்டதாகவோ அல்லது விரும்பதகாத தன்மை கொண்டதாகவோ இருந்தால் அவரது செயல்பாடுகள் மீது நமக்கு ஏற்படும் தாக்கங்களே அனுமானம், இறக்கம், உணர்வு ஆகியவைகளாக வெளிப்படும். இதன் மூலம் அவர் ஏதோ ஒரு போராட்டத்தில் அல்லது சிக்கலில் உள்ளார் என்பதை நம் மனது சித்தரித்துக் கொள்ளும். இதுவே ஒருவரைப் பற்றிய நனது மறுக் கட்டமைவாக அமைகிறது. இம் மறுக் கட்டமைவுமை பொருள், சூழல், கற்றல், தீர்வு, என்று பல்வேறு கூறுகளாகப் பகுத்துப் பார்க்கலாம்.

## வள்ளுவரின் கட்டமைவும் மறுகட்டமைதியும்

தமிழர்களின் முதன்மையான நூல்களில் திருக்குறள் மிக முக்கியத்துவம் பெற்ற நூலாகும். அறம் பொருள் இன்பம் என்பவற்றை வலியுறுத்தி எழுந்த நூல் இது. இதில் வள்ளுவர் வாழ்க்கைக்கு உகுந்த கருத்துக்களை எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் வகையில் அமைத்துள்ளார். "உலக மொழியறிஞர்கள் பலர் எதை எதையோ முன்வைத்து அவற்றிற்கென இலக்கியங்களைச் செய்து தந்துள்ளனர். ஆனால் மனிதனை முன்வைத்து மனிதனுக்கென ஒரு தனி இலக்கியம் செய்து தந்தது வள்ளுவர் ஒருவரே" (விசுவநாதம், **1953**). ஒரு திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று முன்று பாலாக வகுக்கப்பட்டுள்ளது. இது மரபு வழிப்பட்ட சிந்தனையாகவும் பழக்க வழிப்பட்ட சிந்தனையாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனால், திருக்குறளை மிக நுட்பாமாக அறிவியல் அடிப்படையில் நோக்கும் போது அதன் மறுக் கட்டமைவு சிந்தனை நமக்கு நன்கு புலனாகுகிறது. மரபு வழிப்பட்ட சிந்தனையால் ஆன ஒரு நூல், ஒன்றைப் பற்றி முழுமையாய்ப் பார்ப்பதையும் சிந்திப்பதையும் தவற விட வாய்ப்பிருக்கிறது. அதுபோலவே, பழக்க வழிப்பட்ட சிந்தனை என்பதும் ஒன்றைப் பற்றி பல்வேறு கோணங்களில் பார்ப்பதைத் தவறவிட வாய்பளிக்கிறது. ஆனால், மறு கட்டமைவு சிந்தனையில் ஒன்றைப் பற்றி நோக்கும் போது அதில் அதில் பலநோக்குச் சிந்தனை வெளிப்பட்டு ஒரு முழுமை உணர்வு ஏற்படும். அவ்வகையில், திருக்குறளை நன்கு ஆராயும் போது அது மரபு வழி சிந்தனை, பழக்க வழி சிந்தனை என்ற அளவோடு நின்றுவிடாது மறுகட்டமைதி சிந்தனையுடனும் புனையப்பட்டுள்ளதை நம்மால் அறிய முடியும். எனவே, திருக்குறளின் பார்வை ஒரு பூரணத்துவப் பார்வை என தாராளமாகக் கூறலாம். (Nilanjana Bardhan, Mark P. Orbe, 2012).

## திருக்குறளின் அதிகார கட்டமைவு

திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்று பகுக்கப்பட்டு, அதில் நமது சமூக அமைப்பிற்கு மிக முக்கியத்துவம் பெறக்கூடிய ஒன்றான அறத்தை

*முதன்மைப்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது. வள்ளுவர் அறத்துப் பாலை 'இல்லறம், துறவறம் ஊழ்' எனப் பகுத்துள்ளார். இல்லறத்தில் வீட்டிலும் சமுதாயத்திலும் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களையும் கடமைகளையும் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. துறவறவியல் மனித வாழ்வின் முதிர்ந்த நிலையை விளக்கியுள்ளது. இறுதிச் சிறு பகுதியாக ஊழ் என்ற அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. ஊழ் அதிகாரம் உயிர்களால் ஆவது எதுவுமில்லை, நடப்பது நடந்தே தீரும் என்ற முடிவோடு நிறைவடைகிறது. ஆனால், திருவள்ளுவரின் மறுகட்டமைப்புச் சிந்தனை ஊழை எதிர்த்துப் போராடும் மனிதர்களை உருவாக்க விரும்புகின்றது.*

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞ்ஞற்று பவர் (ஆள்வினையுடைமை 620)**

*ஊழ் என்பது வெல்ல முடியாத ஒன்று என்பார்கள். ஆனால், சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்பவர்கள் அந்த ஊழையும் தோல்வி அடையச் செய்வார்கள் என்று ஊழ் குறித்துத் தன் எண்ணத்தை மாற்றி "பொருட் பாலை" அமைகின்றார். பொருள் என்பது செல்வத்தை மட்டும் குறிப்பதன்று. வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் அதனுள் அடங்கும். அரசன், அரசாட்சி, பொருளாதாரம், நிர்வாகம், குடிமக்கள் அவர்களது பண்புகள் என்று பொருட்பால் கட்டமைக்கப்பட்டிருந்தாலும் இவ்வமைப்பின் மீது அவருக்கு அதிருப்தி உணர்வே ஏற்படுகின்றது. தான் கட்டமைத்த குறட்பாக்கள் மனித குலத்தை வளப்படுத்தும் என்ற நம்பிக்கை அற்ற உணர்வைப் பொருட்பாலின் இறுதி குறட்பாக்களைக் கொண்டு நாம் அறியலாம். பொருட்பாலை இயக்கிச் செல்லும் திருவள்ளுவர், சமுதாயத்தில் முரண்பாடுகளையே சந்திக்கின்றார்; பெரியோரைத் தேடி போகின்றார், சிரியோரே வந்து சேர்கின்றனர். நல் நட்பை நாடிச் செல்கின்றார், ஆனால் கிடைத்ததோ தீ நட்பு; செங்கோண்மையைத் தேடிப் போகின்றார், கிடைத்ததோ கொடுங்கோண்மை. இந்த அவல நிலை திருவள்ளுவரைக் கடுமையாகப் பாதித்துள்ளது. அதனால், பொருட்பால் முடிவில் ஆற்றாத மானுடத்தைத் திட்டுகிறார்.*

**ஏவவும் செய்கலான் தான் தேறான் அவ்வுயிர்**
**போஒம் அளவும் ஓர் நோய் (புல்லறிவாண்மை 848)**

**சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்**
**கொல்லப் பயன்படும் கீழ் (கயமை 1078)**

*என்றெல்லாம் கடிந்து பேசுகின்றார் என்று குன்றக்குடி அடிகளார் தன் கருத்தை முன்வைக்கிறார் (குன்றக்குடி அடிகள், 2007). இதன் கட்டமைவிலிருந்து விலகி ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கினால் தான் ஒரு தன்னிகரற்ற நலமான சமூகத்தைக் காண முடியும் என்று வள்ளுவர் சிந்தித்து இன்பத்துப் பாலைப் படைத்திருக்க வேண்டும். இதனைக் குன்றக்குடி அடிகளார் "இன்பத்துப் பாலின் அடிப்படை நிகழ்வுகளை இல்லறவியலில் கூறியுள்ளார் வள்ளுவர்; அங்ஙனம் கூறியவை இல்லற வாழ்வின் செயல்முறைகளும் கோட்பாடுகளும் ஆகும். காமத்துப்பாலில் சொல்வது காதலின் சிறப்பு - காதலர்களின் அகநிலை, புறநிலைக் கடமைகள் ஆகியனவாம். காமம் சார்ந்த வாழ்க்கை அருமையானது, பொறுப்புகள் மிகுதியும் உடையது. காதல் வாழ்க்கையில் எல்லோரும் சிறப்படைய முடியாது, சிலரே வெற்றி பெற இயலும்.*

**மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**

**செவ்வி தலைப்படு வார் (புணர்ச்சி விதும்பல் 1289)**

என்பது திருக்குறள். பொருளும் அறமும் சிறக்க நன்மக்கள் தேவை" என்று கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது (குன்றக்குடி அடிகள், 2007).

## திருக்குறளில் நட்பு மறுகட்டமைதி

நட்பு என்பது இரு மனிதர்களிடையில் உணர்வு அடிப்படையில் ஏற்படும் ஓர் உறவு ஆகும். சமுதாய வாழ்வில் மட்டுமின்றித் தனிமனித வாழ்வுக்கும் இன்றியமையாத ஒன்றாய், என்றும் நின்று நிலவிடும் நீர்மையும் சீர்மையும் பெற்று ஒளிர்வது நட்பு. நட்புச் செய்யாத மானிடர் இப்புவியினில் இல்லை. ஒவ்வொருவர் வாழ்விலும் நட்பு சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. நட்பில் நல்துணையாய், துன்பக்கடல் கடக்க உதவும் புணையாய், விழியைக் காக்கும் இமையாய், வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளியாய் விளங்குபவரே நல்ல நண்பர்கள். நண்பர்களுக்கு இலக்கணம் கூற வந்த பழந்தமிழ் நூலாகிய இறையனார் களவியலுரை 'சாவின் நோவின் நோதல்; பிரிவு நனி இரங்கல்; நன்பொருள் கொடுத்தல்" என்றெல்லாம் நட்பைப் பற்றிக் கூறிச் செல்கின்றது. இதனையே,

**முகநக நட்பது நட்பன்று ; நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு (நட்பு 786)**

முகமும் முகமும் மகிழ்ந்து விடுவது மட்டும் நட்பாகி விடாது. நெஞ்சமாகிய அகமும் அகமும் ஒத்து மகிழும்படி பொருந்துகின்ற உறவுதான் நட்பு என்கின்றார் திருவள்ளுவர். நட்பில் இருவரிடையும் ஒத்த உணர்ச்சி இருத்தல் வேண்டும். அந்த ஒன்றே நட்புக்கு வேண்டிய உரிமையைத் தரும்.

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும் (நட்பு 785)**

என்கிறார் வள்ளுவர். இதே கருத்தைக் கம்பரும்,

**தொல்லருங் கால மெல்லாம் பழகினும் தூய ரல்லார்**
**புல்லல ருள்ளம் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞானறே**
**ஒல்லை வந்துணர்வு மொன்ற இருவரு மொருநிளுற்ற**
**எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்**
**(கம்ப. விபீடணன், 123)**

என்று கூறுகிறார். மனம் ஒன்றுபடாத நிலையில் நட்பு மலர்வதில்லை. அது மலர்ந்து மணம் பரப்புதற்கு ஒத்த உணர்ச்சி தேவை என்பதை வள்ளுவர் நன்குணர்ந்து கூறியுள்ளார் (அருள்செல்வன், இணைய கட்டுரை). ஆக, ஒத்த உணர்ச்சியே நட்பு என வள்ளுவர் துணிந்து நட்புக்கு இலக்கணம் வகுத்துள்ளார். "ஒரு மனிதன் தன்னைப் போன்ற பிற மனிதர்களிடம் எப்படிப் பழக வேண்டும் என்பதைத் துருவி ஆராய்ந்து நட்பு, தீ நட்பு, கூடா நட்பு, பழைமை, நட்பாராய்தல், சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைக்கோடல், ஆகிய ஏழு அழகிய தலைப்புகளில் எழுபது குறள்களை எழுதியுள்ளார்" (கி.ஆ.பெ.விசுவநாதம் 1953). அவர் நட்பை நட்டல் (குறள்,784) என்றும் அவர்

குறிப்பிடுகிறார். நண்பர்களைப் பண்புடையாளர் (குறள்,783), நட்டார் (குறள்,805), கிளைஞர் (குறள்,796), பழைமை (குறள்,801) போன்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளார். மகிழ்ச்சியின் நெஞ்சத்தோடு மட்டுமல்லாது துன்பம் நேரிடும்போது உதவுபவர்தான் நண்பர் என்பதை "உடுக்கை இழந்தவன்" (குறள்,788) என்ற குறளின் வழி உணர்த்துகிறார். துன்ப நேரத்தில்தான் உண்மை நண்பர்களை நாம் அறிந்துகொள்ள இயலும் என்று "அழிவின் கண் அல்லல் உழப்பதாம் நட்பு" (குறள்,787) என்று கூறி நட்பு சார்ந்த தனது எண்ணத்தை மறுகட்டமைதி செய்கிறார் வள்ளுவர். இன்ப நேரத்தில் உடனிருந்து துன்பப்டுவதே நட்பின் உண்மை என்று நட்புக்குப் புது இலக்கணம் இங்கு கூறுகிறார்.

## மறுகட்டமைதியில் பொருள்

மறுகட்டமைதியில் பொருள் என்பது உண்மை பொருளை விளக்க முயல்வது அல்லது உணர்த்துவது. அவ்வகையில் நட்பை பற்றி வள்ளுவர் உரைக்கும் உண்மை பொருளை பின்வரும் எடுத்துக்காட்டின் வழி உணரலாம். "செயற்கரிய யாவுள" (குறள்,781) என்ற குறளில் காரியத்திற்குச் சிறந்த பாதுகாப்பு நல்ல நட்பு என்று கூறும் வள்ளுவர், நட்பு தொடர்பான தனது மறுகட்டமைதி சிந்தனையில் "கனவினும் இன்னாது மன்னோவினை வேறு" (குறள்,819) சொல் வேறு செயல் வேறு என்று நடத்தையுள்ள நட்பு கனவிலும் துன்பம் தரும் என்று கூறி நட்பு குறித்த பொருளை விளக்குகிறார். "சொல் வேறு செயல் வேறு பட்டவர்களுடைய கூட்டுறவிலிருந்து விலகு; உடனே விலகு! ஏனெனில் அது நல்வாழ்விற்கு ஏற்றதொரு நல்ல வழி என்று இக்குறளுக்கு விளக்கம் கொடுத்துள்ளார் விசுவநாதன் கி. ஆ.பெ.( விசுவநாதன் கி. ஆ.பெ,1999)

## மறுகட்டமைதியில் - சூழல்

எச்சூழலில் இது பயன்பாடுடையதாகிறது என்பதைக் கூற விழைவதே மறுகட்டமைதியில் சூழலாகும். அவ்வகையில் சூழலியல் அடிப்படையில் நட்பைப் பற்றி ஆராயும் விடத்து பின்வருவனவற்றைச் சான்றாக விளக்குகிறார். "வினைக் கரிய யாவுள காப்பு" (குறள்,781) எனும் குறளில் காரியத்திற்குச் சிறப்பான பாதுகாப்பு நட்பு என்று கூறுகிறார்; அதுவே, "மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு" (குறள்,784) என்ற குறளில் நண்பன் குற்றம் செய்யும் சூழலில் இடித்துக் கூறுவதும், "அழிவின் கண் அல்லல்" (குறள்,787) துன்பம் நேர்ந்தால் விலக செய்வதும், "ஒல்லும் வாய் ஊன்றும் நிலை" (குறள்,789) உதவி தேவைப்படும் போது உதவி செய்ய வேண்டும் என்றும் நட்பின் பயன்பாட்டைக் கூறுகிறார்.

## மறுகட்டமைதியில் - கற்றல்

நாம் கற்றுக் கொண்ட கருத்து அல்லது பாடம் யாது என்பதை விளக்க முயல்வதே மறுகட்டமைதியில் கற்றல் ஆகும். அவ்வகையில், நட்பு தொடர்பான தனது கருத்தை எளிய உதாரணங்களுடன் கூறுகிறார். நல்ல நட்பு காலத்திற்கும் நன்மை பயக்கும் அது பிறை சந்திரனைப் போல் வளரும் என்றும் "நிறை நீரவர் கேண்மை" (குறள்,782 ), "நவில் தொறும் நூல்நயம் போல" (குறள்,783), அறிவு நிறைந்த ஒரு நூல் போன்றது என்றும் நட்பு தொடர்பாகக் கூற விழைகிறார் வள்ளுவர். கள் குடிப்பது போன்று களிப்புண்டாக்கக் கூடிய நட்பு நல்ல குணம் இல்லா விடின் அந்த நட்பு நமக்குத் தேவையற்றது என்பதைப் "பருகுவார் போலினும்" (குறள்,811) என்று தான் கற்ற பாடத்தை

நிலை நாட்டுகிறார் வள்ளுவர்.

### மறுகட்டமைதியில் - தீர்வு

யாது செய்ய வேண்டும், இதற்கான தீர்வுதான் என்ன போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக அமைவது மறுகட்டமைதியில் தீர்வு என்பதாகும். ஒரு நல்ல நட்பு நிலைத்திருக்க வேண்டும் எனில் ஒருவருக்கொருவர் உதவி பெற்றிருந்தால் எவரிடமும் அதனைச் சொல்லாமல் இருப்பதே நல்ல நட்பின் அடையாளம். இதனை "இவர் எமக்கு இன்னம்யாம் என்று" (குறள்,790) ஆராய்ந்து அறிந்து நட்பு கொள்ள வேண்டும். அவ்வாறு ஆராயாமல் கொண்ட நட்பு குற்றமுடையதாக இருந்தால் அதனைப் பொறுத்துக்கொள்ளவும் வேண்டும் "நாடாது நட்டலின்" (குறள்,791) "ஆய்ந்தாய்ந்து" (குறள்,792) என்று கூறுகிறார். வெளித்தோற்றத்திற்கு நண்பரைப்போல் நகைமுகம் காட்டி மகிழ்ந்து உள்ளுக்குள் பகையுணர்வுடன் இகழ்பவரின் நட்பை, நலிவடையுமாறு செய்திட நாமும் அதே முறையைக் கடைபிடிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

### முடிவுரை

மறுகட்டமைதி என்பது நாம் கூறியவற்றைச் சரி செய்வது அல்லது மீள் பார்வையிடுவது; மறுகட்டமைதி என்பது அறிவார்ந்த பயிற்சி; இது கூற விழையும் கருத்தை உணர செய்யும். உலக மக்கள் துன்பம் இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்றால் அவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் வாழவேண்டும். அந்த நிலையைப் பெற நாம் விருப்பு வெறுப்பு இல்லாத ஒருவரது நட்பை பெற்றால் தான் நாம் இறுதி வரை துன்பமின்றி வாழ முடியும் அந்த விருப்பு வெறுப்பு அற்றவர் இறைவன் ஒருவரே என்பதை வள்ளுவர் "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு(04)" என்ற குறள் மூலம் இந்த உலகத்தின் அழியாத நட்பு எதுவென்று தெளிவுப்படுத்துகிறார். இதன் மூலம் அடுத்தவருக்குத் தெளிந்த அறிவும், அப்படைப்பைப் பற்றிய புரிதலும் இம் மறுகட்டமைதி உருவாக்கும் என்பதில் அய்யமில்லை. மேற்கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் நட்பைப் பற்றிய ஒரு முழுமையான அறிவும் புரிதலும் இக்கட்டுரை மூலம் கிடைக்கபெறும்.

### சொற்பொருள்

Behavior நடத்தை, Conventional Thinking -மரபு வழிச் சிந்தனை, Creative Thinking - ஆக்கச் சிந்தனை, Habitual Thinking - பழக்க வழிப்பட்ட சிந்தனை, Reframing - மறுகட்டமைதி, unplesant - விரும்பதகாத, Meaning - பொருள், Context - சூழல், Learning - கற்றல், Solution - தீர்வு

### Bibliography

David Rock. (2009).*Your brain at work.*New York: HarperCollins Publishers.

Ernie Schenck. (2007). *The Houdini Solution: Put Creativity and Innovation to work by Thinking inside the Box.*McGraw Hill.

Kundrakkudi Adigal. (2007).*Vâ;kkai nalam*. Chennai.

Michael Michalko. (2006). *Thinker toys: A Handbook of Creative – Thinking Techniques*. Berkeley: Ten Speed Press.

Nilanjana Bardhan &, Mark P. Orbe. (2012*). Identity Research and Communication: Intercultural Reflection and Future Directions*. Maryland: Lexington Books.

Nyanatheva Bharathi. (2012). *Va77uvam va;aEkiya vâ;viyal ne_i*. Chennai: Giitham Publications.

Varatharasanar,Mu.(2000). *Tirukku_a7 te7ivurai*. Thirunelveli: Saiva Siddhantha Books Publications.

Visuvanatham, Ki, A, Pe. (1953).*Va77uvarum ku_a7um*. Chennai: Pari Nilayam.

Visuvanatham, Ki, A, Pe. (1999).*Tirukku_a7 kammuraika7*.Chennai: Pari Nilayam.

# பாரதியார் படைப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக் கோட்பாடுகள் ஒரு பார்வை

## Integrated thought system in the works of Bharathiar

பார்வதி வெள்ளைச்சாமி / Parvathi Vellaccami[1]

**Abstract**

The aim of this study is to explain the elements of integrated thought system 4K which are Spirituality, Scientific, Creativity and thought of wisdom in the works of Bharathiar. This study is based on qualitative research which is focus on exploratory research and more to literature interpretation in nature. The methodology of the study is carried out using the Theory of Integrated Thought System 4K which involves spiritual, scientific, creativity and wisdom thinking. These integrated thinking were applied to achieved the objectives of the study which are to identify and analyze these four elements in Bharathiar works. The outcome of the study shows that Bharathiar's writings generate readers' thinking in making judgement, consideration, evaluating opinions and able to use their mind to solve problems. Besides, the outcome of the study also reveals that the aspect of education in Bhdrathiar's works define there is the concept of integrated thinking among those four thinking etements.

*Keywords: Bharathiar, Thought, Spiritual, Intellectual, Creativity, Scientific, Wisdom Thinking*

### முன்னுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 11.12.1882 ஆம் ஆண்டில் எட்டயபுரத்தில் பிறந்து 39 வருடங்களே வாழ்ந்தார். குறுகிய காலக்கட்டத்தில் வாழ்ந்தாலும் தமது பதினொறாவது வயதில் 'பாரதி' எனும் பட்டத்தைப் பெற்றவர். இவரின் படைப்புகள் கவிதை, கட்டுரை, சிறுகதை, உரைநடை என பல்வகைப்படும். பாரதியார் சிறந்த தேசபக்தர் மட்டுமின்றி புரட்சியாளராகவும் திகழ்ந்தார். மக்களிடையே தேச பக்தி, சமத்துவம் மற்றும் விடுதலை போன்ற உணர்வினை வெளிப்படுத்தும் நோக்கில் பல கவிதைகளைப் படைத்தார். கவிதைகளைத் தன் ஆயுதமாகப் பயன்படுத்தி தமது கருத்துகளை வெளியிட்டார்.

அவர் படைப்புகளில் உள்ள ஆன்மீகச் சிந்தனை, அறிவார்ந்த சிந்தனை, ஆக்கச் சிந்தனை மற்றும் அறிவியல் சிந்தனையை ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக் கோட்பாடுகள்வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கோட்பாட்டினை அறிமுகப்படுத்தியவர் முகமது யூசோப் ஆசான் அவர்கள். ஆன்மீகச் சிந்தனையானது இறைவழிபாடு, இறைத்தத்துவம் போன்ற ஆன்மீகம் சார்ந்த அனைத்து கூறுகளையும் உள்ளடக்கியதாகும். இரண்டாவதாக, அறிவார்ந்த சிந்தனை, மூளையின் பாகங்கள், வளர்ச்சி மற்றும் அறிவு வளர்ச்சிக்கான அனைத்து அம்சங்களையும் பற்றி விவரிக்கும். அறிவு வளர்ச்சி தொடர்பான மேற்கத்திய சிந்தனையாளர்கள் அறிமுகப்படுத்திய கோட்பாடுகளும் இதில் அடங்கும். அடுத்த

[1]The author is a Ph.D candidate at The Department of Indian Studies, University of Malaya, Malaysia.vathi721@gmail.com

*நிலையில் அறிவியல் சிந்தனையானது அறிவியல் சம்பந்தமான சான்றுகள், புள்ளி விவரங்கள், வாதங்கள் போன்றவற்றை ஏரணம், துல்லியம் மற்றும் ஆக்ககரமாகச் சிந்தித்துச் செயல்படும் கருத்துகளை உள்ளடக்கியதாகும். இறுதியாக, ஆக்கச் சிந்தனை, புத்தம் புது சிந்தனை, படைப்பாற்றல் திறன் மேலும் புத்தாக்கச் சிந்தனையை வலியுறுத்துகிறது* (Mohd. Yusof Hasan, 2007: 12-14). *இந்நான்வகை ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைகள் தற்போது பல இலக்கிய ஆய்வு துறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

### (அ) பாரதியாரின் ஆன்மீக சிந்தனை

*மனிதன் தெய்வத்திடம் செலுத்தும் அன்பின் வெளிப்பாடே பக்தி எனக் கருதப்படுகின்றது. பாரதியார் கடவுள் நம்பிக்கை மிக்கவர் என்பதை அவரது படைப்புகள் மூலம் உணர்த்தியுள்ளார்.*

### அறிவே தெய்வம்

*கடவுளே அறிவின் சிகரமாகத் திகழ்கிறார்; அந்தக் கடவுள் நம்முள் வரவேண்டுமெனில் தூய்மையான எண்ணம் கொண்டிருத்தல் அவசியம். அந்நோக்கத்தை அடைவதற்கு இறைவனிடத்தில் பக்தி செலுத்த வேண்டும். நம் அறிவுதான் நமக்குத் தெய்வம், என்பதை உணர மறுக்கின்றனர். நம் மத்தியில் தினசரி உணவைத் தேடி துன்பப்படும் ஏழைகளுக்கு உதவாமல் கடவுள் கோயில்களில் மட்டும் இருப்பதாக எண்ணி பணத்தை வாரி வழங்கும் மனிதனின் அறியாமையைச் சாடுகின்றார் பாரதி (வசந்தா இராமநாதன், 2000: 60).*

**ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள் பல்**
**லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம்உண்**
**டாம்எனல் கேளீரோ?**

*நம் ஆன்மாவே அறிவு என்றும் உள்ளத்தின் வலிமையைத் தெய்வம் என்றும் பாரதியார் தம் பக்தி திறத்தால் மானிடர்க்கு உணர்த்துகின்றார்.*

### பக்தியின் மேன்மைகள்

*பாரதியார் பக்தியின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறியுள்ளார். அதுபோல், பக்தி தரும் மேன்மைகளையும் தம் பாடல்களில் எடுத்தியம்பியுள்ளார். அவர் பக்தியுணர்வைப் பொதுமை உணர்வாகக் கருதுகின்றார்.*

**பக்தியினாலே தெய்வ பக்தியினாலே**
**பக்தியினாலே இந்தப்**
**பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ!**

*தெய்வபக்தியினால் உலகம் அடையும் மேன்மைகளை அடுக்கடுக்காய் பாடுகின்றார். பக்தி செய்வது மனிதனின் நித்திய கடமை என்றும் பாரதி அழகாக மொழிகின்றார் (நல்லி குப்புசாமி செட்டியார், 2007: 132136). தெய்வத்தின்பால் உண்மையான பக்தியுடையவர்கள் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நன்மனத்தைக் கொண்டிருப்பர்; சிந்தையில் ஏற்படும் குழப்பங்கள் நீங்கும்; ஈடுபடுகின்ற காரியங்கள் அனைத்திலும் ஓர் ஒழுங்கு ஏற்படும்; பல்வேறு சிறப்புகளைப் பெறுவதுடன் ஞானிகளின் நட்பும் கிட்டும். அத்துடன், உள்ளத்தில் மெய்ப்பொருளுக்கான தேடல் தொடங்கும். இறுதியாக, இதயத்தின் கவலைகளை நீக்கி வலிமையை மேம்படுத்தும் தெய்வபக்தி*

*(பத்மதேவன், 2014: 240). பாரதியார் தெய்வ பக்தியை உலகின் மேன்மைக்கான சிந்தனையாக மாற்றிப் பார்க்கும் பரந்த சிந்தனையைக் கொண்டிருந்த மாபெரும் கவியாகத் திகழ்கின்றார்.*

## பாரதியாரின் சமத்துவ பக்தி

*பாரதியார் அந்தண குலத்தவர். ஆனால் சாதி மத பேதமின்றி பிற தெய்வங்களையும் போற்றிப் பாடினார். அல்லா, இயேசு, புத்தன் போன்ற தெய்வங்களின் பக்தி நெறிகளை ஏற்றுக் கொண்டதோடு அவற்றின் உயர்வை வாழ்த்தியும் பாடினார் (இரா. சுராஜ், 1982: 101127). கிறிஸ்துவ சமயம் போற்றும் இயேசுவை கீழ்க்கண்டவாறு போற்றிப் பாடினார். "உண்மை என்ற சிலுவையில் கட்டி" என்று பாடிய பாரதி புத்த சமயம் போற்றும் புத்தனை அன்பு வடிவில் காண்பதாகவும் புத்தனின் வாக்கு தம் பாரத தேவியின் வாக்கு எனவும் புகழ்ந்து பாடினார்.*

**"அன்பு சிவம்உல கத்துயர் யாவையும்**
**அன்பினில் போகுமென்றே இங்கு"**

*அதுபோலவே, இஸ்லாமிய சமயம் போற்றும் அல்லாவை, "அல்லா, அல்லா, அல்லா! என்றும் வாழ்த்திப் பாடுகின்றார்.*

*மதங்கள் பல இருப்பினும் சாதி, சமயம், இனம் கடந்த பக்தியைப் போற்றியும் பரம்பொருள் ஒன்றே என்னும் சமய ஒருமைப்பாட்டை உணர்த்தியும் பாடல்களை எழுதினார் (இளங்கவின், 1992: 121131). பாரதியார் பிற மதத்தை போற்றி வணங்கும் பாங்கு அவருடைய முற்போக்கு சிந்தனையையே காட்டுகிறது. பக்தி வழி பாரதி மக்கள் வாழ்வில் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவு இன்றி புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கு வலியுறுத்தியுள்ளார் என்பது புலப்படுகின்றது.*

## மூட பக்தி

*சிறந்த பக்தியுடைய பாரதியார் மூட பக்தியை முழுமையாக எதிர்க்கின்றார். பக்தியின் பெயரால் செய்யப்படும் செயல்களை முற்றாகப் பழித்துரைக்கின்றார். மூடபக்திகளிலே முக்கிய அம்சமாக விளங்கும் நாள், நட்சத்திரம், லக்னம், திதி, பொருத்தம் என்றெல்லாம் கூறிக்கொண்டு மனிதர்கள் செய்யும் சில செயல்களை வெறுக்கின்றார் பாரதி (மகாகவி சி. சுப்ரமண்ய பாரதியார், 1981: 21). இவ்வாறு பல்வகையான மூட நம்பிக்கைகளை கை விலங்காக மாட்டிக் கொண்டு அவதியுறும் மனிதர்களின் அவலநிலையைக் கண்டு வருந்துகின்றார்.*

**செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்**
**சேர்ந்திட லாமென்று எண்ணி யிருப்பார்**

*மேலும், 'கைலாசம்', 'வைகுந்தம்' மற்றும் 'பரமண்டலம்' முதலிய மனிதரின் மரணத்திற்குப் பின் செல்லும் உலகத்தின்பாலும் பாரதிக்கு நம்பிக்கையில்லை. இத்தகைய உலகங்களை நம்புகின்றவர்களை மூடநம்பிக்கை உடையவர்கள் என்றே பாரதி பழிக்கின்றார் (ப. ஜீவானந்தம், 1964: 8889).*

## தேசமே தெய்வம்

*பாரதியின் தெய்வத்தன்மை அத்துடன் நின்றுவிடாமல் பாரதத்தையும் பாரதத் தாயையும் தெய்வமாகக் காணும் தேச பக்தியை மேலோங்கச் செய்தது. தம் நாட்டில்*

*வாழும் மக்கள் பல்வேறு மதங்களைத் தழுவியிருப்பினும் தெய்வங்களின் பெயரால் ஜாதி மதம் பெருகுவதை விரும்பவில்லை. இந்திய தேசத்தின்முன் அனைவரும் ஒரே ஜாதி; அனைத்து இனத்தவரும் பாரதத்தை மட்டுமே தாயாகக் கருத வேண்டுமென எண்ணினார் (வி. அலங்கரராஜ், 1982: 55).*

**“சேதமில் லாதஹிந்துஸ் தானம் இதைத்**
**தெய்வமென்று கும்பிடடி பாப்பா”**


*என்றும் “உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்” என்றும் பாப்பா பாட்டின்வழி இளைஞர்களுக்குத் தேச பக்தியை ஊட்டுகின்றார். சாதி, சடங்குகள், உயிரின வேற்றுமையை அகற்றி அறிவையும் அருளையும் இணைத்துப் பாரத தேசத்தையே தெய்வ பக்தியாகப் பாடினார்.*

*எனவே, ஒவ்வொரு மனிதனும் மதம், ஆன்மீகம் மற்றும் ஆன்மா தொடர்புடைய விஷயங்களைப் பற்றி யோசிக்க வேண்டும்; அதில் நம்பிக்கையும் வேண்டுமெனவும் உலக மக்களுக்கு ஒழுக்கத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் அறிவுறுத்துவதாக பாரதியார் தம் ஆன்மீக சிந்தனையை எடுத்துரைக்கின்றார்.*

### (ஆ) பாரதியாரின் அறிவார்ந்த சிந்தனை

*அறிவு தொடர்புடைய மன வளர்ச்சி கொண்டுள்ளவர்களை அறிவாற்றல் கொண்டவர்கள் எனக் கருதுகிறார் சிந்தனையாளர் புளூம். அவரின் கூற்றுபடி அறிவாற்றல் சிந்தனையாளர்கள் புதிய சிந்தனைகளைக் கையாள்பவர்களாகவும் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு ஆக்கப்பூர்வமாக முடிவினை எடுப்பதில் தனித்தன்மை வாய்ந்தவர்களாகவும் திகழ்வர்* (Benjamin Bloom, 1956:1-2).

*அறிவார்ந்த சிந்தனை மூளையுடன் தொடர்புடையது. மனிதர்களின் இருபக்க மூளையின் தாக்கத்தால் கற்றல் நடைபெறுகிறது என்றும் ரோஜர் ஸ்பெர்ரி எனும் அறிஞர் கண்டறிந்தார். தமது ஆராய்ச்சியின் மூலம் மனிதர்களின் மூளையை வலப்பக்க மூளை, இடப்பக்க மூளை என வகைப்படுத்தினார். அத்துடன், ஒவ்வொரு பக்க மூளையும் தனித்தன்மைகளைக் கொண்டுள்ளனதென அறிந்து விளக்கினார் (இராஜ. குழந்தைசாமி. 1999: 87). அஃது கீழ்க்கண்டவாறு அமையும்.*



## இருபக்க மூளையின் தன்மைகள்

*பாரதியார் இவ்வாறான அறிவார்ந்த சிந்தனையைக் கொண்டவர் என்பதை அவரின் பன்முக அறிவு மற்றும் உலகப் பார்வை கொண்டு எழுந்த படைப்புகள் விளக்குகின்றன. உதாரணத்திற்கு, பாரதியின் பொருளாதாரம், கல்வி மற்றும் சமூகவியல் தொடர்புடைய கருத்துகள் அவருடைய அறிவார்ந்த சிந்தனையைப் பிரதிபலிக்கின்றது.*

## தொழிற்கல்வி

*மனிதர்கள் தாங்கள் செய்யும் தொழிலை நுணுக்கமாகத் தெரிந்து கொண்டு பணிபுரிந்தால் வாழ்க்கை மேன்மடையும் அதற்குத் தொழில் கல்வி அவசியமாகிறது என பாரதியார் நம்புகின்றார்.*

*"ஒவ்வொரு இந்தியனும் நல்ல ஆரோக்கியமான குடும்பச்சூழலை அடைய வேண்டுமானால் கல்வி அவசியம்" என்கிறார் பாரதியார். நல்ல காற்று, நல்ல நீர், சுத்தமான பயனுடைய ருசியான தகுந்த அளவுள்ள ஆகாரம், சுத்தமான உடை இவையெல்லாம் திருந்திய ஜீவனத்திற்கு லஷ்ணங்கள்"*

*கல்வி அவசியம் என்று ஜப்பான் தொழிற்கல்வி எனும் கட்டுரையில் இந்தியர்களுக்குக் கல்வியின் முக்கியத்துவத்துவத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார் (க. மகேஸ்வரி, 2012: 750 751). அணுசக்தி குண்டு தாக்கத்திற்குப் பின் முழுமையாகச் சிதைந்த ஜப்பான் தேசம் குறுகிய காலத்தில் மேம்பாடைந்த காரணம் ஜப்பானியர்களின் உடல் உழைப்பு. தொழிற்கல்வியின் அறிவைக் கொண்டு அந்நாளில் ஜாப்பானியர்கள் தங்கள் நாட்டில் மேற்கொண்ட சாயத்தொழில், பட்டுப்பூச்சி வளர்ப்பு போன்ற தொழில் முறைகளைச் சுட்டிக்காட்டி இந்தியாவிலும் தொழிற்கல்வியைக் கற்று மக்கள் மேன்மையடைய வேண்டுமெனக் கருதினார்.*

## பன்மொழிப்புலமை

*தகவல் தொடர்பு விரிவடையாத நிலையில் வாழும் காலத்திலேயே 1917 ஆம் ஆண்டில் லெனின் தலைமையில் ரஷ்யாவில் நடைபெற்ற புரட்சியைப் புரிந்து கொண்டு "யுகப் புரட்சி" என்று வரையறுத்துப் பாடினார் பாரதி.*

> **"அங்கே ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி**
> **கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்"**

*இந்நவீன காலத்தில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதியில் வசிக்கும் மக்களுக்குச் சென்றடையும் செய்திகள் திரிபு கண்டு முழுமையாகவும் தெளிவாகவும் கிடைப்பதில்லை. ஒன்றுக்கொன்று முரணான செய்திகளே பரவுகின்றன. அவ்வாறு இருக்கையில், ரஷ்ய புரட்சியை இந்த உலகத்தையே திருத்தி அமைக்கப் கோகின்ற யுகப் புரட்சியாக மதிப்பிட்டார். அதன் காரணமாக அப்புரட்சியைத் தொடர்ந்து கவனித்து உண்மை நிலவரத்தை உணர்ந்து அவ்வப்போது எழுதினார் (என். சங்கரய்யா, 1982: 121). பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தமிழகத்தில் வாழும் பாரதி தன் பன்மொழியாற்றலால் சரியாகக் கணித்து பிறமொழிகளில் இருந்து மொழிபெயர்த்து எழுதியது அவரின் அறிவாற்றலும் தனித்தன்மையும் எடுத்துக்காட்டுகின்றது.*

*அதுபோன்றே, வேற்று நாட்டில் பெண்கள் பாலியல் ரீதியாகப் படும் தொல்லைகளைக் கண்டு கொதித்தெழுகின்றார். பிஜித் தீவில் கரும்புத் தோட்டங்களில் பணிபுரியும்*

*இந்தியர்கள் படும் துன்பங்களைக் கண்டு மனம் வருந்தி இவ்வாறு பாடுகின்றார் (நெடுமாறன், 1982: 129).*

**'கரும்புத் தோட்டத்திலே அவர்**
**கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி**
**வருந்து கின்றனரே ஹிந்து**
**மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்**
**சுருங்கு கின்றனரே"**

*இன்றைய இணையத்தின்வழி தகவல்கள் நிமிடத்திற்கு நிமிடம் பெரும் வசதிகள் இருப்பது போல் அன்றைய காலக்கட்டத்தில் இல்லை. இருப்பினும், தமிழ் நாட்டில் ஒரு மூலையில் வசித்துக் கொண்டு உலக நாடுகளில் நடக்கும் விசயங்களைத் தன் பன்மொழி புலமையால் உடனுக்குடன் அறிந்து வெளிப்படுத்தும் பாரதியாரின் அறிவுக் கூர்மை தன்னிகரற்றதாகும். பகுத்தாயும் அறிவும் கண்டதற்கேற்ப துலங்கும் இடபக்க முளையின் செயல்பாடும் முழுமையாக இயங்கியதால் தன் மொழிப் புலமையால் புதிய தகவல்களைப் மொழிபெயர்த்து உலகிற்கு வழங்கினார்.*

## (இ) பாரதியாரின் ஆக்கச் சிந்தனை

*ஆக்கச் சிந்தனை கொண்ட மனிதர்கள் பெரும்பாலும் வலப்பக்க மூளையை அதிகம் உபயோகிப்பர் என உளவியலாளர் கருத்துரைக்கின்றனர். ரோஜர் ஸ்பெர்ரியின் ஆய்வின்படி மனிதர்கள் பெரும்பாலும் இடப்பக்க மூளையின் செயலாக்கத்தையே அதிகம் பயன்படுத்துகின்றனர் (Roger Sperry 1983: 37). வலப்பக்க மூளையின் செயலாக்கம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. வலப்பக்க மூளையின் செயல்பாட்டினால் மனிதர் சில நன்மைகளை அடைவர் என நம்புகிறார் ஸ்பெர்ரி. அதன் விளக்கம் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.*

| வலது பக்க மூளையை உபயோகிப்பதால் ஏற்படும் பயன்கள் |
|---|
| மூளை விரைவில் சோர்வடையாது |
| வேலைப் பளு தெரியாது |
| கவன வீச்சு மேம்படும் |
| ஞாபக சக்தி மேம்படும் |
| சலிப்பு ஏற்படாது |
| புதிய கருத்துகள் உருவாகும் |
| பயனுடைய கருத்துகள் மலரும் |
| ஆக்கச் சிந்தனை வளரும் |
| ஆய்வுச் சிந்தனை வளரும் |
| பணி மேம்பாடு அடையும் |

*இருப்பினும், ஒருவர் இருப்பக்க முளையைப் பயன்படுத்துவதால் சிறந்து விளங்குவர் என்பது திண்ணம். வலப்பக்க மூளையை அதிகம் செயலாற்றும் ஒருவர் கற்பனைத் திறன், இசை, உணர்ச்சி, கலை போன்ற அம்சங்கள் மேலோங்கி நிற்கும் அத்துடன்*

உலக நோக்கு சிந்தனையைக் கொண்டிருப்பர். மேலும், ஆக்கச் சிந்தனை மற்றும் ஆய்வுச் சிந்தனையுடன் திகழ்வர் (இராஜ. குழந்தைசாமி. *1999: 91*). அதே போல் எட்வட் டி பூனோ அறுவகை தொப்பியின்வழி மனிதர்களின் சிந்தனையை வரையறுக்கின்றார். அவ்வகையில் அவர் கூறும் ஆக்கச் சிந்தனைக்குரிய அம்சங்கள் அனைத்தும் பச்சை தொப்பியைப் பிதிபலிக்கின்றன (De Bono, E., 2000: 208). அதாவது பாரதியின் புதிய சிந்தனை மற்றும் படைப்பாற்றல் திறன் பச்சைத் தொப்பியுடன் பொருந்துகின்றது.

மேலும், ஹவர்ட் கார்ட்னெர் எனும் உளவியலாளர் பல்வகை நுண்ணறிவாற்றல் கொண்டு மனிதன் துலங்குவதைக் குறிப்பிடுகின்றார் (Howard Gardner, 1983: 3). சிலருக்குச் சில அறிவாற்றல் மிகையாகக் காணப்படும் என்பதற்கேற்ப பாரதியின் கவித்திறம், பன்மொழியாற்றல் மற்றும் இயற்கையியல் மிகுந்து காணப்படுகின்றது. பாரதி தமது கவித்துவத்திற்கும் அறிவுக்கும் ஏற்ப ஆக்ககரமான படைப்புகளைப் படைத்துள்ளார் என்பதற்குச் சான்றாக விளங்குவது அவரின் கற்பனைக் கவிதையான குயில் பாட்டாகும்.

> **"ஆன்ற புலவீர் ! கற்பனையே யானாலும்**
> **வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க**
> **யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?"**

குயில் பாட்டின் இறுதி அடிகள் அவருடைய கற்பனை வளத்தைப் பிரதிபலிப்பதுடன் கவியாற்றலையும் வெளிக்கொணர்கின்றது (எஸ். கருணானந்தராஜா, *1999:1011*). அதேபோல் பாரதியாரின் மற்றொரு கற்பனைப் படைப்பு 'பாஞ்சாலி சபதம்'. இஃது பாரதியின் கற்பனைவழி பெண்மையின் ஆற்றலைப் புலப்படுத்தும் வண்ணம் அமைந்த படைப்பாகும்.

கவிஞர்களுக்குக் கருவியாக விளங்குபவை சொற்களாகும். அச்சொற்களைத் தன் கவித் திறத்தால் வலுவடையச் செய்தார். 'வாய், சக்தி தனக்கே கருவியாக்கு" எனப் பாடும்போது பாரதி தம் கவிமழை பொழியும் வாயைச் சக்திக்குக் கருவியாக ஒப்படைக்கும் திறத்தை அறியலாம். தெய்வத்தின் கருவியாகவே தம்மைக் கருதிப் பாடினார். பாடும் நெறி பழையதாக இருப்பினும் பாடியப் பொருள் புதிது. ருஷ்யாவில் நடந்த யுகப் புரட்சியைக் கொண்டு உலக நிகழ்ச்சி எல்லாம் சக்தியின் இயக்கமாக விளங்குகிறது என புதுமுறையில் கவிதை வடிக்கின்றார்.

## பெண் கல்வி

பாரதியின் படைப்புத் திறன் பெண் கல்வி வழியும் வெளிப்பட்டது. ஆக்கச் சிந்தனைக் கொண்ட பாரதி பெண்களின் வாழ்க்கையில் கல்வி பயின்று இந்திய நாட்டிற்கு பணிபுரிய வேண்டும் எனும் புதிய சிந்தனையைப் பெண்களிடத்தே விதைத்தார். அத்துடன் நில்லாது 'திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்' என இந்தியப் பெண்கள் பல நாடுகளுக்கும் சென்று பற்பல கலைகளைக் கற்று அதற்குறிய தகுதியினை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றார். சியூ சூன் எனும் சீனப்பெண்மணி சீனமொழியில் பாடியதை மொழிபெயர்த்துத் தருகின்றார் (ப. அருணாசலம். *1966: 7376*). சுருங்கக்கூரின், 'புதுமைப்பெண்' என்ற சொல்லைப் புதுமையான கருத்துகளைக் கொண்டிருக்கும் முற்போக்கான சிந்தனை, ஆக்க வழிமுறைகளைப் பின்பற்றும் சிந்தனையைப் பெற்றிருத்தல் என பாரதி வரையறை கொடுப்பதிலே ஆக்கச் சிந்தனைக் கொண்டவர் என அறியலாம் (நாஞ்சில் நீல மாதவன், *2012: 135*).

## (ஈ) பாரதியாரின் அறிவியல் சிந்தனை

*தினசரி வாழ்வில் மனிதன் எதிர்நோக்கும் சிக்கலுக்கான முடிவெடுக்கும் திறனை வெளிபடுத்துவது அறிவியல் சிந்தனையாகக் கருதப்படுகிறது. பாரதியின் அறிவியல் சிந்தனை புதுமையிலும் புதுமை காண்பதையே அடிப்படையாகக் கொண்டதாக விளங்குகிறது (தி. சாந்தி, 2012: 518). பாரதியாரின் அறிவியல் சிந்தனைகளை இருவகையாகப் பிரிக்கலாம். அஃது தொழில் நுட்ப அறிவு மற்றொன்று வானியல் அறிவு. அதைத் தவிர்த்து, அறிவியல் பார்வையுடன் அவர் காணும் சுற்றுச் சூழலும், தொழில் கல்வியும் அறிவியல் சிந்தனையை உட்படுத்தியதாகக் கருதப்படுகிறது.*

### தொழில் நுட்ப அறிவு

*பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தகவல் தொழில் நுட்பம் மெல்ல விரிவடையத் தொடங்கியது. தொழில் புரட்சியின் காரணமாக மேலை நாட்டவர்கள் வானொலி, தொலைபேசி, தந்தி போன்ற தகவல் சம்பந்தமான கண்டுபிடிப்புகளை மேற்கொண்டனர்; அதில் வெற்றியும் கண்டனர். அதன்வழி, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தகவலை விரைவில் பறிமாறுவதற்கு ஏதுவாக அமைந்தது. இதன் அவசியத்தை நன்கு உணர்ந்த பாரதியார் விடுதலை உணர்வையும் விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் பரப்புவதற்கு இது போன்ற தகவல் சாதனங்கள் தேவை என்று எண்ணி 'பாரத தேசம்' எனும் பாடல்வழி வெளிப்படுத்தினார் (பா. சீனிவாசன். 2012: 2932).*

**"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"**

*இன்று நாம் செல்லிடப் பேசி அல்லது கைத்தொலைப்பேசியின்வழி இணையத்தைத் தொடர்பு கொள்ளும் அளவு வசதிகள் வளர்ந்துள்ளன. ஆனால் பாரதியார் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இவ்வளர்ச்சியின் தேவைகளை அறிந்து பாடல்களாக வடித்தது அவரின் கூர்மையான அறிவியல் அறிவைப் பிரதிபலிக்கின்றது.*

*இதழாளராகத் திகழ்ந்த காலக்கட்டத்தில் பத்திரிக்கை மூலம் விடுதலை உணர்வை வளர்க்க முடியும் என நம்பினார் பாரதியார். அக்காலக் கட்டத்தில் பாரதியார் தீவிர விடுதலைப் போராட்ட வீரராகத் திகழ்ந்தமையால் தம் பன்மொழி திறத்தால் பல மொழிகளில் வெளிவந்த உண்மைகளையும் தகவல்களையும் எழுத்து வடிவத்தில் வெளிபடுத்த விரும்பினார். பத்திரிக்கைகளின் மூலம் விடுதலை உணர்வை வளர்ப்பதற்குப் பத்திரிக்கைத் துறைக்குப் போதுமான காகிதங்கள் மட்டுமன்றி கல்வி அறிவும் தேவை என்பதை அறிந்தார். இக்கூற்றை கீழ்க்கணட கவிதைவழி அறியலாம்.*

**"ஆயுதம் செய்வோம், காகிதசாலை அமைப்போம்**
**கல்விச்சாலைகளை வைப்போம்"**

### வானியல் சிந்தனை

*வானியல் அறிவைத் தம்மிடையே வளர்த்துக்கொண்ட பாரதி எதிர்கால தலைமுறையினரும் இந்த அறிவியல் ஆராய்ச்சியினைப் பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டுமென விரும்பினார். அதனால் அண்டைவெளியின் தன்மை குறித்தும், சூரியக் குடும்பம், சக்தி அழிவில்லாது, பூமியின் சுழற்சி மற்றும் சோதிடம் போன்ற அறிவியல் சார்ந்த விசயங்களையெல்லாம் பாட்டாகவும் தம் கட்டுரைகளில் எழுதினார்.*

அண்டவெளியின் தன்மை பற்றி "வாணவெளி என்னும் பெண்ணை" எனும் வசன கவிதையில் குறிப்பிடும்போது, பஞ்ச பூதங்களால் ஆன இந்த உலகத்தையும் பால்வீதிகளாகிய அண்டம் ஒளி, ஆகாயம் இரண்டை மட்டும் கொண்டுள்ளது எனத் தெளிவுபடுத்துகின்றார். தொழில் நுட்பம் முழுவளர்ச்சி அடையாத காலத்திலே பாரதியார் வெளிபடுத்திய அறிவியல் சிந்தனைகள் நம்மை வியக்கச் செய்கின்றன.

மேலும், சூரிய குடும்பம் அடங்கியுள்ள ஒன்பது கிரகங்களையும் நெப்டியூன், யுரேனஸ் எனும் இரண்டு கோள்களும் ஐரோப்பியர்களால் சூரிய குடும்பத்தில் இணைக்கப்பட்ட கருத்தையும் ஏற்று தன் கவிதையில் எழுதினார். அதற்கு "ஞாயிறே நின் முகரத்தைப் பார்த்த" வசன கவிதை சான்றாக திகழ்கிறது.

தூம கேது எனும் வால் நட்சத்திரங்கள் பற்றியும் அதன் தன்மைகள், அதனால் விளையும் நன்மைகள் போன்ற தகவல்களையும் பாரதி மக்களுக்கு எடுத்துரைத்தார். அத்துடன், அறிவியில் கண்டு பிடிப்பான சக்தியை அழிக்க முடியாது என்றும் பூமியின் சுழற்சி பற்றியும் காற்றின் இன்றியமையாமையையும் பற்றி தம் கவிதைகளில் எடுத்துரைத்தார். அத்துடன், அறிவியல் அறிவின் ஆதிக்கத்தின் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு உணர்த்தினார் *(பா. சீனிவாசன்:3132)*

## சுற்றுச் சூழல் சிந்தனை

**"சந்தி தெருவெங்கும் சாத்திரம் கற்போம்**
**காவியம் செய்வோம்; நல்ல காடு வளர்ப்போம்"**

எனும் பாரதியின் பாடல் சுற்றுச் சூழல் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இன்று வளர்ந்து வரும் பல நாடுகள் அதன் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்குவதன் காரணமாக வெப்பத் தன்மை அதிகரித்து புவியில் பைங்குடில் விளைவுகளை (Greenhouse effect) ஏற்படுத்துகின்றது. அத்துடன், கட்டுப்பாடின்றி காடுகளை அழிப்பதாலும் மக்கள் பல பேரிடர்களை எதிர்நோக்குகின்றனர். நம் நாட்டிலும் கூட அரசாங்கம் வீட்டிற்கு ஒரு மரம் நடும் திட்டத்தை வெகுகாலமாக அமல்படுத்தி வருகின்றது. சிந்தனையாளர் எட்வர்ட் டி போனோ அவர்கள் அறிவியல் சிந்தனையுடையவர்கள் சிக்களைக் களைந்து முடிவெடுக்கும் திறமை உடையவர்களாகத் திகழ்வர் எனக் கூறுகிறார் (Edward de Bono, 1976: 32). அந்தக் கூற்றுக்கு ஏற்றவாறு பேரிடர்களை எதிர்நோக்கும் அபாயம் மக்களை வந்தடையும் என்று பாரதியார் தன் நுண்ணறிவால் அறிந்து அன்றே அதை களையும் வழிமுறையை அறிவுறுத்தினார்.

## தொழில் சிந்தனை

"ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்" எனும் பாரதியின் பாடல் பாரதியின் தொழில் சிந்தனையைப் பிரதிபலிக்கின்றது. அமெரிக்கர்கள் அணுசக்தி கப்பல்கள் இயக்குவதற்குக் காரணமாகப் பாரதியாரின் இப்புதிய சிந்தனை இருந்தது என (மா. தியாகராஜன், *2012)* கூறுகிறார். இதன் தொடர்பாக *2007* ஆம் ஆண்டு வங்கக் கடல்களில் நிறுத்தப்பட்ட அணுசக்தி கப்பல்கள் உலகையே தங்கள் பக்கம் திரும்பிப் பார்க்கும் அளவு செய்தது என்றும் கூறுகிறார். இத்தொழில் சிந்தனையானது பாரதியில் அறிவியல் அறிவினையே காட்டுகிறது என்றால் அது வெள்ளிடை மலையே.

## முடிவுரை

பாரதியார் படைப்புகளில் ஆன்மீக சிந்தனை, அறிவார்ந்த சிந்தனை, ஆக்கச் சிந்தனை மற்றும் அறிவியல் சிந்தனை மேலோங்கி நிற்கின்றன. பாரதி ஒருங்கிணைந்த உயர்ச்சிந்தனைத் தொடர்பான பல படைப்புகளைப் படைத்துள்ளார் என்பதனை அவருடைய படைப்புகள் சான்றுகள் பகர்கின்றன. மகாகவியின் புதிய சிந்தனைகள் அனைத்தும் புதிய சமுதாயத்தை உருவாக்கும் அடிப்படையில் அமைந்தன என்பதை நாம் மறுக்க முடியாத உண்மையாகும். ஆன்மீகம், அறிவு, அறிவியல், மற்றும் ஆக்ககரமான சிந்தனைகள் முழுமையான ஆற்றல் கொண்ட மனிதனை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. நமது தேசியக் கல்வித்தத்துவமும் இதனையே வலியுறுத்துகின்றது.

## Bibliography


Alangararaj,Li.(1982). *Pâratiyum a_iviyal pârvaiyum, pârati paImukap pârvai*. (Vol.1). Chennai: Semmuthai Publications.

Arunasalam,P. (1966). *Kaviyaracarpârati*. Kuala Lumpur: University of Malaya.

Bloom, B. (1956). *Taxonomy of Educational Objectives: the Classification of Educational Goals*.New York: Longmans, Green.

De Bono, E. (1976).*Teaching Thinking*. London: Pelican Books.

De Bono, E. (2000). *Six Thinking Hats* (Rev. and updated. ed.). London: Penguin.

Gardner, H. (1983). *Frames of Mind: The Theory of Multiple Intelligences*. New York: Basic Books.

Ilangkavin. (1992). *MâGavarkku pârati.*Chennai: Vairavan Publications.

Jevanantham,Pa. (1964). *Pârati va;i.*Chennai: New Century Book House.

Karunanantharaja,S. (1999). *PâratiyiI kuyilpâmmiI tattuva marmam*. Chennai: Manimegalai Publications.

Kulanthaisamy Iraja. (1999). *Ka__al ti_aIka7*. Johor: Pertubuhan Kebajikan Namakkal.

Mahakavi Subramanya Parathiyar. (1981).*Makâkavi pâratiyâr kammuraika7.*Chennai: Vanathi Publications.

Mohd. Yusof Hasan. (2007). Pemikiran Teori Pendidikan: Pemikiran UPSI. Tanjung Malim: Universiti Pendidikan Sultan Idris.

Nalli Kuppusamy Chettiyar. (2007). *MâIumattiI makâkavi.*(Third Vol.).Chennai: Puvaneswary Printers.

Nanjil Nela Mathavan. (2012). ‘Pâratiyum putumaip peGGum’, In, *Pârati paImukap pârvai* (Vol.). Chennai: Semmuthai Publications.

Nedumaran. (1982). ‘Pârati tolainôkku ulakappârvai’. In, *Makâkavi pâratiyâr nû__âGmu vi;â malar.* Coimbatore: Mahakavi Parathiyar Library.

Padmathevan. (2014). *Pâratiyâr kavitaika7 (mûlamum uraiyum).* Chennai: Karpagam Books.

Sangkaraiya,N.(1982). ‘Pârati pâmalka7il potuvumaimaik karuttuka7’. In, *Makâkavi Pâratiyâr nû__âGmu vi;â malar*. Coimbatore: Mahakavi Parathiyar Library.

Seenivasan,Pa. (2012). ‘Pâratiyum a_iviyal pârvaiyum’, In, *Pârati paImukap pârvai*(Vol.1). Chennai: Semmuthai Publications.

Shanta,Ko,Su. (1983). “PeGmaikku vimutalaiya7itta pârati”. In, *CintaIaip paGGaiyil Pârati*. (Vol. 4). Chennai: Vanathi Publications.

Shanti,T. (2012). 'PâratiyâriI a_iviyal pârvai', In, *Pârati paImukap pârvai*. (Vol.1). Chennai: Semmuthai Publications.

Sperry, R. (1983). *Science and Moral Priority: Merging Mind, Brain, and Human Values*. Oxford: Basil Blackwell.

Suraj,Ira. (1982). *'Pârati pârvaiyil teyvaEka7',* In, *Pârati pârvaiyil.* Chennai: Abhirami Publications.

Thiyagarajan,Ma. (2012, February 6). *PâratiyiI eI_um ç_pumaiya cintaIaika7*. Retrieved from http://www.muthukamalam.com/essay/literature/p24.html

Vasantha Iramanathan. (2000). *Kaviyulakak katiravaI pârati.* Chennai: Muvar Nilayam.

# சங்க இலக்கிய ஆய்வுகளில் குறீட்டுக் கோட்பாடு

## Semiotic Theory in the studies of Classical Tamil Literature

**மு.இராசேந்திரன்** / Professor Dr.M.Rajantheran[1]

**க.சில்லாழி** / K.Sillalee[2]

**Abstract**

Sangam Literature sands the testimony for the culture and heritage of ancient Tamils. Sangam Literature has been in the wake of research at multi-faceted angles down the ages which has brought out many new ideas about it. Making use of theories has became a tool of research at present in the Western nations. In this sociology plays an important role and when applied with theories like Semiotics Sangam Literature brings out a new areas of research. Also,applying Semiotics on Sangam Literature culls out hidden treasure of it.

*Key Words: Literature, Semiotics, ancient Tamils, Purananoor*

### முன்னுரை

தற்காலக் கல்வி முறையில் ஆய்வுபணி என்பது மிக முக்கியமானதாக விளங்குகின்றது. ஆய்வு என்பது எவ்வாறு அமைய வேண்டும் என அறிஞர் பெருமக்கள் ஒரு வரையரையை நிர்ணயித்துள்ளனர். முறையாக மேற்கொள்ளப்படும் ஆய்வில் ஆய்வின் தலைப்பு, ஆய்வின் நோக்கம், ஆய்வின் பின்புலம், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு வரையரை, ஆய்வுச் சிக்கல் எனப் பல்வேறு முக்கியக் கூறுகள் இருத்தல் மிக முக்கியமானதாகும். இவையே ஓர் ஆய்வைச் சரியான வழியில் இட்டுச் செல்ல வகை செய்யும் (Lawrance Neuman, 2007).

இவற்றுள் கோட்பாடு (Theory) மிக முக்கியக் கூறாக விளங்குகின்றது. இளங்கலை, முதுகலை, முனைவர் என எத்தகைய ஆய்வாக இருந்த போதிலும் அவற்றில் கோட்பாடுகளின் பயன்பாடு இன்றியமையாததாகவே உள்ளது. இன்றைய காலத்தில் கோட்பாடுகளைப் பயன்படுத்தாத ஆய்வுகள் அறிஞர்கள் மத்தியில் அத்துனை வரவேற்பினைப் பெறுவதில்லை (Stephen Ellin & Chris Swoyer, 2008, 343). ஓர் ஆய்வு முறையாகச் செய்யப்படுவதற்கும், அது தகுந்த ஆதாரங்களை முன்வைத்துப் பலம் பெறுவதற்கும் கோட்பாடுகளே வகை செய்கின்றன. ஏனெனில் ஓர் ஆய்வில், கருப்பொருளைப் பற்றிய பல்வேறு கோணத்திலான பின்புலச் சிந்தனைகளை முன் கூட்டியே ஆய்வாளரிடத்தில் ஏற்படுத்து ஆற்றல் கோட்பாட்டிற்கு உண்டு (Lawrence Neuman, 2007, 24).

தகுந்த கோட்பாடுகளைத் தேர்வு செய்வதன் மூலம் எந்த ஒரு பொருளையும் செம்மையாக ஆய்வு செய்ய இயலும். ஆயினும் தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்பாடுகளைப்

---

[1]The author is a Professor in the Department Of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@gmail.com

[2]The author is a Ph.D candidate at The Department of Indian Studies, University of Malaya, Malaysia. silllalee@yahoo.com

பயன்படுத்துவதிலும் ஆய்வாளருக்கு போதிய ஆளுமை இருந்தால் மட்டுமே பயன்படுத்தப்படும் கோட்பாடு உரிய பலனைத் தரும். அதன் அடிப்படையில் இக்கட்டுரையானது சங்க இலக்கிய ஆய்வில் எவ்வாறு குறியீட்டுக் கோட்பாட்டினைப் (semiotic theory) பயன்படுத்துவதன் மூலம் அதில் உள்ள ஆழ்ந்த கருத்துகளை வெளிக்கொணர முடியும் என்பதை எளிய உதாரணங்களைக் கொண்டு விளக்கிக் காட்டுவதே ஆகும்.

## கோட்பாடு (Theory)

பொதுவில் கோட்பாடு எனப்படுவது உலகியல், சமூகவியல் போன்றவற்றை பற்றிய அடிப்படைச் சிந்தனைகளை ஆய்வுப் பூர்வமாக முன்வைப்பவை எனப்படுகின்றது (Lawrence Neuman, 2007, 24). சமூகவியலின் அடிப்படையில் கோட்பாடு என்பதானது ஒரு சூழலைப் பற்றிய முறையான, தெளிவான விளக்கமுறை எனப் பொருள் கூறப்படுகின்றது (Stephen Ellin and Chris Swoyer, 2008, 343). இந்தக் கருத்தின் அடிப்படையில் கோட்பாடு ஒரு சமூகவியல் சூழலில் ஏற்படக்கூடிய பல்வேறு மாற்றங்களைப் பற்றியும் அதற்கும் ஆய்விற்கும் உள்ள தொடர்புகளையும் அனுமானங்களையும் முன்வைபதாகக் கூறப்படுகின்றது (Rohana Yusof, 2003, 43).

கோட்பாட்டின் வழி பெறப்படும் அனுமானங்களானவை ஓர் ஆய்வில் எத்தகைய வெளிப்பாடுகள் அல்லது கண்டுபிடிப்புகள் காணக்கிடக்கலாம் என்பதைப் பற்றிய முன்னோட்டமாக அமையும். அதே வேளையில் ஒரு சூழலை முன்னிருத்தி ஓர் ஆய்வில் தோன்றும் பல்வேறு கேள்விகளுக்கும் விடை காணக் கோட்பாடு வழிவகுக்கும் என்பர் (Bailey, 1978, 32). இதனால் ஆய்வில் உள்ள குழப்பமான சூழலை ஆய்வாளர் உணர்ந்து கொண்டு, கோட்பாடு முன்வைக்கும் வழித்துறைகளைப் பின்பற்றி ஆய்வில் புதிய கண்டுபிடிப்புகளைக் காண இயலும் என்பது கோட்பாட்டியளார்களின் கருத்தாக உள்ளது (Kaplan Abraham, 1964, 295).

பொதுவில் ஓர் ஆய்வில் கோட்பாடானது இரண்டு வகையில் பயன்படுத்தப்படுகிறது. அவை:

i) கோட்பாட்டினை சோதனை செய்தல் இந்த உத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்பாட்டினை ஆய்வுப் பொருளோடு இணைத்து அதனைச் சோதனை செய்து அக்கோட்பாடு எந்த அளவில் ஏற்புடையதாக உள்ளது என்பதையும் நிறுவலாம். தேவையானால் அக்கோட்பாட்டை மேம்படுத்தலாம். சில நிலைகளில் ஒரு சில கோட்பாடுகள் முற்றிலும் பொருத்தமானதாக அமையும் நிலையையும் ஆதாரங்களுடன் நிறுவலாம். ஆராய்ந்து முன்வைத்தல் (ஙிணீவீறீமீஹ், 1978, 33).

ii) கோட்பாட்டினை ஆய்வு வழிகாட்டியாகப் பயன்படுத்துதல் இந்த முறையானது ஓர் ஆய்வு செம்மையாகத் தனது கண்டுபிடிப்புகளை வெளிக்கொணர்வதற்கு பாட்டைத் துணைகொள்வதாகும். அதே வேளையில் ஆய்வின் எல்லையை விட்டு வெளிச் செல்லாமல் இருக்கவும் உதவும். சுறுங்கக் கூறினால், ஆய்வு சரியான வழித்தடத்தில் செல்வதற்குத் தண்டவாளத்தைப் போல இருந்து செயல்படும் எனலாம் (Rohana Yusof, 2003, 44).

தற்போதைய ஆய்வுக் கட்டுரை, இரண்டாவது வகைமையைச் சார்ந்தது. குறியீட்டுக் கோட்பாடு சங்க இலக்கிய ஆய்வில் எவ்வாறு வழிகாட்டுதலாகப் பயன்படுத்தலாம் என்பதை விளக்கப்படுத்துவதாகவே அமைகின்றது.

## குறியீட்டுக் கோட்பாடு (Semiotics Theory)

*குறீட்டுக் கோட்பாடானது மொழி, மொழியியல், பண்பாடு, சமூகவியல் போன்ற ஆய்வுகளில் மிகப்பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இக்கோட்பாடு முழுமையும் ஒரு பொருளைக் குறியீடாக கண்ணுற்று அதன் அடிப்படையில் அதில் வெளிப்படுகின்ற பல்வேறு விளக்கங்களை முன்வைப்பதாகவே அமைகின்றது* (Innis, 1985, vii). *குறியீட்டுக் கோட்பாட்டில் ஒரு பொருள், அதனைப் பற்றிய விளக்கத்தைத் தரும்போது அதனால் விளையும் செயல்பாடுகளையும் சேர்த்தே வெளிக்கொணர்வதாகக் கூறப்படுகின்றது* (Mariana Valverde, 2006, 17). *அதன் அடிப்படையில், தன்னிலைப்பாடும் செயல்பாடும் கொண்ட எந்த ஒன்றும் குறியீடாகாச் செயல்படும் காணப்படலாம் என்பதுவே இக்கோட்பாடு முன்வைக்கும் ஒட்டுமொத்த விளக்கத்தின் சுறுக்கம் ஆகும்* (Albert Sebeok, 1994, 3).

*குறியீட்டுக் கோட்பாடு, பிலாட்டோ (427347கி.மு), அரிஸ்டோட்டல் (384322கி.மு) ஆகியோரின் காலம் தொட்டே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது* (Umberto, 1979, 78). *ஆயினும் 17ஆம் நூற்றாண்டில்தான் இக்கோட்பாடு பிரபலம் அடைந்தது. இதனைக் ஆய்வுலகில் நிலைபெறச் செய்த பெருமை சார்ல்ஸ் செண்டர் பெய்ரிஸ்* (Charles Sander Peirce 1839-1914), *ஃபெர்டினன் டி சோஷர்* (Ferdinan De Saussere 1857-1913) *ஆகிய இரு பெரும் அறிஞர்களையே சாரும்* (Mariana Valverde, 2006, 17). *சார்ல்ஸ் செண்டர் பெய்ரிஸ் இக்கொட்பாட்டினை தொடர்புத்துறை, சமூகவியல் ஆகியவற்றை ஆய்வு செய்வதில் நெறிப்படுத்தினார்* (Berger Arthrasa, 1985, 15). *ஃபெர்டினன் டி சோஷர் இக்கோட்பாட்டை மொழி, மொழியியல் துறையில் ஆய்வு செய்வதற்கான கொள்கையாக உருவாக்கினார்* (Brown Martin & Felizitas Ringham, 2006, 3).

*எந்த ஒன்றையும் குறியீடாகக் காணும் போதே அது குறித்த விளக்கங்களும் இயற்கையாகத் தோன்றும். மேலும் இக்குறியீடு பல்வேறு கோணங்களில் காணப்படும் போது பல விதமான விளக்கங்களையும் உருவாக்கம் செய்யும். சில வேளைகளில் ஒரு குறியீடு குறித்த விளக்கமானது அக்குறியீட்டுப் பொருளைப் பற்றிய உண்மை விளக்கத்தையும் கடந்து புதிய பல விளக்கங்களையும் முன்வைக்க ஆய்வாளருக்கு முழுச் சுதந்திரத்தையும் கொடுக்கின்றது* (Albert Sebeok, 1994, 34). *இதில் இக்கோட்பாட்டைப் பயன்படுத்தும் ஆய்வாளருக்குத் தாம் ஆய்வு செய்யும் பொருளில் எத்துணை ஆளுமை உள்ளதோ அந்த அளவிற்கு புதிய விளக்கங்கள் தோன்றும்* (Morris, 1985, 181). *சுறுங்கக் கூறினால், ஒரு பொருள் குறித்த விளக்கமே அப்பொருளுக்கான தனித்தன்மையைக் கொடுத்து அதன் செயல்பாட்டை விளக்குவதாக அமைகிறது. ஓர் ஆய்வில் ஆய்வுப் பொருளின் விளக்கங்களை எளிதில் வெளிக்கொணர உறுதுணை புரிவதே குறியீட்டுக் கோட்பாட்டின் செயல்பாடாகும் என்பர்* (Parera, 2004, 9).

*குறியீட்டுக் கோட்பாட்டில், அதன் விளக்க முறையே முக்கியத்துவம் பெற்ற போதிலும், ஆய்வாளரால் முன்வைக்கப்படும் விளக்கமானது உண்மைக்குப் புறம்பானதாக இருத்தல் கூடாது எனும் கருத்தும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு முன்வைக்கப்படும் விளக்கங்கள் யாவும் தர்கத்திற்கு அல்லது வாதப் பிரதிவதங்களுக்கு உட்படுத்தப்படலாம். எனவே குறியீட்டுக் கோட்பாட்டில் முன்வைக்கப்படும் விளக்கங்கள் யாவும் பிற குறிப்புகளால் ஆதாரப்படுத்தப்படுதல் மிக முக்கியமாகும். அவ்வாறு இல்லையெனில் குறியீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு பொருளுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்கள் யாவும் பொருளற்றதாகப் போய்விடும் (*Peirce, *1985, 18).*

இவ்வாறு ஆதாரங்களைக் கொண்டு நிறுவப்படும் குறியீட்டு விளக்கங்கள் யாவும் சரியான முறையில் அமையப் பெற்றால், அவை உரிய தகவலைப் பெறுவோரிடத்தில் கொண்டு சேர்க்கும் (Bronwen Martin & Felizitas Ringham, 2006, 185-186). அதே வேளையில், ஒரு விசயத்தைக் குறியீட்டுப் பொருளாகப் பார்க்கும் நோக்குநிலை, அவ்விசயத்திலிருந்து தகவலைப் பெறுவோரிடத்தில் இல்லையெனில் அந்த விசயம் ஒரு போதும் பெறுனருக்கு எவ்விதப் பயனையும் அளிக்காது. இதனால் பெறுனரும் அதனைச் சாதாரன ஒன்றாகத்தான் பார்ப்பாரே ஒழிய, அதனால் அடையும் பயன் ஒன்றும் இல்லாமல் போகும் (Parmentier, 1994, 4). உதாரணமாக, சாலையில் உள்ள சமிக்ஞை விளக்கின் நிறங்கள் ஒவ்வொன்றும் ஒரு கட்டளையைச் சாலைப் பயன்பாட்டாளர்களுக்குத் அறிவிக்கின்றன. இதனைச் பயனீட்டாள் உணராத நிலையில் அவை வெறும் நிறங்களாக மட்டுமே செயல்படுமே அல்லாது அதனால் விளையும் பயன் யாதும் இல்லை.

குறியீட்டுக் கோட்பாடு பண்பாட்டுவியல் கூறுகளைப் பண்பாட்டுக் குறியீட்டைக் (cultural code) கொண்டு விளக்குகிறது (Hodge, 1998, 132-134). பண்பாட்டுக் குறியீட்டுக் கோட்பாடு, ஒரு மக்கள் குழுமத்தில் நிகழும் செயப்பாடுகளின் அடிப்படையில் வெளிப்படும் அவர்களின் தனித்தன்மையை ஆய்வு செய்து அதனை விளக்கப்படுத்தும் வகையில் அமைகிறது. இதன் அடிப்படையில் ஒரு இனத்தில் நிகழும் செயல்பாடுகள், பயன்படுத்தப்படும் பொருள்கள் ஆகியன எவ்வாறு அந்த இனத்தின் பண்பாட்டுக் கூறுகளாக மாறுகின்றன என்பதனை அறிய குறியீட்டுக் கோட்பாடு பெரும் துணை புரிவதாக அமைகிறது. இதன் வழி எந்த ஒரு செயலுக்கும் அதற்கு உரிய விளக்கத்தை ஆய்வுப் பூர்வமாகவும் கண்டறியலாம் (Shore, 1998, 165-166).

ஓர் இனத்தில் நிலைபெற்றிருக்கும் ஆடை, மொழி, வாழ்விடம், உணவு, பயன்பாட்டுப் பொருள்கள் போன்றவற்றைப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்தி அதன் செயல்பாடுகளைக் கணித்துக் கூறுவதற்கும், அவற்றின் தனிப்பண்புகள், உட்பொருள் ஆகியவற்றை அடையாளம் காணுதற்கும், அவை எவ்வாறு அம்மக்களின் பண்பாட்டு அடையாளமாக மாறுகின்றன என்பதனைக் கண்டறிவதற்கும் அவற்றை முதலில் குறியீடாகக் காண வேண்டும் என்கிறது குறியீட்டுக் கோட்பாடு. இல்லாவிடில் இவை எதுவும் பண்பாட்டுக் கூறாக நிறுவப்படுவதற்குச் சாத்தியமில்லை எனப்படுகின்றது (Bronwen Martin & Felizitas Ringham, 2006, 42). இதன் வழி, பண்பாட்டுக் குறியீடு ஓர் இனத்தின் பண்பாட்டை அடையாளம் காண்பதில் எத்துணை முக்கியத்துவம் வகிக்கிறது என்பதை அறிய முடிகின்றது.

மேலும் குறியீட்டுக் கோட்பாடு, சமூகவியல் கூறுகளை ஆய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இக்கோட்பாட்டைக் கொண்டு சமூகவியல் கூறுகளாகக் கருதப்படும் ஒரு சமூகத்தின் நம்பிக்கைகள், பாரம்பரியம், கலை, நாகரீக அடைவுகள் ஆகியவற்றை ஆய்வு செய்யும் போது ஒரு குறியீடானது ஒரு சமூகத்தில் நிகழும் அன்றாடச் செயல்பாடுகள் எத்தகைய பலன்களையும் அதற்கான விளக்கங்களையும் தரவல்லது என்பதையும் கண்டறியலாம் (Mariana Valverde, 2006, 17). இக்கோட்பாட்டினைக் கொண்டு சமூகத்தில் நிகழும் செயல்பாடுகளைக் குறியீடாகக் காணும் போது அதில் உள்ள தெரிநிலை விளக்கங்களோடு புதைநிலை விளக்கங்களையும் கண்டறியலாம் (Albert Sebeok, 1994, 3). இதனால் அந்த இனத்தில் சமூகவியல் செயல்பாடுகள் எத்துணை தூர நாகரீகப் பண்பாட்டிற்கு உட்பட்டது என்பதுவும் அதனால் பெறப்படும் விளக்கங்கள் உணர்த்திவிடும்.

*பொதுவில் சமூகவியலில் தோன்றக் கூடிய குறியீடுகள் தொடர்புத் துறையின் வாயிலாகவே அடையாளக் குறியீடுகளாக நிலைபெற்றுள்ளன. இவ்வாறு தொடர்புத்துறையின் வாயிலாகத் தோன்றக் கூடிய குறியீடுகள் யாவும் அதனைப் பயன்படுத்துவோரின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப தனித்த விளக்கத்தையும் செயல்பாடுகளையும் உடையனவாகும்* (Albert Sebeok, 1994, 11). *உதாரணமாக சிவப்பு நிறம் பொதுவில் அபயாத்தைக் குறிக்கும் நிறமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் சீன மக்களிடையே இந்த நிறம் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும் வர்ணமாகப் போற்றப்படுகின்றது. இதன் வழி ஒவ்வொரு விசயத்தையும் குறியீடாகக் காணும் போது அவை பயன்படுத்துவோரின் இயல்பிற்கு ஏற்ப தனித்த செயல்பாடுகளையும் விளக்கங்களையும் கொண்டிருப்பதைக் காணலாம். இதற்கு அந்த இனத்தில் நாகரீகம், பண்பாடு, நம்பிக்கைகள், வாழ்வியல் அமைப்பு முறை, கல்வி, வாழ்விடம் போன்ற பல்வேறு கூறுகள் காரணங்களாக அமைவதையும் குறியீட்டுக் கோட்பாடு சுட்டப்படுகிறது* (Preucel, 2010, 8).

*மேற்கூறிய விளக்கத்தின் அடிப்படையில் குறியீட்டுக் கோட்பாடானது ஒரு பொருளை குறியீட்டில் நிறுத்தி அதனைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து அதன் செயல்பாடுகளையும் விளக்கங்களையும் உணர்வதற்கு வகை செய்யும் என்பதனை அறிய முடிகின்றது. இச்சிந்தனையின் அடிப்படையில் இக்கோட்பாட்டினைக் கொண்டு சங்க இலக்கியமாகிய புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றுள் வெளிப்படும் செய்திகளைக் குறியீடாகக் கண்டு அவை எவ்வாறு பல்வேறு நிலைகளில் தமிழரின் வாழ்க்கையின் உட்பொருளை வெளிப்படுத்துகின்றன என்பதை காணலாம்.*

## குறியீட்டு உவமையும் உட்பொருளும்

*புறநானூற்றின் 55வது பாடல் பல உவமைகளைக் குறியீடுகளாக முன்னிருத்தி ஒரு மன்னனைப் பற்றிய கீர்த்தியையும், அரச நீதியையும் விளக்குவதாக அமைந்துள்ளது. பாடிய புலவர் மதுரை மருதன் இளநாகனார். இப்பாடல் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் குறித்துப் பாடப்பட்ட பாடலாகும். பாடல் பின்வருமாறு:*

**ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ**
**ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்**
**பெருவிறல் அமரர்க்கு வெற்றி தந்த**
**கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்**
**பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல**
**வேந்து மேம்பட்ட பூந்தார் மாற,**
**கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்**
**நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும்என**
**நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட**
**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்;**
**அதனால், நமரெனக் கோல்கோ டாது,**
**பிறர்எனக் குணங் கொல்லாது,**
**ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்,**
**திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்,**
**வானத்து அன்ன வண்மையும் மூன்றும்**
**உடையை ஆகி இல்லோர் கையற**

**நீநீடு வாழிய நெடுந்தகை! தாழ்நீர்**
**வெண் தலைப் புணரி அலைக்கும் செந்தில்**
**நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்**
**கடுவளி தொகுப்ப ஈண்டிய**
**வடுஆழ் எக்கர் மணலினும் பலவே! (புறம்: 55)**

இப்பாடலின் முதல் வரி தொடங்கி ஆறாம் வரி வரையில் சிவபெருமானின் வீரதீரச் செயல்களைப் பாடுவதாகவே அமைந்துள்ளது. ஆயினும் இவற்றைக் குறியீட்டுக் கோட்பாட்டின் கண் கொண்டு பார்க்கும்போது, இவை அனைத்தும் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் மன்னனாக இருந்து ஆற்ற வேண்டிய அரச நீதிகளை உணர்த்தப் பாடப்பட்டிருப்பதாக அமைவதை உணரலாம். அதன் அடிப்படையில் இப்பாடல்; சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்தமை சிவபெருமானின் ஆற்றலுக்கும், முப்புரங்களை எரித்தது அவரின் வல்லமையையும் வீரத்தையும் சுட்டுவதாக அமைந்துள்ளது. சிவபெருமானின் கருநீல வண்ணமுடைய கழுத்தானது தேவர்களின் பொருட்டு சிவபெருமான் ஆலகால விடத்தை உண்ட தியாகமும் பெருங்கருணையையும் சுட்டுவதாக அமைந்துள்ளது. சிவ பெருமானின் சிரசில் உள்ள பிறை நிலவானது, தட்சன் சாபத்தினால் தேய்ந்து அழிந்து போகவிருந்த சந்திரன் ஈசனிடம் அடைக்கலம் என்று வந்த உடன் அவனை காத்து அண்டியவரைக் கைவிடாத பேரருளைக் குறிகின்றது.

இக்கூற்றுகள் அனைத்தும் பொதுவில் சிவப்பரம்பொருளின் தனிப்பெருங்கருணையையும் வல்லமையையும் சுட்டுவதாக அமந்த போதிலும், குறியீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் இவை அனைத்துமே ஒரு வேந்தனிடம் இருக்க வேண்டிய குணாதியங்களுக்கு ஒப்புவமையாக அமைவதை ஆய்வுப்பூர்வமாக உணரலாம். சிவபெருமானைப் போலவே வேந்தன் ஒருவனும் வல்லமையில் தனிச்சிறந்தவனாக இருத்தல் வேண்டும். அவனுடைய வல்லமையானது அரிய செயல்களைச் செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வகையில் மேருமலையை வளைத்தல் என்பது அதிதீரச் செயல். இந்த அதிதீரச் செயலுக்கு ஏற்ப விளங்கும் மன்னன் தலை சிறந்தவனாக இருப்பான் என்பது இக்கோட்பாட்டின் வழி இப்பாடலில் வெளிப்படும் செய்தியாகும்.

அடுத்த நிலையில் போர்க்களத்தில் மன்னனானவன் தனது எதிரி எத்துணை ஆற்றல் பொருந்தியவனாக அல்லது செயற்கரிய செயல் புரிபவனாக இருந்தாலும் கூட அதனை எல்லாம் முரியடித்து வெற்றி வாகை சூடக் கூடிய ஆற்றலுடையவனாக இருத்தல் வேண்டும் என்பதைக் கூறுவதற்காகவே, விண்ணில் பறக்கும் தன்மையுடைய மூன்று நகரங்களில் இருந்த திரிபுர அசுரர்களைச் சிவபெருமான் வதைத்த தீரச் செயலை புலவர் சுட்டுகின்றார். ஆக இவ்விடத்தில் புலவர் சிவனின் ஆற்றலைக் கூறுவதைப் போலப் பாடல் வரிகள் அமைந்திருந்தாலும் அது மன்னனுக்கு மறைமுகமாக வழங்கப்படும் அறச்செய்திகள் என்பதைக் குறியீட்டுக் கோட்பாட்டைக் கொண்டு ஆராய்ச்சி செய்யுங்கால் நன்கு புலப்படும்.

தொடர்ந்து, சிவபெருமான் பாற்கடலில் தோன்றிய விடத்தை தாம் உண்டு கருத்த கண்டத்தை உடைய திருநீலகண்டமாக விளங்கும் கருணைத் திறத்தையும் மன்னனிடம் இருக்க வேண்டிய குணமாகவே குறிப்பிடுகின்றார் புலவர். அவ்வகையில் இதனைக் குறியீட்டு அடையாளமாகக் காணும் போது, இது ஒரு மன்னன் தாயைப் போன்ற குணமுடையவனாக இருக்க வேண்டும் எனக் கூறுவதாகப் பொருள் கொள்ளலாம். இது எவ்வாறாயின், தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும் போது அதில் தோன்றிய

*அமுதத்தைத் தேவர்கள் அடைந்தனர். ஆனால் இறையனார் தேவர்களுக்கு அமுதத்தைக் கொடுத்து விட்டுக் கொடுமை நிறைந்த விடத்தைத் தான் உண்டு அனைவரையும் காத்தருளினார். தாயும் அதுபோன்ற தியாக உள்ளம் கொண்டவளே. மன்னனும் அத்தகைய குணம் உடையவனாக இருத்தல் வேண்டும். மக்களின் நலத்தைக் காக்கும் பொருட்டு எத்தகைய தியாகமும் செய்யக் கூடிய கருணையுடையவனே சிறந்த மன்னனாவான் எனும் கூற்றை இப்பகுதியில் புலவர் சிவபெருமானின் கறைகண்டத்திற்கு ஒப்புவமை கூறி குறியீடாக உணர்த்துகிறார்.*

*அடுத்து, சந்திரனைச் சூடிய பெருமையையும் மன்னனுக்கு உவமையாகக் கொள்ளலாம். சந்திரனுக்கு, தட்சனின் மகள்களாகிய 27 நட்சத்திரங்களும் மனைவியராக இருந்தபோதும் சந்திரன் ரோகிணி, கார்த்திகை ஆகிய இரண்டு மனைவியரிடம் அதிகம் அன்பு பாராட்டியதால் கோபம் கொண்ட தட்சன் அவனைத் தேய்ந்து போகுமாறு சபிக்கிறார். இதனால் தனது கலைகளையெல்லாம் இழந்த சந்திரன் சிவபெருமானைச் சரணடைகிறார். சிவபெருமான் சந்திரனைத் தன் தலையில் சூடிக் கொண்டு தட்சன் சாபத்தின் படி* ***15*** *நாள்கள் தேய்தும் பின்னர் தமதருளால்* ***15*** *நாள்கள் வளர்ந்து முழுநிலவாக மாற அருள் செய்கிறார். இவ்விடத்தில் சந்திரன் குற்றம் இழைத்தவனாக இருந்த போதும் சிவபெருமான் தன்னைச் சரணடைந்ததால் சந்திரனைக் காத்த திறத்தைப் போலவே மன்னன் ஒருவனும் தம் மக்கள் குற்றம் இழைத்திருந்தாலும் தம்மைத் தஞ்சம் என்று அடைந்தால் அவர்களைக் காக்கு கடமையுடையவன் எனும் கூற்றை முன் வைத்துப் புலவர் பாடுவதாகக் குறியீட்டுக் கோட்பாட்டைக் கொண்டு உணர இடமுண்டு.*

*இதில் இறுதியாக, இத்தகைய சிறப்புகள் எல்லாம் உடைய சிவபெருமானின் நெற்றிக்கண்ணுக்கு மன்னவன் ஒப்புவமை உடைவன் எனப் புலவர் புகழ்ந்துரைக்கின்றார். இவ்விடத்தில் சிவப்பரம்பொருளின் மூன்றாவது கண்ணாகிய நுதல்விழியானது ஞானத்தின் அடையாளம் எனப் பொருள்படும். இறைவனின் வலது கண் சூரியன் என்றும், இடது கண் சந்திரன் என்றும் சைவ சித்தாந்தம் கூறும் (இராசேந்திரன், சில்லாழி – விக்கினராசா,* ***2012, 77).*** *மன்னன் சூரியனைப் போல வெம்மை உடையவனாக மட்டும் இருந்தாலோ அல்லது சந்திரனைப் போல குளிர்ச்சியையும் மகிழ்ச்சியையும் தரும் தன்மையை மட்டும் உடையவனாக இருந்தாலோ சூரியனின் தன்மையற்ற குறைப்பாடும் அல்லது சந்திரனின் தன்மையற்ற குறைபாடும் அவனிடம் இருக்கும். ஆனால் இறைவனின் ஞான ஒளியாகிய நெற்றிக்கண் இவ்விரண்டையும் விட மிக உயர்ந்த தன்மையைக் கொண்டதாக உள்ளது. மேலும், சூரிய சந்திரர்களின் தன்மையும் சம அளவில் பெற்றதாகவும் உள்ளதால் இது மன்னன் சூரிய, சந்திரர் ஆகிய இருவரின் தன்மையையும் ஒரு சேரப் பெற்ற பெருமையைப் பறைசாற்றுவதாக அமைகிறது. அதோடு மன்னன் சூரியனையும் சந்திரனையும் ஒத்து நடு நிலையில் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்பதையும் உணர்த்துவதாக அமைகிறது.*

*இதுவல்லாது சிவபெருமானின் நெற்றிக் கண்ணை குறியீட்டுக் கோட்பாட்டைக் கொண்டு மேலும் ஆராயும் போது பல புதிய செய்திகள் மன்னனுக்கு உவமையாகக் கூறப்படுவதை உய்த்துணரலாம். அந்த வகையில் சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் தீப்பொறியானது காமனை எரித்தது எனும் செய்தியையும் இவ்விடம் ஆய்வுப் பொருளாக்கலாம்* (Kali Prasad Goswami, 1998, 48). *இதன் அடிப்படையில் காணும் போது சிவபெருமான் காம இச்சைக்கு அப்பாற்பட்டவனாக இருத்தல் போன்றே மன்னனும் தனது நீதி நெறியான ஆட்சியில் பெண் மோகத்திற்கு இடம் கொடாமல் செங்கோள் செலுத்தல் வேண்டும் எனும் கூற்றையும் முன்னிருத்திக் கூறலாம்.*

மேலும், சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்துதான் சூராதி அவுனர்களை வதம் செய்ய முருகவேள் தோன்றினார் எனும் கருத்தை குறியீட்டின் அடிப்படையில் ஆய்வு செய்யலாம் (கந்தபுராணம்). அவ்வாறு பார்க்கும் போது ஒரு மன்னவனும் முருகப்பெருமானின் தனிப்பெரும் தன்மைகளாகிய, பெருங்கருணை, வீரம், எல்லையில்லா ஆற்றல், ஞானம், அருள் போன்ற குணங்கள் நிறைந்தவனாக இருத்தல் வேண்டும் எனும் கூற்று வெளிப்படுவதைக் காணலாம்.

குறியீட்டுக் கோட்பாடு ஒரு பொருளை பல்வேறு கோணங்களில் ஆய்வுக்கு உட்படுத்தும் போது அவை புதிய புதிய செய்திகளை வெளிக்கொணர வழிவகுக்கும் எனக் கூறுகின்றது. அதே வேளையில் ஒரு குறியீடு குறித்த விளக்கமானது அக்குறியீட்டுப் பொருளைப் பற்றிய உண்மை விளக்கத்தையும் கடந்து புதிய பல விளக்கங்களையும் முன்வைக்க ஆய்வாளருக்கு முழுச் சுதந்திரத்தையும் கொடுக்கின்றது (Albert Sebeok, 1994, 34). அதன் அடிப்படையில் சிவபெருமானின் நெற்றிக் கண் குறித்து வெளிக்கொணரப்பட்ட இப்புதிய செய்திகள், விளக்கங்கள் யாவுமே குறியீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் ஏற்புடைய ஆராய்ச்சி வெளிப்பாடுகளாக உள்ளன.

பொதுவில் தமிழரின் பண்பாட்டில் மன்னனை இறையாகப் போற்றும் மரபு உண்டு. வள்ளுவமும்

> **“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
> **இறைஎன்று வைக்கப் படும் (குறள்: 388)**

என்கிறது. இதன் அடிப்படையில் பெருங்கடவுளாகத் தமிழர் மரபில் போற்றப்படும் சிவபெருமானின் நெற்றிக்கண்ணிற்கு மன்னவன் உவமையாகக் காட்டல் அவனின் தன்னிகரில்லா மேன்மையைப் புலப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

தொடர்ந்து இப்பாடலில் அடுத்து வரும் வரிகளில் இதனையே நேரடியாக மன்னனிடம் புலவர் கூறுவதாக இப்பாடல் வரிகள் (புறம் 55: 721) அமைந்துள்ளன. அந்த வகையில் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய படைகளை மன்னன் தன்னகத்தே கொண்டிருந்தாலும் மன்னனுக்கு அறநெறியுடைய ஆட்சியே சிறப்புடையது என விளக்குகிறார் புலவர். அதனைக் குறிப்பாகக் கூறும் போது இவ்விடத்திலும் கதிரவன், சந்திரன், மழை ஆகியவற்றின் தன்மைகளை மன்னவன் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட சிவபெருமானின் நெற்றிக் கண்ணுக்கான உவமையானது இவ்விடத்தில் வெளிப்படுவதை உணரலாம். அந்த வகையில் தம் குடியைக் காப்பதில் வேந்தன் ஒருவன் நிலவைப் போலவும், பகைவரை ஒடுக்குவதில் தகிக்கும் சூரியனைப் போலவும் செயலாற்ற வேண்டும் என்பதாகக் குறிப்பிடுகின்றார். இக்கூற்றும் இறைக்கும் இறைச் செயலுக்கு ஒப்பானதே. சிவபெருமான் தனது வலது கண்ணைக் கதிரவனாகவும் இடது கண்ணைச் சந்திரனாகவும் கொண்டு பரிபாலிப்பதை நோக்கும் போது இக்கூற்று தெளிவடைகிறது (இராசேந்திரன், சில்லாழி - விக்கினராசா, 2012, 77). இக்கூற்று ஆண்டாள் பாசுரத்திலும் வெளிப்படுவதைக் காணலாம். ஆண்டாள் பாசுரத்தில், ‘மார்கழித் திங்கள்’ எனத் தொடங்கும் பாசுரத்தில் ‘கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்’ (திருப்பாவை 1: 6) எனும் வரிகள் இடம் பெற்றுள்ளன. இது திருமால் கதிரவன், நிலவு ஆகிய இரண்டின் தன்மையை ஒத்த திருமுகத்தைக் கொண்டுள்ளான் எனப் பொருள் தருகின்றது. இது எவ்வாறாயின், திருமால் நரசிம்ம அவதாரத்தில் இரணியா கசிபுவை வதம் செய்யும் போது அவனுக்குத் தகிக்கும் கதிரவனின் முகத்தையும் அதே வேளையில்

தம் பக்தனாகிய பிரகலாதனுக்கு தன்னிலவின் தண்மையை ஒத்த முகத்தையும் காட்டியருளினார். இதுவேக் 'கதிர்மதியம் போல் முகத்தான்' என ஆண்டாள் பாசுரத்தில் வெளிப்படுவதைக் குறிப்பிடலாம்.

இவ்விடத்தில் புலவரும் மன்னனும் இறையைப் போலவே மக்களைக் காப்பதிலும் பகைவரை ஒடுக்குவதிலும் நிலவையும் கதிரவனையும் ஒத்து இருத்தல் வேண்டும் எனும் கூற்று வெளிப்படுதலை உணருங்கால், மன்னன் மக்களுக்கு இறை என்பது பிழையாகாது எனும் கூற்றை ஏற்கலாம். குறியீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் மன்னனுக்கான உவமையாக வழங்கப்பட்ட கதிரவனையும் நிலவையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவை மன்னனின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் எனத் தெளிவு படுத்துவதாக அமைவதையும் உணருதல் வேண்டும்.

தொடர்ந்து பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் நெடிது காலம் வாழ வேண்டும் என மதுரை மருதன் இளநாகனார் வாழ்த்தும் போது அவனைக் திருச்செந்தூரில் உள்ள கடல் மணலின் எண்ணிக்கையைப் போல பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார். இவ்விடத்தில் கடல் மணல் என்று பொதுவில் கூறாமல் திருச்செந்தூரின் கடல் மணலின் எண்ணிக்கைக்கு ஒப்புவமை கூறுவதில் சில ஆய்வுக்குறிய செய்திகள் வெளிப்படுவதை குறியீட்டுக் கோட்பாடு நமக்கு உணர்த்துவதாகத் தெரிகின்றது.

குறியீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில், திருச்செந்தூரின் கடல் மணல் என்பதில் சில உட்பொருள்கள் உள்ளன. திருச்செந்தூர் முருகக்கடவுள் உரையும் படைவீடுகளுள் ஒன்று (திருமுருகாற்றுப்படை, திருச்சீரலைவாய்: 2). ஆக, இறை வதியும் திருத்தலத்தின் மண்ணானது புண்ணியம் நிறைந்தது எனும் கூற்றும் இவ்விடத்தில் வெளிப்படுகிறது. இதன் அடிப்படையில் மன்னனின் வாழ்நாள் திருச்சேந்தூரின் புண்ணியம் நிறைந்த மணலின் எண்ணிக்கையில் இருத்தல் வேண்டும் எனும் கூற்றானது மன்னன் வாழும் வாழ்நாள் முழுமையும் புண்ணிய காரியங்கள் செய்திடும் நாள்களாக இருத்தல் வேண்டும் எனப் புலவர் பொருள் கொண்டதாக விளக்கமளிப்பது பொருத்தமாக அமையும்.

அடுத்த நிலையில் திருச்செந்தூரில் இருந்தே சூரபதுமன் முதலான அசுரர்களை முருகக்கடவுள் வெற்றிக் கொண்டார். எனில் திருச்செந்தூர் வீரம் விளைந்த மண். தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டிய மண். இதனை மன்னனின் வாழ்நாளுக்கு உவமை கூறும் போது மன்னனும் தமது வாழ்நாளை வீரம் செறிந்த வாழ்க்கையாகவும், தீமைகளைக் களைந்து நல்லோரைக் காக்கும் உயர்ந்த வாழ்நாளாகவும் கொண்டு வாழ வேண்டும் எனும் உண்மையும் உள்வைத்துப் புலவர் படுவதாகப் பொருள் கொள்ளலாம். ஏனெனில் குறியீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் புலவர் குறிப்பிட்டுள்ள திருச்செந்தூரின் மணலைக் காணும்போது போது அதில் உள்ள தெரிநிலை விளக்கங்களோடு புதைநிலை விளக்கங்களையும் கண்டறிய முடிகின்றது (Albert Sebeok, 1994, 3).

அடுத்து புறநானூற்றின் 361வது பாடலும் பல புதிய செய்திகளைக் கூறுவதைக் குறியீட்டுக் கோட்பாட்டினைக் கொண்டு காணலாம். இப்பாடலைக் கயமனார் எனும் புலவர் பாடியுள்ளார். இப்பாடல் உலகில் நிலையற்ற தன்மையை உணர்ந்தவன், நிலையான புகழைப் பெறவேண்டி பல நற்காரியங்கள் செய்தவன், அந்தணர்களுக்கு பரிசில் பல தந்தவன், பிறர் பொருள் துயர் தீர்த்தவன், புலவர்களுக்குப் புரவலனாக இருந்தவன், பாடிணி, பாணர் இவர்களுக்குக் குறைவில்லாது பொருள் கொடுத்தவன், பிறர் இகழ்வதற்குரிய காரியங்களைச் செய்யாதவன் போன்றோர் கூற்றம் வரும் போது

அக்கூற்றுவனின் வரவைக் கண்டு கூட அஞ்சுவதில்லை என்பதாக அமைகின்றது. இதன் மூலம் கூற்றுவன் என்பது இயற்கையான ஒன்று; ஆனால் அவன் வருவதற்குள் நல்லனவற்றையெல்லாம் செய்து சிறப்படைந்தோன் அக்கூற்றுவனைக் கண்டு அஞ்சுவதற்குரிய எந்தக் காரணமும் இல்லை என்பதை உணர்த்துவதாக இப்பாடல் அமைகிறது.

குறியீட்டின் கோட்பாட்டைக் கொண்டு இச்செய்தியைப் பார்க்குப் போது, பொதுவில் கூற்றுவன் வரும் போது மக்கள் அஞ்சுவர் எனும் கருத்தும் உள்ளிருப்பதை எளிதில் உணரலாம். ஆனால் குணம் மிக்கோர் கூற்று வருவதைக் கண்டு அஞ்சாமல் இருத்தலுக்கு அவர்கள் தமது நற்கீர்த்தியினால் இவ்வுலகில் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து தமது இறுதி காலத்தை மகிழ்வுடன் ஏற்கும் மனத்தினை உடையவராக இருந்துள்ளனர் எனும் பொருள் வெளிப்படுவதைக் காணலாம். அதே வேளையில் குறியீட்டுக் கோட்பாடு இங்கு வேறு ஒரு தகவகையும் தருகிறது.

அதன் அடிப்படையில் கருட புராணத்தின் செய்தியின்படி எமனின் சபையில் புண்ணிய ஆன்மாக்கள் சென்றடையும் போது அவனது தோற்றமும், ஏவலர்களும், சபையும் பொழிவு மிகுந்து இனியதாகக் காட்சி அளிக்கும் என்றும், மாறாகப் பாவ ஆத்மாக்கள் அவ்விடம் செல்லும் போது கூற்றுவன் உலகு மிகவும் பயங்கரமானதாகக் காட்சி அளிக்கும் என்பதாகவும் சொல்லுகின்றது. எனவே மேற்கூறிய பாடலின் தலைவன் புண்ணிய ஆத்மாவாகக் காட்டப்படுவதால் கூற்றுவனின் வரவு பயமுறுத்துவதாக அமையாது என்பதாகப் பொருள் கொள்ள வாய்ப்புண்டு.

ஆகவே இவ்விடத்தில் நன்மை செய்தார் நல்லுலகம் பெருவார் எனும் பொதுவான கருத்தை மட்டுமே முன்னிருத்திப் பாடாமல், மக்கள் மத்தியில் இருந்துள்ள நம்பிக்கைகளையும், நூல்கள் கூறும் விளக்கங்களையும் மனதில் இருத்தியே புலவர்கள் பல்வேறு கோணங்களில் சிந்தித்துப் பாடல்களைப் புனைந்துள்ளனர் என அறியலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் பல்வேறு செய்திகளையும் உட்பொருளையும் தம் பாடல்களில் உள்ளடக்கியுள்ளன. இவற்றில் உள்ள பாடல்கள் யாவும் வெளிப்படையாகத் தனது பாடலின் கருப்பொருளை முன்வைத்த போதும் பல பாடல்களில் புதை நிலையில் பல்வேறு செய்திகள் இருப்பதை மறுப்பதற்கில்லை. இதனை ஆழ்ந்து ஆராய்ந்து வெளிக்கொணர்வதில் குறியீட்டுக் கோட்பாடு பெரும் பங்கு வகிக்கிறது.

அதன் அடிப்படையில் குறியீட்டுக் கோட்பாட்டினைக் கொண்டு இந்த ஆய்வில் ஒரு சில மிகவும் பரீட்சியமான பாடல்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள செய்திகள் யாவும் சங்க இலக்கிய ஆய்வுலகில் புதிய செய்திகள் என்று கூறுவதற்கில்லை. ஆனால் குறியீட்டுக் கோட்பாட்டினைக் கொண்டு சங்க இலக்கியப் பாடல்களை ஆய்வு செய்யும் போது, சங்க இலக்கியப் பாடல்களைப் பல்வேறு கோணங்களில் பார்த்து அதன் புதைபொருள் கருத்துகளை எவ்வாறு வெளிக்கொணர்ந்து நிறுவலாம் என்பதுவே இக்கட்டுரை முன்வைக்கும் செய்தியாகும். பல்முனைப் பார்வை, குறியீட்டுக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதில் ஆளுமை, சங்க இலக்கியம் குறித்த ஆழ்ந்த அறிவு போன்றவை இருப்பின் இக்கோட்பாடு இதுவரை சங்க இலக்கியத்தில் வெளிப்படாத பல பேருண்மைகளையும் வெளிக்கொணரும் என்பதில் ஐயமில்லை.

## Bibliography

Albert Sebeok, Thomas. (1994). *Sign: An Introduction To Semiotics*. London: Toronto Buffalo.

Bailey, D., Kenneth. (1978). *Method Of Social Research*. London: Collier Macmillan Publishers.

Berger Arthrasa. (1985). *Media Analysis Techniques*. London: SAGE Publication.

Brown Martin & Felizitas Ringham. (2006). *Key Terms In Semiotics*. New York: Continnum.

Hodge, Robert. (1998). Communication. In. Paul Bouissac (Ed), *Encyclopedia Of Semiotics* (pp. 132-135). New York: Oxford University Press.

Innis, E., Robert. (1985). Introduction. In E., InnisRobert (Ed.), *Semiotics: An Introductory Anthology*. (pp. vii-xvi). Bloomington: Indiana University Press.

Kali Prasad Goswami. (1998). *Kamakhya Temple*: *Past and Present*. New Delhi: APH Publishing. *KantapurâGam.*

Kaplan Abraham. (1964). *The Court Of Inquiry*. New York: Harper & Row Publisher, Inc.

*KarumapurâGam.*

Lawrance W., Neuman. (2007). *Basics Of Social Research Qualitative And Quantitative Approaches.* USA: Pearson.

Mariana Valverde. (2006). *Law And Order: Image, Meaning, Myths*. New Jersey: Rutgers University Press.

Morris, Charles. (1985). 'Sign and The Act". In,E. InnisRobert (Ed.),*Semiotics: An Introductory Anthology* (pp. 178-189). Bloomington: Indiana University Press.

Parera J., D. (2004). *Teori Semantik*. Jakarta: Penerbit Erlangga.

Parmentier J., Richard. (1994). *Sign In Society: Studies In Semiotics Anthropology*. Bloomington: Indiana University Press.

Peirce, S,. Charles. (1985). 'Logic as Semiotic: The Theory of Sign'. In, E. InnisRobert (Ed), *Semiotics: An IntroductoryAnthology* (pp. 1-23). Bloomington: Indiana University Press.

Preucel, W., Robert. (2010). *Archaeological Semiotics*. UK: Wiley-Blackwell.

*Pu_anâIû_u*.

*Nâ7âyira tivyapirapantam, Tiruppâvai*.

Rajantheran,M., Silllalee,K. & Viknarasah. (2012). An *Introduction to Hinduisme*. Petaling Jaya: Malaysia Hindu Sangam Publication.

Rohana Yusof. (2003). *Penyelidikan Sains Sosial*. Bentong: PTS Publications & Distributior Sdn, Bhd.

Shore, Bradd. (1998). 'Culture of Semiotics'. In, Paul Bouissac (Ed.), *Encyclopedia of Semiotics* (pp. 165- 168). New York: Oxford University Press.

Stephen Ellis & Cris Swoyer. (2008). 'Theory'. In,JR, William A, Darity, (Ed), *International Encyclopedia Of Social Sciences*. (Vol. 7, pp. 343-345). New York: The Macmillan Company & TheFree Press.

Subramaniaya Shatri,P.(1998). *Srîmat pâkavatam.*Chennai: Rajan & Company Printers.

*Tirukku_a7.*

*Tirumurukâ__uppamai*

Umberto, ECO. (1979). 'Proposal For A History Of A Semiotics'. In, Tasso Borbe(Ed.), *Semiotics Unfolding*(Vol. 1, pp. 75-90) New York: Mouton Publishers.

# சிலப்பதிகாரத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் பங்கு

# The role of the society in national development at the time of Silapthigaram

**இரவீந்திரன் ராமையா** / Ravendran Ramaiyah[1]

**ஆறுமுகம் சின்னசாமி** / Arumugam Chinasamy[2]

**Abstract**

The purpose of this article is to analyse the role of the various segments of society at the time of Silapathigaram in national development. King was instrumental in the development of the country. Without war people live in a country in peace the country's ruling lead a better living. It was not only the economic development of the people who live in peace, where the kings who ruled had played a crucial role. King Ceran, Colan and Pandian prioritize this principle in the state administration. At that time the people lived in peace prosperity. Thus, people who live in peace, prosperity and affluence, no doubt , will be able to support the country's development. The Article also reveals the role of traders in the days of Silapathigram in economic development. Kavirippumpattinam's individuality was famous in the business sector. With regard, to the economic development of the Puar also had moved higher. In addition, responsible and disciplined society has always played a role in the development of the country. Silapathigaram proved that the business sector of the country, and refinethemselves. The income they received in theirdaily lives, were donate.Finally the role of the society in the country's development is important. Thus according to Elagoadikal, Silapathigaram displays people united comprehensive in national development.

*Key Words: Silapathigaram,Three Kings, political structure, Indiravizha.*

## காவிரிப்பூம்பட்டினம்

*காவிரிப்பூம்பட்டின மக்கள் பரம்பரை பரம்பரையாக அவ்வூரிலே பழங்குடி மக்களாக வாழ்ந்தனர். அழியாப் புகழ்பெற்ற புகார் நகரத்தில் மக்கள் செல்வ செழிப்புடனும் அமைதியாகவும் வாழ்ந்து வந்தனர். காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு பிரிவாக அமைந்திருந்தது (அ.மு. பரமசிவானந்தனார், 1951: 6). மருவூர்ப்பாக்கத்தில் அமைந்துள்ள வீடுகள் நிலாமுற்றம் அதாவது மொட்டைமாடிகள் கொண்ட பல வீடுகளும் சாரளங்களையுடைய மாளிகைகளும் சங்ககாலத்திலே இருந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார் (லேணா தமிழ்வாணன். 1982: 84). அதுமட்டுமின்றி, அணிகலன்கள் குவித்து வைக்கப்படும் சரக்கு அறைகளும் உள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.*

*யவனர்கள் எனும் கிரேக்க நாட்டு வணிகர்கள் நீர்த்துறையின் பக்கங்களில் வாழ்ந்து வந்தனர். கடற்கரையின் அருகில் அந்நிய நாட்டு வணிகர்களும் பல மொழிகளைப் பேசும் பலர் தமிழர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். மேலும், நகர வீதிகளில்*

---

[1]The author is a Ph.D candidate at the Department of Indian Studies, University of Malaya, Malaysia.

[2]The author is a Ph.D candidate at the Department of Indian Studies, University of Malaya, Malaysia.

*வாசனைக் குழம்புகள், வாசனைப் பொடி, மணம் கமழும் சந்தனம், நறுமலர் மற்றும் பல வாசனைப் பண்டங்கள் விற்கும் இடமாகத் திகழ்ந்தது காவிரிப்பூம்பட்டினம். அதுமட்டுமின்றி, பட்டு, பவளம், சந்தனம் அகில், முத்து, இரத்தினங்கள், பொன், பொன்னாபரணங்கள் போன்ற எண்ணிக்கையிலடங்கா வண்ணம் குவிந்து கிடந்தன (கு. பகவதி, 1998: 211214).*

*அடுத்ததாக, கூலவீதி எனும் தானியங்களைத் தனித்தனியே பிரித்து வைத்து விற்பனை செய்கின்ற கடைத்தெருக்களும் காணப்பட்டன. பலவகை தொழிலைப் புரியும் பலதரப்பட்ட மக்களும் தனித்தனி இடங்களில் வாழ்ந்து வந்தனர். பட்டினப்பாக்கத்தில் அரச வீதிகள், சிறந்த குடியில் பிறந்த வணிகர்கள் வாழும் வீதிகள், மாட மாளிகைகள், உழவர்கள் மற்றும் பலவிதமான தொழில் செய்யும் மக்கள் குதிரை வீரர்கள், யானைப் பாகர்கள் போன்றோர் தனித்தனி வீதிகளில் வசித்து வந்தனர் (புலியூர் கேசிகன், 1963: 3132). இவையனைத்தும் சிலப்பதிகார மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கின்றது. அச்சமயம் மக்கள் செல்வ செழிப்புடன் அமைதியாக வாழ்ந்தனர் என சிலப்பதிகாரம் தெளிவாக்குகிறது. இவ்வாறு அமைதியாகவும் செல்வ செழிப்புடனும் வாழும் மக்கள், நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர் என்பதில் ஐயமில்லை.*

*சிலப்பதிகாரத்தில் புகழ்பெற்ற வணிகர்களாக கோவலனின் தந்தை மாசாத்துவனும் கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கனும் திகழ்ந்தனர் (ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, 1957: 55). நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வணிக துறையில் அவர்களின் பங்களிப்பு அரசர்களின் மத்தியில் நன்மதிப்பை ஏற்படுத்தியது (சிலம்பு 1 : 1, 3033). சிலப்பதிகார காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சர்வதேச துறைமுகமாக விளங்கியதால் வெளிநாட்டு வணிகர்கள் புகாருக்கு அடிக்கடி விஜயம் செய்தனர். அக்காலத்தில் பண்டமாற்று வியாபாரம் அடிப்படையைக் கொண்டிருந்தது (சிலம்பு 1: 2, 113) வெளிநாட்டு வணிகர்கள் அவர்களின் பொருட்களையும் உள்ளூர்ப் பொருட்களையும் பண்டமாற்று முறையில் வணிகம் செய்தனர். காவிரிப்பூம்பட்டினத்தில் அப்போது பிரபலமாக முத்து, மரகதம், மாணிக்கற்கள் போன்றவை சிறந்து விளங்கின. வணிக துறையில் காவிரிப்பூம்பட்டினம் தனித்துவம் பெற்று விளங்கியது. இதனால் புகார் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மேலோங்கியது. அத்துடன், புதிதாகத் தொழிலைத் தொடங்க விரும்பும் வணிகருக்கும் இத்துறைமுகம் ஒரு பாலமாக விளங்கியது (அ. தட்சணாமூர்த்தி, 2005: 102103).*

**மதுரை மாநகரம்**

*மதுரை மாநகரம் சங்க காலத்திலே சிறந்த நகரமாகத் திகழ்ந்தது. அந்நகரில் வாழ்ந்த மக்கள் செல்வந்தராகவும், தெய்வபக்தி உள்ளவர்களாகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். மதுரையில் செல்வம் குவிந்திருந்தது. மக்கள் பலவகையான தொழில் புரிந்து வந்தனர். வாணிகம் விரிவாக நடபெற்றது. சிலப்பதிகார காலத்திலே மதுரை நகர்ப்புறம் செல்வ செழிப்பாக வளமுடன் திகழ்ந்தது (சாமி சிதம்பரனார், 1988: 7375). அக்காலத்தில் மதுரை மாநகரத்தில் அங்காடி வீதிகளும் இரத்தினங்கள் விற்பனை செய்யும் வீதிகளும் மேலும், பொன் வியாபாரம் செய்யும் கடைத்தெருக்களும் தனியாக அமைந்திருந்தது. இதன் மூலம் மதுரை மக்கள் அவர்களின் அயரா உழைப்பினால் செல்வ செழிப்புடன் வாழ்ந்தார்கள் என்பதை அறியலாம். மக்கள் செல்வ செழிப்புடன் வாழ்ந்தால் எந்த நாடும் வளர்ச்சி பெற்ற நாடாகத் திகழும் என்பது உறுதி.*

*சிலப்பதிகாரத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு சிலப்பதிகார மக்கள் பெரும்பங்கை ஆற்றினர் என்றால் அது மிகையாகாது. நாட்டு மக்களின் பங்களிப்பால்தான் புகார் பொருளாதார வளம் பெற்று விளங்கியது. அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகளைத் திட்டமிட்டாலும் மக்களின் மூலம்தான் நாட்டின் பொருளாதாரத்தை ஈட்ட முடியும். அவ்வாறு வணிகம் செய்கையில் வெளிநாட்டவருடன் மரியாதையாகவும் நியாயமாகவும் நடந்து நல்லுறவை வளர்ப்பதுடன் கண்ணியமாகவும் நடந்து கொள்வது மிக அவசியம். (சரளா ராசகோபாலன், 1989: 5657). ஏனெனில், அவர்களின் நன்னடத்தை பொருத்தே வெளிநாட்டவர் மீண்டும் தங்கள் நாட்டுடன் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வர். நாட்டு மக்களின் மரியாதையான பண்பினால் காவிரிப்பூம்பட்டினம் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கியது. உலகம் முழுதும் இருந்து மக்கள் வியாபாரம் செய்வதற்குப் புகாருக்கு வருகை புரிந்தனர் (ம. பொ. சிவஞானம், 1964: 166168).*

## சோழன்

*ஒரு நாடு போரின்றி மக்கள் அமைதியாக வாழவேண்டுமாயின் நாட்டை ஆளும் மன்னர்கள் செங்கோற் சிறப்புடன் வழிநடத்த வேண்டும். மக்கள் அமைதியாக வாழ பொருளாதார வளர்ச்சி மட்டும் காரணமல்ல, அங்கு ஆட்சி செய்த மன்னர்களின் ஆட்சிமுறையும் முக்கிய பங்கை வகிக்கின்றது. அதற்கு இலக்கணமாக சேர, சோழர், பாண்டிய மன்னர்கள் அக்காலக்கட்டத்தில் திகழ்ந்தார்கள் (அ.மு. பரமசிவானந்தனார், 1951: 5).*

*சோழ மன்னனின் பெருமைகளை சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடலில் திங்களைப் போற்றுதும் எனத் தொடங்குவதிலே அறியலாம் (சிலம்பு: 1: 1, 110). இவை சோழர்களின் செங்கோன்மையை விளக்குகின்றன. சோழ மன்னன் இமயத்தில் முத்திரையைப் பொறித்த வீர செயல்களையும் காணலாம். சோழர்களுள் கரிகால சோழன் இமயத்திற்குச் சென்று புலிக்கொடி நாட்டினவன். அவனது வேத நம்பிக்கைக்கு அளவில்லை என்றும் சிலப்பதிகாரம் பகர்கிறது (சாமி சிதம்பரனார், 1988: 163164). சோழ மன்னனின் ஆட்சி காலத்தில் மக்கள் வறுமையின்றி பயமின்றி சுதந்திரமாக வாழ்ந்தனர் என்றும் தெரியவருகிறது.*

## பாண்டியன்

*பாண்டிய மன்னன் ஆட்சி புரிந்த நாட்டில் மக்கள் யாரும் துன்பத்தை அனுபவிக்க மாட்டார்கள் என்றும் தாங்களும் துன்பம் செய்யமாட்டார்கள் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.*

*அவ்வகையில் இயற்கையிலே ஒன்றோடொன்று பகைமை பாராட்டும் உயிர்களும் பகையின்றி ஒன்றுபட்டு வாழ்ந்தன என்பதையும் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது (ச. அமீது, 1951. 5257). செங்கோல் தவறாமல் தென்னவர் காக்கும் நாடு இத்தகைய சிறப்புள்ளதாக அமைந்ததற்குச் சான்றாக இவ்வரிகள் அமைகின்றன.*

**கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா**
**வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா**
**அரவும், சூரும், இரைதேர் முதலையும்**
**உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா**
**செங்கோல் தென்னவர் காக்கும் நாடு(சிலம்பு 2: 13, 510)**

மன்னர்க்கழகு செங்கோன் முறைமை எனும் திருக்குறளுக்கேற்ப பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்தார். அவர் ஆட்சியிலே, தான் செய்த முடிவு தவறு என்று உணர்ந்து வருந்தி உயிர் நீத்தார். பாண்டிய மன்னன் செய்த இச்செயலால் மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்துவிட்டார் (ஷி. இன்னாசி, 1974: 87). இதனால் மக்கள் மன்னன்மீது அளப்பரிய நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். ஒரு நாடு அமைதியாக வாழ மன்னன் மற்றும் மக்களின் உறவு பாலம் நீடிக்க வேண்டும். அவ்வாறு இருப்பின், நாட்டின் பொருளாதாரமும் வளம் பெறும்; மக்கள் நாட்டின் உயர்வுக்கும் பாடுபடுவர்.

## சேரன் செங்குட்டுவன்

அரசர்களின் கடமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்களில் சேர மன்னரும் ஒருவர் ஆவார். இவர்கள் வீரத்தில் சிறந்து விளங்கியது மட்டுமின்றி செங்கோல் தவறாமல் ஆட்சி செய்தவர்கள். தம் நாடு செழிப்பாகவும் மக்கள் துன்பமின்றி இன்பமாக வாழுமாறும் ஆட்சி செய்வதே கடமை எனக் கருதினர் (சாமி சிதம்பரனார், 1958: 88 91). இதையே தங்கள் கொள்கையாகக் கொண்டிருந்தனர். அவர்களின் சிறப்பும் செயலும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்றன. சேரன் செங்குட்டுவன் இமயத்திற்கே சென்று கல் எடுத்து வந்து கண்ணகியை வடித்து அவளுக்குக் கோவில் கட்டினான் (சுந்தர சண்முகனார், 1992: 355360). சேரனின் நற்செயலானது மக்களின் ஆன்மீக உணர்வை மேலோங்கச் செய்தது. இதனால் நல்ல நெறியைக் கொண்ட மக்கள் உருவாவது திண்ணம்; அந்த நாடும் சிறப்புடன் விளங்கும் என்ற உணமையைச் சிலம்பு உணர்த்துகின்றது.

நாட்டை ஆளும் மன்னர்களின் ஆட்சியைப் பொருத்துதான் ஒரு நாடு பொருளாதாரத்தில் மேலோங்குவதும் வீழ்வதும் உள்ளது. நாட்டின் குடிமக்கள் போர், கொலை, கொள்ளை, ஏழ்மை நிலை இவற்றிலிருந்து விடுபட்டவர்களாக இருப்பின் அவர்களின் நாடு முன்னேற்றமடைந்து செல்வ செழிப்புடன் விளங்கும். சிலப்பதிகார காலத்தில் மன்னர்களின் சிறந்த ஆட்சியினால் பிற நாட்டினருடன் உள்ள வணிக தொடர்பு மேலோங்கியது (புலியூர் கேசிகன், 1963: 918). அண்டைய நாட்டு வணிகர்கள் பயமின்றி காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகம் செய்தனர். அதற்கு ஏதுவாகப் பாதுகாப்பு அம்சங்களும் அமைந்தன.

## பாதுகாப்பு அம்சம்

சிலப்பதிகார காலத்தில் அரசனின் காவல் சிறப்பதற்காக அந்தந்த நாட்டின் நகர அமைப்புகள் முறையாக அமைக்கப்பட்டிருந்தன. அதில் குறிப்பாக புகார், மதுரை மற்றும் வஞ்சி நகரம் மிகுந்த காவலுடைய நகரமாகத் திகழ்ந்தன (ழி. சுப்பிரமணியன், 1965: 155). பெருங்கோட்டைகளும் கோட்டை மதில்களுக்குரிய பாதுகாப்புப் பொறிகளும் சிறப்புற அமைக்கப்பட்டிருந்தன. காவற்காடு, அகழி, மதில் என அடுத்தடுத்து அமைந்த நிலையில் மதுரைக் கோட்டையின் வாயிற்காவல் அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது (சிலம்பு, 2, 14:6266).

ஒரு சமுயதாயம் எவ்விதப் பகையுமின்றி இன்ப வாழ்வு வாழ்வதற்குப் பாதுகாப்பு அம்சம் இன்றியமையாததாகும். மக்களின் பாதுகாவலுக்காக மன்னனே முழுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த நிலையைக் காணமுடிகிறது. அத்துடன், நாட்டில் நடைபெறும் குற்றங்களைக் களைவதையும் தம் கடமையாகக் கொண்டிருந்ததையும் சிலம்பில் காணமுடிகிறது (க்ஷிஸி.ஸி. ஞிவீளீடெலீவீமீ ணீக்ஷீ, 1936:262263). பாதுகாப்பு

*அம்சங்களைக் கொண்ட நாட்டில் பிற நாடுகள் நல்லுறவை வளர்த்துப் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் துணைப்புரிகிறது. ஆகவே, இப்பாதுகாப்பு வசதிகளால் நாடு போரின்றி மக்கள் அமைதியாக வாழ்வர். அத்துடன், நாட்டின் முன்னேற்றத்தை உறுதி செய்யவும் முடியும் என சிலப்பதிகாரம் தெளிவுபடுத்துகின்றது.*

**அரசியலமைப்பு**

*சிலப்பதிகார காலத்தில் மன்னராட்சி நிலவியிருந்தது. இருப்பினும் நீதி முறையுடன் ஆளும் மன்னர்கள்தான் மக்களால் மதிக்கப்பட்டனர் எனும் உண்மையைக் காட்டுகின்றது (ழி. சுப்பிரமணியன், 1996: 92). சிலப்பதிகாரம் அக்கால அரசியல் மற்றும் மக்களாட்சியின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றது என்பதை மங்கல வாழ்த்துப் பாடலின் மூலம் இளங்கோவடிகள் எடுத்தியம்புகிறார் (சிலம்பு 1: 1, 110). ஏனெனில், மக்களாட்சி கொண்ட நாட்டில்தான் சமுதாயக் கட்டுப்பாட்டையும் மக்களின் முன்னேற்றத்தையும் காண முடியும். மக்களின் முன்னேற்றத்துடன், மக்கள் வாழ்வு, கலை வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, நாட்டின் அமைதியான நிலை இவற்றையெல்லாம் காண முடியும்.*

**வரி சுமைக் கொடுமை இல்லாமை**

*நாட்டின் குடிமக்கள் நல்வாழ்வு வாழ அவர்களின் தலையில் தேவையற்ற வரிகளை சுமத்தித் துன்புறுத்துவது சிறந்த அரசியல் ஆட்சியாக அமையாது என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். மக்களால் இயன்ற அளவே வரிகளைச் சுமத்த வேண்டும். தாங்க முடியாத வரிகளைச் சுமத்தும் அரசு கொடுங்கோல் அரசாகவே திகழும் எனும் உண்மையைக் கீழ்க்கணட வரிகள் மெய்ப்பிக்கின்றன.*

**கறைகெழு குடிகள் கைதலை வைப்ப**
**அறைபோகு குடிகளொடு, ஒருதிறம் பற்றி,**
**வலம்படு தானை மன்னர் இவ்வழி**
**புலம்பட இறுத்த விருந்தின் மன்னர்**
**(சிலம்பு 1: 4, 912)**

*ஆட்சியில் உள்ள அலுவலர்களும் ஆட்சித் தலைவர்களும் நேர்மையுள்ளவர்களாகத் திகழ வேண்டும். சுயநலமற்ற பிறர் நலம் காக்கும் வர்க்கத்தினரால்தான் சிறப்பான ஆட்சியை நடத்த முடியும். ஆதலால், நல்ல ஒழுக்கமும் பொதுப்பணியிலே ஆவலும் உள்ளவர்களையே அரசியல் அலுவல்துறைகளிலே அமர்த்த வேண்டும். அவ்வாறு செய்யின் அரசு செங்கோல் அரசாக அமையும்; மக்களும் எவ்வித துன்பமுமின்றி சந்தோசமாக வாழ்வர் செங்கோட முதலி, 1985:15. சிலப்பதிகார காலத்து மக்கள் மன்னர்களின் சிறப்பான ஆட்சியின்கீழ் நலமுடன் வாழ்ந்தது மட்டுமின்றி நாட்டின் வளர்ச்சிக்கும் துணைபுரிந்தனர் என்பதை நமக்கு உணர்த்துகின்றார் இளங்கோவடிகள்.*

**ஐம்பெரும் குழு எண்பேர் ஆயிரம்**

*சிலப்பதிகார காலத்தில் காவிரிப்பூம்பட்டனத்தில் இருவகை மன்றங்கள் செயல்பட்டன. அவை அந்நகரில் மன்னர்களின் சிறந்த ஆட்சியை மேற்கொள்ள துணைபுரிந்தன. அந்த இருவகைக் குழுவும் அரசனுக்கு ஆலோசனைக் கூறும் சபைகளாக விளங்கின. இதனால் சிலப்பதிகார காலத்தில் மன்னர்களின் தனியதிகார ஆட்சி கட்டுப்படுத்தப்பட்டது. மக்கள் ஆட்சி அடிகோலப்பட்டது என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காணலாம் (சாமி*

*சிதம்பரனார், 1958: 39). இம்மன்றங்களின் செயல்களால் காவிரிப்பூம்பட்டினத்தில் கொலை, கொள்ளை சம்பவங்கள் இன்றியும் மக்கள் நோய் நொடி இல்லாமலும் நல்லொழுக்கத்துடனும் வாழ்ந்தனர். அரசும் நீதிமன்றமும் அறநெறியிலே செலுத்தப்பட்டது எனும் உண்மைகளை ஐவகை மன்றங்கள் அறிவித்தன (சிலம்பு 1: 5, 111138).*

*சிலப்பதிகாரத்தின் ஆசிரியர், சிறந்த அரசியல் அறங்களையும் எடுத்துக்காட்டுகின்றார். அரசியலில் தவறு செய்பவர் தக்கத் தண்டனை அடைவார்கள் என்பதன் உண்மையைக் கண்ணகி பாண்டிய மன்னனுடன் வழக்குரைப்பதன்வழி காணலாம். கோவலன் கள்வன் என்ற உண்மையைக் கண்டறியாது தவறுதலாகத் தண்டனை அளித்துக் கொன்றதற்காக பாண்டிய மன்னன் உயிர் துறந்தான் (செந்துறைமுத்து, 1994: 7980). இதன்வழி, அவன் செங்கோல் சிறப்புற்றது. தவற்றை உணர்ந்து உயிர் துறந்த மன்னனைக் கண்ணகி தெய்வமாக நின்று மன்னித்தருளினாள். அச்சம்பவத்தின் மூலம் மக்களுக்கு மன்னனின் செங்கோல் ஆட்சியின்மீது நம்பிக்கைப் பிறந்தது.*

**பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட**
**யானோ அரசன்? யானே கள்வன்;**
**மன்பதைக் காக்கும் தென்புலம் காவல்**
**என்முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்**
**(சிலம்பு 2: 20, 7477)**

*மக்களாட்சி கொண்ட அரசியல் நாட்டின் வளப்பத்திற்கு நன்மையே கொண்டு வரும் எனும் உண்மையும் தெளிவாகிறது.*

## மக்களின் பண்புகள்

*பொறுப்பும் ஒழுக்கமும் உடைய குடிமக்கள் எப்போதும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். பண்டையக்காலத் தமிழர்கள் நற்பண்புகள் உடையவர்களாகத் திகழ்ந்தனர். அதற்குச் சிலப்பதிகாரம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சிலப்பதிகார மக்கள் பெரும்பாலோர் விவசாயிகளாகப் பணியாற்றினர். தங்களையும் நாட்டையும் வணிக துறையின் வளம்பெற உறுதுணையாக விளங்கினர். தங்கள் அன்றாட வாழ்வில் அவர்கள் பெறும் வருமானத்தை ஈட்டுவதுமட்டுமின்றி தேவைப்படும் மக்களுக்குத் தானமும் செய்தனர் (தேவகி பிரகாசம், 1987: 6772).*

## மன்னரின்பால் மக்களின் அன்பு

*மன்னர்கள் மக்களின் எதிர்ப்பார்ப்பிற்கேற்ப ஆட்சி புரிந்தால் அவர்கள் மீது அளவற்ற அன்பும் மரியாதையும் ஏற்படும். அவ்வாறு நல்லாட்சி புரியும் மன்னர்கள் மக்களால் மதிக்கப்பட்டனர் (சாமி சிதம்பரனார், 1988: 163166). திருவள்ளுவரும், நீதி முறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன் மக்களுக்குத் தலைவன் என்று கருதித் தனியே மதிக்கப்படுவான் எனக் கூறுகின்றார்.*

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்.(குறள்: 388)**

*சிலப்பதிகார காலத்து மக்கள் குரவைக் கூத்தாடி மன்னர்களை வாழ்த்துவதை ஆய்ச்சியர் குரவையில் காணமுடிகிறது.*

**கோவா மலைஆரம்; கோந்த கடல்ஆரம்**
**தேவர்கோன் பூண்ஆரம் தென்னர்கோன் மார்பினவே**
**தேவர்கோன் பூண்ஆரம் பூண்டான் செழுந்துவரைக்**
**கோகுலம் மேய்ந்துக் குருந்துஒசித்தான் என்பரால் (சிலம்பு 2: 17, 29)**

*அவர்கள் அரசர்களிடம் அளவற்ற அன்பு செலுத்தினர். அத்துடன் பெருமதிப்பும் வைத்திருந்தனர். மக்கள் மன்னருக்காகத் தியாகமும் புரிந்தனர். அரசர்கள் வாழ்வே தங்கள் வாழ்வு எனக் கொண்டிருந்தனர். மன்னர்களுக்குத் தீங்கு வரக்கூடாதென வேண்டி படைவீரர்கள் தெய்வங்களுக்குப் பலியிடுவார்கள். மன்னரின் நலம் காக்க வேண்டிக் கொள்வார்கள். "வெற்றி வேந்தன் கொற்றம் கொள்க" என்று வாழ்த்தித் தங்கள் தலைகளைத் தாங்களே அறுத்துப் பலிபீடத்தில் வைப்பார்கள். படைவீரர்கள் அரசர்களிடம் இத்தகைய ராஜபக்தியுடன் விளங்கினர் (சிலம்பு 1: 5, 7688).*

## தேசப்பற்று

*சிலப்பதிகார மக்கள் தங்கள் நாட்டின்மீது அளவற்ற தேசபக்தி மிகுந்தவர்களாக விளங்கினர். சுயநலமற்ற எண்ணம் கொண்ட அவர்கள் தங்களுடைய வாழ்வை மட்டும் கருதாமல் நாடும் சிறந்து விளங்க கடவுளிடம் வேண்டினர் (ம.பொ. சிவஞானம், 1956: 1921). அவ்வாறு வேண்டுகையில் சோழ மன்னனின் நாடு பசி, பிணி, பகை இன்றி மழையும் செல்வமும் பெருக வேண்டும் என வேண்டிக் கொள்வதைக் கீழ்க்கண்ட வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.*

**பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்**
**பசியும், பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்க! என வாழ்த்தி (சிலம்பு 1: 5, 7173)**

*மன்னர்கள் தனி உரிமை கொண்டவர்களாயினும் அவர்கள் தவறு செய்யும்போது சுட்டிக் காட்டத் தவறுவதில்லை. அறந்தவறிய ஆட்சியை மாற்றியமைக்க ஒருபோதும் தயங்கியதில்லை (சாமி சிதம்பரனார், 1988: 167169). சிலப்பதிகார மக்களின் சிறந்த தேசபக்தியினைச் சிலப்பதிகாரம் தெள்ளத் தெளிவாக்குகின்றது.*

## மத ஒற்றுமை

*ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் ஒற்றுமையும் புரிந்துணர்வும் மிக அவசியம். சிலப்பதிகார காலத்தில் தமிழ் மக்கள் பலவித மதங்களைத் தழுவி வாழ்ந்து வந்தனர். பலர் பலவிதமான மதங்களைக் கொண்டிருந்தாலும் அவர்கள் அனைவரும் தமிழர் என்ற முறையில் ஒற்றுமையாக வாழ்ந்தனர். பிறசமயக் காழ்ப்பின்றி மக்கள் என்றும் ஒற்றுமை விரும்பிகளாகவே வாழ்ந்தனர் (ப. அருணாச்சலம், 1985: 26).*

*அக்காலத்தில் புகார், மதுரை மற்றும் வஞ்சியில் நடைபெற்ற மத சம்பந்தமான நடவடிக்கைகள் நாட்டு மக்களிடையே ஆரோக்கியமான சிந்தனையை உருவாக்கியது. பண்பாடு மிக்க மக்கள் ஆன்மீக பலத்தையும் கடவுள் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். இதனை இந்திர விழா கொண்டாட்டத்தின்வழி அறியலாம் (இந்திரசித்து, 1997:211). சிலப்பதிகாரத் தமிழர்கள் பல்வேறு மத பின்னணியில் இருந்த போதிலும் வெளிப்படையான சிந்தனைக் கொண்டுள்ளமையால் மக்கள் நாட்டின் முன்னேற்றத்தை மனத்தில் கொண்டு அமைதியாகவும் இணக்கமாகவும் வாழ்ந்தனர் (நரசிம்மன், 1990:191).*

## இந்திர விழா

*சிலப்பதிகாரத்தில் மத ஒற்றுமையைப் புலப்படுத்தும் மற்றொரு நடவடிக்கை இந்திர விழாவாகும். காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு விழா எடுத்துக் கொண்டாடப்பட்டது. 28 நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழாவில் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் இருந்து மக்கள் வருகை புரிந்து இந்திரனை வழிபடுவர். இதில் தேவர்கள் கூட வழிபடுவர் எனக் கூறப்படுகிறது (சிலம்பு 1: 5, 6070).*

*அதே வேளையில் சிவன் கோயில், முருகன் கோயில் திருமால் கோயில், இந்திரனுக்கான கோயில், புத்தர் பள்ளி மற்றும் அருகன் கோயில் காவிரிபூம்பட்டினத்தில் இருப்பதைக் காணலாம். இந்தக் கோயில்களில் எல்லாம் வேள்வி ஒலியும் வேத ஒலியும் முழங்கிக் கொண்டிருந்தன. மதுரை புறஞ்சேறியில் புத்தர் பள்ளியும் அருகர் பள்ளியும் மற்றும் மறச்சாலைகளும் ஆன்றோர்கள் ஒலிக்கும் அறவுரைகளும் ஒலித்தன. சமய போதனைகள், நெறிமுறைகள் நம்பிக்கைகள் போன்ற நடவடிக்கைகள் அச்சமயம் நடைப்பெற்றன (ச. அமீது, 1951: 6162).*

*இதன் வாயிலாக சிலப்பதிகாரத்து மக்கள் பல்வகை மதங்களைத் தழுவி வழிப்பட்டனர் என்ற உண்மையை அறிய முடிகின்றது.*

**பிறவாயாக்கை பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீல மேனி நெடியோன் கோயிலும்**
.....................................................................
.....................................................................
..................................................................... **(சிலம்பு 1: 5, 169181)**

*உலகத்தில் உள்ள எல்லா மதமும் ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை அகற்றி ஒற்றுமையுடன் வாழவே வழிவகுக்கிறது. ஒரு நாட்டில் மதச்சண்டை ஏற்பட்டால் பிறர் அந்நாட்டின்பால் கொண்ட நல்லுறவு பாதிக்கப்படும். சைன மதத்தைச் சார்ந்த கோவலன் தன் மனைவி கண்ணகியுடன் அருக தேவனை வழிபடும் சமண துறவியான கவுந்தியடிகளின் காலில் விழுந்து வணங்கினர். அதேபோன்று, அடைக்கலக் காதையில் கோவலனையும் கண்ணகியையும் மாதரி எனும் திருமாலை வணங்கும் ஆயர்மகள் அடைக்கலப் பொருளாகப் பெற்றாள் (ஷி. இராமகிருஷ்ணன், 1964: 5253). கோவலன் மத வெறுப்பு இல்லாமல் எல்லா மதத்தையும் சம்மதமாகவே கொண்டு பிறரை அணுகினான். இதுவே அக்கால மக்கள் மதபேதவின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்ததற்கான சான்றுகள் எனத் தெரியவருகிறது.*

*சிலப்பதிகாரத்தில் உறவினர்களிடையே பல்வேறு மதங்கள் தழுவி வாழ்ந்ததையும் காணமுடிகிறது. கோவலன் மற்றும் கண்ணகி இறப்பிற்குப் பின், மாதவியும் மணிமேகலையும் புத்த மதத்தைத் தழுவினர். கோவலனின் தந்தை மாசாத்துவன் புத்தமதத்தில் சேர்ந்தார். கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கன் சமண மதத்தில் சேர்ந்தார் (சுந்தர சண்முகனார், 1992: 4445). இதன்வழி மதங்கள் பிறரின் உறவைப் பாதிக்கவில்லை என்றும் மக்கள் சமயக் காழ்ப்பின்றி சுதந்திரமாக எம்மதத்தையும் தழுவலாம் எனும் உண்மையை அறியமுடிகிறது. மதங்கள் வழி மக்கள் ஒருமைப்பாட்டை வளர்த்தது மட்டுமின்றி மத பேதமையின்றி ஒன்றிணைந்து விளங்கும் மக்களைக் கொண்ட*

*நாடாக புகார், மதுரை மற்றும் வஞ்சி போன்ற நகரங்கள் சிறந்து விளங்கின. இதுவே நாட்டிற்குச் சிறந்த மேம்பாட்டைக் கொண்டு வந்தது என்ற உண்மையும் விளங்குகின்றது.*

*நாட்டின் வளர்ச்சிக்கு மனித மூலதனம் மிக அவசியம். அதற்கு கல்வி மட்டும் போதாது ஆன்மீக சிந்தனையும் அவசியம். சைன துறவியான கவுந்தி அடிகளின் அளப்பறிய மதத் தொண்டினால் மக்கள் தூய சிந்தனையையும் நன்னடத்தையும் உடையவர்களாகத் திகழ்ந்தனர் (கொ. இலட்சுமணசாமி, 1977: 262268). மாதவி பரத்தையர் குடும்பத்தில் பிறந்தாலும் கோவலனின் மறைவுக்குப் பின், தன் மகள் மணிமேகலையைப் பௌத்த துறவியாக்கியது சமூகத்திற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் உதவியாக அமைந்தது. ஆன்மீக பலத்தை அதிகரிப்பதால் ஆரோக்கியமற்ற நடவடிக்கைகளில் மக்கள் ஈடுவடுவதத் தவிர்க்கலாம் (ரி. முத்துராசன், 1980: 54). இதன் மூலம் நாட்டிற்குத் தேவைப்படும் நற்பண்புகள் மற்றும் உறுதியான மனம் கொண்ட மக்களை உருவாக்க முடியும். ஆரோக்கியமான சிந்தனையுடைய சமுதாயத்தைக் கொண்ட மக்களாகச் சிலப்பதிகார மக்கள் திகழ்ந்தனர்.*

*சுருங்கக்கூறின், நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் பங்கு அளப்பறியது. மக்கள் நாட்டிற்குத் தங்களின் சேவையை நேர்மையாகவும், பொறுப்புடனும் ஆற்ற வேண்டியது அவர்களின் கடமையாகும். அனைத்து முயற்சிகளும் உறுதியாகத் திட்டமிட்டு அக்கறையுடன் செய்தால்தான் மக்கள் வளமுடன் வாழ முடியும். இது ஒரு நாட்டின் வளர்ச்சி, அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் என்ற மூன்று அஸ்திவாரங்களையும் கொண்டது. இந்த மூன்று அம்சங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும். எனவே, சிலப்பதிகாரம் ஒன்றிணைந்த மக்களைக் கொண்டுள்ளதாகவும், அவர்கள் தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு முழுமையான பங்கை அளித்துள்ளனர் என்றும் பல சம்பவங்களின்வழி உணர்த்தியுள்ளார் இளங்கோவடிகள்.*

## Bibliography

Arunaccalam,Pa.(1985).*Cilappatikâra cintaIai.* Chennai: Pari Books Depo.

Avvai Thuraisamip Pillai,Su. (1957).Cilappatikâra ârâycci. Thirunelveli: Saiva Siddhanta Book Publications.

Bagavathi,Ku. (1998).*'Nâkarikamaippu cintaIai', kavitaiyiyal nôkku-cintaIaip piIpula matippîmu*. Chennai:International Tamil research Centre.

Civanyanam,Ma,Po. (1956). *Cilappatikâramum tami;arum.* (5th impression)).Chennai: Inba Nilayam publishers.

Civanyanam,Ma,Po. (1964). *VîrakkaGGaki.*(3rd Impression).Chennai: Inba Nilayam publishers.

Cuntara Shanmuganar. (1992). *Cilampô cilampu.* Chennai: Vanathi Publications.

Dikshitar, V.R.R. (1936). *Studies in Tamil Literature and History.* Madras: University of Madras.

Hamithu,Sa. (1951). *Cintaikku iIiya cilampu.* Kuala Lumpur: Manonmani Vilasa Books.

Innasi,S. (1974). *'Cilampum va;akkum'. Âyvuk kôvai.* Annamalai Nagar: Sivagami Printers.

Inthiracitthu,K. (1997). *Ilakkiyap putaiyal. Chennai: Revathi Publications.*

Lena Tamilvanan. (1982).*Pa;antami;ar paGpâmum nâkarikamum.*Chennai: Manimegalai Publications.

Letchumanasamy,Ko. (1977). *Cilappatikâram maGimçkalai kâppiya marapu.* Mathurai:Annamalai University Publications.

Mutthurasan, K. (1980).*Kâppiya karuttômmaEka7.* Chennai: Thentamil Printings.

Narasimman,K.V. (1990). *Cilappatikârattil imampe_um camayaEka7.* Ananthapuram: Thevarayar University Publications.

Paramasivananthar,A.Mu. (1951). *Kamavu7âr pô__um teyvam (kaGGaki).* Chennai: Tamilkalai Publications.

Puliyur kesigan. (1963). Cilappatikâra camutâyam. Chennai: Sekar Publications.

Ramakrishnan,S. (1964). *I7aEkôviI pâttirappamaippu.* Chennai: Meenakshi Books Depo.

Sami Citambaranar. (1988). *Cilappatikârat tami;akam.* Chennai: Ilakkiya Nilayam Publications.

Sarala rasagopalan. (1989). *Cilampuva;i cintaIaika7.* Chennai: Oli Printers.

Sengoda Muthali. (1985).*CaEka ilakkiyattil talaivaI ôr âyvu.* Chennai: University of Chennai Publications.

Senthuraimutthu. (1994). *Ilakkiya varalâ__up pç;ai.*Chennai: Anbu Illam Publications.

Subramanian, N. (1965). *History of Tamilnadu*. Mathurai: N.S. Publication. (5th edition).

Subramanian,N. (1996). *Irammaik kâppiyaEka7il camutâyam.* Annamalai Nagar: Annamalai University Publications.

Thatcanamurthi,A. (2005). Tami;ar nâkarikamum paGpâmum. Chennai: Yal Publications.

Thevagi Pragasam. (1987). 'CaEka ilakkiyaEka7il kumika7'. In*, Tami; ilakkiya âyvuk kôvai.* (Vol.1). Tanjavur: All India Institute of Tamil Literature.

# சங்க இலக்கியமும் ஆறு செயல் காலணிகள் கோட்பாடும்

# Sangam Literature and Theory of Six Action Shoes

செல்வ சுப்ரமணியம் ராமையா / Saiva Subramaniam[1]

மு.இராஜேந்திரன் / Professor Dr.M.Rajantheran[2]

**Abstract**

It is mandatory for the Research in Tamil that they ought to choose a right Methodology. In that way while pursuing research in Sangam Literature which is a treasure of Tamil Culture, they need to have a correct research approach. The present concepts of research may cater to the needs of Researcher on ancient Tamils portrayed in Sangm Literature. In this context Edward D.Bono introduces the Six Action Shoes Concepts a lateral thinking which may be applied in the study of the philosophy of the ancient Tamils. This Articles tries to probe this idea through the poems of Sangam Literature.

*Key Words: Six Action Shoes Concept, Sangam Literature, Refreshing ideas, Literary concept, lateral thinking*

## முன்னுரை

இலக்கியம் எனப்படுவது சிறந்த இன்பம் பயத்தலைக் குறிக்கோளாகவும், படிப்பவரின் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டு அவரது வாழ்க்கையும் நல்வழிப்படுத்த வேண்டும் என்ற கடப்பாட்டைக் கொண்டுள்ளது (இராசமாணிக்கணார், 2010, 18). அவ்வகையில் தமிழிலக்கியங்களின் பெட்டகமாக திகழ்வது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியம் எனப்படுவது பல்வேறு அழகுணர்ச்சிகளைக் கொண்டிருந்தாலும், இன்றைய வாழ்வின் முக்கியத் தேவைகளில் ஒன்றான சிந்தனை திறனை வளர்ப்பதில் சிறந்த பயனீடாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகள் சங்ககாலம் தொட்டே வரலாற்றுப் பூர்வமாக அறியப்பட்டு வந்துள்ளன (தட்சிணாமூர்த்தி, 2005, 10).

இலக்கிய ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைவது இலக்கியக் கோட்பாட்டு நெறியாகும். பொதுவில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் இலக்கியத்தின் மூலமாக ஆய்வாளர் பல்வேறு தகவல்களை அலசி ஆராய முடிந்தாலும் கூட, அந்த இலக்கியத்தை ஒரு இலக்கில் ஆழ்ந்து ஆய்வு செய்வதற்கு குறிப்பிட்ட ஒரு கோட்பாட்டினைக் மையப்படுத்துதல் மூலமாக அந்த ஆய்வின் வெளிப்பாட்டினை மேலும் செம்மையாக வெளிக்கொணரும். அவ்வகையில் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுவோர், தேர்ந்தெடுக்கப்பட்ட துறைக்குப் பொருத்தமானதோர் ஆய்வு நெறியை அணுக வேண்டியது அவசியமாகிறது. இக்கருத்தின் அடிப்படையில் எட்வர்ட் டி போனோ அவர்களின் பக்கவாட்டுச் சிந்தனைக் கோட்பாடு, சிந்தனை துறையில் முக்கியமானதொரு கோட்பாடாக திகழ்கிறது. இக்கோட்பாட்டினை

[1]The author is a Ph.D candidate in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. . selva3098@yahoo.com

[2]The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@gmail.com

முன்னிருத்தி சங்க இலக்கியங்களில் பொதிந்துள்ள ஆழ்நிலைச் சிந்தனைகளை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வுக் கட்டுரையில் நோக்கமாகும். இதன் அடிப்படையில் இவரின் பட்டவாட்டுச் சிந்தனைக் கோட்பாட்டில் ஒரு கூறாக விளங்கும் ஆறு செயல் காலணிகள் எனும் துணைக் கோட்பாட்டை முதன்மையாகக் கொண்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## பக்கவாட்டுச் சிந்தனைக் கோட்பாடு

சிந்திக்கும் திறன் மனிதனுக்கு வாய்த்த செல்வங்களுள் எல்லாம் தலையானதாகக் கருதப்படுகிறது. அவ்வகையில், பக்கவாட்டுச் சிந்தனை 1967ல் எட்வர்ட் டி போனோ அவர்களால் அறிமுகம் செய்யப் பட்டது (ணி.ஞி. ஙிஷீஸீஷீ, 1990:48). இச்சிந்தனையானது புத்தாக்கச் சிந்தனையுடன் தொடர்புடையது. ஒரு கருத்தினை ஒரே கோணாத்தில் அறிவுப் பூர்வமாக மட்டும் யோசிக்காமல் சிந்தனையைத் தூண்டும் துணைக்கருவிகளைக் கொண்டும் பல்வேறு வழிகளில் யோசிக்க துணைப்புரிகிறது. இக்கருத்தினையே எட்வர்ட் டி போனோ (1996:8) பின்வருமாறு விவரிக்கிறார்.

> "Creativity takes place when we somehow make the jump from main track to the side track. This called lateral thinking. It is a matter of moving laterally across pattern".

சிந்தனையின் பொதுவான நோக்கம் பிரச்சனையைக் களைவது. ஆகவே அப்பிரச்சனையை ஒரே கோணத்தில் மட்டும் யோசித்து முடிவெடுப்பது என்பது, தோண்டிய இடத்திலேயே குழியை இன்னும் ஆழமாக தோண்டுவதற்கு சமமாகும். இச்செயல், அகழ உழுவதை விட ஆழமாய் உழுவது நல்லது என்ற பழமொழியின் சாறாகும். எட்வர்ட் டி போனோ பார்வையில் இது கால காலமாய் மக்கள் மனதில் வேறோன்றிருக்கும் பழமைச் சிந்தனையாகும். பக்கவாட்டுச் சிந்தனைப்படி ஒரே இடத்தில் ஆழமாய் தோண்டுவதை விட பலப் பலப் இடங்களில் பலவாறு தோண்டிப் பார்க்கலாமே என்ற கருத்தை முன்வைக்கிறது (Ainon Mohd dan Abdullah Hassan, 2003: 11). இதனால் நமக்கு பல்வேறு வகையான புத்தம் புது புதையல்கள் கிடைக்க வழிக்கிட்டும்.

இப்பக்கவாட்டுச் சிந்தனை எனும் கோட்பாட்டை விரிவாக்கச் செய்யும் கருவிகளாக ஆறு சிந்தனைத் தொப்பிகள் (six thinking hats), ஆறு செயல் காலணிகள் (six actions shoes), ஆறு மதிப்புப் பதக்கங்கள் (six medals), ஐந்து விரல் ஆக்கச்சிந்தனைகள் போன்ற உத்திகள் கையாளப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒரே விசயத்தை எப்படி பற்பல கோணங்களில் அனுகி புத்தம் புது விடை காணலாம் என்ற வழிமுறைகளை நமக்கு புலப்படுத்துகிறன. இந்த ஆய்வுக் கட்டுரையில் இதன் சுறுக்கம் கருதி ஆறு காலணிகள் கோட்பாடு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

## ஆறு செயல் காலணிகள் கோட்பாடு

ஆறு செயல் காலணிகள் எனும் சிந்தனை, பக்கவாட்டுச் கோட்பாட்டின் ஒரு சிந்தனைக் கூறாகவே வளர்ச்சி கண்டுள்ளது (Edward de Bono, 1990). ஒவ்வொரு காலணியும் ஒரு கருப்பொருளையோ அல்லது விசயத்தையோ அதன் செயல்பாட்டின் அடிப்படையில்




**அட்டவணை 1: ஆறு செயல் காலணிகளும் அவற்றின் செயல்பாடுகளும்**

| ஆறு செயல் காலணிகள் | சிந்திக்கும் தன்மை | செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் |
|---|---|---|
| இளநீல அதிகாரத்துவக் காலணி | இக்காலணி விதிமுறைப்படி, சாதாரண எளிமையான, வழக்கமான முறையில் சிந்தித்தல் போன்ற கூறுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. | இக்காலணி வழக்கமான வேலை செய்யும் ஒரு சின்னமாக உள்ளது. அன்றாடம் நடைமுறையில் உள்ள எளிமையான விதிகளுக்கு ஏற்பவே நடவடிக்கைகளை ஏற்பவே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை முன் வைக்கின்றது. |
| சாம்பல்நிற மென்மையான ரப்பர் காலணி | இக்காலணி ஆராய்ச்சி, ஆதாரங்கள், தகவல்கள் மற்றும் புதிய சிந்தனைகள் தேடுதல் போன்ற கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. | இக்காலணி தெளிவின்மையாக இருக்கும் ஒரு நிலைமையை தெளிவாக மாற்ற பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது. கிடைக்கப்படும் ஆதாரங்களே ஒரு கூற்றை மெய்ப்பிக்கின்றது. |
| பழுப்பு நிற துளைகள் கொண்ட காலணி | இக்காலணி வெளிப்படையாகவும், நடைமுறையில் உள்ள பொதுவான, வலுவான, நெகிழ்வான மற்றும் பயனுள்ள விசயங்களை விவேகமாக சிந்திக்க வழிவகுக்கிறது. | இக்காலணி நடைமுறைகேற்ற நல்ல மதிப்பு மற்றும் கொள்கை கொண்ட நடவடிக்கைகளை மையமாகக் கொண்டு எளிய முறையில் விவேகமாகச் செயற்படுகின்றது. |
| ஆரஞ்சு புதை மிதியடிமூடு காலணி | இக்காலணி ஆபத்துக் காலங்களில், எச்சரிகை, அச்சுருத்தல், அவசர நடவடிக்கை போன்றவற்றை தைரியத்தோடு நெருக்கடியில் சிந்திக்க முற்படுகிறது. | இக்காலணி ஆபத்து மற்றும் எச்சரிக்கையின் சின்னமாக உள்ளது. ஆபத்து ஏற்பட்ட காரணத்தை ஆராய்ந்து அதனால் ஏற்படும் விபரீதங்களையும் அடையாளம் கண்டு அதற்குத் தகுந்தப் படி உரித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், நிதானமாக செயல்பட்டு ஆபத்தின் அளவைக் குறைக்க முற்பட வேண்டும். |
| இளஞ்சிவப்பு செருப்பு காலணி | இக்காலணி நட்பு, பாசம், அன்பு, மென்மை, அக்கறை மற்றும் மரியாதைக் கலந்த மனிதாபிமான சிந்தனைகள் மேலோங்கி நிற்கக் காணலாம். | இக்காலணியின் நடவடிக்கைகள் மரியாதைக் கலந்த மனிதாபிமான முறையிலும், நிம்மதியான அரவணைப்பிலும் நடத்தப்படும். |
| ஊதா புதை மிதியடிமூடு காலணி | இக்காலணி பொறுப்புக்கேற்றவாறு அதிகாரத்தோரணயுடன் சிந்திக்கும் போக்கை காணமுடிகின்றது. | இக்காலணியானது தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பு மற்றும் அதிகாரத்தின் சாயலில் பொறுப்பு மற்றும் அதிகாரத்தின் சாயலில் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் |

சில மாற்றங்களுடன், (Edward de Bono, 1990)

*விளைகின்ற புதிய சிந்தனைகளை வெளிக்கொணர முற்படுகிறது.*

## சங்க இலக்கியமும் ஆறு செயல் காலணிகளும்

*சங்க இலக்கியங்களில் காணப்படும் தமிழர்களின் வாழ்வியல் சிந்தனைகளை ஆறு செயல் காலணிகள் என்ற கோட்பாட்டின் மூலம் ஆராய முற்படும் ஆய்வியல் மாணவர்கள் இரண்டு வகையில் தங்களது ஆய்வினை மேற்கொள்ளலாம். முதலாவதாக, குறிப்பிட்ட ஒவ்வொரு காலணி பிரதிபலிக்கும் செயற்பாட்டுக்களை உடைய பாடல்களை அடையாளங் காண்டு, அச்சிந்தனைப் பார்வையில் அப்பாடலை அணுக முற்படுவது; மற்றொன்று ஒரு பாடலை ஆறு செயல் காலணிகளின் துணைக்கொண்டு சிந்திக்க முற்படுவது. இப்படிச் சிந்திக்க முற்படுவதன் வாயிலாக மாணவர்கள் ஆய்வியல் உலகிற்கு புத்தம் புது கண்டுப்பிடிப்புக்களை அளிக்க முடியும்.*

### 1. இளநீல அதிகாரத்துவக் காலணி

**பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய**
**மாமலை பயந்த காமரு மணியும்**
**இலைபடச் சேய் ஆயினும் தொடைபுணர்ந்து**
**அருவிலை நன்கலம் அமைக்கும் காலை**
**ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்**
**சான்றோர் பாலர் ஆப;**
**சாலர் சாலர் பாலர் ஆகுபவே - புறம் 218**

*மேற்காணும் பாடல் நண்பர்கள் அல்லது நட்பு எப்படி இயற்கையாக அமையும் என மிக எளிமையான உதாரணங்களுடன் நமக்கு விளக்குகிறது. பொன் நிலத்தடியில் கிடைப்பது; பவளம் காட்டில் கிடைப்பது; முத்தோ கடலில் கிடைப்பது, என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். பொன்னும், பவளமும், முத்தும், அழகான மாலையில் மாலையில் ஒன்று சேர பயன்படுத்தப்படுகின்றன. இவ்வரிய பொருள்கள் ஒன்று சேர்வதினால் அழகுக்கு அழகு கூடி, அதன் மதிப்பும் மரியாதையும் உயர்கிறது.*

*அதுப்போலவே, சான்றோர்கள் சேர்க்கை சான்றோரையே நாடி இருக்கும். அப்படிச் சேர்ந்தே இருப்பதே அவர்களுக்கு மதிப்பையளிக்கும். ஆனால் அத்தகைய உயர்ந்த குணங்கள் இல்லாதவர், உயர்ந்த குணங்கள் இல்லாதவர்களியே சேர்ந்திருப்பர் என்ற உலகியல் உண்மையினை, சாதாரண வாழ்வியல் நடக்கும் எதார்த்தங்களை மிக எளிமையான உதாராணங்களுடன் பாடல் நமக்கு உணர்த்துகிறது.*

*இக்கூற்று மிகவும் நேரடியாகவே விளக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடத்தில் இளநீல அதிகாரத்துவக் காலணி முறை பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இக்காலணியைப் பயன்படுத்துவதன் மூலமாக பாடலாசிரியர் முன்வைத்த கருத்துகள் அவரின் சிந்தனைக்கு ஏற்பவே உள்ளது உள்ளபடி தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதே வேளையில் இப்பாடலை ஆய்வு செய்வதற்கு சாம்பல் நிற மென்மையான ரப்பர் காலணியைப் பயன்படுத்தும் போது சங்க கால மக்கள் பொன் ஆபரணங்கள் செய்யும் தொழிலில் வல்லவர்களாக இருந்துள்ளனர் என்ற கருத்து வெளிப்படுவதைக் காணலாம். அதோடு நவரத்திணக் கற்களும், அவை விளையும் இடங்களும், அதனால் விளையும் பயன்கள் குறித்த நவமணி சாத்திர நுணுக்கங்கள் தெரிந்தவர்களாக*

இருந்துள்ளனர் என்பதையும் இக்காலணியைக் கொண்டு ஆய்வு செய்யும் போது அறிந்து கொள்ளலாம்.

**2. சாம்பல் நிற மென்மையான ரப்பர் காலணி**

**பளிங்கு செறிந்தன்ன பல் கதிர் இடைஇடை**
**பால் முகந்தன்ன பசு வெண் நிலவின்**
**மால்பு இடர் அறியா நிறையுறு மதியம்!**
**சால்பும் செம்மையும் உடையை ஆதலின்**
**நிற் கரந்து உலகம் இன்மையின்**
**ஏற் கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்!**
**நற் கவின் இழந்த எந்தோள் போல் சாஆய்**
**சிறுகுபு சிறுகுபு செரீஇ**
**அற் கரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே? - நற்றிணை 196**

பொதுவாக நம் உறவினர்களைக் காணவில்லை என்றால் காவல் நிலையத்தில் புகாரளிப்போம். அல்லது நாளிதழ்களிலோ, வானொலியிலோ, தொலக்காட்சியினிலேயோ விளம்பரம் செய்வோம். இல்லையெனில் அக்கம் பக்கத்தாரிடமாவது விசாரிப்போம். ஆனால் இவற்றையெல்லாம் கடந்து சங்ககாலத் தலைவியொருத்தி தன் தலைவனை காணவில்லை என்று நிலவிடம் புகார் செய்கிறாள். எல்லோரையும் விட நீ உயரத்தில் இருப்பதால் என் தலைவன் இருக்கும் இடம் உனக்கு நிச்சயம் நன்றாகத் தெரியும். அதனால் மரியாதையாக என் தலைவனின் இருப்பிடத்தை எனக்கு கூறிவிடு. இல்லையெனில் உனக்கு தெரிந்தும் என்னிடம் மறைத்தால் நீயும் என்போல் தேய்ந்து அழிந்து, காணாமல் போய்விடுவாய் என்று மிரட்டுகிறாள். இங்கே தலைவியின் செயல்பாடு ஆராய்ச்சி தன்மைக்கு உட்பட்டதாகவே அமைகின்றது. தலைவனின் இருப்பிடம் தெளிவில்லாமல் இருக்கும் பட்சத்தில், தலைவிக்கு ஆதாரங்களையும் தகவல்களையும் கொண்டு தரும் பொருளாக நிலவு அமைகின்றது. இங்கே கேள்வியாக ஏன் நிலவு; ஏன் சூரியனே அல்லது மற்ற இயற்கைப் பொருள்கள் தலைவியின் பார்வைக்கு படவில்லை?

தலைவியின் கூற்றுப்படி நிலவு உயரத்தில் இருப்பதால் பூமியில் யார் யார் எங்கு இருப்பார் என்ற தெரிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நிலவு இரவில்தான் தோன்றும். தலைவி ஏன் இரவில் தலைவனைத் தேட முற்படுகிறாள்? நிலவுக்கும் காதலுக்கும் உள்ள தொடர்பு என்ன? நிலவு வளர்ந்து தேய்ந்து மறையும் என்ற இயற்கை உண்மையை தலைவி அறியாதவளா? பிறகு எப்படி தலைவன் இருக்கும் இடம் தெரிந்தும் சொல்லாமல் போனால் தன்னைப் போல் அழியும் என மிரட்டுகிறாள்? இப்படியாக ஒரு விசயத்தை பலவாறாக அலசி ஆராயும் தன்மையினை இக்காலணி நமக்கு வழங்குகிறது. அதேவேளை உண்மை அறிந்தும் சொல்லாவிட்டால் அது பொய் சொன்னதற்கு இணையானது என்ற தலைவியின் கூற்று அக்கால நீதி வழங்கும் முறைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

உதாரணமாக தலைவி ஆகாயத்தில் விளங்குகின்ற சூரியன், நட்சத்திரங்கள் முதலானவற்றை விடுத்து நிலவை மட்டும் கூறக் காரணம் யாதென இக்காலணியைக் கொண்டு சிந்திக்கும் போது, தலைவியின் மனநிலை வெளிப்படும் உளவியல் வெளிப்பாடும் தெளிவாக அறிய முடிகின்றது. பொதுவில் இரவில்தன் தம்பதிகள் ஒன்று கலந்து இன்பம்

*துய்ப்பது வழக்கம். ஏனெனில் அந்த நேரத்து இயற்கைச் சூழல் அதற்கு ஏற்றது. மனம் அமைதியாக மற்ற சிந்தனைகளில் இருந்து விலகி இருக்கும் போது தன் மனதிற்குப் பிடித்த விசயங்களை எண்ணி ஏங்கும் நேரம் இதுவே ஆகும். அப்போது வானில் தெரியும் வெண்ணிலவே தன் குறைகளைக் கொட்டித் தீர்க்க ஏற்றதுவாகத் தலைவி எண்ணிய கூற்றினை இவ்விடத்தில் உற்று நோக்கத் தெரிய வரும்.*

*இனி பழுப்பு நிறத் துளைகள் கொண்ட காலணி முன்வைக்கும் சிந்தனையில் அடிப்படையில் இதே பாடலைக் காணும் போது வேறு தகவல் வெளிப்படுவதைப் பார்க்கலாம். அதன் அடிப்படையில் தன்காதலன் இருக்கும் இடத்தை நிலவு தெரிவிக்காமல் போனால் அந்த நிலவு தேய்ந்து அழிந்து விடும் எனக் கூறுவதாக பாடல் வரிகள் வருமிடத்தைக் காணும் போது தலைவியானவள் தம் காதலன் பிற பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ளானோ எனும் சந்தேகத்தை உடையவளாக இருக்கலம் எனும் சிந்தனை வெளிப்படுவதாகக் கூறலாம். புராணக் குறிப்பின்படி சந்திரனுக்கு 27 நட்சத்திரங்களும் மனைவியர் ஆவர். இந்த 27 நட்சத்திரங்களும் தட்சனின் பிள்ளைகள். சந்திரனுக்கு 27 மனைவியர் இருந்த போதும் அவன் கார்த்திகை மற்றும் ரோகிணி ஆகிய இரண்டு நட்சத்திரங்களுடன் மட்டுமே மிகவும் நெறுக்கமாக இருந்து மற்ற மனைவியரைப் புறக்கணித்ததால் தட்சன் சந்திரனைத் தேய்ந்து போகுமாறு சபித்ததாகக் கூறுகின்றது. இதன் அடிப்படையில் தன் அன்பிற்கு உரியவனும் இரவில் வீடு திரும்பாததால் அவனும் சந்திரனைப் போல குணம் உடையவனாக இருப்பானோ என்ற சந்தேகத்தைக் காதலி முன்வைப்பதோடு சந்திரனுக்கு ஏற்பட்ட நிலை உண்மைக் காதலில் உள்ளவர்க்கும் ஏற்படும் என எச்சரிப்பதாகவும் இக்காலனியைக் கொண்டு இப்பாடலை ஆய்வு செய்யும் போது அனுமானக் கருத்தாகக் கூற இடம் உண்டு.*

**3. பழுப்பு நிற துளைகள் கொண்ட காலணி**

**அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்**
**செற்றமும் உவகையுஞ் செய்யாது காத்து**
**ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்**
**சிறந்த கொள்கை அறங்கூ றவையமும் - மதுரைக்காஞ்சி 489 - 492**

*ஏழைகளுக்கு ஒரு நீதி! பணக்காரர்களுக்கு ஒரு நீதி என்று இன்றைய நீதிமன்றங்கள் தம் பணியை செய்கின்றன என மக்கள் குற்றம் சாட்டும் இன்றைய காலக் கட்டத்தில், மாங்குடி மருதனார் தாம், இயற்றிய மதுரைக்காஞ்சியில், சங்க காலத்தில் இருந்த நீதி வழங்கும் ஒரு தெருவை கீழ்கண்டவாறு விளக்குகிறார். வழக்குரைக்க வந்தவர்கள் மனதில் கொண்டிருந்த சந்தேகத்தால் எழுந்த அச்சத்தையும், வழக்குத் தோற்கும் நிலையில் அவர்களுக்கு ஏற்படும் வருத்தத்தையும், அவர்கள் நினைத்த பொருளின்மேல் கொண்டிருக்கும் பற்றுள்ளத்தையும் நீக்கி, ஒருவரிடம் பகையும், மற்றவரிடம் நட்பும் கொள்ளாமல் துலாக்கோல் போல் நடுநிலை உடையவராக அறக்கோட்பாட்டுடன் அறத்தைத் துணையாகக் கொண்டு வழக்குரைத்தோருக்கு விளக்கமாக கூறும் கல்வியில் சிறந்த சான்றோர்கள் வாழும் தெரு என்பது இப்பாடலின் விளக்கமாகும்.*

*நீதிமான்கள் எனப்படுபவர் என்றும் நல்ல கொள்கைகள் கொண்ட நடவடிக்கைகளை மையமாக எளிய முறையில் விவேகமாக செயல்பட வேண்டும் என்ற சிந்தனையை மேற்காணும் பாடல் நமக்கு உணர்த்துகிறது. அதேவேளை நீதிமான்களிடம், நீதி நியாயம் தவறாது, நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்துக்கொள்ளும் உத்தமப் போக்கு*

வேண்டும். இப்படிப்பட நீதிமான்கள் கல்வியில் சிறந்த சான்றோர்களாக திகழ்வர். இவர்களின் போக்கு வெளிப்படையாகவும் நடைமுறையில் உள்ள வலுவான விசயங்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும் எனும் கருத்தினை பழுப்பு நிறத் துளைகள் கொண்ட காலணியைக் கொண்டு ஆய்வு செய்யும் போது அறியலாம்.

அதே வேளையில் இவ்விடத்தில் சாம்பல்நிற மென்மையான ரப்பர் காலணியைக் கொண்டு பார்க்கும் போது சங்க கால மக்களின் சமூக வாழ்வியல் கட்டமைப்பில் நீதித்துறைகள் நடைமுறையில் இருந்தமையும், அதில் தகுதியான நீதிபதிகள் செயல்பட்டு இருந்திருக்கின்றனர் என்ற கூற்று வெளிப்படுவதைக் காணலாம். மற்றொரு நிலையில் சங்க கால மக்கள் துலாக் கோளை எடை நிறுக்கும் கருவியாகப் பயன்படுத்தி இருந்தனர் என்ற சிந்தனை வெளிப்படுவதையும் காண்கிறோம். இது அவர்களின் அறிவியல் வளர்ச்சிக்குச் சான்றாக அமைகின்றது என்ற பார்வையும் இக்காலணியைக் கொண்டு ஆய்வு செய்யும் போது அறியப்படும் செய்திகளாகும்.

**4. ஆரஞ்சுப் புதையடிமூடு காலணி**

**நிரை திமில் களிறு ஆகத்**
**திரை ஒலி பறை ஆகத்**
**கரை சேர் புள் இனத்து அம் சிறை படை ஆக**
**அரைசு கால் கிளர்ந்தன்ன உரவு நீர்ச் சேர்ப்ப கேள்**
**கற்பித்தான் நெஞ்சு அழுங்கு**
**பகர்ந்து உண்ணான் விச்சைக்கண்**
**தப்பித்தான் பொருளே போல் தமியவே தேயுமால்**
**ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்று அவன்**
**எச்சத்துள் ஆயினும் அஃது எறியாது விடாதே காண் - கலித்தொகை 149**

தலைவன் தலைவியைத் திருமணம் செய்யாமல் காலம் தாழ்த்தி வருகிறான். அப்பொழுது தோழி அவனிடம் தலைவியின் ஆற்றாமையைக் கூறி, தலைவியைச் சீக்கிரம் திருமணம் செய்துக் கொள்ளுமாறு மேற்கண்ட பாடல் அமைகிறது. தலைவனுக்கு அறிவுரை சொல்வதைப் போல் அமைந்தாலும் இப்பாடல் நம் வாழ்க்கையை எப்படி எச்சரிக்கையோடு எதிர்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை நமக்கு அளிக்கிறது.

தனக்கு பாடம் கற்பித்த ஆசான், தன்னிடமிருந்து ஒன்றும் பெறாமல் மனம் வருந்தியபோது, தன்கைப் பொருளை பகுத்து கைமாறாகக் கொடுத்து உண்ணாதாவனுடைய செல்வம், தான் கற்ற வித்தையைத் தவறான வழியில் பயன்படுத்துபவனுடைய செல்வம், தனக்கு ஒரு வருத்தம் ஏற்பட்ட போது உதவியதற்கு, ஒரு வருத்தம் ஏற்பட்ட போது உதவாதவனுடைய செல்வம், ஆகிய இவையெல்லாம் தாமாகவே தேய்ந்து அழிந்து போகும்.

அதுமட்டுமன்றி, அவனுடைய செய்நன்றிக்கேடு, உடம்பினை ஒழித்து உயிர்போன போதும் அதை அனுபவிக்காமல் போகாது. உறவினர்கள் மனம் வருந்தும் படியாகத் தேடிக்குவித்த செல்வங்கள், முயற்சி இல்லாத மன்னவனின் குடிகள் போலத் தாமாகவே தேய்ந்து அழியும். பிறர் நம்புமாறு சூளுரைத்தவன் தான் சொன்ன சொல்லைக் காக்காமல் பொய்த்துப் போனால், தானாகவே தேய்ந்து போவான்.

இப்பாடல் தரும் கருத்துக்களை உணர்ந்த யாரும் செய்நன்றி மறக்கக்கூடாது; சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என எண்ணுவர். அதேவேளை அதனை மீறுவேருக்கு

*நிச்சயம் தண்டனை கிடைக்கும் என நமக்கு எச்சரிக்கை விடுப்பதோடு, உண்மையில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் எச்சரிக்கைச் சிந்தனைகள் இக்காலணியைக் கொண்டு சிந்திக்கும் போது வெளிப்படுகின்றன. அதே வேளையில் சங்க கால மக்கள் எத்தகைய உயரிய சிந்தனைகளைத் தங்கள் வாழ்க்கையில் கொண்டிருந்தனர் என்ற சிந்தனையும் வெளிப்படுவதைக் காணலாம். இவை அனைத்தும் இக்காலணியைக் கொண்டு இப்பாடலை ஆய்வு செய்யும் போது நேரடியாகவே வெலிப்படும் செய்திகளாகும்.*

*இதே பாடலை பழுப்பு நிற துளைகள் கொண்ட காலணியைக் கொண்டு ஆய்வு செய்யும் போது, சங்க கால மக்களிடையே நடைமுறை வாழ்க்கையில் காணப்பட்ட சில கூடா ஒழுக்கங்கள் இருந்திருப்பதையும் காண முடிகின்றது. பொதுவில் தீமையா ஒரு காரியம் செயல்படவில்லை எனில் அது குறித்த போதனைகள் தோன்றுவதில்லை. மனிதனின் துன்பத்தைக் கண்டதனல்தான் புத்தர் ஆசையே அதற்குக் காரணம் எனக் கண்டறிந்தார். அவ்வாறாயின் மக்களிடத்தே துண்பம் இருந்தது தெளிவாகின்றது. அது போலவே சங்க கால மக்களிடத்தே கூடா ஒழுக்கங்களும் இருந்துள்ளன. அதனால்தான் அவை கூடாது எனும் கருத்தில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது எனும் வேறுபட்ட தகவல் பழுப்பு நிறத் துளைகள் கொண்ட காலணியைக் கொண்டு சிந்திக்கும் போது பெற்ப்படுகின்றது.*

**5. இளஞ்சிவப்பு காலணி**

**புதல்வற் கவைஇய தாய்புறம் முயங்கி**
**நசையின்ன் வதிந்த கிடக்கை பாணர்**
**நரம்புளர் முரற்கை போல**
**இனிதால் அம்ம பண்புமார் உடைத்தே - ஐங்குறுநூறு 402**

*இன்றைய இயந்திர வாழ்க்கை, அன்பையும் உறவையும் பின்னிருத்தி, பொருளாதார வளர்ச்சி நோக்கிய வண்ணம் நகர்ந்துக் கொண்டிருக்கிறது. இதனால் அன்பு பாசம், மனிதாபிமானம் போன்ற உன்னத பண்புகள் உலகில் குறைந்து வருகின்றன. இதற்கு முற்றாக அமைந்தது சங்கக் கால குடும்ப வாழ்க்கை. ஒரு குடும்பத்தின் ஆணி வேறாக திகழும் கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் எப்படி அன்போடு வாழ்ந்து ஒழுகினர் என்ற காட்சியை நமக்கு மேற்காணும் பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது.*

*தாயாகிய தலைவி, தன்னுடைய புதல்வனை அணைத்தபடி படுத்திருக்கிறாள். அவளை அணைத்தபடி பின்புறம் அவளின் முதுகை வருடியவாறு தலைவன் படுத்திருக்கிறான். இக்காட்சியானது, பாணர்கள் இசைக்கும் யாழ் நரம்பினிடையே எழும் இசையைப் போல இனிமையானது என்று உவமையாக கூறப்படுகிறது. இக்கூற்றானது, அன்பு நிறைந்த வாழ்க்கை யாழிசைக்கு நிகரானது, இன்பம் பயப்பது, ஈடில்லா சுகத்தை அளிப்பது என்பன போன்ற கருத்துக்களை நமக்கு உணர்த்துகிறது. இதனை ஆய்ந்துணர இக்காலணி பயன்படுகின்றது. இப்பாடலின் அன்பே முதன்மையனது. அதற்கு ஆதாரமாக விளங்கும் குடும்ப உறவின் முக்கியத்துவத்தை பாடலாசிரியர் முன்வைப்பதை இக்காலணியைக் கொண்டு ஆய்வு செய்யும் போத்கு அது மேலும் தெளிவாக விளக்கப்படுகின்றது.*

**6. ஊதா புதை மிதியடிமூடு காலணி**

**காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே**
**மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்;**

**நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே**
**வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;**
**அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே**
**கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;**
**மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு**
**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்**
**யானை புக்க புலம்போலத்**
**தானும் உண்ணான் உலகமும் கெடுமே - புறநானூறு 284**

*அதிகாரத்தில் உள்ள ஒருவர், வெறும் அதிகாரத் தோரனையுடன் செயல்படாமல், தனக்கு கொடுக்கப் பட்ட பொறுப்பை உணர்ந்து அனவருக்கும் பயனளிக்கும் வகையில் செயல்பட வேண்டும். அவ்வகையில் ஒரு நாடு தன்னிறைவு நாடாகத் திகழ வரி வசூலிப்பு முறையான முறையில் அதிகாரத்தில் உள்ளவரால் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனையை மேற்காணும் பாடல் நமக்கு அறிமுகம் செய்கின்றது. மக்களின் நிலை உணர்ந்து ஒரு அரசு வரி விதிக்க வேண்டும். அவ்வாறு விதித்தால் மக்கள் ஏமாற்ற வேண்டும் என்று என்று எண்ண மாட்டார்கள்.*

*கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் இருவருக்கிடையில் உள்ள நட்பு தமிழுலகம் நன்கறிந்த ஒன்றாகும். மக்களின் சுமையை மனதில் கொள்ளாமல், மன்னன் மக்களிடம் அதிகமான வரி சுமத்தி வந்தான். அப்பொழுது மன்னனை அறிவுறுத்த வேண்டிய அமைச்சர்களும் ஏதோ காரணங்களினால் அலட்சியத்தோடு இருக்கும் பட்சத்தில், தம் நாடு அழிந்து போகுமே என வருந்திய பிசிராந்தியர் பாண்டிய மன்னனிடம் அதிகாரத்திலுள்ளோர் எப்படி செயல்பட வேண்டும் என நல்வழிப்படுத்துகிறார்.*

*யானையின் பசிக்கு நெற்கதிர்களை உணவாக்கிச் சிறுது சிறிதாகக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், யாணையை நிலத்தில் சுயமாக மேயவிட்டால் என்னவாகும்? நூறு வயலானாலும், யானை தனித்துச் சென்றால், யானை உண்ணும் நெல்லைவிட அதன் காலடியில் மிதிப்பட்டு அழிந்திப் போகும் நெற்கதிர்களே அதிகமாக இருக்கும். அதை விடுத்து, விளைந்த நெல்லை அறுத்து, உணவுக் கவளங்களாக்கி யானைக்குக் கொடுத்தால்; அதாவது யானையின் பசிக்கு ஏற்ப நெற்கதிகளை உணவாக்கிச் சிறுது சிறிதாகக் கொடுத்தால், ஒருமா அளவுகூட இல்லாத நிலத்தில் விளைந்த நெல் பல நாட்களுக்கு யானைக்கு உணவாகும். அதுபோல, அரசன் முறையறியாது, மக்கள் அன்பு கெடுமாறு நாள்தோறும் வரியைத் திரட்ட விரும்பினால், நாடு பாழ்நிலைக்கு சென்றுவிடும். ஆகவே அதிகாரத்தில் உள்ளோர் நாட்டு மக்களிடம் வரியைச் சிறிது சிறிதாகவே வசூலிக்க முற்பட வேண்டும். இதனால் மக்களுக்கு வரியின் சுமை தெரியாது. ஆகவே அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து திரட்டினால் நாடு வளம் பெறும்.*

*இப்பாடல், அதிகாரத்தில் உள்ளோர் தவறாக செயல்படும்போது, அதனை தட்டிக் கேட்கும் உரிமை நாட்டு மக்களுக்கு, குறிப்பாக கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்கும் சான்றோர்களுக்கு உள்ளது என்ற கருத்தையும் நமக்கு முன் வைக்கிறது. அதேவேளை பொதுநலம் கருதாது, சுயநலம் பாராட்டிய அதிகார வர்கம் சங்க காலத்திலும் இருந்திருக்கிறார்கள் என்ற வரலாற்று உண்மையை நமக்கு உணர்த்துகிறது.*

## முடிவுரை

பக்கவாடு சிந்தனை என்ற சிந்தனை செயல் நுட்பமானது இதனால் இதுவரை அலுவலகங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்து பல்வேறு சாதனைகளை உலகிற்கு அளித்துள்ளது. அவ்வகையில் இப்பக்கவாட்டு சிந்தனையின் ஒரு பரிணாமமான ஆறு செயல் காலணிகள் ஒர் இலக்கியக் கோட்பாடாகக் கொண்டு நாம் சங்க இலக்கியங்களை நுட்பமானது அணுக முற்படுவோமானால், இன்னும் சங்க இலக்கியத்தில் கொட்டிக் கிடக்கும் பல சுவையான தகவல்கள் நமக்கு கிடைக்கலாம். அத்தோடு மட்டும் இல்லாமல், மாணவர்கள் மத்தியில் இலக்கிய ஆர்வத்தையும், சிந்தனையாற்றலையும் வளர்க்கவும் இக்கோட்பாடு துணைப் புரியும். அதேவேளை, இன்று உலகமே கொண்டாடும் பல்வேறு சிந்தனைத் திறன்களை பழந்தமிழர் கைவசம் பெற்றிருந்தனர் என்ற உண்மையினையும் நம்மால் உலகிற்கு நிருபிக்க இயலும்.

## Bibliography


Irasa Manikanar,Ma. (2010).*CaEka ilakkiya varalâ_u: Mâ.Râ. Ka7añciyam III*, Chennai: Kavya Publications.

Thatcinamurthy. (2005). Tami;ar nâkarîkamum paGpâmum. Chennai: Yal Publications.

Ainon Mohd. , & Abdullah Hassan (2003). *Pemikiran lateral*. Kuala Lumpur: PTS Publications & Distributors Sdn.Bhd.

Ani Omar. (2011). *Aspresiasi teori kesusasteraan melayu*. Tanjung Malim: Emeritus Publications.

Bono, E. D. (1990). *Master thinker's handbook*. London: Penguin Books.

Bono, E.D. (1990). *Lateral thinking: A textbook of creativity*. London: Penguin Books.

Bono, E.D. (1990). *Lateral thinking for management: A handbook*. London: Penguin Books.

Bono, E.D. (1996). *Six action shoes*. (4 Ed.). London: Harper Collins Business.

Bono, E.D. (1996). *Teach yourself to think.* London: Penguin Books.

Lalitha, R. (2006). *An introduction to literary theory*. Chennai: University Of MadrasPublications.

# மலேசியத் தமிழ்மொழிப் பாடப் புத்தகங்களில் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாட்டுத் தாக்கம்

## Influence of multi-race, religion, arts and Culture in Malaysian Tamil Language school text books

**சாமிக்கண்ணு ஜெபமணி த/பெ ஈசாக்கு சாமுவேல்**

Dr.Samikanu Jabamoney Ishak Samuel[1]

**Abstract**

The Tamil Language is given national security and instructional qualification in the Primary Schools by the constitution of Malaysia. This paves the way to the teaching of Tamil from the first to the sixth standards in Malaysian Schools. The Development of Arts, Tamil Section under the Ministry of Education, Malaysia has designed the Tamil Language syllabus for Primary Schools and Tamil Schools. Based on this syllabus, the Text Book Department Prepared Tamil Language Text Books from the first standard to fifth standard. Since Malaysia in a multi-racial country, the Tamil language text books have been prepared to bring out the pieces of information about the community living, religion, art and culture of the Malaysians. This article studies how these aspects are covered in the text books prescribed in the middle schools and Tamil schools.

*Key words: Community living, Religion, Art, Culture.*

**முன்னுரை**

மலேசியாவில் தமிழ்மொழி ஏற்றுக்கொள்ளப்பட்ட நான்கு மொழிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நாட்டில் 1816இல், பினாங்கு இலவசப் பள்ளித் தொடங்கப்பட்டபோதே அப்பள்ளியில் தமிழ்க் கல்விக் கற்பிக்கப்பட்டதென்று வரலாறு காட்டுகிறது. 1902ஆம் ஆண்டு முதலே ஆங்கிலேய அரசு தோட்டங்களிலும் நகர்ப்புறங்களிலும் தமிழ்ப்பள்ளித் தொடக்கம் காண்பதற்கு ஊக்குவிப்பு வழங்கியுள்ளது. தொடக்க காலத்தில் ஒன்று முதல் ஆறு வகுப்புகளாக இருந்த தமிழ்க் கல்வி, 1946இல், ஏழாம் வகுப்பாக உயர்ந்தது (முரசு நெடுமாறன், 2007). 1956ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ரசாக் அறிக்கையில் எல்லாத் தொடக்கப்பள்ளி மாணவர்களும் ஒரே வகையான இடைநிலைப்பள்ளிக் கல்வியைத் தொடர வாய்ப்பு வழங்கியதன் வழி இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழியைக் கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

விடுதலைக்கு முன் தமிழகத்திலிருந்தும் இலங்கையிலிருந்தும் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழிப் பாடத் திட்டமும் பாட நூல்களும் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன (முரசு நெடுமாறன், 2007). விடுதலைக்குப் பின் உள்நாட்டிலேயே தமிழ்மொழிப் பாடத் திட்டமும் பாட நூல்களும் உருவாக்கப்பட்டன. மலேசியக் கல்வி அமைச்சில் இடம் பெற்றுள்ள கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் தமிழ்ப் பகுதி தமிழ்ப்பள்ளிக்கும் இடைநிலைப்

---

[1]The author is a Lecturer in the Education University of Sultan Idris, Tanjung Malim, Malaysia.samjabarose@yahoo.com.my

பள்ளிக்கும் பாடத்திட்டத்தை வகுத்துள்ளனர். 2003ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட தொடக்கப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டமும் மறுசீரமைக்கப்பட்ட இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டன. இப்பாடத்திட்டத்தை அடிப்படையாக கொண்டு மலேசியப் பாடப்புத்தகப் பிரிவு ஆண்டு ஒன்று முதல் படிவம் ஐந்து வரை தமிழ்மொழிப் பாடப் புத்தகத்தைத் தயாரித்துள்ளனர்.

தமிழ்மொழிப் பாடப் புத்தகத்தில் இருக்கும் பாடப் பொருள்கள் அனைத்தும் மலேசியத் தேசியக் கல்வித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும், செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

மலேசியத் தேசியக் கல்வித் தத்துவத்தில் வலியுறுத்தப்பட்டிருப்பதைப் போல மலாய்க்காரர், சீனர், இந்தியர், ஈபான், கடசான், பூர்வக்குடிகள் என பல்லின மக்களிடையே வாழும் மலேசியர்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குப் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாடு ஆகியவற்றை அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டே மலேசியக் கல்வி அமைச்சுப் பாடப் புத்தகங்களில் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாடு ஆகிய கூறுகளை இணைத்துள்ளது. இவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ்ப்பள்ளியிலும் இடைநிலைப்பள்ளியிலும் பயன்படுத்தப்படும் தமிழ்மொழிப் பாடப் புத்தகத்தில் காணப்படும் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாட்டுத் தாக்கம் எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம். இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பாடநூல்கள், 2003ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட தொடக்கப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டத்தையும் மறுசீரமைக்கப்பட்ட இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டத்தையும் அடிப்படையாக கொண்டு இயற்றப்பட்ட பாடப் புத்தகத்தை ஆய்வு பொருளாக கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இடைநிலைப்பள்ளிகளில் இப்பாடநூல் இன்றளவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தொடக்கப்பள்ளிகளுக்கு 2007ஆம் ஆண்டு தர அடிப்படையிலான பாடத்திட்டம் அறிமுகம் படுத்தப்பட்டுள்ளதால் தொடக்கப்பள்ளிகளுக்கான பாடப் புத்தகம் தற்போது பயன்பாட்டில் இல்லை என்பது இங்குக் குறுப்பிடத்தக்கது.

### குமுகாயம்

தொடக்கமாக, முதலாம் ஆண்டு தமிழ்மொழிப் பாட நூலில் மலேசிய நாட்டில் மலாய், சீன, இந்திய மக்கள் அதிகமாக வாழ்கின்றனர் என்று மலேசியக் குமுகாயம் அறிமுகம் செய்யப்படுகிறது (ரவிந்தரன் தனபால், சரஸ்வதி கண்ணன், 2010: 86). தொடர்ந்து, ஐந்தாம் படிவத் தமிழ்மொழிப் பாட நூலில் மலேசியாவில் மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள், கடசான், மெலானாவ், காயான், இபான், மூருட் போன்ற பல்லின மக்கள் வாழ்கின்றனர் என்ற செய்தி மலேசியக் குமுகாயத்தை அறிவிக்கின்றது

*(முத்துசாமி, முனியன், குழந்தைவேலு, **2003: 238240**).* மேலும், ஆண்டு ஒன்று முதல் படிவம் ஐந்து வரையுள்ள பாட நூல்களில் மலேசியாவில் வாழும் மூவின மக்களும் நண்பர்களாகவும் ஒற்றுமையாக சேர்ந்து வாழ்பவர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். மேலும், மேற்கூறியுள்ள எல்லாப் பாட நூல்களிலும் இடம் பெற்றுள்ள படங்களில் மூவின மக்களும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

பிரித்து ஆளும் கொள்கையுடைய ஆங்கிலேயர்களால் மலேசியா ஆட்சி செய்யப்பட்டதன் காரணத்தினால் இன்னும் பெரும்பாலான மலேசியர்கள் இனம் சார்ந்த சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். மலாய்க்காரர்கள் கிராமப்புறத்திலும் சீனர்கள் பட்டணப்புறங்களிலும் ஈயச்சுரங்கம் சார்ந்த இடங்களிலும் இந்தியர்கள் தோட்டப்புறங்களிலும் ஈபான் இனமக்கள் சரவா மாநிலத்திலும் கடசான் இனமக்கள் சபா மாநிலத்திலும் அதிகமாக வாழ்கின்றனர். மேலும், மலாய் மாணவர்கள் தேசியப் பள்ளிகளிலும் சீன மாணவர்கள் சீனப் பள்ளிகளிலும் இந்திய மாணவர்கள் தமிழ்ப்பள்ளிகளிலும் தங்கள் தொடக்கக் கல்வியைப் பயில்கின்றனர். இதனால் பல்லின மக்களும் ஒரு சேர வாழும் சூழல் சற்று குறைவாகவே காணப்படுகிறது. இதன் காரணமாக மலேசியக் கல்வி அமைச்சுத் தமிழ்மொழிப் பாட நூல்களில் மலேசியாவில் வாழும் பல்வகை குமுகாயத்தையும் அறிமுகம் செய்கிறது. இதன் வழி மாணவர்கள் பல்லின மக்களையும் அறிந்து தேசியக் கல்விக் கொள்கைக்கு ஏற்ப ஒற்றுமையாக வாழ்வார்களென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### சமயமும் சமயப் பண்டிகைகளும்

தொடர்ந்து, மலேசியத் தமிழ்மொழிப் பாட நூல்களில் மலேசியாவில் வாழும் பல்லின மக்களின் குமுகாய செய்திகளைத் தவிர்த்து, பல்லின மக்களின் சமயம், சமயப் பண்டிகைகள் குறித்த செய்திகளும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாம் ஆண்டு தமிழ்மொழிப் பாட நூலில் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற கொன்றை வேந்தனைக் கற்பிக்கும் போது மலேசியாவில் பின்பற்றப்படும் இஸ்லாம், கிறிஸ்துவம், புத்தம், இந்து ஆகிய சமயங்களின் ஆலயங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன *(ரவிந்தரன் தனபால், சரஸ்வதி கண்ணன், **2010: 40**).*

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். மலேசியத் தேசியக் கல்வித் தத்துவத்தைத் தவிர்த்து, மலேசியத் தேசியக் கோட்பாடும் இறைவன் மீது நம்பிக்கை வைத்தல் என்ற கோட்பாட்டை வலியுறுத்துகிறது. ஒருவர் மற்றொருவருடைய சமயத்தைப் புரிந்து சமயச் சகிப்புத் தன்மையுடன் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்பதற்காக மலேசியத் தமிழ்மொழிப் பாட நூல்களில் பல்லின மக்களின் சமயம் குறித்த தகவல்களும் இடம் பெற்றுள்ளன.

மேலும், மூன்றாம் ஆண்டு, புகுமுக வகுப்பு, படிவம் ஒன்று ஆகிய தமிழ்மொழிப் பாட நூல்களில் மலேசியாவில் கொண்டாடப்படும் சமய விழாக்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் ஆண்டு தமிழ்மொழிப் பாட நூலில் இஸ்லாமியர்கள் கொண்டாடும் ஈகைப் பெருநாள், சீக்கியர்கள் கொண்டாடும் வைசாக்கி புத்தாண்டு, ஈபான் மக்கள் கொண்டாடும் காவாய் அறுவடைத் திருநாள் குறித்து விளக்கம் வழங்கப்பட்டுள்ளது *(மோகன்குமார், பத்மநாதன், அழகிரி, **2004: 28**).* தொடர்ந்து, புகுமுக வகுப்புத் தமிழ்மொழிப் பாட நூலில் இஸ்லாமியர்கள் கொண்டாடும் ஈகைப் பண்டிகை,

இந்துக்கள் கொண்டாடும் தைப்பூசத் திருவிழா, சீனர்கள் கொண்டாடும் தங்லோங் பண்டிகை, கிறிஸ்தவர்கள் கொண்டாடும் கிறிஸ்மஸ் பண்டிகை போன்ற சமயப் பண்டிகை குறித்து விளக்கம் வழங்கப்பட்டுள்ளது (முத்துசாமி, இராஜேந்திரம், 2004: 42). மேலும், படிவம் ஒன்று தமிழ்மொழிப் பாட நூலில் தீபாவளி, கிறிஸ்மஸ், ஈகைப் பண்டிகை, சீனப் புத்தாண்டு ஆகிய சமய விழாக்கள் குறித்தும் விளக்கம் வழங்கப்பட்டுள்ளது (நாராயணசாமி, சதாசிவம், சுப்பிரமணி, 2002: 2930).

மலேசியாவில் பண்டிகைகளுக்குப் பஞ்சம் இல்லையென்றே சொல்ல வேண்டும். ஆண்டு முழுவதும் பல்லின மக்களின் பண்டிகைகள் கொண்டாடப்பட்ட வண்ணம் இருக்கின்றன. திறந்த இல்ல உபசரிப்புகள் தனி நபர்கள் சார்பாகவும், இயக்கங்கள் சார்பாகவும் நடத்தப்படுகின்றன. மலேசிய அரசாங்கமும் தேசிய அளவில் திறந்த இல்ல உபசரிப்புக்கு ஏற்பாடு செய்கிறது. மேலும், பாட நூல்களில் பல்லின மக்களின் பண்டிகை குறித்து மலேசியர்கள் மாணவப் பருவத்திலேயே அறிந்துகொள்வதன் வழி திறந்த இல்ல உபசரிப்புகளில் கலந்து கொண்டு மலேசியக் கல்வித் தத்துவம் வலியுறுத்துவது போல அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும், செழிப்பையும் நல்கும் மலேசியராக உருவாக வாய்ப்பாக அமைகிறது.

## கலைகள்

மலேசியத் தமிழ்மொழிப் பாட நூல்களில் பல்லின மக்களின் சமயத்தையும் சமயப் பண்டிகைகளையும் தவிர்த்து, பல்லின மக்களின் கலைகள் குறித்தப் பாடப் பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. படிவம் ஒன்று தமிழ்மொழிப் பாட நூலில் மலாய் இனத்தவரின் மலாய் நடனம், இந்திய இனத்தவரின் பரத நாட்டியம், சீன இனத்தவரின் சிங்க நடனம், பஞ்சாபிய இனத்தவரின் பங்கரா நடனம், ஈபான் இனத்தவரின் ஈபான் நடனம் போன்ற நடனங்களுக்கான படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் அந்நடனங்களுக்கான தகவல்களைத் திரட்டித் தொகுத்து எழுதப் பணிக்கப்பட்டுள்ளனர் (நாராயணசாமி, சதாசிவம், சுப்பிரமணி, 2002: 88). மேலும், படிவம் மூன்று தமிழ்மொழிப் பாட நூலில் ஒற்றுமைக் கலைவிழாவில் நடைப்பெற்ற மலாய், சீன, இந்திய நடனம் மற்றும் பாடல் குறித்த நிகழ்வறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது (முத்துசாமி. முனியன், குழந்தைவேலு, 2004:145148).

மேலும், ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாட நூலில் மலாய்க்காரர்களின் கலைகளாகிய பாத்தேக் துணி தயாரிக்கும் முறை குறித்தும் (ரவிந்தரன் தனபால், சரஸ்வதி கண்ணன், லெட்சுமி சுப்பையா 2006: 6061). இரண்டாம் படிவத் தமிழ்மொழிப் பாட நூலில் மலாய்க்காரர்களின் கலைகளில் ஒன்றாகிய தோற்பாவை குறித்த செய்தியும் கொடுக்கப்பட்டுள்ளன (நாராயணசாமி, சதாசிவம், சுப்பிரமணி, 2003:154156). தோற்பாவை கூத்து இந்தியாவிலிருந்து பத்தாம் நூற்றாண்டில் தென்கிழக்காசியாவிலுள்ள நாடுகளுக்குப் பரவியது. அவ்வகையில் மலேசியாவிற்கும் பரவிய மலாய் தோற்பாவை கூத்து இன்றளவும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு இந்திய இதிகாசங்களை அடிப்படையாக கொண்ட கதைகளை மையப்படுத்தியே நடத்தப்பட்டு வருகிறது. ஆனாலும், மலேசியத் தமிழர்களின் கலைகளில் தோற்பாவை கூத்து இடம் பெறவில்லை எனபது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## பண்பாடு

மலேசியத் தமிழ்மொழிப் பாட நூல்களில் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், சமயப் பண்டிகைகள், கலை ஆகியவற்றைத் தவிர்த்து, பல்லின மக்களின் பண்பாட்டுத்

தாக்கமும் இடம் பெற்றுள்ளது. தொடக்கமாக, மலேசிய மக்களின் பண்பாட்டு விழாக்களாகிய இந்தியர்களின் பொங்கல் விழா, சீனர்களின் தங்லோங் விழா, ஈபான்காரர்களின் அறுவடை பெருநாளாகிய காவாய் விழா, கடசான்காரர்களின் அறுவடை பெருநாளாகிய பெஸ்தா கெஹமதான் ஆகிய பண்பாட்டு விழாக்கள் குறித்த செய்திகள் மலேசியத் தமிழ்மொழிப் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளன.

மேலும், படிவம் மூன்று தமிழ்மொழிப் பாட நூலில் மலேசியர்களின் வாழ்க்கை முறைகள் என்ற தலைப்பில் மலேசியாவில் வாழும் பல்லின மக்களின் ஆடை வகைகள், உணவு வகைகள், சமய நம்பிக்கைகள், விழாக்கள், தொழில்கள் போன்ற தகவல்கள் மனவோட்டவரைவில் கொடுக்கப்பட்டுள்ளது (முத்துசாமி, முனியன், குழந்தைவேலு, **2004: 8081).** பல்லினச் சூழலில் வாழும் மலேசியர்கள் ஒருவர் மற்றவரின் வாழ்க்கை முறைகளை அறிந்து வைத்திருப்பதால் மற்றவர்களின் வாழ்க்கை முறைகளுக்கு மரியாதை கொடுத்து ஒற்றுமையுடன் வாழ வழிவகுக்கிறது.

## இலக்கியம்

இதனைத் தவிர்த்து, மலேசியத் தமிழ்மொழிப் பாட நூல்களில் மலாய்க்காரர்களின் இலக்கியம் தொடர்பான செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் ஆண்டு தமிழ்மொழிப் பாட நூலில் தாயை மறந்ததால் கல்லாக மாறிய தங்காங் என்ற மலாய் நாட்டுப்புறக் கதை கொடுக்கப்பட்டுள்ளது (முத்துசாமி, இராதாகிருஷ்ணன் **2003: 6667).** தங்காங் பொருள் தேடுவதற்காக வெளியூர் செல்கிறான், பெரும் பணக்காரனாகியப் பின் அந்நாட்டு இளவரசியைத் திருமணம் செய்து கொள்கிறான். திருமணத்திற்குப் பின் தன் மனைவியுடன் கப்பல் பயணம் செல்லும் போது, தன் கிராமத்துக்கு அருகிலிருக்கும் துறைமுகத்திற்கு வருகிறான். அவனைப் பார்ப்பதற்காக வரும் அவனுடைய பெற்றோர்களைத் தன் சொந்த பெற்றோராக ஏற்க மறுக்கிறான். இதனால், மனமுடைந்த அவனுடைய தாயின் சாபத்திற்கு ஆளாகி கல்லாக மாறுகிறான். இக்கதை பெற்றோர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற கருத்தைத் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கும் வலியுருத்துகிறது.

மேலும், இதே பாட நூலிலும் நான்காம் ஆண்டு பாட நூலிலும் மலாய் வீரராகிய ஹங்துவாவைப் பற்றிய செய்தி கொடுக்கப்பட்டுள்ளது (முத்துசாமி, இராதாகிருஷ்ணன் **2003: 84).** பதினைந்தாம் நூற்றாண்டில் நடைப்பெற்ற மலாக்கா மன்னராட்சி காலத்தில் ஹங்துவா பெரும் போர் வீரராக சித்தரிக்கப்பட்டுள்ளார். இதோடு, மூன்றாம் ஆண்டு பாட நூலில் மலாய் வீரர்களாகிய தோக் ஜங்குட், டத்தோ மஹாராஜா லேலா ஆகியோரின் வரலாறு இடம் பெற்றுள்ளது (மோகன்குமார், பத்மநாதன், அழகிரி, **2004: 45).** தோக் ஜங்குட், டத்தோ மஹாராஜா லேலா போன்றோர் இருபதாம் நூற்றாண்டில் மலேசியச் சுதந்திரத்திற்காக வெள்ளையர்களிடம் போராடிய சுதந்திர வீரர்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து, மூன்றாம் ஆண்டு தமிழ்மொழிப் பாட நூலில் பாடாங் என்ற மலாய் நாட்டுப்புறக் கதை கொடுக்கப்பட்டுள்ளது (மோகன்குமார், பத்மநாதன், அழகிரி, **2004: 45).** பாடாங் என்பவன் மன்னனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, காட்டைச் சீர்ப்படுத்தும் பணியை மேற்கொள்கின்றான். அங்கு ஒரு பேயின் வாந்தியைத் தின்றுவிட்டு பெரும் பலசாலியாக மாறுகிறான். பின், அரண்மனையில் வீரனாக அமர்த்தப்படுகிறான். பல்வேறு நாட்டின் வீரர்களை வென்று நாட்டிற்குப் பெருமை சேர்ப்பவனாகச் சித்தரிக்கப்படுகிறான்.

*மேலும், படிவம் இரண்டு தமிழ்மொழிப் பாட நூலில்மசூரி என்ற மலாய் நாட்டுப்புறக் கதை தொடர்புடைய செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன (நாராயணசாமி, சதாசிவம், சுப்பிரமணி, 2003: 117). மசூரி லங்காவி தீவில் வாழ்ந்த ஓர் இளம் பெண். அவளின் கணவன் போரின் நிமித்தம் வெளியூர் சென்ற பின், அவள் மீது அவதூரான செய்தி பரப்பப்படுகின்றது. இதனால், மன்னர் அவளுக்கு மரணத் தண்டனை வழங்குகின்றார். அவள் லங்காவி தீவு ஏழு தலைமுறைக்கு மேன்மை அடையாது எனச் சாபமிட்டு மரிக்கும் செய்தி இங்கு விளக்கப்பட்டுள்ளது.*

## முடிவுரை

*மலேசியாவில் பல்லின மக்களின் கலை, பண்பாடு, இலக்கியம் ஆகிய வளங்கள்அதிகமாக காணப்படுகிறன. மலேசிய அரசியலமைப்புச் சட்டத்தில் பல்லின மக்களும் தங்கள் மொழி, சமயம், கலை, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றைப் பின்பற்றுவதற்கும் பேணி பாதுகாப்பதற்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. மலேசிய மாணவர்கள் மாணவப் பருவத்திலேயே பாட நூல்கள் வழி பல்லின மக்களின் மொழி, சமயம், கலை, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை அறிந்து வைத்திருப்பதன் வழி ஒருவர் மற்றொருவருடைய உரிமைகளையும் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் மதித்து நடப்பதோடு மலேசியக் கல்வித் தத்துவத்தில் வலியுறுத்தியுள்ளது போல சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும், செழிப்பையும் நல்கும் மலேசியராக உருவாகுவதற்கு வாய்ப்பாக அமைகிறது.*

*தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் வழங்கப்படும் தமிழ்க் கல்வியில் அந்நாட்டின் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாட்டுத் தாக்கம் அதிகமாக காணப்படுவது இயல்பான ஒன்றாகும். இது போன்ற நாடுகளில் வாழும் பல்லின மக்களிடையே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் பேணுவதற்குக் கல்வி முக்கியப் பங்காற்றுகிறது. இதன் காரணமாக மலேசியக் கல்வி அமைச்சு மலாய், சீன, தமிழ்மொழிப் பாட நூல்களில் பல்லின மக்களின் குமுகாயம், சமயம், கலை, பண்பாட்டுச் செய்திகள் இடம் பெறசெய்துள்ளது.*

## Bibliography


Murasu Nedumaran. (2007) *Malçciyat Tami;arum Tami;um.* Chennai: International Institute of Tamil Recearch.

Muthusamy, M & Rajendram, P. (2004). *Tami;mo;ip Pâmanûl, Pukumuka Vakuppu.* Petaling Jaya: Multi Educational Book Enterprise.

Muthusamy, M, Muniyan, V & Kulanthaivelu, K. (2002). *Tami;mo;ip Pâmanûl, Pamivam OI_u.*Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

Muthusamy, M, Muniyan, V & Kulanthaivelu, K. (2002). *Tami;mo;ip Pâmanûl, Pamivam NâIku.* Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

Muthusamy, M, Muniyan, V & Kulanthaivelu, K. (2003). *Tami;mo;ip Pâmanûl, Pamivam IraGmu.* Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

Muthusamy, M, Muniyan, V & Kulanthaivelu, K. (2003). *Tami;mo;ip Pâmanûl, Pamivam Aintu.* Petaling Jaya: Multi Educational Book Enterprise.

Muthusamy, M, Muniyan, V & Kulanthaivelu, K. (2004). *Tami;mo;ip Pâmanûl, Pamivam MûI_u.* Kuala Lumpur: Penerbitan Jaya Bakti.

Ravindran Thanabal & Saraswathi Kannan. (2007). *Tami;mo;ip Pâmanûl ÂGmu  Â_u.*Petaling Jaya: Multi Educational Book Enterprise.

Ravindran Thanabal & Saraswathi Kannan. (2011). *Tami;mo;ip Pâmanûl ÂGmu IraGmu.* Petaling Jaya: Multi Educational Book Enterprise

Ravindran Thanabal & Saraswathi Kannan. (2012). *Tami;mo;ip Pâmanûl ÂGmu MûI_u.* Petaling Jaya: Multi Educational Book Enterprise

Ravindran Thanabal, Saraswathi Kannan & Letchumy Supaiya. (2006). *Tami;mo;ip Pâmanûl ÂGmu Aintu.* Petaling Jaya: Multi Educational Book Enterprise.

Ravinthiran Thanabal & Saraswathy Kannan. (2010). *Tami;mo;ip Pâmanûl ÂGmu OI_u.* Petaling Jaya: Multi Educational Book Enterprise.

Saraswathi Kannan & Letchumy Supaiya. (2005). *Tami;mo;ip Pâmanûl ÂGmu NâIku.* Kuala Lumpur: Syarikat P. Ganesan.

# சுவாமி விவேகானந்தர் மகாகவி பாரதியார் கூறும் பெண்களுக்கான அறிவுரைகள்

முனைவர் தெ.வாசுகி / Professor Dr.T.Vasugi[1]

**Abstract**

Swami Vivekananda and Bharathiar are Prophets. They foresee the merits and the demerits of the future. Swami Vivekananda was a man of Religion and a Social Scientist as well. His concept of Religion and society is unique. In the upliftment of a society, according to him, women play an important role. Bharathiar focuses more on the development of the society, which includes Tamil Language, Education, Religion, Developement of Women, Liberation, Caste, Profession, Politics, Economics and other issues. Both have highlighted the youth and their future. As great Scholars, Guides, Feminists and with Religious concern, they put before women many guidelines for betterment. This Paper studies such pieces of advice to women.

*Key Words : Swami Vivekananda, Bharathiar, Advice, Feminism, Betterment*

## முன்னுரை

**எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே**

என்ற தாயுமான சுவாமிகளின் கூற்றின் படி, தொலைநோக்கு பார்வை உடையவர்கள் சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும் ஆவார். இவர்களில் சுவாமி விவேகானந்தர் சமயத்துறவி என்றும் ஆன்மீகவாதி என்றும் மக்கள் அறிய பெற்றவர். இவரது சமயப்பார்வையோடு, சமூகப் பார்வையும் தனித்தன்மை வாய்ந்தது "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்றும் 'ஊருக்கு உழைத்தல் யோகம்' என்றும் எண்ணியவர். ஏழை எளிய மக்களிடம் இரக்கம் காட்டுவதும், சேவை செய்வதும் தான் உண்மையான ஆன்மிகம் என்று வாழ்ந்தவர். 'பெண்கள் நாட்டின் கண்கள்' என்ற கூற்றுபடி பெண் முன்னேற்றமும் நாட்டின் முன்னேற்றமும் ஒன்றை ஒன்று பிலீஜீக்க இயலனாதவை என எண்ணி அவர்களுக்கு வழி காட்டியதோடு அறிவுரை வழங்கியுள்ளார்.

உலகம் போற்றும் மகாகவி பாரதியார் சமுதாய முன்னேற்றமே தன் வாழ்வின் குறிக்கோளாக கொண்டு தமிழ்மொழி நாடு, கல்வி, ஆன்மிகம், பெண்முன்னேற்றம் விடுதலை, சாதி, தொழில், அரசியல், பொருளாதாரம் என பல தளங்களில் தனது முத்திரைப் பதித்து தனது பாட்டு திறத்தாலும், சொற்பொழிவாலும் இப்பாரை உயர்த்திட முனைந்தார். அத்துடன் சுவாமி விவேகானந்தரை போலவே, மகாகவி பாரதியாரும்,

---

[1]The author is a Professor in the A.Doraisamy Nadar Maragathavalli Ammal College for Women, Tamil Nadu, India.

**களி படைத்த மொழியினாய்,**
**தெளிவு பெற்ற மதியினாய்**
**இளைய பாரதத்தினாய்**
**எதிலீஜீலா வலத்தினாய்**
**வெற்றி கொண்ட கையினாய் வா வா வா**

*என இளைஞர்களை அழைக்கின்றார். இவ்இளைஞர்களே வளமான இந்தியாவை உருவாக்குவார்கள் என நம்பிக்கை கொண்டு, மேலும் அவர்கள் மேம்பட வழிகாட்டுகின்றார் ஆக, இவ்விருவரும் மக்களுக்கு நல்ல மாமேதைகளாக, வழிகாட்டிகளாக, ஆன்மிகவாதிகளாக, பெண்ணியவாதிகளாக விளங்கி அறிவுரை கூறியுள்ளனர். இவற்றில் பெண்களுக்கு கூறும் அறிவுரைகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

**அறிவுரை - விளக்கம்**

*அறிவுரை என்பது வாழ்க்கை உண்மைகளை நன்குணர்ந்தவர்கள், உணராதார்க்கு எடுத்தியம்புவதாகும். சில வேளைகளில் உண்மைகளையும், விளைவுகளையும் உணர்ந்திருந்தும், செருக்கின் காரணமாகவோ, சூழ்நிலை காரணமாகவோ, பிற காரணங் காரணமாகவோ நெறி தவறிச் செல்வோர்க்குக் கூறப்படுவதும் அறிவுரையே. சுருங்க கூறின் நல்லதன நலனும் தீயன தீமையும் எடுத்துரைப்பதாகும். இத்தகைய அறிவுரைகள் அறிவிக்கப்படுகின்றவர்களுக்கு, வேம்பு போல் கசப்பாகவும், மிளகு போல் காரமாகவும் அமையும். எனினும் அவை அவரது வாழ்க்கைக்கு மிகவும் உதவும் என சான்றோர் எண்ணி இதை 'வாயுறை வாழ்த்து' என்று அழைத்தனர். வழிகாட்டுதலின் மையப்பங்கை வகிக்கும் அறிவுரைகள் என்பது ஒருவன் எய்திட வேண்டிய இலக்கை அடைய வழிகாட்டுதல் அறிவுரைகள் என்று கூறுவர். "ஒரு சமுதாயமோ அல்லது தனி மனிதனோ தன்னுடைய தற்போதைய சூழ்நிலையையும் இதனால் விளையக் கூடிய எதிக்கால சூழ்நிலையையும் உணரச் செய்து அவன் தன்னுடைய ஆற்றல், இயல் திறன்களையும் தனக்கும் சமூகத்திற்கும் பயனள்ள வகையில் பயன்படுத்தவும், தனது பிரச்சனைகளை எதிர்காலத்தில் தானே தீர்த்துக்கொள்ளவும் உதவும், வளர்ச்சியை பெருக்கும் செயலே அறிவுரைப்பகர்தலாகும் என்கிறார் டால்பாட் என்ற அறிஞர். ஆக அறிவுரைகள் ஒரு மனிதனின் வாழ்வில் சாதகமான முன்னேற்றத்தினைக் கொண்டு வர இன்றியமையாதது என்பதை அறிய முடிகின்றது.*

**தமிழ் இலக்கியங்களில் அறிவுரைகள்**

*பண்டைத்தமிழின் கருவு+லமாக விளங்கும் சங்கப்பாடல்கள், அக்கால மக்களின் வாழ்க்கையில் அறிவுரைகள் அவசியமாகக் கருதப்பட்டதன் நிலையை எடுத்துரைக்கின்றன.*

**நல்லது செய்தல் ஆற்றில் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமீன் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே (புறம் 195)**

*என்ற நாஜீவெரூஉத்தலையார் பாடல், அறியாமை இருளில் மூழ்கி இருப்போர்க்கு கூறும் அறிவுரையாக அமைகிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிக்காரம் கூறும் முப்பெரும் உண்மைகள் படிப்போர்க்கு கூறும் அறிவுரைகள் ஆக அமைந்து, அதனை மெய்ப்பிக்கும் சான்றுகளாக அந்நூலை இளங்கோவடிகள் வளர்த்து செல்கின்றார். மணிமேகலையில்,*

**அறம் எனப்படுவது யாது? எனக்கேட்பின்**
**மறவாது இது கேள் மன்னுயிர்க்கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில் (ப.227)**

*என இன்று மனிதனுக்கு அடிப்படை உலீஜீமைகளாகவும் உள்ள உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை அன்றே அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும் சீவகசிந்தாமணி, குண்டலகேசி ஆகிய நூல்களில் நிலையாமை போன்ற அறக்கருத்துக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.*

*பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் 11 நீதி நூல்கள் மக்கள் எவ்வாறு வாழவேண்டும். வாழ கூடாது என அறிவுரைகள் பல அறிவுறுத்தப்பட்டுள்ளன. புலால் உண்ணாமை வலியுறுத்தும் வள்ளுவர்.*

**ஆவி சொலீஜீந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர் செகுத்து உண்ணாமை நன்று(குறள்.259)**
என்கிறார். மேலும்,
**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தலும் ஒழித்து விடின் (குறள்.280)**

*என்ற குறள் மூலம் தீயவன் தவக்கோலம் பு+ண்பதால் பயனில்லை என்றும், வெளிவேடம் தேவையில்லை என்றும் அறிவுறுத்துகின்றார்.*

*இக்கால இலக்கியங்களாக கருதப்படும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை, புதினம், புதுக்கவிதைகள் என அனைத்திலும் அறிவுரைகளே மிகுந்து காணப்படுகின்றன. இவற்றில் சமுதாய முன்னேற்றம் கல்வி, சாதி, குறித்த சிந்தனைகள், உழைப்பு, பெண் முன்னேற்றம் ஆகியவை வலியுறுத்தும் கருத்துக்கள் மேலோங்கி நிற்கின்றன.*

**வீரத்துறவி விவேகானந்தாஜீன் அறிவுரைகள்**

*'இளைஞர்கள் முயன்றால் முடியும்' என்ற வண்ணம் கொண்டு தன்னம்பிக்கை ஊட்டியவர் சுவாமி விவேகானந்தர்.*

**அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை (குறள்.76)**

*என்ற வள்ளுவாஜீன் குறளுக்கிணங்க வீரத்துடன் செயல்பட வேண்டுமானால் அதற்கு அடிப்படை அன்புதான் என்கிறார். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கட்டிக்காப்பவர்கள் அந்நாட்டு பெண்களே ஆவார். ஒவ்வொரு இனத்திலும் உருவாகும் பொஜீயவர்களுக்கு பின்னால் உந்து சக்தியாக இருப்பவள் பெண் என சாஜீத்திரம் கூறுகிறது. அத்தகைய பெண்ணினத்தின் முன்னேற்றம் சமூக சட்டத் திட்டங்களால் தடைப்பட்டால் அது சமுதாயத்திற்கு பெரும் கேடாய் முடியும். இதை நன்கு உணர்ந்த சுவாமி விவேகானந்தர் பெண்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார்.*

**சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்**
**நிறைகாக்குங் காப்பே தலை (குறள்.57)**

*என்ற குறள் வாயிலாக வள்ளுவா;, இப்பெண்களை காவல் வைத்து காக்க கூடாது. அவர்கள் நிறை என்ற பண்பால் தம்மைக் காத்துக் கொள்வார்கள் என்கிறார். இதனையே*

விவேகானந்தர் “பெண்களுக்குக் கல்வி கற்பிக்கலாம் அந்த மட்டில் தான் நாம் அவர்கள் விஷயத்தில் தலையிடும் உலீஜீமை உள்ளது. தங்கள் பிரச்சனைகளைத் தாங்களே தீலீ;;த்துக் கொள்ளும் நிலைமையில்தான் அவர்கள் வைக்கப்பட வேண்டும். இதனை அவர்களுக்குப் பிறர் செய்ய முடியாது, செய்யவும் கூடாது அதை நிறைவேற்றிக் கொள்வதில் நம் இந்தியப் பெண்கள் உலகின் பிறரைப் போல் திறமையுடையவா;களே” என்று கூறுகின்றார். இதன் மூலம் பெண்கள் யாரையும் சார்ந்தோ அடிமையாகவோ இருக்கக் கூடாது என அறிவுறுத்துகிறார்.

“எந்த மகன் முதலில் தாயால் கற்பிக்கப்படுகின்றானோ அவன் மட்டுமே கடவைள அறிவான்” என்று கூறுவதன் மூலம் கல்வி கற்ற பெண்களால் மட்டுமே சிறந்த அறிஞர்களை உருவாக்க முடியும். அதனால் பெண்கள் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

தாய் என்பவள் தன்னலமற்ற தியாகியாய், துன்பங்களை ஏற்றுக்கொள்கின்ற, மன்னிக்கும் பண்பு உடையவள். இந்திய பெண்மையின் இலட்சியம் தாய்மை. தாய்மையைப் போற்றினால் நாடு தெய்வமாக வணங்கும் என மேலை நாட்டு பெண்களுக்கு அறிவுரை கூறுகின்றார். இதனை,

“அமொஜீக்க தாய்மார்களே, இதைச் சிந்தியுங்கள் நம்முன் உள்ள மாறுபட்ட லட்சியங்களைக் கவனியுங்கள். தூய்மையிலிருந்து ஆழ்ந்த பொறுப்புணர்ச்சி பிறக்கிறது அதுதான் அடிப்படை அதிலிருந்து ஆரம்பியுங்கள்” என்ற கருத்தின் மூலம் அறியலாம்.

முன்னேற்றம் என்பது “பால் வேற்றுமை மறந்து மனிதர்கள் என்னும் அடிப்படையில் இருபாலாரும் சிந்திக்கக் கற்றுக் கொள்ளும் போதுதான் இந்த நாட்டுப் பெண்கள் உண்மையாக முன்னேறுவார்கள்” என மேலைநாட்டுப் பெண்களுக்கு அறிவுரைப்பகர்கின்றார்.

இந்திய பெண்கள் உலகின் மற்ற எந்தப் பெண்களையும்விட ஆன்மிக நாட்டம் உடையவர்கள். மத விஷயங்களில் ஈடுபாடு கொண்டவர்கள். இந்த அற்புதமான பண்பு நலன்களைப் பாதுகாப்பதுடன் அவர்களது அறிவையும் வளர்த்தோமேயானால், எதிர்கால இந்தியப்பெண் உலகிற்கே லட்சியப் பெண்ணாக விளங்குவார் என்கிறார்.

**இளவயது திருமணம் கூடாது என வலியுறுத்தும் விவேகானந்தர்**

இளமை மனத்தால் சிறுவயதிலேயே பிள்ளைகளைப் பெற நேர்கிறது. இதனால் இறக்கிறார்கள். பிள்ளைகளும் நோஞ்சான்களாகிறார்கள் இன்று விதவைகள் அதிகமாக இருப்பதற்கு காரணம் இளவயது திருமணமே. எனவே ஆண் பெண் இருவரும் திருமண வயதை மாற்ற வேண்டும் என அறிவுரைக்கின்றனார். விதவை மணம் கூடாது என்கிறார். திருமணம் பலவீனகர்களுக்கானது எனவே பலவீனம் அடையாமல் ஆன்மீகத்தை வளர்க்க முன் வரவேண்டும் என்கிறார் அத்துடன் பெண்கள் உடற்பயிற்சியும் தற்காப்புக்கலையும் கட்டாயம் கற்க வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

**மகாகவி பாரதியார் கூறும் அறிவுரைகள்**

**எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்தது இந்நாடே**

என்று பாடிய மகாகவி பாரதியார். விவேகானந்தரை குருவாக கொண்ட நிவேதிதா தேவியை சந்தித்ததனால், பாரதியின் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த பெண் விடுதலை

*உணர்ச்சியையும் பெண்ணின் பெருமையினையும் நிவேதிதா தட்டி எழுப்பினார். அதன் பின்னரே பெண் விடுதலை, பெண்ணுலீஜீமை, பெண்கல்வி ஆகியவற்றை தம் படைப்புகளில் நல்கினார். தேசத்தின் சமுதாய வீழ்ச்சிக்கு மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைதான் காரணம் என்று கொதித்தெழுந்த பாரதி.*

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்துவோம்**

*என்றார். அன்பும் அருளும் கொண்டு உயிர்களைக் காத்தல் தெய்வத்தின் பண்பு. பெண்களிடத்தில் பெண் தன்மையின் பண்புகளாக விளங்கும். அறிவு, அடக்கம், பொறுமை, அன்பு, தாய்மை, அழகு மென்மை இன்பம் ஆகியன தெய்வப் பண்புகளாகும். எனவே,*

**மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்**
**மனையாளும் தெய்வ மன்றோ?**
**என்கிறார்.**
**காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன்**
**காலீஜீயம் யாவினும் கைக்கொடுத்து**

*பாடல் வாஜீகள் வாயிலாக காதல்வழித் திருமணமே சிறந்தது எனக் கூறுகின்றார்.*

*பெண்ணை அவள் சம்மதம் இன்றித் திருமணம் என்ற பெயரால் விற்பனை செய்தல் கூடாது. கணவனைத் தோ;ந்தெடுக்கும் உலீஜீமை பெண்களுக்கு வேண்டும் என்பதை*

**நல்ல விலை கொண்டு நாயை விற்பார் அந்த**
**நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?**

*என்கிறார். பெண்முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை அறிவுறுத்தும் வகையில் கீழ்க்கண்டக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். வயதுக்கு வரும் முன்பு பெண்களுக்கு திருமணம் செய்யக் கூடாது. விருப்பம் இல்லாத கணவனை திருமணம் செய்து கொள்ளும்ப வற்புறுத்தக்கூடாது. கருத்து வேறுபாடு ஏற்பட்டால் கணவனை விட்டு நீங்கி வாழ இடம் தரல் வேண்டும். அதனால் அவளை சொத்தில் சமபங்கு தர வேண்டும். விதவை மறுமணம் செய்ய அனுமதிக்க வேண்டும். ஆண்களை போல உயர்க்கல்வி பெற வாய்ப்பு வழங்க வேண்டும். தகுதியுடன் அரசு வேலையில் எந்த வேலையை விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக்கூடாது. இவைபோன்ற கட்டளைகளை பெண் விடுதலை சிந்தனைகளாக வலியுறுத்திய பாரதியின் தொலைநோக்குப் பார்வை போற்றுதலுக்குலீஜீயதாகும். பெண்கள் கல்விக்கற்க வேண்டும். அப்போதுதான் உலகம் பேதைமை நீங்கி வாழ முடியும் என்பதை,*

**பெண்கள் அறிவை வளா;த்தால் வையம்**
**பேதமை அகற்றிடும் காணீர்**

*என்கிறார். மேலும்,*

**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று**
**எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்**

*என பெண் கல்விக்கு வழிவகுத்து பெண் விடுதலையை வழியுறுத்திப் பாடியுள்ளார். சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டும் என்பதை,*

**ஆணும் பெண்ணும் நிகரான கொள்வதால்**
**அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்**

*என அறிவுரைக்கின்றார். வீதிக்கு ஒரு பள்ளி அமைப்போம் என்று கூறிய பாரதி "பள்ளி தளம் அனைத்தும் கோயில்கள் செய்வோம் எங்கள் பாரததேசம் என்று தோள் கொட்டுவோம்" என்கிறார். மேலும் பாப்பா பாட்டில்,*

**பாதகம் செய்பவரைக் கண்டால்**
**பயம் கொள்ள லாகாது பாப்பா**
**மோதி மிதித்து விடு பாப்பா அவர்**
**முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா**

*எனவும் ஓடி விளையாடும் பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா, கூடி விளையாடு, நீ குழந்தையை திட்டாதே என அறிவுரை கூறுகின்றார்.*

*எனவே பாரதியின் பன்முகத்தன்மையானது நம்மை வியக்க வைக்கின்றது.*

**கவிஞனும் காற்றும்**
**மாஜீத்ததாய் ஏது**
**சாஜீத்திரம்**

*என்ற கவிதை வாஜீகள் பாரதியார் இன்றும் அவர் படைப்புகள்வழி நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.*

## முடிவுரை

*'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தாரக மந்திரத்தை தன்னகத்தே கொண்டவர்கள் மகாகவி பாரதியாரும், சுவாமி விவேகானந்தரும் ஆவர். இவர்கள் தம் எண்ணங்களால், காலத்தால், உருவத் தோற்றத்தால் பெரும்பான்மையும் ஒற்றுமை உடையவர்களாகத் திகழ்கின்றார்கள். சுவாமி விவேகானந்தர் 1863 முதல் 1902 வரையிலும், மகாகவி பாரதியார் 1882 முதல் 1921 வரையிலும் வாழ்ந்து குறுகிய காலத்தில் சாதனைப் படைத்து, சாஜீத்திரத்தில் இடம்பெறும் படியாக வாழ்ந்து தன் முப்பத்தொன்பதாம் வயதில் இறந்தார்கள். இருவருக்கும் தமிழ் ஆங்கிலம் வடமொழி புலமை உண்டு. அத்துடன் உபநிடதங்கள் கற்றவர்களாக திகழ்ந்தார்கள். ஆசிலீஜீயர் பணி மொழிபெயர்ப்பு பணி ஆகிய பணிகளை இருவருமே செய்துள்ளார்கள். சுவாமி விவேகானந்தர் 'எழுந்திரு விழித்திரு' என மக்களை விழித்தெடி செய்தலையே தலையாய நோக்கமாக கொண்டிருந்தார். அதே போல பாரதியாரும்,*

**பொழுது புலர்ந்த யாம் செய்த தவத்தல்**
**புன்மை இருட்கனம் போயின யாவும்**

*என்ற பாடல் வாஜீகளால் பொழுது விடிந்த விழித்தெழலை பாடுகின்றார். அன்பினால் மட்டுமே எதனையும் சாதிக்க முடியும் என்ற கருத்தினை உடையவர்கள். அஞ்சாமையை வலியுறுத்தியதோடு, மூடநம்பிக்கைகளை வெறுத்தனர். சமயப் பொதுவாதிகளாக சாதிய சிந்தனைகளை எடுத்துரைப்பவர்களாக விளங்கியதோடு, வறுமையைக் கண்டு இருவருமே சீறினார்கள்.*

*சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும் பெண்களுக்கு எடுத்துரைத்துள்ள அறிவுரைகள் எல்லா காலத்திற்கும் பொருந்துவனவாக விளங்குவதோடு, எம்மதத்திற்கும் எம்மொழியினருக்கும் பின்பற்றக்கூடிய நிலையில் ஏற்றுக் கொள்ளும்படியான*

கருத்துக்களாக உள்ளன. அவற்றை இக்கால பெண்கள் பின்பற்றி, நாட்டு முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் நாடும் வீடும் நலம் பெறும். பெண் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றமாகும். ஆக இந்தியா **2020**இல் வல்லரசாக உருகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## Bibliography


Arunasalam. (2003). *Pâratiyâr CintaIaika7*. Kolumbu: Thendral Publication.

Bharathi 125. *Âyvukkka7añciyam*.

Bharathiyar. (2007). *Pâratiyâr Kavitaika7.* (13th edition). Chennai: Pumbugar Publication.

Iramakrishna Madam. (2009) *VivçkâIantar A_ivuraika7.* Chennai: Iramakrishna Madam.

Iramakrishna Madam. (2010) *Intiyap PeGmaGika7.* Chennai: Iramakrishna Madam.

Kumarasamy, C.,N. (2004). *PeGG„iyanôkkil Pârati.* Chennai: Tamil Puthakalaya.

Palaniyappa Brothers. (2009). *Pâratiyâr Kamm„uraika7*. Chennai: Palaniyappa Publications.

Pasumaikumar. (2007). *Vimive77„i VivçkâIantar.* Chennai: Kabilan Publication.

Puliyur Kesikan. (1997). *MaGimçkalai.* Chennai: Pari Nilayam.

Puliyur Kesikan. (2010). *Pu_anâIû_u Mûlamum Uraiyum.* Chennai: Thirumagal Nilayam.

Puliyur Kesikan. (2010). *Tirukku_a7 Putiya Urai.* Chidambaram: Thendral Publication.

Sethupathi. (2007). *Co_po;ivâ7ar Pâratiyâr.* Pondicherry: Kabilan Publication.

Venkadaram, M.,V. (2009). *Nâmm„ukku U;aitta Nallavar VivçkâIantar*. Chennai: Palaniyappa Brothers.

# கம்பனிடம் கற்கத்தகு உறவல்லா உறவுகள்

முனைவர் ஆ.முருகானந்தம் / Assistant Professor Dr.A.Muruganantham[1]

**Abstract**

Relatives arise out of Blood, Parental, Mental, Ancestral, Social connections and on account of wedlock too. But apart from this non-blood related people also form connections as blood-related people. Mostly this arises out of community living of the human beings. This relationship caters to the need of lift in life, protection and selfless nature of man. As a result, in literature Saints and Creators refer to God as Mother and Father. The words which denote the relationship in the extended family refer to characters and people in literature. The Ramayana and its study fulfils the concept of probing the non-blood related persons as blood related ones. This Paper has been created to search the idea through the Personalities in the Epic Ramayana, viz., Rama and Jadayu, Rama and Guhan, Rama and Sugreevan, Rama and Veedaran and Rama and Hanuman, etc. which explains this non-blood related connections.

*Key Words : Non blood related connections, Blood related connections, Community Living, Ramayana*

## அறிமுகம்

'இரத்தக் கலப்பாலும்,பெற்றோர; கால்வழியாலும், மன உறவினாலும் ஒரே குழுவினர; ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவுமுறை அமைகிறது" [1]

ஆனால் இவ்வகைத் தொடர;புகள் ஏதும் இன்றி ஏற்படும் அன்புறவுகள் உறவல்லா உறவுகள் என நோக்கப் பெறுகின்றன. மனிதன், சமுதாய விலங்காகக் கருதப்படுகின்றான். கூடி வாழ்வதில் இன்பம் காண்கின்றான் தனித்து விலகி நிற்றல் அவனுடைய இயல்பிற்கு மாறானதாகும். அவ்வாறு பிறருடன் இணைந்து வாழும் நிலை ஏற்படும் போது, தன்குழுவில் உள்ளவர;களைத் தான் அறிந்த உறவுமுறைகளால் அழைத்துத் தனக்கு மிகவும் நெருங்கியவர;களாக ஆக்கிக் கொள்ள விழைகின்றான். இத்தகைய உறவல்லா உறவுகள், மனிதன் தான் வாழும் குழுவினால் தனக்குப் பாதுகாப்புப் பெறுவதற்காகவும், வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்காகவும், தன்னை பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்காகவும் அமைவனவாகும். எப்பயன்களும் கருதாது இயல்பூக்கத்தால் இத்தகைய உறவுகள் அமைவதும் உண்டு. இவ்வுறவுகள் அமைந்த பின்னர; அவற்றால் பயன்விளைவதும் உண்டு. அடியார;கள், தாம் வழிபடும் கடவுளை எவ்வுயிர்க்கும் தாயாகவும், தந்தையாகவும் போற்றி வழிபடுவர;. 'அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே' [2] என மாணிக்கவாசகரும், 'அண்ணா நின்னையல்லாமல் இனியாரை நினைக்கேனே' [3] என நம்பியாரூரரும் இறைவனை உறவாக்கிப் போற்றுகின்றனர;. மக்கள் தங்களுக்குள் பழகும் வாய்ப்புகளைப் பெறும் போதெல்லாம் மனைவி என்ற உறவுமுறை தவிர ஏனைய உறவுச் சொற்களால் உறவல்லாத போதும் அழைத்து இணையும் ஆர்வமுடையவர;களாகின்றனர; அவ்வகையில் பெருங்காப்பியமாகிய இராமாயணத்தின்

---

[1]The author is a Lecturer in the Thiruchy National College, Tamil Nadu, India.

துணைக் கொண்டு இன்றைய சமுதாயத்தில் உறவல்லா உறவுகளின் இயல்புகளை நிரல்படுத்தி, உறவு முறைகளின் மேன்மையினைக் கருத்தில் கொண்டு, இச்சமுதாயம் விழிப்புணர்வு அடையும்; என்ற நம்பிக்கையில இக்கட்டுரையானது சமர;ப்பிக்கப்படுகின்றது.

## உறவல்லா உறவுகள்

'உறவல்லா உறவுகள்" ஒருவரது பண்புநலன்களுக்கும், அன்புக்கும், எதிர;பார;ப்புகளுக்கும் ஏற்ப பிறருடைய மனங்களில் இடம் பெறும் வேட்கையால் ஏற்படுவன. கம்பனில் சடாயு, குகன், அனுமன், சுக்ரீவன், வீடணன் ஆகியோரிடம் கொண்ட அன்பினால், நட்புறவால் இராமன் உறவல்லாதவர;களை உறவுகளாக ஆக்கிக் கொள்கின்றான்.

உறவு, உறவில்லாதது, என்பன இடத்தின் அளவுகோலைக் கொண்டு வரையறுக்கப்படுவதில்லை. மனநிலையைக் கொண்டு வகுத்துக் காட்டப்படுவதாகும். 'சடாயு புள்ளினத்தில் தோன்றினாலும் தூய உடலினன். கல்வி, கேள்விகளையும் கூர;ந்த மதியினையும் உடையவன். தொலைவில் உள்ள பொருள்களையும் உள்ளவாறே ஆயும் ஆற்றல் உடையவன். கொடிய அரக்கரைக் கொன்று அவருயிரைக் கூற்றுவனுக்கு அளித்து, உடலைத் தன் இனத்துக் கேற்ப உண்டு வாழ்ந்தவன், மிகுந்த புகழையும், ஆயுளையும் பெற்றவன்" [4]

"ஒரு சமயம் தண்டகவனத்தில் நச்சரவம் ஒன்று தயரதனைத் தீண்ட வந்ததைக் கண்ட சடாயு, அதனைக் கொன்று தயரதனைக் காப்பாற்றினான். பின்னர; தயரதன் உண்மையினை அறிந்து சடாயுவைத் தழுவிக் கொண்டான். சடாயு காட்டில் இருந்தபோது தான் இருவரும் நண்பராயினர;" 5 என்று வேளூர;ப்புராணம் கூறுகிறது.

இந்த புள்ளின் வேந்தனும், மக்கள் வேந்தனும் ஒருவருக்கொருவர; உதவி, இன்னுயிர; நண்பர;களாக விளங்கினர;. சம்பராசுரனை எதிர;த்துப் போரிட்ட போது தயரதனுடன் சடாயு துணை நின்று பொருது நண்பனுக்கு வெற்றி தேடித் தந்தான். அது கண்டு மனம் உவந்த தயரதன் 'நான் உடல் நீ எனக்கு உயிர;" என்று கூறி மகிழ்ந்தான். அரக்கர; கோமான் சீதையை கவர;ந்து விண்ணில் தூக்கிச் சென்றபோது இராமனுக்காகப் போரிட்டு இராவணன் வாளால் சிறகுகள் வெட்டப்பட்டு சடாயு வீழ்ந்தனன். சடாயு, இராம இலக்குவர;களால் தயரதன் இறந்தச் செய்தியைக் கேட்டதும் மூர;ச்சையானான். உணர;வு வந்ததும், தயரதன் "நான் உடல் நீ எனக்கு உயிர;" என்று கூறிய வாக்கு பொய்த்ததோ? என்று கூறும்போது உடல் இரண்டாயினும் உயிர; ஒன்றே எனக் கருதும் தலையாய நண்பர;, ஒருவர; இறந்தால் மற்றவர; தொலைவில் இருப்பினும் அச்செய்தி கேட்டவுடன் உயிர; துறப்பர;. தம் நண்பன் இறந்ததைக்; கண்டபின் அல்லது கேட்டபின் உயிர; துறப்பர; இடையாய நண்பர;. கடையாய நண்பர; தம் நண்பர; மறைந்த செய்தியைக் கேட்டறிந்தும் உயிருடன் வாழ்வர;. அத்தகைய கடையாய நட்பினையே நான் கொண்டு இன்னும் உயிரைத் தாங்கி நிற்பதால் நான் விலங்கு என்பது முற்றிலும் பொருத்தமானது! என்று தன்னையே பழித்துக் கூறுவதிலிருந்து அவனுடைய அன்பினை அறியலாம். கூற்றுவன் உடலை வைத்துவிட்டு உயிரைக் கவர;ந்து செல்லுதல் வழக்கம், மாறாக உயிர; என்ற என்னை வைத்துவிட்டு உடல் என்ற உன்னை எடுத்துச் சென்று விட்டானே, பகுத்தறிவற்ற கூற்றுவன் என்று கூற்றுவனை பழிக்கும்போதும், பிரிவுத் துன்பம் தாழாது தீப்பாய்ந்து உயிர; விடத் துணியும் போதும், அவனுடைய அன்பினை உணரமுடியும்.

## தந்தை உறவு முறை : இராமன் - சடாயு

கழுகின் வேந்தனாகிய சடாயுவிடம் கொண்ட உறவு மகன் தந்தை உறவு போன்றது. தயரதனும், சடாயுவும் சூரியக்குலத் தோன்றியமையாலும் நட்புறவால் இறுகப் பிணிக்கப்பட்டிருந்தமையாலும், இருவரும் உடன் பிறப்பாளராய் அமைந்தனர;. இந்நிலையில் இராமனுக்கு தந்தையாகும் முறையை அடைகின்றான் சடாயு, இராமனும் தன் தந்தையைக் கண்டது போன்ற உணர;ச்சியும், மகிழ்ச்சியும் அடைந்தான். சடாயு இறந்த பின் ஒரு மைந்தன் தன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய இறுதிக் கடன்கள் அனைத்தையும் இராமன் சடாயுவுக்கு செய்து முடித்தான். சடாயு தன் நண்பன் மக்களைத் தன் மக்களாகக் கொண்டான். அவர;கட்குத் துன்பம் வந்த போது உடனே சென்று முயன்று அறப்போரில் உயிர; நீத்தான். ‘காட்சியில் கழுகரசனாய் விளங்கிய சடாயு பண்பிலே தெய்வமாகவே விளங்கினான்” [6]

வெளித்தோற்றத்தில் சடாயு பறவையாகவும் இராமன் மனிதனாகவும் காட்சி தந்தாலும் அவ்வுடல்களுக்குள் மறைந்திருந்து அவற்றை இயக்கும் உயிர; ஒன்றே என்பதும், அவற்றின் அடிப்படையில் அமைந்த ஒருமைப்பாடே உண்மை நட்பின் அடிப்படை என்பதும், புற உடலில் வேற்றுமையை எண்ணாமல் உள்ளே உறையும் உயிரின் ஒருமைப்பாட்டை எண்ணி ஆருயிர;க்கெல்லாம் அன்பு செய்ய வேண்டும் என்பதும் , இராமன் சடாயு உறவுமுறையால் உணரத்த கம்பனின் துடிப்பினை உணரமுடியும்.

அறத்திற்குத் துணை நிற்பவர; யாவராயினும் இராமனால் உறவு பாராட்டி ஏற்றுக்கொள்ளப்படுவர;. சடாயு, அறத்திற்குத் துணை நின்று ‘தன் உயிர; புகழ்க்கு விற்ற சடாயு’ எனப் பெறுமை கொண்டான். எனவே இராமனால் உகந்து தந்தை என ஏற்கப் பெற்றான்.

‘இராமனுடைய உள்ளத்தில் தந்தையென தோன்றியவன் சடாயு இனவேறுபாடும், உடல் வேறுபாடும் அன்பைக் கட்டுப்படுத்த முடியாது” 7 என்பதை இராமன் சடாயு உறவு விளக்குவதாகும்

“தந்தை மகற்கு ஆற்றும் நன்றியும், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியும், செயல்படுவதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை அமைத்து இராமன் சடாயு தந்தை உறவைக் கம்பர; காட்டியுள்ளார;” [8]

## இராமன் - குகன் உறவு

‘குகனுக்கும், இராமனுக்கும் இடையில் தோன்றிய அன்பு, தாய் மகன் உறவில் உருவானது தான்”;

குகனை இராமனிடம் அறிமுகப்படுத்திய இலக்குவன் ‘தாயின் நல்லன்” என்று தான் அறிமுகம் செய்து வைத்தனன். இவனுடைய தாய்மை அன்பைக் கண்டு உணர;ந்து தெளிந்த இராமனும் இறுதியில் சுக்ரிவனுக்கும், வீடணனுக்கும் குகனை அறிமுகம் செய்துவைக்கும் போது அதே உறவுச் சொல்லால் அறிமுகப் படுத்துகின்றான்.

**‘தாயினும் உயிர;க்கு நல்லான்**
**வழுவிலா எயினர; வேந்தன்**

குகன் எனும் வள்ளல் என்றான்” [9] என்ற இராமனின் கூற்று இலக்குவன் கூறியதை ஏற்றமை குறித்ததாகும்.

**‘தேவா நின் கழல் சேவிக்க வந்தனன்**

*நாவாய் வேட்டுவன் நாயடியேன்”* [10] *எனும்போது அன்பால் தாழும் நட்பினை இங்கு காணலாம்.*

*இராமன் வனத்தில் வாழும் நாளெல்லாம் தன் நாட்டில் வாழவேண்டும் என்று விரும்பினான்.*

**‘இனிது இளநெடிது எம் ஊர; எனவும்**
**நான் உளதனையும் நீ இனிது இரு” எனவும்**

*குகன் இராமனிடம் வேண்டிக் கொண்டான். இராமன் மனம் நெகிழ்ந்த ‘நீ என் உயிரணையாய்” இலக்குவன் நினக்குத் தம்பியாவான், சீதை உன் தோழியாவள்;, உலகம் முழுவதும் உன்னுடையது நான் உன் ஏவல் தொழிலுக்கு கட்டுப்படும் உரிமை உடையவன்” என்று கூறினான்.*

*‘அன்புள இனி நாம் ஓர; ஐவர;கள் உளரானோம் என்று கூறி குகனைத் தன் உடன்பிறப்பாக இராமன் ஏற்றுக் கொள்கின்றான்“* [11]

*‘உண்மை நட்பே உடன்பிறப்புரிமைக்கு வித்திடுகிறது”* [12]

*இராமனைத் தன்னைப் போன்ற மனிதனாவே மதித்து எவ்விதப் பயனையும் எதிர;பாராமல் அவனிடம் அன்பு பாராட்டியதே குகனிடம் நாம் காணும் சிறப்பு*

**‘பயன் தூக்கார; செய்த உதவி பயன் தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது”** [13]

*என்னும் குறட்கருத்தே நம்முன் நிற்கிறது. இராமன், இலக்கிவன் சீதை என்ற மூவரையும் தன்னின் இளையவர;களாவே மதித்து விட்டமையின், ஒரு தாய் பிடிவாதம் செய்கின்ற குழந்தையிடத்துக் காட்டும் பரிவையே குகனும் அவர;களிடத்துக் காட்டுகின்றான். அன்பை வெளிக் காட்டுவதில் எவ்வித நாணமும் அடையவில்லை குகன்.*

*இராமன் குகன் உறவு தாயன்பில் முகிழ்ந்து, நட்பில் மலர;ந்து உடன்பிறப்பில் மணம் வீசியது, சீதையும், தன் கணவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இப்புதிய உறவினை எண்ணி அசோகவனத்தில் உள்ளம் நெகிழும் நிலையில்,*

**“ஒருநாள் பழகினும் பொஜீயோர; கேண்மை**
**இருநிலம் பிளக்க வேர;வீழ்க்குமே”** [14]

*என்றால் அது மிகையாகா*

## இராமன் - சுக்ரீவன்

*கிட்கிந்தை மலையில் அனுமன் மூலம் இராமனைச் சந்தித்தவன் சுக்ரீவன் வாலியால் ஒதுக்கப்பட்டவன் தம்பி என்ற உறவு அழிக்கப்பட்டவன், உருமை என்ற தாரத்தை இழந்தவன், சுக்ரீவனிடத்தில் இராமன் கொண்ட அன்பு, ‘அருளியல்” அடிப்படையில் அமைந்தது எனலாம், நட்பிற்கு ஒத்த உணர;ச்சியே அடிப்படை. இராமனும், சுக்ரிவனும் ஒத்த மனநிலையுடையவர;. சுக்ரீவன் தன்னைவிட ஆற்றல் பொருந்திய இராமனுடன்*

*நட்புக் கொண்டு தன் அண்ணன் எனும் பகையை வென்றான், இராமனும், சுக்ரீவனும் தாம் பெறுவதற்குரிய பயனைச் சீர;தூக்கி நட்புச் செய்து கொள்வது போற்றுதற்குரியது. இராமனும் சுக்ரீவனும் கொண்ட நட்பு இருவர;க்கும் பயன் தருவதாக அமைந்தாலும் இந்நட்புறவில் உடன்பிறப்பின் பாசப்பிணைப்பினைக் காண முடிகின்றது.*

*சுக்ரீவனையும் தனது உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொள்கின்றான். இதனை வீடணனிடம் இராமன் கூறும்போது, 'குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம்" என்று கூறுவதிலிருந்து உணரமுடிகிறது* [15]

*இராவணனுக்கும், சுக்ரீவனுக்கும் இடையே நிகழ்ந்த போரில் நெடு நேரமாகியும் சுக்ரீவன் திரும்பி வராததைக் கண்டு வருந்திய இராமன் நிலையை,*

*'மன்னுயிரனைய காதல் துணைவனை வரவு காணான் தன்னுணர;வு அழிந்து சிந்தை அலம் வந்து தளர;ந்து சாய்ந்தான்" எனக் கம்பர; கூறுவதிலிருந்து உடன்பிறப்பின் ஆழம் வெளிப்படும். இராமன் சுக்கிரீவன் நட்பு அரசியல் நோக்குடன் அமைந்தபோதிலும், அந்நட்பு, நாளும் வளர;ந்து உண்மையும், தூய்மையும், சீர;மையும் பெற்று உத்தம நட்பாய்ப் உடன்பிறப்பாய் பரிணமித்தமையை உணராலாம்.*

## இராமன் - வீடணன்

*'இராமனுக்கும், வீடணனுக்கும் ஏற்பட்ட நட்பு 'அரசியல் நட்பு ஆகும்"* [16]

*மறச் செயல்களைத் தம் குலத் தொழிலாகக் கொண்ட அரக்கர; இனத்தில் தோன்றிய வீடணன், அறநெறியைத் தழுவி வாழ்ந்தான் என்பது வியப்புக்குரியது.*

*'கவிஞரின் அறிவின் மிக்கான்' 'அறிவின் உம்பரான்' 'சால்புமிக்கான்' என்ற சீர;மைக்குரியவன்.*

**'குலத்தளவே யாகுமாம் குணம்" என்னும்**
**'முதுரையைத் தம் வாழ்க்கையில் பொய்த்துக் காட்டியவன்"** [17]

*அறிவுடையார; யாவரிலும் மேம்பட்ட அறிவு படைத்தவனாய், விளங்கினான், 'மேதாவிகட்கெல்லாம் மேலான மேன்மையான்" என்று கம்பர; வீடணனைப் பாராட்டுகின்றார;.*

**'புன்புலைப் பிறவியின் பகைஞன் போலுமால்"** [18]

*என்பது வீடணனின் தெளிந்த சிந்தையை காட்டும் இராமனிருக்கும் பாசறைக்கு சென்று 'கொற்றவா! சரண்", என்று கூறும் வீடணன் சரணாகதி 'வைணவதத்துவத்தில் பேருயிரிடத்துச் சிற்றுயிர; அடைக்கலம் பு+னும் உயிர; நட்பை வெளிப்படுத்துவதாகும் 19 மாற்றான் வலியும், துணை வலியும் அறிதற்கு வீடணனின் நட்பு இராமனுக்குத்துணை புரிந்தது.*

*குகனையும், சுக்கிரீவனையும் உடன் பிறந்தவனாக ஏற்றுக்கொண்ட இராமன் வீடணனையும், "நின்னொடும் எழுவரானோம்" எனத் தன் தம்பி முறையாக் கொண்டான். இராமன் இலக்குவன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன் முதலானோர;கள் உடனிருந்தும் வீடணனையே தன் உயிரனையச் சானகியை அழைத்துவருமாறு பணியைக் கொடுக்கின்றான். இந்நிகழ்ச்சி இராமன் வீடணன் பால் கொண்டிருந்த நட்பின் திண்மையைக் காட்டுவதோடு எத்துணைஏற்றமுடைத்து என்பதை அறியலாம். அதோடு*

மட்டுமல்;லாது வீடணனும் தன் நண்பன் இட்;டக்கட்டளையைத் தலைமேற்கொண்டு 'யான் பெற்ற பேறு யார; பெற்றார;' என்ற பெருமிதத்துடன் சானகியை விமானத்தில் ஏற்றி அழைத்து வந்தான். இந்நிலையில் இராமன் வீடணன் உடன்பிறப்புப் பாசஉணர;வு வெளிப்படும்.

"இலங்கைப் போரில் வீடணன் இராமனின் வெற்றிக்கு பெருந்துணை புரிந்தான். இலக்குவன், அனுமன், அங்கதன் முதலியோர; இந்தரசித்தைக் கொன்று அவன் தலையுடன் இராமன் முன் வெற்றி வீரர;களாய் வந்து நின்றபோது, இராமன் அவர;களை நோக்கி, 'இவ்வெற்றி இலக்குவனால் மட்டும் அன்று, அனுமனாலும் அன்று, இறைவனது சிறப்பினாலும் அன்று, வீடணன் தந்த வெற்றி இது" 20 என்றுக் கூறி வீடணனுக்கும் புகழ்மாலை சூட்டினான். குகனையும், சுக்ரீவனையும் நட்பாகக் கொண்ட கருணை வள்ளல் அரக்கர; குலச் செல்வனை நட்பாகக் கொண்டது அவனது நட்புச் செல்வதின் நிறைவினைக் காட்டுகிறது.

## இராமன் - அனுமன் உறவு

காற்றின் வேந்தனுக்கு அஞ்சனை வயிற்றில் தோன்றியவன் அனுமன். 'சொல்லின் செல்வன்" என்ற இராமனால் போற்றப் பெற்றவன். வாலிக்கும், கும்பக்கர;ணனுக்கும் நிகரான வலிமையுடையவன்.

ஒருவரைக் கண்ட மாத்திரத்திலே அவர;கள் பால் நம்மை அறியாது அன்பானது பெருக்கெடுத்து ஓடி ஏதோ ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்வது போல இந்த இராமன் அனுமன் நட்புறவு அமைந்தது.

நீ எனக்கு எவ்வளவோ சிறந்த உதவிகள் செய்திருக்கிறாய் அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் என் உயிரே தக்க பிரதியாகும். நீ செய்துள்ள கணக்கற்ற உதவிகளில் ஒன்றுக்கு ஈடாக என் உயிரை அளிப்பதாக இருந்தாலும் பல பிறவிகளில் நான் கடன்பட்டவனாகவே இருப்பேன். நான் உன்னிடம், பட்டுள்ள கடனைத் தீர;ப்பது என்பது ஒரு நாளுமில்லை, என்று இராமன் அனுமனைக் கொண்டாடுவதிலிருந்து இராமனின் உள்ளத்தில் நிலையான இடத்தை அனுமன் பெற்றமை உணரப்படும்.

இராமன் அனுமன் உறவு, அனுமன் நோக்கில் ஆண்டான் அடிமை உறவாகவும், இராமன் நோக்கில் நட்புறவாகவும் அமைவதாகும். இராமனது ஏவல் தொழில் செய்து வாழும் உரிமையைத் தனக்கு வழங்குமாறு அனுமன் இராமனிடம் வேண்டினன். சீதையைத் தேடிச் சென்றதோடு இலங்கைப் போரில் பேருதவியும் புரிந்தனன் சுக்ரீவனுக்கு 'ஏவல் கூவல்" பணி செய்து வாழும் அனுமன் இராமனுக்கும், அவன் இளவலுக்கும் பணி செய்வதைத் தன்னுடைய பெரும் பேறாகக் கருதினான்.

## நிறைவுரை

வேடர; குலத் தலைவன் குகனையும், பறவை இன சடாயுவையும், குரங்கினமாகிய சுக்ரிவனையும், அனுமனையும் நொது மலராகினும், நட்பாகவும், உறவாகவும், கொண்டு உறவை விரிவு செய்தவன் இராமன். பகைவரிடமும் நட்புக் கொண்டு இராமன் ஒழுகியதை வீடணன் தொடர;பு உணர;த்தும் கம்பன் காப்பியத்தில் குறிக்கப்படும் உறவல்லா உறவுகள் குடும்ப அமைப்பினால் ஏற்படும் தொடர;பில்லாத பிற உறவுகளையே குறிப்பதாகும். "டீடழழன ளை வாளீஉமநச வாயஸீ றயவநச" குருதித் தொடர;புடைய உறவுகளைவிட குருதித்தொடர;பில்லாத உறவுகளான உறவல்லாத உறவுகளே (நண்பர;களே) மாறி

வரும் சமுதாயத்தில் உறவினர;களை விட, இப்பொழுது முன்னின்று இருந்து பல உதவிகளையும் செய்துவருகிறார;கள். அவர;களே ஒரு தனிமனிதனின் மனதில் பதிந்து விடுகின்றனர;.

உறவுகள் காகிதச்சங்கிலிகளாக இல்லாமல் உறுதிப்படைத்த எஃகாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் உறவுப்பாலம் அறுந்துபடாமல், நொறுங்கிப்போகாமல் காலம் கடந்து நிலைத்து நிற்கும். ; என்பதை சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டி முன்னேற்ற பாதையில் பீடு நடை போடுவோம்.

## Bibliography

Athiveraramapandiyan. *Ve__ivç_kai.*

Kambar. *KamparâmâyaGam*.

Kiiran, Pulavar. (2010). *IrâmâyaGak Ka7añciyam.* Chennai: Vanathi Publication.

Manikkavasagar. *Thiruvasagam*.

Pandurangan, A. (1989). Kâppiya Nôkkil KamparâmâyaGam. Chennai: New Century Book House.

*Tçvâram, Ç;âm Tirumu_ai.*

Thiruvalluvar. *Tirukku_a7.*

# திருமுறைகளில் இயற்கை வருணனை

**க.துரியானந்தம் / K.துரியானந்தம்**

**Abstract**

The Tamils had been having the imbibed habit of worshiping Nature as a way of life. Later this habit was clouded with various insertions. During that time many Saints tried their best to set this situation on the right track. Through the twelve Thirumuraigal, they endeavoured this task. The songs of Appar, Sundarar, Manickavasagar, Sambandar and the Saints who sang in the Ninth Thirumurai contributed to this effort of describing Nature. These Songs not only praised Nature but also attempted to sow the seeds of devotion on God. That is why in Temples, trees have been planted by way of a specific / respective temple tree representing that Temple. Also the songs seem to have the merits of Sangam Literature. In addition, the songs equated God and Nature. The idea that Man and Nature lived dependant on each other is also hinted at in these creations. This Paper tries to vividly bring out all these aspects.

*Key Words ; Thirumuraigal, Nature, God and Man, Man and Nature*

இயற்கையாகவே இறைவனை வணங்கினான் தமிழன். காரணம் அவனது வாழ்க்கை இயற்கையோடு கலந்த வாழ்க்கை. இயற்கையை அவன் நேசித்தான். இயற்கையும் அவனை நேசித்தது. இயற்கையை விட்டு அவன் பிரிந்து இருந்ததே இல்லை. இயற்கையை அவன் இனிமையாக பாவித்தான்.

தமிழர்களின் இயற்கை ஈடுபாட்டை, சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். சிலப்பதிகாரத்தில் இயற்கை வாழக்கையே கடவுள் வாழ்ந்ததாக வைத்தார் இளங்கோவடிகள்.

இயற்கையை வணங்கிய தமிழன் இறைவனையும் இயற்கையைச் சூழலிலேயே வணங்கினான். இன்னும் நாம் கோயில்களில் காணும் ஸ்தல விருட்சமும் அதன் அருகில் இருக்கும் இறைவனுமே அதற்கு சாட்சி.

கதிரவனை மேகக் கூட்டம் மறைப்பது போல் இடையில் தமிழ் மொழியின் புகழ் ஒளியில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அச்சமயத்தில் இறைவன் திருவருளால் சைவ சமயக் குரவர் தோன்றினர். அவர்கள் விழிகளாலும் மணத்தாலும் இறைவனைக் கண்டு வழிபட்டதோடு அல்லாமல் தேன் சொட்டும் தமிழ் மொழிப் பாடல்களாலும் வழிபட்டார்கள். பிற அருளாளர்களும் தோன்றிப் பாடினார்கள்.

> **''அருச்சுனன் பாட்டே ஆகும்; ஆதலால்**
> **மண்மேல் நம்மைச் சொல் தமிழ் பாடுக**
> **என்றார் தூமறை பாடும் வாயார்''**

---

[1]The author is a student of the great Tamil scholar Ki.Va.Jaganathan

*என்று இறைவன் கட்டளைக்கு இணங்க அவர்கள் பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம் பாடல் 216 செந்தமிழ்ப் பாடல்களால் இறைவனைப் போற்றித் துதித்துப் பாடினார்கள். தமிழால் இறைவனைப் பாடுவதில் மிகவும் பெருமை கொண்டார்கள்.*

*அந்த அருளாளர்களின் பாடல்களில் சங்க இலக்கியங்களின் தாக்கம் இருக்கின்றது. காரணம், இயற்கையை அப்பெருமக்கள் நேசித்தனர். அந்த நேசிப்பு அவர்களின் பாடல்களில் தெரிகின்றது.*

*பன்னிரு திருமுறைகளில் இயற்கை வருணனையை நாம் ஆராயப் புகுந்தால் அதுவே ஒரு பெரும் நூலாக மலரும். மிகப் பெரிய அளவில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு ஏற்ப மிகச் சிறிய கட்டுரையாகத் தயாரித்து உள்ளேன்.*

## திருஞான சம்பந்தர் தேவாரம்

*முதல் மூன்று திருமுறைகளாகிய திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப் பாடல்களைப் பார்ப்போம். மூவர் தேவாரப் பாடல்களிலும் மிக அதிகமான இயற்கை வருணனை ஆளுடைப் பிள்ளையாகிய திருஞான சம்பந்தப் பெருமான் தேவாரத்தில் அதிகம் காணப்படுகின்றது.*

*திருஞானசம்பந்தர் ஒவ்வொரு தலத்திற்கும் சென்று இறைவனை வழிபட்டபோது அப்பகுதியின் இயற்கை வளத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தார். தான் கண்டு இன்பம் கொண்ட இயற்கை காட்சிகளை அப்படியே தான் பாடிய பதிகங்களில் பதிவு செய்தார்.*

*திருப்பிரமபுரம் திருப்பதிகத்தில்*

**''கடல் முயங்குகழி சூழ்குளிர்கானல் அம்**
**பொன்னஞ்சிற கண்ணம்**
**படை முயங்கு பிரமாபுரம மேவிய பெம்மானிவனன்றே''**

*என்று கூறுகின்றார்.*
*தென் திருமுல்லை வாயில் தலத்துத் தேவாரப் பதிகத்தில்*

**''களிமண்டு சோலை கழனிக் கலந்த**
**கமலங்கள் தங்கு மதுவில்**
**தெளிமண்டி யுண்டு சிறை வண்டு பாடு**
**திருமுல்லை வாயிலிதுவே''**

*பிள்ளைப் பெருமான் இயற்கையை எவ்வளவு அனுபவித்துப் பாடியிருக்கின்றார் என்று பாருங்கள்.*

*திருஞானசம்பந்தர் ''திருவெண்காடு'' எனும் தலத்திற்கு வருகின்றார். அங்கே எங்கும் பசுமை நிறைந்திருக்கிறது. மயிற்கூட்டம் ஆடிக் கொண்டிருக்கின்றது. வண்டுகள் மலர்களில் உள்ள மதுவை உண்டு களிப்பு மிகுதியால் பாடுகின்றன. அக்காட்சியைக் காண்கிறார் பெருமான். உடனே அதை அப்படியே பதிவு செய்கிறார்.*

**''கண் மொய்த்த கருமந்தை நடமாடக் கடல் முழங்க**
**விண் மொய்த்த பொழில் வண்டிசை முரலும் வெண்காடே''**

*காவிரி ஆற்றின் கிளை நதியான மண்ணியாறு பாய்ந்து வளப்படுத்தும் தலம் திருப்பணந்தாள். (அதை ''சுப்பிரமணிய ஆறு என்பார் பாகிர் ஐயரவரர்கள்)*

*திருப்பனந்தாளில் செஞ்சடையப்பர் கோயில் கொண்டிருக்கும் இடம் ''திருத்தாடகையீச்சரம்'' ஆகும். அப்பெருமாளை வணங்க அவ்வூருக்கு எழுந்தருகின்றார் சம்பந்தப் பெருமான். அவர் மண்ணியாற்றின் கவின் மிகு காட்சியைக் காண்கின்றார். அக்காட்சியைத் தன் பதிகத்தில் பதிவு செய்கின்றார்.*

**''படம்புரி நாகமொடு திரை பன்மணியும் கொணரும்**
**தடம் புனல் சூழ்பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே''**

*திருவிடைமருதூர் வருகின்றார் பிள்ளைப் பெருமான். சோலைகள் சூழ்ந்திருக்கும் திருகுகோயிலுக்குச் சென்று எம்பெருமானை வணங்குகின்றார். சோலையில் வண்டினங்கள் தேன் உண்ட மகிழ்ச்சியில் பாடுகின்றன. அதைக் கேட்கிறார் பெருமான். உடனே இப்படிப் பாடுகின்றார்.*

**''அறைமல்கு வண்டினங்கள் ஆலுந் சேமாலை இடைருதில்**
**நிறைமல்கு கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே''**

*பிள்ளைப் பெருமான் இயற்கை வளங்களைக் கண்டபடியே தலயாத்திரை வருகின்றார்.*

*திருஞானசம்பந்தப் பெருமான் திருநன்பள்ளி என்ற தலத்திற்கு வருகின்றார். அத்தலம் அவரது தாயார் பகவதி அம்மையார் பிறந்த தலம். அங்கே சோலைகள் அதிகம். அவை குளிர்ச்சியான சூழலைத் தருகின்றன. அச்சோலைகளில் இனிய குரலிலே குயில்கள் பாடகின்றன. அக்சோலையில் மலர்ந்துள்ள மலர்களில் அமைந்துள்ள தேனைப் பருக வந்த பெண் வண்டு அக்குயிலோசை கேட்டு நானும் அது போல் பாட வேண்டும் என்று ரீங்காரம் இடுகின்றன. அக்காட்சியைப் பிள்ளைப் பெருமான் இதோ இப்படிப் பதிவு செய்கிறார்.*

**''குளிர்தரு கொம்மலொடு குயில் பாடல்கேட்ட**
**பெடை வண்டு தானும் முரவ''**
*என்கிறார்.*

*திருஞான சம்பந்தப் பெருந்தகை திருவீழிமிதிலைக்கு வருகின்றார். சோலைகளில் வண்டுகள் இனிய ரீங்காரம் இடுகின்றன. ஊரே மிகவும் குளுமையாக இருக்கின்றது. எங்கும் பச்சைப் பசேல் என்று காட்சி தருகின்றது. பொய்கைகளில் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. அந்தத் தாமரை மலர்களின் மேல் அன்னம் நடை பயில்கின்றது. வெண்தாமரை மலர்களில் உள்ள மகரந்தப் பொடி 'கீழே விழுகிறது. அக்காட்சியைக் கண்டு அப்படியே அவ்வூர்ப் பதிகத்தில் பதிவு செய்கிறார்.*

*அக்காட்சியின் குளுமையை அப்படியே பதிகப் பாடலில் காணலாம்.*

**''வண்டாமரை மலர் மேல் மட அன்னம் நடை பயில**
**வெண் தாமரை செந்தூதுதிர் வீழி மிடிலையே''**

*திருவீழிமிழலைப் பதிகத்தில் மேலும் பல இயற்கைக் காட்சிகளைப் பதிவு செய்கின்றார் சம்பந்தர்.*

*திருக்குற்றாலத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் திருக்குற்றாலநாதரைக் கண்டு*

எவ்வளவு மனம் மகிழ்ந்தாரோ அதே அளவிற்குத் திருக்குற்றால இயற்கைக் காட்சிகளைக் கண்டும் மனம் மகிழ்ந்தார்.

**''செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்**
**கொல்லை முல்லை மெல்லரும்பு ஈனும் குற்றாலம்''**

என்றும்

**''மலையார் சாரல் மகவுடன் வந்தமட மந்தி**
**குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்''**

என்றும்

''நீல நெய்தல் தண் சுனை சூழ்ந்த நீள் சோலைக்

கோலமந்தை பேடையொ பாடுங் குற்றாலம்''

என்றும் பாடுகின்றார்.

என்னே அற்புதமான வரிகள் இயற்கை அழகை எப்படி வருணிக்கிறார் பாருங்கள்.

திருஞான சம்பந்தரின் முதல் மூன்று திருமுறைப் பதிகங்களில் இயற்கை வருணனை அப்படியே கொட்டிக் கிடக்கின்றது. கட்டுரையின் அளவு கருதி இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்.

## அப்பர் பெருமாள் தேவாரம்

நால்வர் பெருமக்கள் தமிழுக்குத் தொண்டு செய்து மனம் களிப்படைந்தனர். நால்வருள் பெருமைமிகு முதியவர் அப்பர் பெருந்தகை. அவர் நாவுக்கு அரசர் ஆனதால் திருநாவுக்கரசர் ஆனார். அப்பர் பெருமான் தன் எழுபதாவது வயதில் தான் தல யாத்திரையைத் தொடங்கினார். முதுமைப் பருவத்தில் பதிகங்கள் பாடியதால் தானோ என்னவோ இயற்கை வருணனைகளுக்கு அப்பெருந்தகை அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை போலும். ஆனாலும் முற்றிவலுமாக அவர் இயற்கைக் காட்சிகளைத் தவிர்த்து விடவில்லை.

அவர் பாடிய பதிகங்களில் வந்துள்ள ஒரு சில இயற்கைக் காட்சிகளைப் பார்ப்போம்.

திருக்கழிப்பாலைத் தேவாரப் பதிகத்தில் 1) ''கண்ணுலாம் மொழில் சூழ் கழிப்பாவை'' என்று மிகவும் சுருக்கமாகவும் அழகாகவும் இயற்கையை வருணித்துள்ளார்.

அதே தலத்துப் பதிகத்தில் மற்றொரு பாடலில் ''நெய்தற் கருகு தன் பிள்ளை என்று எண்ணி நெருங்கிச் சென்று கைரை மலடல் புக்கு தென்கழிப்பாவை'' - என்றார். 1) ஐந்தாம் திருமுறை - திருக்கழிப்பாலப் பதிகம் பாடல் - 1

திருப்பிரம்மபுரம் எனும் தலத்திற்குச் செல்கிறார் அப்பர் பெருமான். மடை வாயிலில் நிறைய அன்னப் பறவைகள் நிற்கின்றன. பாளை விரிந்திருக்கிறது. அதில் வண்டினங்கள் இருக்கின்றன. அந்த ஆண் வண்டினங்கள் தங்கள் பெளட வாய் மதுவுண்டு களித்திருக்கின்றனவாம்.

**''மடைவாய்க் குருகின் பாளைவிரி தொறும் வண்டினங்கள்**
**பெடை வாய் மதுவுண்டு பேராதிருக்கும் பெரும் பதியே''**

என்பது அப்பர் வாக்கு.

திருமங்கலக்குடி எனும் தலத்தை வருணிக்கும் போது,

**''வண்டு சேர் பொழில் மங்கலக்குடி'' என்றும்**

திருநெய்த்தானம் எனும் தலத்தைப் பற்றிக் கூறும்போது,

**''நெடி தரு பொழில்கள் சூழ்கின்ற நெய்த் தானம்''**

என்றும் கூறுகின்றார்.

திருநன் பள்ளி தேவாரப் பதிகத்தில் அத்தலத்து சோலையைப் பற்றி இப்படிக் கூறுகின்றார்.

**''செண்பகந் திகழும் புன்னை செருந்திரண் குரவம் வேங்கை**
**கண்பு செய் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாதே''**

என்று கூறுகின்றார்.

முன்பே கூறியபடி அப்பர் பெருமானின் வயதும் அவர் வாழ்வில் பட்ட துன்பங்களும் இயற்கை வருணனையில் நாட்டம் செலுத்தாதற்குக் காரணமாய் இருக்கலாம். அவர் மனம்

**'செம் பொன்னும் ஓடும் ஒக்கவே நோக்கும்'' மனம்.**

## சுந்தரர் தேவாரம் - ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஏழாம் திருமுறையாகும். அவர் ''தம்பிரான் தோழர்'' என அழைக்கப்படுபவர். அவர் பாடிய ''தானெனை முன் படைத்தான்' என்று தொடங்கும் பதிகம் தான் மூவர் பாடிய தேவாரப் பதிகங்களில் இறுதிப் பதிகம் ஆகும்.

சுந்தரர் இளைஞர். கலை உள்ளமும் கலை ஞானமும் உள்ளவர். பரவையாரிடம் அவரின் கலைத்திறனை வியந்து அதைப் பருகியவர். அவரைக் கண்டதே சிவனருள் என்ற கொள்கை உடையவர். அவரது கலை உள்ளத்தை அவர் அருளிலும் செய்த தேவாரப் பதிகங்களில் காணலாம். திருஞான சம்பந்தரை நோக்க சுந்தரர் பதிகங்களில் இயற்கை வருணனைக் காட்சிகள் குறைவுதான். அதற்குக் காரணம் அவர் தன் வாழ்க்கையில் பல பிரச்சனைகளைச் சந்திக்க நேர்ந்தது. சில காலம் பார்வையற்று இருந்தார். எனவே இயற்கைக் காட்சிகளை, வருணனைகளை அவர் அதிகமாய்ப் பதிவு செய்யவில்லை. மிகவும் சொற்பமாகவே பதிவு செய்துள்ளார். ஆனால் அவையும் மிகவும் சுவையாக இருக்கின்றன.

தலயாத்திரை மேற்கொண்ட சுந்தரர் திருநீரூர் வருகின்றார். நீரூர் நீர் வளம் பொருந்திய ஊர். வளம் பொருந்திய ஊர். அங்கே ஒரு காட்சியைக் காண்கிறார் சுந்தரர்.

ஊரைச் சுற்றி வயல்கள். எங்கும் பச்சைப் பசேல் என்று இருக்கின்றது. அங்குள்ள நீர் நிலைகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கின்றது. வாளை மீன்கள் மகிழ்ச்சியால் குதித்துக் குதித்துக் கும்மாளம் போடுகின்றன. அக்காட்சியைக் கண்ட சுந்தரர் அதை அப்படியே தன் பதிகத்தில் பதிவு செய்கிறார். அவர் சொற்களிலேயே பார்ப்போம்.

**''நீரில் வாளை வாரல் குதி கொள்ளும்**

**நிறை புனற் கடினிச் செல்வ நீரூர்''**

*காவிரியின் வடகரையில் உள்ள ஊர் திருவேள்விக்குடி. குத்தாலத்திற்கும் பக்கத்து ஊர். அங்கே காவிரி பாய்ந்து வளப்படுத்துகின்றது. அக்காவிரியின் அழகை இப்படிக் கூறுகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.*

**''மின்னு மா மேகங்கள் பொழிந்திழிந்தருவி**
**வெடிபடக் கரையொடும் திரை கொணர்ந்தெற்கும்**
**அன்னமாங் காவிரி அகன் கரை உறைவார்''**

*சோழ நாட்டின் மற்றொரு வடகரைத் தலம் திருமடிபாடி. கொல்லி மடிவனின் படைகள் (மழவர் சேனை). தங்கியிருந்த கூடமாதலின் ''மடிவர் பாழ்'' என்று பெயர் வந்தது. பிறகு அதுவே ''மடிபாடி' ஆயிற்று.*

*அவ்வூர் மிகவும் வளமான ஊர். நிறைய பூம்பொழில்கள் சூழ்ந்திருக்கும் ஊர். இங்கு உறையும் சிவபெருமான் மீது அலாதியான அன்பு கொண்டிருந்தார் சுந்தரர். ''மடிபாடியுள் மாணிக்கமே'' என்று உருகுவார். மடிபாடி மாணிக்கத்தைப் பாடும் போது அம்மாணிக்கம் கோயில் கொண்டுள்ள மதபாடியில் இயற்கை அழகையும் பதிவு செய்கிறார்.*

**''வண்டார் பூம் பொழில் சூழ் மடிபாடி மாணிக்கம்''** *என்றும்* **''மண்ணார் பூம் பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கம்''** *என்றும் பாடி மகிழ்கின்றார்.*

*நிடிற் படக்கருவி கொண்டு இயற்கைக் காட்சிகளைப் படம் எடுக்கிறோம் அல்லவா அதுபோல் அக்காலத்தில் புலமையுடையோர் தாங்கள் கண்டு களித்த இயற்கைக் காட்சிகளை அப்படியே இலக்கியமாகப் பதிவு செய்தனர். அப்படி பதிவு செய்தவர்களில் சுந்தரரும் ஒருவர்.*

*திருப்பனையூர் திருத்தலம் நீர் வளம் உடையது. அவ்வூர் நீர்த் தடாகத்தில் குவளை மலர்களும் தாமரை மலர்களும் நிறைந்திருக்கின்றன. பெண்கள் அந்நீர் நிலைகளில் குடைந்து குடைந்து நீராடுகின்றனர். அக்காட்சியை இப்படி பதிவு செய்கிறார்.*

*''கொங்கையார் பலருங் குடைந்தாட நீர்''க் குவளை மலர் தரப்பங்கயம் மலரும் பழனத் திருப்பனையூர்''*

*சுந்தரர் தேவாரப் பதிகங்கள் மூலம் அவரது வாழ்க்கை வரலாற்றை நாம் ஓரளவு தெரிந்து கொள்கிறோம். இயற்கை வருணனைகள் சொற்பமே.*

## திருவாசகம் - எட்டாம் திருமுறை

*சைவத் திருமுறைகளில் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும்.*

*''திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' எனும் பழமொழியே அந்நூல் பெருமயை உணரச் செய்யும். மணிவாசகப் பெருமானால் அருளப் பெற்றது அத்திருமுறை. மணிவாசகர் சொல்லச் சொல்ல சிவபெருமான் அந்நூலை எழுதியதாகக் கூறுவர். வேற்று மொழி அறிஞர் பெருமக்களையும் கவர்ந்த நூல் திருவாசகம்.*

*அந்நூலில் இயற்கை வருணனைகள் அவ்வளவாக இல்லை. இருப்பினும் ஒரு சில எடுத்துக் காட்டுகளைப் பார்ப்போம்.*

*திருஅண்டப் பகுதியில் ''கருமா முகிலின் தோன்றித் திருவார் பெருந்துறை வரையில் ஏறி'' என்று கூறியதன் மூலம் கருக் கொண்டே மேகத்தைக் கூறுகின்றார் மாணிக்கவாசகர்.*

*மணிவாசகர் பெருமான் திருவெம்பாவையில் காட்டும் ஓர் இயற்கைக் காட்சியைப் பார்ப்போம்.*

*பொய்கை இறைவனையும் இறைவியையும் போல் காணப்படுகிறதாம். இறைவியின் நிறம் கருங்குவளை நிறம். குருகினம் - சங்க வளையல், அரவம் திருச்சடை.*

*இறைவனின் நிறம் செந்தாமரை நிறம். குருகு அவர் அணிந்திருக்கும் குருக்கத்தி மலர் அரவம் அவர் அணிந்திருக்கும் ஆபரணம். இக்கருத்தை மணிவாசாகரின் சொற்களிலேயே பார்ப்போம்.*

**''பைங்குவளை கார் மலராற் செங்கமலம் பைம் போதால்**
**அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்''**

*குயிற் பத்தில் சோலையைப் பற்றி இப்படிக் கூறுகின்றார்.*

**''தேன் படிச் சோலை பயிலும் சிறுகுயிலே''**
**''காருடைப் பொன் திகழ் மேனிக் கடி பொழில் வாழும் குயிலே''**

*- என்று கூறிய மணிவாசகர் திருப்பள்ளியெழுக்குலே காலைக்காட்சியை இப்படிக் கூறுகின்றார்.*

*''அழகிய குயில்கள் கூவின; கோழிகளும் கூவின. மற்றுமுள்ள பறவைகளும் ஒலித்தன; சங்குகள் முழங்கின. நட்சத்திர வெளிச்சம் மறைந்த. உதயத்தின் ஒளி தோன்றுகிறது.*

**''கூவின பூங்குயில் கூவின கோழி**
**குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்**
**ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து ஓருப்படுகின்றது.''**

*மணிவாசகப் பெருமான் கோவை நூல் ஒன்று செய்தார். ''பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடு'' என்று இறைவன் கட்டளையிட திருக்கோவையாரை அருளிச் செய்தார் மணிவாசகப் பெருமான். அகப்பொருள் இலக்கணத்திற்கு ஏற்ப அமைந்தது அந்நூல். அந்நூலில் ஓர் எடுத்துக் காட்டைப் பார்ப்போம்.*

*தலைவன் கழுநீர் மலரைக் கையுறையாகக் கொண்டு சென்று அதனை ஏற்றுக் கொள்ளுமாறு தோழியிடம் வேண்டுகிறான். அதற்குத் தோழி ''அது தெய்வத்திற்குரிய மலர், எங்களுக்கு வேண்டாம் என்று கூறி மறுக்கிறாள். அப்போது தோழி தலைவனுடைய மலையைப் பற்றிக் கூறுகின்றார்.*

*ஒரு பெரிய பாறை; அதன் மேல் தேன் நிறைந்திருக்கும் வேங்கை மரப் பூக்கள் நிறைய உதிர்ந்து கிடக்கின்றன. அது பார்ப்பதற்குப் புலி ஒன்று படுத்திருப்பது போல் காட்சி தருகின்றது. அப்போது ஒரு யானை அங்கே வருகின்றது. வந்த யானை அம்மலையைப் பார்த்துப் புலி என்று அஞ்சுகிறதாம். அத்தகைய மலை நாட்டுத் தலைவனே என்று தோழி கூறுகிறாள்.*

**''நறுமனை வேங்கையின் பூம்பயில்**

**பாறையை நாக நண்ணி**
**மறமனை வேங்கை என நனி**
**அஞ்சும் அஞ்சார் சிலம் பா''**

*என்று மணிவாசகப் பெருமான் கூறுகின்றார்.*

*பன்னிரு திருமுறைகள் ஒரு தங்கத் தாம்பாளம் என்றால் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசக் திருக்கோவையார் வரிகள் வைர வரிகளாகும். சைவமும் தமிழும் செய்த தவத்தின் பயனே திருவாசகமும் திருக்கோவையாகும்.*

*நாகம் - யானை*

*ஒன்பதாம் திருமுறை - திருவிடைப்பா - திருப்பல்லாண்டு*

*பன்னிரு திருமுறைகளில் முதல் ஒன்பது திருமுறைகள் ''தோத்திரம்'' எனப்படும்.*

*ஒன்பதாம் திருமுறை ஒன்பது அருளாளர்கள் பெருமான் மீது பக்திச் சுவையும் தமிழ்ச் சுவையும் கலந்து பாடிய பாடல்களைக் கொண்டது. அந்த ஒன்பது பேர்களின் பெயர்கள் வருமாறு: 1. திருமாணிகைத் தேவர், 2. சேந்தனார், 3. கருவூர்த் தேவர், 4. பூந்துருத்தி நம்மி காட நம்பி, 5. கண்டாதிக்தர், 6. வேண்டாடடிகள், 7. திருவாலிய முதனார், 8. புருடோத்தம நம்பி, 9. சேதிராயர்.*

*அவர்களில் திருமாளிகைத் தேவர் பாடிய பாடல்களில் வந்துள்ள இயற்கைக் காட்சிகளைப் பார்பபோம். புலியூர் வளத்தைப் பாடுகின்றார் திருமாளிகைத் தேவர்.*

*புலியூரைச் சுற்றி வயல்கள் சூழ்ந்திருக்கின்றன. அந்த வயல்களில் எல்லை கடந்து வாளை மீன்கள் பாய்கின்றன. தாமரை மலர்களையும் கரும்பையும் எருமைகள் மேய்கின்றன. செந்நெல் விளைந்திருக்கும் கடினிகளில் செங்கழுநீர் மலர்களும் மலர்ந்து நிறைந்திருக்கின்றன. அத்தகைய வளமான புலியூர் என்கிறார் திருமாளிகைத் தேவர்.*

**''வரம்பிரி வாளை மிளர் மடுக்கமலம்**
**கரும்பொடு மாந்திடு மேதி**
**பிரம்பிரி செந்நெல் கடினிச் செங்கமு நீர்ப்**
**படினம் சூழ் பெரும் பற்றப் புலியூர்''**

**''நிறை தழை வாழை நிடிற் கொடி**
**நெடுந்தெங்கு (நீள்)**
**இளங் கமுகுளங் கொள் நீர் பலமாப்**
**பிறை தவழ் பொழில் சூழ் இடங்கிடைப் பதனம்**
**முதுமதிற் பெரும் பற்றப் புலியூர்''**

*என்கிறார் திருமாளிகைத் தேவர்.*

*அதன் பொருள்:-*

*வானில் உள்ள பிறைச் சந்திரனில் ஒளிக் கிரணங்கள் சோலைகளில் பாய்கின்றன.*

*அங்கே வாழை மரங்கள் நிறைந்திருக்கின்றன. அவை மேலும் அழகாகத் தழைத்தும் இருக்கின்றன. நிழல் தரும் கொடிகள் இருக்கின்றன.*

தென்னை மரங்களும் இளமை பொருந்திய பாக்கு மரங்களும் நிறைந்திருக்கின்றன. அகழிகளும் பெரிய பழைய மதில்களைக் கொண்ட பெரும்பற்றப் புலியூர்'' - என்கிறார் திருமாளிகைத் தேவர்.

அருளாளர்கள் இறைவனை இயற்கை வடிவில் கண்டார்கள். இயற்கையோடு இயைந்த வாழ்வு அவர்கள் வாழ்வாதலால் இயற்கையையும் இறைவனையும் ஒன்றாகவே கருதி வழிபட்டார்கள்.

திருவிசைப்பா ஆசிரியர்களில் மற்றொருவரான சேந்தனார் திருவீழி மிழலையைப் பற்றிப் பாடும்போது ''விண்டவர் மலர் வாய் வேரிவார் பொழில் சூழ் திருவீதி மிழலையூர்'' என்கிறார்.

அதாவது இதழ்கள் மலர்ந்து விரிந்து தேன் ஒழுகுகின்ற

சோலைகள் சூழப் பெற்ற திருவீழிமிழலை'' என்று பாடுகின்றார்.

அடுத்துத் திருவிசைப்பாவின் மற்றொரு ஆசிரியரான கருவூர்த் தேவர் காட்டும் இயற்கை வளத்தைக் காண்போம்.

''வைகை ஆறு வேகமாக ஓடி வருகின்றது. அது ஓடி வரும் வேகத்தில் மருது அரசு கோங்கு அஜில் போன்ற மரங்கள் முறிந்து விழுகின்றன. அந்த மரங்களை ஆறு எடுத்துக் கொண் வருகின்றது. அத்துடன் இரத்தின மணிகளையும் மலைபடு பொருள்களையும் வாரிக் கொண்டு இறங்கி விரைந்தோடி வருகின்றது. அத்தகைய வைகையாற்றின் அலைகள் மோதுகின்ற கரைகளின் அருகில் உள்ளது பெரிய கடை வீதிகளை உடைய திருப்பூவனம் தலம்'' என்கிற கருவூர்த் தேவர்.

**''மருது சிருங் கோங்கு அகில் மரம் கூடி**
**வரை வளங்க கவர்ந்திழினவகைப்**
**பொருதிரை மருங்கோங்கு ஆவண வீதிப்**
**பூவணங் கோழில் கொண்டாயே''**

அருட்தன்மை நிரம்பப் பெற்ற அச்சான்றோர்கள் இப்படியே இறைவனை இயற்கை வடிவில் கண்டார்கள். அவர்கள் வாழ்வு இயற்கையோடு இயைந்த வாழ்வாதலால் இறைவனையும் இற்கையையும் ஒன்றாகவே கருதி வழிபட்டார்கள்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் ஒரு தத்துவ நூல். இயற்கை வருணனைகள் மிக மிகக் குறைவு. திருமந்திரத்தில் சக்கரங்கள், யோக வழிகள் பிராளயாமம் போன்ற செய்திகளே கூறப்ப்டுள்ளன. திருமந்திரத்தின் இயல்பே வேறு. அதை விரிக்கிற் பெருகும்.

## பதினோராம் திருமுறை

பதினோராம் திருமுறையில் அமைந்த நூல்கள் மொத்தம் நாற்பது. அவை பன்னிரண்டு அருளாளர்களால் பாடப்பட்டவை. ஒவ்வொன்றும் ஓர் இரத்தினம் தான். அதில் வந்துள்ள இயற்கை வருணனைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

அகவல், வெண்பா, கட்டளைக் கவித்துறை என்ற மூவகைச் செய்யுட்களால் அந்தாதித் தொடையில் அமைவது மும்மணிக் கோவை எனப்படும்.

சேரமான் பெருமான் நாயனார் பாடிய மும்மணிக் கோவை மிகவும் சிறப்பான

*மும்மணிக் கோவையாகும். அதில் ஒரு பாடலில் வந்துள்ள இயற்கைக் காட்சியைப் பார்ப்போம்.*

*மீன்கள் நிறைந்து விளங்கும் கருங்கடல். அதில் வலையர்கள் மீன் பிடிப்பதற்காக படகுகளில் இருந்து ஆலவட்டம் போல் வலைகளைக் கடலில் வீசுகின்றனர்.*

*உட்கழிகளை உடைய நீர் முகத்தில் உள்ள சங்குகள் ஒளி வீசுகின்றன. பவளமும் முத்தும் விண்ணில் இருந்து விண் மீன்களைப் போல் ஒளி வீசுகின்றன என்கிறார் ?????? நாயனார். அவர் மொழிகளிலேயே இக்காட்சியைப் பார்ப்போம்.*

**''இயங்கெடு கருங்கடல் முதுகு தெருவுபட**
**இயங்குதிமில கடவி எறியொளி நுளையர்**
**நெய்ம்பின் கவரல் வேண்டி சாகம் மிகத்**
**தாலவட்டம் ஏய்ப்ப மீடிசை**
**முடிகெழு தருவலை வீசி முந்நீர்க்**
**குடரென வாங்கிக் கொள்ளை கொண்ட**
**சுரிமுகச் சங்கும் சுடர் விடு பவளமும்**
**எறிகதிர் நித்திலத் தொகுதியும் கூடி**
**விரிகதிர் நிலவும் செக்கரும் தாரகைக்**

*சங்க காலத்து எழுந்த நூலான திருமுருகாற்றுப்படையும் அப்பதினோராம் திருமுறை நூல்களுள் ஒன்று. நிறைய இயற்கைக் காட்சிகளை நக்கீரர் பெருமான் வாரி வழங்கி இரைக்கின்றார். அதில் ஓர் இடத்தைப் பார்ப்போம்.*

*''கடல் நீரை முகந்ததால் மேகம் கருக் கொண்டது. கருக் கொண்ட மேகம் இருளைப் போக்கும் சூரிய சந்திரர் இருக்கும் இடத்திற்கு வந்ததும் தான் உண்ட நீரை மழையாகப் பொழிகிறது. அதனால் நறுமணம் வீசும் காட்டில் அருள் உண்டானது போல் கடம்ப மரங்கள் பருத்தன. அம்மரத்து மலர்கள் தேரின் உருளை போல் பெரிதாக இருந்தது. அத்தகைய மலர்களால் ஆன மாலையை அணிந்திருக்கிறார் முருகப்பெருமான்.*

*அக்காட்சியை நக்கீரர் கூறிய மொழிகளிலேயே பார்ப்போம்.*

**''கார் கோள் முகந்த கமம்சூல் மாமழை**
**வாள்போல் விசும்பில் உள் உறை சிதறித்தன**
**தலைப் பெயல் தலையாய தண் நறுங் காகைது**
**அருள் படப் பொதுளிய பரா அரை மா**
**உருள்பூந்தண்காதினர் புரளும் மார்பினள்'' (அத்து)**

*நம்பியாண்டார் நம்பிகள் அருளிய ஆளுடைப் பிள்ளையார் திருவுலா மாலையில் ஓர் இடத்தைப் பார்ப்போம். சீர் காழியைப் பற்றிக் கூறுகிறார்.*

*''மாதவி, புன்னை, குருக்கத்தி, தாழை இவை போன்ற மலர்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. தென்றல் வீசுகிறது. கரும்பை இரிபவர்கள் செய்யும் ஒலியும் வண்டுகளின் ஆரவாரமும் கடல் அலைகளின் பேரிரைச்சலும் மணங்கமழ் நந்தவனத்து ஒலியும் தவசிகள் வாழும் ஆசிரமம் உடைய பேரெழில் உடைய ஊர்.*

**''மாதவியும் புன்னையும் மன்றும் மலர்க்குரவும்**
**கேதகையும் எங்கும் கெழிலில் - போதில்**
**காளர் தென்றல் வந்தசைடம்ப எண்ணிகையும்**
**வணந்துன்று வார் பொழின் மாடே கிளர்ந்தெங்கும்**
**சூலை ஒலியும் அரிவார் குரல் ஒலியும்**
**சோலைக் கிளி மிடிற்றும் சொல் ஒலியும் - மாலும்**
**அறுபதங்கள் ஆர்ப்பொலியும் ஆன்ற பொலி வைய்தி**
**உறுதிரை நீர் வேலை ஒலிப்ப - வெறி கட்டும்**
**நந்தா வனத்தியல் பும் நற்றவத்தோர் சார்விடமும்**
**அந்தமிழல் சீரார் அழகினால்''**

*பதினோராம் திருமுறையில் வந்துள்ள இயற்கை வருணனைக் காட்சிகள் மிகவும் இன்பம் தரத்தக்கவை.*

## பன்னிரண்டாம் திருமுறை - பெரிய புராணம்

*பெரிய புராணம் பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. பெரிய புராணம் சேக்கிழார் பெருந்தகையால் செய்யப்பட்ட ஒரு மாபெரும் காவியம்.*

*''பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ'' - என்று சேக்கிழார் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாடிப் பாராட்டுகின்றார். அந்நூலில் இயற்கைக் காட்சிகளுக்கு அளவே இல்லை. இருப்பினும் ஓரிரு இடங்களைப் பார்ப்போம்.*

*சண்டேச நாயனார் புராணத்தில் சேய்நல்லூரைப் பற்றிக் கூறும்போது அதன் வளத்தை இப்படிக் கூறுகின்றார்.*

*நீர் மடையில் செங்குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. நீர் சூழ்ந்த வயலில் செந்நெற் கற்றைகள் இருக்கின்றன. அந்நெல் வயல் பக்கத்தில் வண்டுகள் மொய்க்கும் பாக்கு மரப் பாளைகள் இருக்கின்றன. பாக்கு மரத்ல் பூத்த நீர்ச் செழிப்பு அதில் தெரிகிறது. இவைகள் மிகுந்த தாமரைகளின் நீண்ட பூக்களில் கயல் மீன்கள் உறங்குகின்றன. நடக்கும் வழியில் படர்ந்திருக்கும் கொடிகள் பந்தல் போல் காட்சி தருகிறது. காஞ்சி மரங்களில் அரும்புகள் உண்டாகி இருக்கின்றன. இக்காட்சியை சேக்கிழார் கூறும் பாங்கிலேயே பார்ப்போம்.*

**''மடையில் கழுநீர் செங்கழுநீர் சூழ்**
**வயலில் சாலிக் கதிர்க் கற்றை**
**புடையில் கரும்பு மிடை கமுகு**
**புனவில் பரம்பு பூம் பாளை**
**அடையில் பயிலும் தாமரை நீண்**
**அலரில் துயிலும் கயல்கள் வழி**
**நடையில் படர்மென் கொடி மௌவல்**
**நனையில் திகழும் சினைக் காஞ்சி''**

*சேக்கிழார் கூறும் மற்றொரு இயற்கை வருணனைக் காசியைப் பார்ப்போம்.*

*திருஞானசம்பந்தரின் அவதாரத் தலமான சீர்காழியை மிகவும் அழகாக வருணிக்கிறார் சேக்கிழார். அது இயற்கை வருணனையாகவும் இருக்கிறது.*

*சீர்காழியில் பல நல்ல நீர் நிலைகள் இருக்கின்றன. அதிலே நிறைய செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. அது பசுமையான இலைகளுக்கிடையே தோன்றுகிறது. (இயங்குகிறது)*

*அக்காட்சி கண ஞாயிறு போல் இருக்கிறதாம்.*

**''வளம் பயிலும் புறம் பனைப் பால் வாசப் பாகூடை மிடைந்த**
**தளம் பொலியும் புனல் செந்தாமரைச் செல்வித் தடமலரால்**
**களம் பயில் நீர்க் கடல் மலர்வது ஒரு பரிசி எனக்கருதி**
**இளம்பரிதி பல மலர்ந்தால் போல்வன இலஞ்சி பல**

*இது போன்ற பல வருணனைகள் பெரியபுராணத்திலும் உள்ளது.*

## முடிவுரை

*திருமுறைகளில் கூறப்பட்டுள்ள இயற்கை வருணனைகள் படித்துச் சுவைக்கத் தக்கன. அது மட்டுமல்லாமல் அக்காலத் தமிழகத்தின் இயற்கை வளங்களையும் அருளாளர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள் என்றும் அறியலாம்.*

*பன்னிரு திருமுறைகள் பக்திப் பனுவல் மட்டுமன்று. அஃது ஓர் இயற்கை வருணனைகள் நிறைந்த இயற்கைக் காப்பியம் ஆகும்.*

## Bibliography


Ki.,Va.,Ja. (1987). *Periya PurâGa Vi7akkam*. Chennai: Allayan2s.

*Mûvar Tçvâram.* Kasi: Kasimadam.

Nyanasampantham.A.Sa. (1997). *PeriyapurâGam.*Chennai: Gangai Puthaga Nilayam.

Saminathaiyar, Vu.,Ve. (1937). *NiIaivu Mañcari.*

# திருக்குறளும் மலேசியத் தேசியக் கோட்பாடும் - ஒரு பார்வை

பரமசிவம் முத்துசாமி / Associate Professor Dr Paramasivam Muthusamy[1]
கயல்விழி தர்மலிங்கம் / Kayalvily Tharmalingam[2]
உமா மதுபாலன் / Uma Mathubalan[3]

**Abstract**

A close probe into the five Malaysian National policies reveals that they are on par with Thirukkural. These policies had been framed without the knowledge of Thirukkural. The aim of this Article is to find out the relationship between the two. The tools used for the study are reference in the library and qualitative approach. The study has been classified under the ideas like faith in God, loyality to the country and king, following the constitution, ruling according to law and keeping the right conduct and character.

*Key words: Malaysian Natonal Policy, Thirukkural, opinion, reflecton, thoughts.*

## முன்னுரை

நாட்டு மக்களிடையே ஒற்றுமையும், சுபிட்சத்தையும் ஏற்படுத்தும் வகையில் ருக்குன் நெகாரா எனப்படும் மலேசியத் தேசியக் கோட்பாடு 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள், மலேசியாவின் மாமன்னரால் பிரகடனம் செய்யப்பட்டது. (Abdul Rahman Abdul Aziz, 2010:44). இந்தத் தேசியக் கோட்பாடு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற 13 மே சம்பவம் எனப்படும் 1969-ஆம் மலேசிய இனக்கலவர காரணத்தினால் உருவாகியது. இந்த இனக் கலவரம், 1969-ஆம் ஆண்டு மலேசியாவில் ஒரு தேசிய அவசரகாலத் தன்மைக்கு வழிவகுத்தது. அந்தச் சம்பவத்திற்குப் பின்னர், மலேசியப் பேரரசர் தேசிய அவசரகாலத்தை உடனடியாக நாடு முழுமைக்கும் பிரகடனம் செய்தார். அந்தப் பிரகடனத்தினால் நாடாளுமன்ற நடைமுறைகளையும் மலேசிய அரசாங்கம் உடனடியாக நிறுத்தி வைத்தது. அதனால் அரசாங்க நிர்வாகத்தைத் தேசிய நடவடிக்கை மன்றம் (National Operations Council) எனும் தற்காலிகச் செயல்பாட்டு நிர்வாகம், 1971-ஆம் ஆண்டு வரை ஏற்று நடத்தியது. (Lee, Y.F., & Sarjit, S.G., 2008:111). இவ்வாறு உருவாகிய, மலேசியத் தேசியக் கோட்பாட்டில், வள்ளுவர் அருளிய திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகளின் பிரதிபலிப்பு உள்ளதைக் காண முடிகிறது. இதன் அடிப்படையில் மலேசிய நாட்டில் உருவாகிய தேசியக் கோட்பாட்டுக்கும் தமிழ் நாட்டில் தோன்றிய திருக்குறளுக்கும் நேரடியாக எந்தத் தொடர்பும், சம்பந்தமும் இல்லாத பாதிலும் அவை எவ்வாறு ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகின்றன என்பதை ஆய்ந்து பார்க்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

---

[1]The author is a Associate Professor in the University Putra Malaysia, Bangi, Malaysia. param@fbmk.upm.edu.my
[2]The author is a postgraduate candidate in the University Putra Malaysia, Bangi, Malaysia. kayalvily7@yahoo.com
[3]The author is a postgraduate candidate in the University Putra Malaysia, Bangi, Malaysia. narmathaa81@yahoo.com

## ருக்குன் நெகாரா கோட்பாடு

*1957–ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்நாட்டில், மலாய்க்காரர், சீனர், இந்தியர் மற்றும் பிற இனத்தவருடன் சபா, சரவாக்கில் உள்ள 25 இனங்கள் வாழ்கின்றன. (ஜானகிராமன் மாணிக்கம், 2006:1). இப்பல்லின மக்களை ஒன்று சேர்க்கவே மலேசியத் தேசியக் கோட்பாட்டை* (Yahaya, H:1978), *மலேசியத் தேசிய ஆலாசனை மன்றம்* (Majlis Perunding Negara) *விரிவாக அலசி ஆராய்ந்து இயற்றியது* (Lee, Y.F., & Sarjit, S.G., 2008:111). *பல்வேறு அரசியல் கட்சிகள், பத்திரிகைகள், தொழிற்சங்கங்கள், சமயங்கள், அரசாங்கச் சேவை தொழில்முறை அமைப்புகள் ஆகியவற்றின் பேராளர்களும் சிறுபான்மை பேராளர்களும் இத்தேசிய ஆலோசனை மன்றத்தில் இருந்தார்கள் (சாட்டின், 1972:2). பல்வேறான நமது பண்பாடுகள், சமயங்கள், பழக்க வழக்கங்கள் ஆகிய இவற்றின்பால், ஒரு மிதமான போக்கைக் கடைப்பிடிக்கவும் ஒரே மக்களாய் வாழ வழிகாட்டவும் இக்கோட்பாடுகள் வகை செய்கின்றன.*

*எனவே, மலேசிய மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்* (Rohaizahtulamni Radzlan., Sarjit. S. Gill., & Ahmad Tarmizi Talib:2013); *மக்களாட்சி முறையைப் பாதுகாத்தல், நாட்டின் வளத்தைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளும் நேர்மையான சமூகத்தை உருவாக்குதல்; ஆகியனவே மலேசியத் தேசியக் கோட்பாட்டின் இலக்குகளாகும். இதனைப் பார்க்கும் பொழுது, 'ருக்குன் நெகாரா' என்று அழைக்கப்படுகின்ற மலேசியத் தேசியக் கோட்பாடு அனைத்து இனங்களின் கருத்துக்கு இணையாகவும், நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடும் அமைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மலேசியத் தேசியக் கோட்பாடும் அதன் விளக்கமும் பின்வருமாறு:*

### அ. இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்

*இந்த மலேசியத் தேசிய முதல் கோட்பாட்டில், எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் குறிப்பிடாமல், அனைத்து மக்களையும் குறிப்பிடும் வகையில், இறைவன் மீது நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற பொதுமைக் கொள்கை எடுத்துரைக்கப்படுகின்றது. இஸ்லாம் மதம் இந்நாட்டின் அதிகாரப்பூர்வ மதமாக இருப்பினும், இங்கு வசிக்கும் மற்ற இன மக்கள் தங்களின் சமயத்தைச் சுதந்திரமாகக் கடைப்பிடிக்க உரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மலேசியர்கள் என்று குறிப்பிடுகையில், அவர்கள் மதச்சார்புடையவர்களாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்* (Lee, Y.F., & Sarjit, S.G., 2008:111).

### ஆ. பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்

*மலேசியா மொத்தம் 13 மாநிலங்களும் 3 கூட்டரசுப் பிரதேசங்களும் கொண்ட ஒரு நாடாகும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் அரசர் இருக்கிறார். அவரை 'சுல்தான்' என்ற பெயரால் குறிப்பிடுகிறார்கள். 4 மாநிலங்கள் கூட்டரசு முறையில் அமைக்கப்பெற்றதால், அம்மாநிலங்களுக்குச் சுல்தான் கிடையாது. அதே போல் கோலாலம்பூர், புத்ரா ஜெயா மற்றும் லாபுவான் ஆகிய இம்மூன்று கூட்டரசுப் பிரதேசங்களுக்கும் சுல்தான்கள் கிடையாது. ஐந்து வருடத்திற்கு ஒரு முறை, இந்த 13 சுல்தான்களில் ஒருவர் மாமன்னராகப் பொறுப்பேற்பார். அம்மாமன்னருக்கு நாம் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதே இக்கோட்பாட்டின் பொருளாகும். பேரரசருக்கும் நாட்டிற்கும் நாம் விசுவாசம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்பதையே இந்த இரண்டாவது கோட்பாடு வலியுறுத்துகிறது* (Abdul Rahman Abdul Aziz, 2010:450).

**இ. அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்**

மலேசியாவின் அரசியலமைப்புச் சட்டம் 'Red Constitutional Commission' ஆல் உருவாக்கப்பட்டது. (Red Constitutional Commission: 2015). மலேசிய அரசியலமைப்புச் சட்டத்தை ஒவ்வொரு மலேசியரும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இக்கோட்பாடு உணர்த்துகிறது (Abdul Rahman Abdul Aziz: 2010).

**ஈ. சட்ட முறைப்படி ஆட்சி நடத்துதல்**

ஒவ்வொரு குடிமக்களும் அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்து சட்ட முறைப்படி ஆட்சி நடத்த வேண்டும் என்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. சட்டம் எனப்படுவது அடிப்படையில் அனைவருக்கும் சமம். மலேசிய ஆட்சியாளர்களும் மலேசிய மக்கள் அனைவரும் சட்டதிட்டங்களைப் பின்பற்ற வேண்டும், பேண வேண்டும், மதிக்க வேண்டும் என்பதை இந்தக் கோட்பாட்டின் உட்கருத்தாகும். ஆட்சியாளர்களும் மக்களும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் (Abdul Rahman Abdul Aziz, 2010:450). ஆக, நாம் சட்டத்தை மதித்து நடந்தால், அமைதியான சுதந்திரமான சூழலில் சிறப்புற்று வாழ முடியும் என்பதை இக்கோட்பாடு உணர்த்துகிறது.

**உ. நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்**

மலேசியத் தேசிய ஐந்தாவது கோட்பாடு, நம்மைச் சமூக வாழ்வில் நிலைபெறச் செய்யும் நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் ஒட்டி இயற்றப்பட்டுள்ளது. நமது நடத்தையும், பண்பும் நமது வளர்ப்பையும் நல்லொழுக்கத்தையும் குறிக்கும் (Lee, Y.F., & Sarjit, S.G., 2008:112). இந்நாட்டு மக்கள் அனைவரும் நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் முறையாகப் பேணிப் பின்பற்றும் வகையில், அவர்கள் அனைவரும் வெவ்வேறு கலைக் கலாச்சாரங்களைக் கொண்டிருப்பினும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு சுபிட்சத்துடனும் பிணக்கம் இன்றி இணக்கமாக வாழ இக்கோட்பாடு வழிவகுக்கும்.

## திருக்குறள்

தமிழ்ச் சங்க இலக்கிய வகைப்பாட்டில், பதினெண்கீழ்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் அடங்கியுள்ள திருக்குறள், (ரிஷிவன், *2014:1*) எந்தவொரு குறிப்பிட்ட சமயச் சார்புமற்ற பொதுமறையாக இயற்றப்பட்ட அறநூலாக விளங்குகின்றது. வள்ளுவம் 'தமிழனுக்குரியது' என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியது, பொதுமையானது எனும் கருத்தைப் பாரதி, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு', (முனிசாமி *1987:3*) எனக் கூறியுள்ளார். இதன் அடிப்படையில், உலக மக்களின் பொதுவான உணர்வுகளையும் அவர்கள் விரும்புகின்ற நியாயங்களையும் திருக்குறள் கொண்டுள்ளது. அத்துடன், திருக்குறளில் காணப்படும் கருத்துகளும் மலேசியத் தேசியக் கோட்பாட்டில் காணப்படும் கருத்துகளும் ஒன்றோடு ஒன்று ஒத்துப்போவது இங்கே குறிப்பிடத்தக்கது.

## முதலாவது கோட்பாடு - இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்

இறைவன் மீது நம்பிக்கை வைத்தல் என்ற இந்தக் கோட்பாட்டில், இறைவனைக் குறிப்பிட்ட ஒரு பெயரிலோ மதச் சார்பிலோ சொல்லாமல் பொதுமையாக இறைவன் என்ற சொல்லால் குறிப்பிடப்படுள்ளது. அதே வேளை, பொதுமை சிந்தனையை

*வலியுறுத்தும் திருக்குறளிலும் இறைவனின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதவாகச் சொல்லி இருப்பதை நம்மால் உணர முடிகின்றது.*

*திருக்குறளில் திருவள்ளுவர் அருளிய இறைமை கொள்கை அல்லது இறைக் கோட்பாடனது, அனைவருக்கும் பொதுவானதாகவும், யாரையும் பிளவுபடுத்தாததாகவும், மனிதர்கள் அடைய வேண்டிய பண்புகளின் நிறைநிலைப் பண்பாய் அமைவதாகவும் கூறப்பட்டுள்ளது. (கு.மோகனராசு, 2005:80)*

*அதுபோல, இஸ்லாம் மலேசிய நாட்டின் அதிகாரப்பூர்வ மதமாக இருப்பினும் அதனைக் குறிப்பிட்டுச் சொல்லாமல், 'இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்' என்று பொதுமையாகவே மலேசியத் தேசிய முதல் கோட்பாடு எழுதப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், மலேசியத் தேசிய முதல் கோட்பாடிலம் கடவுள் வாழ்த்து அதிகாரத்திலும் உள்ள இறை நம்பிக்கையைப் பற்றி கருத்துகள், எந்த ஒரு சமயத்தையும் குறிப்பிடாமல், பொதுத்தன்மை உடையதைக் காண முடிகிறது.*

## பகுப்பாய்வு

**'அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி**
**பகவன் முதற்றே உலகு' (குறள்1)**

*என்ற முதல் குறள் உலகம் ஆதிபகவானை முதலாக உடையது என கடவுள் இயல்பையும் கடவுளுக்கு உலகோடுடைய தொடர்பையும் பொதுமையாகக் கூறுகிறது. அதுபோலவே 'இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்' என்னும் கோட்பாட்டில், அனைத்து மலேசியர்களும் எந்தஒரு செயலையும், தத்தம் மதத்தின் மீது கொண்டுள்ள இறை நம்பிக்கையின் அடிப்படையில் இறைவனுக்கு முதலிடம் கொடுத்து, இறைச்சிந்தனையுடன் செய்வதே சாலச் சிறந்தது என்று அனைவருக்கும் பொதுவாகவே வலியுறுத்தப்படுகிறது. மேலும்,*

**'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்' (குறள் 2)**

*என்ற இரண்டாவது குறள், ஒருவர் என்ன கற்றிருந்தாலும் இறைவனை நினையாமல் இருக்கக் கூடாது என அனைத்து மதத்திற்கும் சார்பான பொதுமை கருத்தையே அறிவுறுத்துகிறது. அதுபோலவே, மலேசியத் தேசிய முதல் கோட்பாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ள இறை நம்பிக்கையானது, மலேசியத் தேசியக் கல்வித் தத்துவத்தில், கீழ்கண்டவாறு பொதுமைச் சிந்தனையில் வரையறுக்கப்பட்டுள்ளது.*

**''மலேசியக் கல்வியானது இறை நம்பிக்கை, இறைவழி நிற்றல் என்னும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயையும் பெற, தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறுவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவெற்றைப் பெற்றுக் குமுகாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும், செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.''**

*(தேசியக் கல்விக் கொள்கை, 2012:iii)*

*அதே வேளை, ஒருவர் தன் வாழ்க்கையில் அவசியம் இறை நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தையும் இக்கல்வித் தத்துவம் வலியுறுத்துகிறது* (Shamsul Kamarudin, 2011:250). *தொடர்ந்து,*

**‘தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது’ (குறள் 7)**

*என்ற ஏழாவது குறள், எல்லாம் வல்ல இறைவனால் மட்டுமே தீராக் கவலைகளுக்கு மாற்றல் தர முடியும் என்று சொல்கிறது. இங்கும் இறைவன் என்பவர் எந்தவொரு சமயத்தையும் சாராமல் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் பொதுமை கொள்கையானது இந்நாட்டு மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி, ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒற்றுமையுடன் வாழச் செய்கிறது. அத்துடன், ஆழமான இறை நம்பிக்கை ஒருவரை தீயச் செயல்களைச் செய்வதிலிருந்தும் வன்முறையில் ஈடுபடுவதிலிருந்தும் தடுத்து நிறுத்துகிறது* (Abdul Rahman Abdul Aziz, 2010:449). *அத்துடன், மதத்தின் அடிப்படையில் ஒருவரையொருவர் பிரித்துப் பார்த்தல் தவறான செயல் என்பதும் இக்கோட்பாட்டின் வழி வலியுறுத்தப்படுகிறது* (Raduan Tambi, 2013:11). *எனவே, இறை நம்பிக்கையில் பொதுமை கொள்கையை வலியுறுத்தும் மலேசியத் தேசிய முதல் கோட்பாடும், திருக்குறளில் கடவுள் வாழ்த்து அதிகாரமும் நாட்டு மக்களிடையே சமய நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன.*

## இரண்டாவது கோட்பாடு - பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்

*‘பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்’ என்ற இக்கோட்பாட்டில், ஒவ்வொரு குடிமகனும் பக்தியும் - பிளவுபடாத விசுவாசமும், பேரரசர் மற்றும் நாட்டின் மீதும் கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல், விசுவாசம் என்ற கருத்தை எடுத்துரைக்கும் திருக்குறளில், நாட்டு மக்கள் வேற்றுமையைக் களைந்து பகையின்றி ஒவருவருக்கொருவர் நட்பு பாராட்டி வாழ வேண்டியதன் அவசியம் உணர்த்தப்படுகிறது.*

## பகுப்பாய்வு

*‘பேரரசர்’ எனப்படுபவர் மலேசியாவின் முதன்மைத் தலைவராகக் கருதப்படுகிறார். ‘நாடு’ என்பது மலேசியாவின் அரசியல் அமைப்பு, சட்டங்கள், நிலவியல் ரீதியில் வகுக்கப்பட்ட எல்லைகள், குடிமக்கள், சுல்தான்கள் என்ற ஒட்டுமொத்த அமைப்பாகும். எனவே, மலேசியக் குடிமக்கள், மன்னருக்கும் நாட்டுக்கும் பிளவு படாத விசுவாசத்தைச் செலுத்த வேண்டும் என்று இக்கோட்பாடு உணர்த்துகிறது* (Lee, Y.F., & Sarjit, S.G., 2008:112). *அதே வேளை, மலேசிய நாட்டின் சின்னங்கள், நாட்டுப்பண் மற்றும் தேசியக் கொடியான ஜாலோர் கெமிலாங்கையும் மதிக்க வேண்டியது இந்நாட்டு மக்களின் கடமையாகும் (சாட்டின், 1972:15).*

*திருக்குறளில் இக்கருத்துகள் பொருட்பால் அதிகாரத்தில் உள்ளதைக் காணலாம். திருவள்ளுவர், ஒரு நாட்டின் படை, குடிமக்கள், பொருள், அமைச்சர், நண்பர், கோட்டை எனப்படுகின்ற ஆறு உறுப்புகளும் ஒருவருக்கு கிடைக்கப்பெற்றால் அவர் அரசர்களுக்கெல்லாம் பேரரசனாகிவிடுவான் என்று கூறுகிறார்.*

**‘படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்**
**உடையான் அரசரருள் ஏற்று’ (குறள் 381)**

*என்ற குறள் வழி, மேல்குறிப்பிடப்பட்டுள்ள ஆறு பொருள்களும் ஒருவருக்குக் கிடைத்தால், அவர் அரசருக்கெல்லாம் அரசனாகிவிடலாம் என குறிப்பிடுகிறார். அவ்வகை*

*மகிமை கொண்ட பேரரசருக்கு குடிமக்கள் விசுவாசம் செலுத்த வேண்டும் என மலேசியத் தேசிய இரண்டாவது கோட்பாடு வலியுறுத்துகிறது. இக்கருத்து திருக்குறளுடன் ஒத்துப்போகிறது. அதனையடுத்துத் திருவள்ளுவர், பலவகையாக மாறுபடும் கூட்டங்களுமம், உடனிருந்தே அழிவு செய்யும் பகையும், அரசனை வருத்துகின்ற கொலைத் தொழில் பொருந்திய குறுநில மன்னரும் இல்லாதது 'நாடு' என்கிறார்.*

**'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும்**
**கொல்குறுப்பும் இல்லது நாடு' (குறள் 735)**

*இக்குறள், நாட்டு மக்கள் வேற்றுமை களைந்து பகையின்றி ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டுவதின் அவசியத்தை வலியுறுத்துகிறது.*

## மூன்றாவது கோட்பாடு - அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்

*இந்த மூன்றாவது மலேசியத் தேசியக் கோட்பாட்டில் மக்களின் நம்பிக்கைகள், நாட்டங்கள், குடியுரிமை, சுதந்திரம் மற்றும் தனிப்பட்டவர்களின் உரிமைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, தனிமனிதனின் உரிமைகளை வலியுறுத்தும் சிந்தனைகள் திருக்குறளின் தத்துவங்களான சிற்றினம் சேராமை, புறங்கூறாமை தொடர்ந்து ஒழுக்கமுடைமை போன்ற அதிகாரங்களிலுள்ள குறள்பாக்களில் காணமுடிகிறது.*

## பகுப்பாய்வு

*பல இன சமுதாயத்தின் உணர்வுகளைத் தூண்டும் அம்சங்கள், மலேசிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அவற்றைக் குறித்து மலேசிய மக்கள் எங்கும், எவ்வேளையும் கேள்வி எழுப்பவோ புறங்கூறவோ கூடாது என இக்கோட்பாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளது. புறங்கூறுதலைப் பற்றித் திருவள்ளுவர் கூறுகையில், ஒருவர் நேரில் இல்லாதபோது அவரைப்பற்றி புறங்கூறுவதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை சிந்திக்காமல் அவரைப் பற்றிப் பேசக்கூடாது என்று*

**'கண்நின்று கண் அறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்இன்று பின்நோக்காச் சொல்' (குறள் 184)**

*என்ற குறளின் மூலம் எடுத்துரைக்கின்றார்.*

## நான்காவது கோட்பாடு - சட்ட முறைப்படி ஆட்சி நடத்துதல்

*நான்காவது கோட்பாடு, முறையான சட்ட அமலாக்கத்தின் வழி மக்கள் சுபிட்சமான வாழ்க்கை வாழ முடியும் என்பதை வலியுறுத்துகிறது. அதே வேளை திருக்குறள், நியாயமான சட்ட அமலாக்கத்தின் வழி மக்கள் சுமூகமான, மகிழ்ச்சியான, பாதுகாப்பான வாழ்க்கை வாழ முடியுமு என்பதை எடுத்துணர்த்துகிறது.*

## பகுப்பாய்வு

*இந்நாட்டின் தேசியச் சட்டமானது, அரசியலமைப்புச் சார்ந்ததாகும். சட்டம் எனப்படுவது மதம், இனம், ஏழை, பணக்காரர் என்று பாகுபாடின்றி நடுநிலையாக நிற்பது மட்டுமின்றி அறத்தையும் கொண்டிருப்பதாக இருக்கவேண்டும். ஆட்சியாளர்களும் மக்கள் அனைவரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்* (Abdul Rahman Abdul Aziz, 2010:450).

வள்ளுவத்தின் பொருண்மை இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது. அதுபோன்றே, இக்கோட்பாடானதும் இனம், மொழிக்கு அப்பாற்பட்டு மனித வாழ்க்கை மேம்பட வழிவகுக்கிறது. இக்கோட்பாட்டில், நடுநிலைத் தன்மையையும், செங்கோன்மையும், இறைமாட்சியையும், முறையான, நியாயமான சட்ட அமலாக்கத்தைப் போற்றும் கருத்து திருக்குறளோடு ஒத்திருப்பதைக் கண்டறிய முடிகிறது.

மலேசிய நாட்டின் சட்டத் திட்டங்கள் யாவும் மக்கள் நலன் கருதியும் எந்தப் பக்கமும் சாயாமல், நடுவுநிலையோடு வரையறுக்கப்பட்டுள்ளன (Mohd Hamdan, 2015). இதனையே,

**'ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை (குறள் 541)**

என்ற குறள் வழி, ஒருவர் செய்தக் குற்றங்களை ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல், நடுவுநிலையோடு, குற்றத்திற்குத் தக்க தண்டனையை அறிந்து செய்வதே நீதியாகும் என்கிறார் வள்ளுவர். மேலும், மேற்கண்ட கருத்தை

**'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி (குறள் 118)**

எனும் இக்குறளும் வலியுறுத்துகிறது. நீதி வழங்கும் போது, துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது அரசுக்குச் சிறப்பு என்பதே இதன் பொருள். அதனைத் தொடர்ந்து, சட்டத்தை முறைப்படி பின்பற்றி, சொல்லப்பட்ட அறத்திலிருந்து விலகாமல், அறமற்ற கொடுமைகள் தன் நாட்டில் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதே ஒரு நாட்டிற்கும் அரசருக்கும் பெருமை (Abdul Rahman Abdul Aziz, 2010:456). இதே கருத்தை வலியுறுத்துகிறது கீண்கண்ட குறள்;

**'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மானம் உடைய தரசு (குறள் 384)**

ஆகவே, மலேசியத் தேசிய நான்காவது கோட்பாடான 'சட்ட முறைப்படி ஆட்சி நடத்துதலில்', திருக்குறளில் உள்ள செங்கோன்மை, இறைமாட்சி மற்றும் நடுவு நிலைமை போன்ற சட்ட அமலாக்கத்தைப் போற்றும் கருத்துகளின் பிரதிபலிப்பைப் காணமுடிகிறது.

**ஐந்தாவது கோட்பாடு - நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்**

மலேசியத் தேசிய ஐந்தாவது கோட்பாடு, நம்மைச் சமூக வாழ்வில் நிலைபெறச் செய்யும் நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் ஒட்டி இயற்றப்பட்டுள்ளது. இதே சிந்தனைத் திருக்குறளிலும் ஒழுக்கமுடைமை, அறன்வலியுறுதல், அடக்கமுடைமை, புறங்கூறாமை, பண்புடைமை, இன்னா செய்யாமை போன்ற அதிகாரங்களில் உள்ள குறள்களில் காணப்படுகிறது.

**பகுப்பாய்வு**

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டு மக்களின் ஒருவருக்கொருவர் இடையிலான உறவுச் சூழலில் நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல் அவசியமாகும் (Abdul Zaharuddin Sani, 2014:148) என்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. ஒழுக்கமே மானுடத்தின் விழுப்பமும் சிறப்பும் ஆகும். இக்கருத்தினையே திருவள்ளுவரும்,

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்' (குறள் 131)**

என்ற குறளின் வழி வலியுறுத்துகிறார். மேலும், இவ்வதிகாரத்திலுள்ள

**'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்: தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்' (குறள் 138)**

என்னும் குறள், நல்ல பழக்க வழக்கம் மேன்மையான வாழ்க்கைக்கு வித்திடும்; மாறாகத் தீய பழக்க வழக்கங்கள் வாழ்க்கையைச் சீர்குலைக்கச் செய்திடும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. அது போலவே, மலேசியத் தேசிய ஐந்தாவது கோட்பாடானது, நாட்டு மக்கள் நன்னெறிகளைப் பின்பற்றி, நன்னடத்தையுடன் வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றது (Tan Kien Kok, 2015:71). அதனையடுத்து,

**'அறத்தான் வருவதே இன்பம்:மற் றெல்லாம்**
**புறத்த; புகழும் இல' (குறள் 39)**

என்ற குறளின் வழி, அறநெறியில் வாழும் வாழ்க்கையே நிலையான இன்பத்தையும் புகழையும் தரவல்லது என்கிறார் திருவள்ளுவர். இதனையே இந்த ஐந்தாவது கோட்பாடும் வலியுறுத்துகிறது. இந்நாட்டு மக்கள் அனைவரும் நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் முறையாகப் பேணிப் பின்பற்றும் வகையிலேயே அவர்கள் அனைவரும் வெவ்வேறு கலைக் கலாச்சாரங்களைக் கொண்டிருப்பினும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒற்றுமையுடனும் சுபிட்சத்துடனும் பிணக்கம் இன்றி இணக்கமாக வாழ முடியும் (Raduan Tambi, 2013:15). இக்கோட்பாட்டில் காணப்படும் திருக்குறளில் இத்தகைய சிந்தனைகள், மலேசியர்கள் நலம் வாழ வழி வகுக்கும்.

## முடிவுரை

திருக்குறளில் கருத்துகள் மலேசியத் தேசியக் கோட்பாட்டுக் கருத்தோடு ஒத்திருப்பது இதுவரை விரிவாக விவாதிக்கப்பட்டு, இந்த ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளன. பல்லினங்களைக் கொண்டச் சமுதாயத்தில் மலேசியர்கள் வாழ்ந்தாலும் உண்மையாக, வலுவாக ஒன்றுபட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்க திருக்குறளின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் தேசியக் கோட்பாடு வழிகாட்டியாக இருக்கும். தொடர்ச்சியான மேம்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாம் நமது சமுதாயத்தை, அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் வழிநடத்திச் செல்ல மகத்தான திருக்குறளின் கருத்துகளும், நிதர்சனமான வாழ்வியல் சிந்தனைகளும் உறுதியாக துணை நிற்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ஆகவே, மலேசியர்கள், சமயம், பண்பாடு, நம்பிக்கை, வாழ்க்கை முறை என பல்வேறு கூறுகளால் வேறுபட்டுள்ள போதிலும் மலேசியத் தேசியக் கோட்பாட்டில் காணப்படும் திருக்குறளின் கருத்துகளைக் கண்டறிந்து, கடைப்பிடித்து, இக்கோட்பாட்டின் கட்டமைப்பில் ஒற்றுமையாகவும் சுபிட்சத்துடனும் வாழ வழி செய்வது சாலச் சிறந்தது.

## Bibliography

Abdul Rahman Abdul Aziz. (2010). Rukun Negara dalam Memperkukuhkan Ketahanan Negara. *Political Management and Policies in Malaysia: Seminar On National Resiliense*, 443-457.

Ahmad Zaharuddin Sani, A. (2014). *Kesopanan dan Kesusilaan: In RAKSA RAYA MALAYSIA*. (pg 148 ) Wangsa Maju, Kuala Lumpur: Istitut Terjemahan dan Buku Malaysia Berhad.

Falsafah Pendidikan Kebangsaan. (2012). In *Dasar Pendidikan Kebangsaan* (3rd ed). Putrajaya: Giga Wise Network Sdn Bhd.

Hamdan Mohd,Adnan Haji ( 2015), Peranan Media Massa memartabatkan Integriti national, (Vol 2 ) Universiti Malaysia Sabah : Jurnal Konunikasi Borneo.

Janakiraman Manikam. (2006). *Malçciya Intiyarka7iI IkkammâIa Nilai.* Kuala Lumpur: ashwin Trading.

Mokanarasu, K. (2005). (vol.1). *Tiruva77uvariI Camutâya CîrtiruttaEka7.* Chennai: Manivasagar publication.

Munisamy, V. (1992). *Tirukku_a7âr Te7ivurai.* Chennai; Thirukural Publication.

Nazaruddin Hj. Mohd Jali (et al.).(2003). Pengajian Malaysia: Kenegaraan dan Kewarganegaraan (Edisi Kedua). Petaling Jaya: Prentice Hall.

Raduan Tambi (2013), Matlamat dan Objektif Pembentukan Rukun Negara, In *Rukun Negara*. Bahagian Penerbitan Dasar Negara.

Reid Constitutional Commission. (2015). Retrieved on 30th October, 2015, from www.arkib.gov.my.

Rohaizahtulamni Radzlan., Sarjit. S. Gill., & Ahmad Tarmizi Talib. (2013). Pemahamandan Penghayatan Rukun Negara Dalam Kalangan Belia Bandar Di Semenanjung Malaysia. *Malaysian Journal of Youth Studies, Volume 9*; Institut Penyelidikan Pembangunan Belia Malaysia (IYRES).

Saat Din. (1972). *RukkuI Nekârâ: Mu;u Vi7akkam.* Kuala Lumpur: Kementerian Penerangan Malaysia.

Shamsul Kamarudin. (2011). Kepentingan Pendekatan Kepercayaan Dan Keyakinan Kepada Tuhan Melalui PTV. *Journal of Edupres, Volume I;* Retrieved October 30, 2015, from http://eprints.utm.my/17071/1/JOE-1-2011-031.pdf.

Tan Kien Kok, (2005) *Isu Penyatuan Bangsa Malaysia Pada Tahun 1920-an Hinga 1980 Dengan Pandangan-Pandangan Masa Kini*, Kertas Projek Bagi Ijazah Sarjana Muda Sains Pembangunan, UKM, Bangi.

Yahaya, H. (1978). Malaysia: Nilai Politik dan Budaya. Kuala Lumpur: Dinamika Kreatif.

Yok Fee Lee & S. Gill Sarjit ( 2008) Rukun Negara Teras Pembinaan Modal Insan : Satu Komentar.Pertanika J. Soc.Sci.4 Hum 16(1): 107-113(2008), Universiti Putra Malaysia.

# மலேசிய நாவல் ஆளப்பிறந்த மருதுமைந்தன் - தனித்தன்மைகள்

டாக்டர் வே.சபாபதி / Associate Professor Dr.V.Sabapathi[1]

**Abstract**

The historical novel Marudu Son: Born to Rule is based later 18th century Tamil Nadu and earlier 19th century Malaysia. The novelist tries to set right the incorrect details recorded about the last heir of the Sivagangai regime of 18th century with right proof. The historians, novelists and the cine field of Tamil Nadu have recorded that the last heir of Sivagangai regime Duraisamy was hanged with Marudu brothers by the British government. This has been disproved by the novelist with facts and details. This novel was exiled to Penang,Indonesia and Pengaloor, then returned to Tamil Nadu after twenty years and died there. This Article with the help of truth substantiates the fact about Prince Duraisamy.

*Key Words: Sivaganga Regime, Penang, Pengaloor, Queen Velunachiyar, Periya Marudu, Chinna Marudu, PrinceDuraisamy, Major James Welsh, Collector Jackson, Lord Lushington, Major Banermen, French general Dupe Re, Veerapandia Kattabomman, King Mutthu Vaduga Nathan, Umai Durai, Hyder Ali, Thippu Sultan, Theeran Chinnamalai, Arcot Nawab, Marudu Nayagam, PooleThevan.*

## முன்னுரை

ஆளப்பிறந்த மருதுமைந்தன் நாவலை எழுதியவர் மலேசியாவின் பன்முகத்தன்மை கொண்ட எழுத்தாளர் அமரர் ப.சந்திரகாந்தம் ஆவார். இந்நூல் ஒரு வரலாற்று நாவல் ஆகும். 712 பக்கங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்நாவல் 102 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இது 2002-இல் தமிழ் நேசன் நாளிதழில் தொடராக வெளிவந்து, வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றது. தமிழக, மலேசிய வரலாற்றுப் பின்புலத்தை மையமாகக் கொண்ட படைக்கப்பட்டுள்ள இந்நாவல், மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் மத்தியிலும் இலக்கிய ஆர்வலர்களின் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியிலும் தென்னிந்தியாவிலும் குறிப்பாக, தமிழகத்திலும் அன்றைய மலாயாவிலும் நடந்தேறிய பல்வேறு வரலாற்று நிகழ்வுகளையும் அந்நிகழ்வுகளில் பங்குகொண்ட உண்மை மாந்தர்களையும் மையமாகக்கொண்டு இந்நாவல் புனையப்பட்டுள்ளது.

## சமூக நாவலும் வரலாற்று நாவலும்

பொதுவாக நாவல்களைப் பாகுபடுத்தும்போது அவற்றைச் சமூக நாவல்கள் என்றும், வரலாற்று நாவல்கள் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பது வழக்கமாய் உள்ளது.

---

[1]The author is a Associate Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. sabavenu@um.edu.my

சமூக நாவல் என்பது நிகழ்காலத்தில் அல்லது படைப்பாளன் தான் வாழ்ந்த காலப்பின்னணியின் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் காணப்படும் சூழல்களாலும் நெருக்கடிகளாலும் தான் சார்ந்த சமுதாயம் அல்லது தனிமனிதர் எதிர்நோக்கும் சிக்கல்களை அடையாளங்கண்டு அவற்றை மையமாகக் கொண்டு, கதைவழி வெளிப்படுத்திக் காட்டுதல் ஆகும். (இராசகோபாலன்.தி. ப.25) வரலாற்று நாவல் என்பது வரலாற்றுக் காலத்தைப் பின்புலமாகக் கொண்டு உண்மையில் வாழ்ந்து மறைந்த மாந்தர்களைக் கதையின் பாத்திரங்களாக்கி, அவ்வரலாற்றுக்குரிய காலத்தில் உண்மையில் நிலவிய சூழல்களையும் சிக்கல்களையும் கதைவழி கொண்டு வந்து, அவ்வுண்மை மாந்தர்களை அக்கதையோடு பொருத்தி வெளிப்படுத்திக் காட்டுதல் ஆகும்; அதாவது கடந்த காலத்து வரலாற்றில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு வரலாற்று மாந்தர்கள் ஒரு சிலரை நாவலின் கதை மாந்தர்களாக்கி, அக்காலப்பகுதியின் சூழல், கலை, மொழி, பழக்கவழக்கங்கள், பண்பாட்டு நிலைகள், உணவுமுறை, உறைவிடம், கருவிப்பொருள்கள் போன்றவற்றை அப்படியே வெளிப்படுத்திக் காட்டும் முறையில் எழுதப்பெறுவதே வரலாற்று நாவல் ஆகும். (இராசகோபாலன்.தி. ப.25).

கடந்த காலம் அல்லது மாறாக என்பதற்கான வரையறையையும் ஆய்வாளர்கள் வகுத்துள்ளனர். ஏறத்தாழ இரண்டு தலைமுறைகளுக்கு முற்பட்ட காலத்தைப்பற்றிய கதையையுடைய படைப்புகளே வரலாற்றுப் படைப்புகள் என்கின்றனர் வரலாற்றாசிரியர்கள். அதாவது ஒரு தலைமுறை இருபது முதல் முப்பது ஆண்டுகாலம் எனக் கணக்கிடப்பட்டுகின்றது. (இராசகோபாலன்.தி. ப.ப.27–28) அவ்வகையில் நாற்பது முதல் அறுபது ஆண்டுகாலமே இரண்டு தலைமுறைக் காலம் ஆகும். அக்காலப்பகுதியியே வரலாற்றுப் படைப்புகளின் காலமாகக் கொள்ளப்படுகின்றது.

சமூக நாவல் எழுதுவதைக் காட்டிலும் வரலாற்று நாவல் எழுதுவது கடினப் பயிற்சியும் முயற்சியும் ஆகும் என வருணிக்கப்படுகின்றது. ஏனெனில், சமூக நாவலாசிரியரின் கற்பனை என்கிற ஒரு குதிரையில் மட்டும் சவாரி செய்பவன் ஆவான். ஆனால் வரலாற்று நாவலாசிரியினோ வரலாறு, கற்பனை ஆகிய இரு குதிரைகளின் மீது தன் இரு கால்களையும் ஊன்றி நின்று, சவாசி செய்யும் ஒரு வீரனைப் போன்றவன் ஆவான். சற்றுக் கவனக்குறைவாக இருந்தால் ஏதேனும் ஒரு குதிரை முன்னேறிச் சென்றோ அல்லது பின்வாங்கிச் சென்றோ அவ்வீரனை வீழ்த்தி விடலாம். எனவே, வரலாறு, கற்பனை ஆகிய இரண்டும் சமநிலையில் இருப்பதனைப் படைப்பாளன் உறுதிசெய்து கொள்ள வேண்டும். (பூவண்ணன்., ப.10) அதனாற்றான் வரலாற்று நாவல் எழுதுவது சிரமம் என்றும் அஃது எல்லாராலும் எழுதிவிட முடியாது என்றும் சொல்லப்படுகின்றது. இலக்கியத்துறை, வரலாற்றுத்துறை ஆகிய இரு துரைகளிலும் முழுமையான, உண்மையான ஈடுபாடும் ஆர்வமும் அக்கறையும் பயிற்சியும் முயற்சியும் உடையோரால் மட்டுமே வரலாற்று நாவல் எழுதுவதில் வெற்றிபெற முடியும். அத்தகைய ஆற்றல் பெற்ற ஒருவராகவே இந்நாவலின் ஆசிரியர ப.சந்திரகாந்தம் காணப்படுகின்றார். அதன் விளைவாக இந்நூல் நல்லதொரு வரலாற்று நாவலாக உருப்பெற்றுள்ளது எனில் மிகையில்லை.

## நாவலின் கதையும் கதையமைப்பும்

இந்நாவலின் தலைப்பு தன்முனைப்பையும் ஆக்கச்சிந்தனையையும் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. கதை யாரை மையமாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது என்பதை நாவலின் தலைப்பைப் பார்த்த மாத்திரத்திலேயே உணர முடிகின்றது. கி.பி. பதினெட்டாம்

நூற்றாண்டில் தமிழகத்தில் சிவகங்கை சமஸ்தானத்தை ஆண்ட மருது சகோதரர்கள் உண்மை வரலாறே இந்நாவலுக்குரிய கதையாக எடுத்தாளப்பட்டுள்ளது. அக்காலப் பகுதியில் ஐரோப்பிய ஆதிக்கச் சக்திகள் கீழைத்தேச நாடுகளில் குறிப்பாக தென்னிந்தியாவில் தங்களின் ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் பரப்புவதற்கு முயன்றனர். அக்காலப்பகுதியில் இந்நாவலின் கதை நடப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, ஆங்கிலேயர் இந்திய நாட்டின் தென்பகுதியில் குறிப்பாகத் தமிழகத்தில் தங்களின் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் பரப்புவதற்கு மேற்கொண்ட காலப்பகுதி அது. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழக வரலாறு பலராலும் நன்கறியப்பட்ட ஒன்றாக உள்ளது. எனவே, வரலாறு நன்கு அறியப்பட்ட ஒரு காலப்பகுதியில் உண்மையில் வாழ்ந்த தமிகழத் தலைவர்களையும் அவர்கள் எதிர்நோக்கிய சிக்கல்களையும் இந்நாவலின் கதை பேசுகின்றது. இந்நாவலாசிரியர் தாம் விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட காலப்பகுதியின் வரலாற்றை இந்திய நாட்டின் வரலாற்றாசிரியர்களும் மேனாட்டு வரலாற்றாசிரியர்களும் முழுமையாகவும் முறையாகவும் தெளிவாகவும் பதிவு செய்துள்ளதால், இந்நாவலாசிரியர் மிகுந்த கவனத்தோடு அவ்வரலாற்றுச் செய்திகளைச் சரியாகவும் முறையாகவும் பிழையின்றியும் முரணின்றியும் துல்லிதமாக இந்நாவலின் கதையமைப்புக்குப் பொருத்தமாகப் பயன்படுத்தியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இது வரலாற்றில் பிழையோ முரணோ ஏற்படலாகாது என்ற கதாசிரியரின் பொறுப்பைக் காட்டுவதாக உள்ளது.

பொதுவாக, மருது எனும் பெயர் சிவகங்கையை ஆண்ட மருது சகோதரர்களாகிய பெரிய மருது, சின்ன மருது ஆகிய இரு சகோதரர்களையே சிறப்பாகக் குறிக்கும். ஆனால், நாவலின் தலைப்பில் மருது மைந்தன் எனும் பெயர் மருது சகோதரர்களுள் இளையவரான சின்ன மருதுவின் ஒரே மகனான இளவரசன் துரைசாமியைக் குறிக்கின்றது. இந்நாவலின் கதைத் தொடக்கத்தில் இளவரசனான துரைசாமியி வயது பதினைந்து. நாவலின் இறுதியில் கதை முடிகின்றபோது அவனுடைய வயது முப்பத்தைந்தாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே, நாவலின் மையக்கதை இளவரசன் துரைசாமியைப் பற்றியதாக இருக்கும் என்று பார்த்தால் அதுதான் கிடையாது. எனவே, நாவலின் தலைப்பு இளவரசன் துரைசாமியைச் சுட்டுவதாக இருந்தாலும் நாவலின் மையக்கதை முழுக்க முழுக்க அவனுடையதாக இருல்லை. மாறாக, இளவரசன் துரைசாமியின் பெரிய தந்தை, சொந்தத் தந்தை ஆகிய இருவரைப்பற்றியே கதை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்நாவலின் பெரும்பகுதிக் கதையில் இளவரசன் துரைசாமி சிறுவனாகவும் வயதில் மிகக் குறைந்தவனாகவும் காட்டப்பட்டுள்ளான். எனவே, நாவலின் பெரும்பகுதிக் கதையில் அவன் முக்கிய மாந்தராக காட்டப்படவில்லை. மாறாக, அவனைக் குழந்தைத்தனமும் விளையாட்டுப்போக்கும் மிகுதியும் கொண்ட ஒரு சிறுவனாகவே காட்டப்பட்டுள்ளான். நாவலின் இறுதிப்பகுதியில்தான் அவனிடம் வயதுக்கு மீறிய முதிர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் கொண்டு விளங்குவதாக கதை காட்டுகின்றது.

பொதுவாக, வரலாற்று நாவலின் கதையானது உண்மையில் நடந்தேறிய வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். சிறப்பாக அரசியல் நெருக்கடி, போர், பொருளாதார, சமுதாய மாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். மேற்குறித்தவற்றுள் முழுமையாகக் கலந்து கொள்வதற்குரிய பக்குவமும் முதிர்ச்சியும் பதினைந்து வயதுள்ள இளவரசன் துரைசாமிக்குக் கிடையாது என்பதால் அவற்றுக்கான முழு தகுதிப்பாடுகளும் கொண்டிருந்த அவனுடைய தந்தையர்களாகன பெரிய மருது, சின்ன மருது ஆகிய இருவரும் இந்நாவலின் கதையில் முக்கிய மாந்தர்களாகக்

காட்டப்பட்டுள்ளனர். எனவே, அவர்களிருவரை மையமாகக் கொண்டே நாவலின் வீரசாகச நிகழ்ச்சிகள், தியாகச் செயல்கள், போராட்டங்கள் போன்றவை விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நாவலின் அடிப்படைக்கதை பெரிய மருது, சின்ன மருது ஆகிய இருவரைப் பற்றியது என்பதால், அதற்கேற்ப அவர்களிருவரைப் பற்றியே நாவல் அதிகமாகக் காட்டிச் சென்றுள்ளது.

பிறகு, எந்நோக்கத்திற்காக இளவரசன் துரைசாமியைச் சுட்டும் வண்ணம் இந்நாவலுக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது? நாவலாசிரியரின் நோக்கள் இந்நாவலின் மூலம் அன்றைய தமிழகத்தை மட்டும் காட்டுவது அன்று மாறாக, கீழைத்தேசங்களுக்கு ஐரோப்பியர்களின் வருகைக்குப்பின் குறிப்பாக, தமிழகத்திற்கும் மலாயாவிற்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பைக் காட்டுவதற்காகவும் ஆகும். பூந்தமிழகத்திற்கும் மலாயாவிற்கும் உள்ள தொடர்புகள் மிகத் தொன்மையானவை. ஐரோப்பியர்கள் கீழைத்தேச நாடுகளுக்கு வருவதற்கு முன்னரே இவ்விரு நாடுகளுக்கும் இடையில் தொடர்புகள் காணப்பட்டுள்ளதனை வரலாற்றாசிரியர்கள் நிறுவியுள்ளனர். இத்தொடர்புகள் மிக உயர்ந்த நிலையில் ஏற்பட்டுள்ளதற்கான சான்றுகளையும் காட்டி உறுதி செய்துள்ளனர். ஆனால், ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர், இவ்விரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பு இரண்டாம் கட்டத்தொடராக வருணிக்கப்படுகின்றது. இந்த இரண்டாம் காலகட்டத் தொடர்பானது முதல் காலக்கட்டத்தைப் போல மிக உயர்ந்த நிலையிலோ அல்லது சமநிலையிலோ ஏற்படவில்லை. இவ்விரு நாடுகளுக்குமான இரண்டாம் காலகட்டத் தொடர்பானது சக்தி வாய்ந்த ஒரு நாட்டிடம் அடிமைப்பட்டிருந்த இரண்டு நாடுகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு அரசியல் கைதிகளையும் குற்றவாளிகளையும் உடலுழைப்புத் தொழிலாளர்கயைும் கொண்டு வரப்பட்டதிலிருந்து தொடங்குகின்றது. இந்த இரண்டாம் காலகட்டத்தின் தொடக்கத்தில்தான் சிவகங்கையின் இளவரசன்ச துரைசாமியும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் பிரிட்டிஷாரால் தீவாந்தரத் தண்டனை அளிக்கப்பட்டு, மலாயாவின் பினாங்குத் தீவிற்கு **1802**-இல் கொண்டு வரப்பட்டனர். இந்த இரண்டாம் காலகட்டத் தொடர்பிற்குப்பின் வந்த தமிழர்களின் சந்ததியினரால்தான் இன்று மலேசியாவில் தமிழ் மக்கள் இங்குக் காணப்படுகின்றனர். எனவே, இத்தொடர்பை நினைவுபடுத்தும் நோக்கத்தில்தான் இளவரசன் துரைசாமியைச் சுட்டுகின்ற தலைப்பு இந்நாவலுக்கு வைக்கப்பட்டுள்ளது. தவிர, இந்திய வரலாற்றாசிரியர்களுள் சிலர் பிரிட்டிஷாரால் பெரிய மருதுவும், சின்ன மருதுவும் **1801**-இல் தூக்கிலிடப்பட்டபோது இளவரசன் துரைராஜும் சேர்ந்து தூக்கிலிடப்பட்டான் என்று குறிப்பிட்டுள்ளனர். வேறு சிலர் அவன் பினாங்கிற்குக் கடத்தப்பட்டு, பின் அங்கேயே மடிந்தும் போனான் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவை யாவும் உண்மையல்ல என்பதை நிறுவுவதற்காகவும் அவன் தூக்கிலிடப்படாமல் பினாங்குத் தீவிற்கு நாடு கடப்பட்டான் என்றும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழகம் திரும்பினான் என்றும் உண்மை வரலாற்றைச் சுட்டுவதற்காகவுமே அவனைச் சுட்டுகின்ற தலைப்பு இந்நாவலுக்கு இடப்பட்டுள்ளது. இளவரசன் துரைசாமி பினாங்கிற்குக் கொண்டவரப்பட்ட செய்தியை மலேசிய வரலாற்றாசிரியர் கே.எஸ்.சந்து (Kernial Singh Sandhu) அவர்கள் வரலாற்றுக் கட்டுரை ஒன்றில் (Tamil and other Indian in the Straits Settlement 1790 - 1873) தக்கச் சான்றுகளோடு உறுதிப்படுத்தியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரை முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் கட்டுரைத் தொகுப்பில் (Proceeding) இடம் பெற்றுள்ளது.

## நாவலின் கதைக்களம்

நாவலின் கதை நிகழுகின்ற களம் சேதுபதி பூமியாகிய சிவகங்கைச் சீமையாகும். சிவகங்கையை ஆண்டவர்கள் பலர் இருப்பினும் சிவகங்கை என்றதுமே உடனடியாக நினைவலைகளில் வந்து போகிறவர்கள் காளையார் கோயில் வரலாற்றிலும் சிவகங்கை சமஸ்தானத்து வரலாற்றிலும் நீங்கா இடம்பிடித்துள்ள மருது சகோதரர்கள் ஆவர். வெள்ளையரிடம் நீண்டதொரு போராட்டத்தை மேற்கொண்டு, எட்டு ஆண்டுகளுக்குப்பின் சிவகங்கையை மீட்டு ஆட்சியில் அமர்ந்து நல்லாட்சி தந்தவர் ராணி வேலுநாச்சியார். ராணி வேலுநாச்சியாருக்கு நல்ல பெயரும் புகழும் இருந்தாலும், சிவகங்கையின் மக்களின் மனங்கவர்ந்த ஒப்பற்றத் தலைவர்களாக இருந்து மருது சகோதரர்களே இருந்துள்ளனர். தவிர, ராணி வேலுநாச்சியார் மீண்டும் சிவகங்கையின் அரியணையைப் பெறுவதற்குப் பெரிதும் போராடியவர்களும் உதவியர்களும் இந்த மருது சகோதரர்களே ஆவர். ராணி வேலுநாச்சியாருக்குச் சிறந்த ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்து சிவகங்கையைக் கட்டிக் காத்தவர்கள் இந்த மருது சகோதரர்களே ஆவர். அதனால்தான் கணவனை இழந்தபின் சிவகங்கையில் நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் ராணி வேலுநாச்சியார் நாட்டின் தளபதியாக இருந்து மருது சகோதரர்களுள் பெரிய மருதுவை இரண்டாவதாக மணந்து கொண்டார். அந்நியரிடமிருந்தும் உள்ளேயே இருந்து எதிரிகளிடமிருந்தும் சிவகங்கையைக் காப்பாற்ற, பெரிய மருதுவுக்கு மன்னர் தகுதியை அளித்து, அவரைச் சிவகங்கையின் அரியணையில் அமர்த்தி மன்னராக்கினார்.

இவற்றுக்கான காரணங்ரகள் யாவை என்பவற்றையும் நாவலாசிரியர் உண்மை வரலாறு பிசகாத வகையில் நாவலின் கதைச்சம்பவங்களின் வழி காட்டிச் சென்றுள்ளார். ராணி வேலுநாச்சியாருக்கு வெள்ளச்சி நாச்சியார் என்ற ஒரு பெண்வாசிசைத் தவிர வேறு ஆண்வாரிசு யாருமே இல்லாததாலும் அதனால் சிவகங்கையின் அரசபம்பரைக்குள்ளேயே அரியணை வாரிசுக்கான உரிமைப்போராட்டம் ஏற்பட்டிருந்ததாலும் அவர்களிடமிருந்து சிவகங்கையைக் காப்பாற்ற நினைத்ததாலும் ஆண்வாரிசற்ற சிவகங்கை சமஸ்தானத்தைப் பிரிட்டிஷார் பறிக்க, சரியான தருணத்திற்காகக் காத்திருந்ததாலும் ராணியார் மருது சகோதரர்களின் வீரதீரத்தையும் பராக்கிரமத்தையும் மக்களைக் கண்ணிமைபோல் காத்து நிற்கும் பண்பினையும் சீர்தூக்கிப் பார்த்து, ஏற்கனே மணமான பெரிய மருதுவைத் தியாகச் சிந்தனையோடு மணந்துகொண்ட வரலாற்று உண்மைச் செய்திகளை இந்நாவலின் கதைச்சம்பவங்களின் வழி சரியாகக் காட்டிப்போகின்றார் நாவலாசிரியர். இவற்றுள் பல்வேறு வரலாற்றுச் செய்திகள் தமிழ் மக்களுள் பலர் அறியாத, மனத்தை நெகிழவைக்கும் தமிழின வரலாற்றின் உண்மைகளாகும். இவற்றுக்கான சரியான ஆதாரங்களையும் நாவலாசிரியர் கதையில் காட்டிப் போகின்றார். எனவேதான், ஆளப்பிறந்த மருதுமைந்தன் என்று மருது சகோதரர்களின் இறுதி ஆண்வாரிசான துரைசாமியின் பெயரை நாவலின் தலைப்பு சுட்டினாலும் சிவகங்கையின் முக்கிய ஆட்சியாளர்களான மருது சகோதரர்களின் அரசியல் போராட்ட வாழ்வையே இந்நாவல் முழுக்கக் காணமுடிகின்றது. மருது சகோதரர்களின் பரம்பரையில் அவன் ஒருவனே ஆங்கிலேயரின் தண்டனைக்குத் தப்பி வாழ்ந்தான் என்பதற்காகவம் மருது சகோதரர்களின் பரம்பரையில் இறுதியாக உயிர்விட்டவன் அவனே என்பதற்காகவும் அவனுடைய பெயர் நாவலுக்குச் சூட்டப்பட்டுள்ளது.

மருது சகோதரர்களின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் நிம்மதியாக ஆட்சிசெய்ய முடியாதபடி உள்ளிருந்தே சொந்த இனத்தவர்கள் குறிப்பாக, படமாத்தூர் கௌரி வல்லப உடையணத் தேவரும் வெளிச்சக்தியாகப் பிரிட்டிஷாரும் கொடுத்த தொல்லைகள் ஏராளம்.

*அவை, நாவல் முழுக்க கதை நிகழ்ச்சிகளின் வழி காட்டப்பட்டுள்ளன. ஆங்கிலேயரிடம் நம்மவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக நம் ஆட்சியாளர்களிடம் காணப்பட்ட உட்பூசல்களும் ஒற்றுமையற்ற போக்குமே என்பதனைக் கதைச்சம்பவங்களின் வழி காட்டிச் சென்றுள்ளார் நாவலாசிரியர். பிரிட்டிஷாரிடம் சிவகங்கை கி.பி.1801-இல் வீழ்ச்சி கண்டபிறகு மருது சகோதரரும் தூக்கில் ஏற்றப்பட்ட பிறகு, மருது சகோதர்ரர்களின் ஒற்றை வாரிசான இளவரசன் துரைசாமியை அவனுடைய பதினைந்தாம் அகவையில் பிரின்ஸ் ஆப் வேல்ஸ்* (Prince of Wales) *என்று அழைக்கப்பட்ட பினாங்குத் தீவுக்கு 1802-இல் ஆங்கிலேயர் நாடு கடத்தினர். இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் 1820-இல் தம் தாயகத்திற்குத் திரும்பிய சில நாள்களிலேயே நோயின் காரணமாக அவன் மரணத்தைத் தழுவுகிறான் என்ற உண்மையின் அடிப்படையில் கதை அமைக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள இந்நாவலின் கதையில் நாவலாசிரியர் உண்மைகளைச் சரியாகவும் அதே வேளையில் பிழையாகச் சொல்லப்பட்டதைச் சரியான சான்றுகளுடன் திருத்தியும் சொல்லியுள்ளார். இதற்குரிய சரியான சான்றுகளை மேனாட்டிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் அன்றையப் பிரிட்டிஷ் மலாயாவிலிருந்தும் சரியான ஆவணங்களைப் பெற்றுப் பயன்படுத்தியதாக நாவலாசிரியர் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டிஷார் தென்னாட்டில் தங்களுக்குப் பெரும் சவாலாகவும் மிரட்டலாகவுமு இருந்த ஆட்சியாளர்களை அடியோடு களையெடுத்தனர். அவர்களுள் மிக முக்கியமானதவர்கள் நால்வர். மைசூர் சீரங்கப்பட்டணத்தில் திப்பு சுல்தான், திருநெல்வேலி, பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன், சிவகங்கையில் பெரிய மருது, சின்ன மருது ஆகியோரே அந்நாவல்வர் ஆவர். பிரிட்டிஷார் இவர்களை நரித்தனமாக வென்று அவர்களின் சமஸ்தானங்களைக் கைப்பற்றியதுடன் உடனடியாகச் சில கொடூர நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். அவர்களின் பரம்பரையும் நாடும் அடியோடு அழிக்கப்பட வேண்டும் எனும் கொடுநோக்கத்தில் அவர்களின் ஆண் வாரிசுகளைச் சுட்டும் தூக்கிலிட்டும் கொன்றனர். அரசக்குடும்பத்துப் பெண்களைச் சிறையிலிட்டனர். அவர்களின் கோட்டைச் கொத்தளங்கள் தரைமட்டமாக்கப்பட்டு, அவை உழுதும் பின் அங்கு உப்பு தூவப்பட்டு, ஆமணக்கும் விதைக்கப்பட்டன. அவர்களின் பாதுகாப்புப் படைகள் கலைக்கப்பட்டன அல்லது கொல்லப்பட்டன. இதனாற்றான் வரலாற்றாசிரியர்களுள் சிலர் பதினைந்து வயது துரைசாமியும் குடும்பத்தோடு சேர்த்தே கொல்லப்பட்டான் என்று தாங்கள் எழுதிய வரலாற்று நூல்களின் குறிப்பிட்டுள்ளனர். பிரிட்டிஷார் பல சமஸ்தானங்களின் ஆண்வாரிசுகளைக் கொன்றொழித்தது உண்மையே. எனினும், சின்ன மருதுவின் ஒரே மகனான இளவரசன் துரைசாமியை மட்டும் கொல்லவில்லை என்ற உண்மைக்கான ஆதாரத்தை நாவலாசிரியர் தொடக்ககால பினாங்கு வரலாற்றைப் பிரிட்டிஷாரின் ஆவணங்களிலிருந்தும் பிறவற்றிலிருந்தும் ஆய்வு செய்து எழுதியுள்ள கே.எஸ்.சந்துவின்* (Karnial Singh Sandhu) *மேற்குறித்த கட்டுரையிலிருந்து இவ்வுண்மையினைக் கண்டறிந்துள்ளளார். (நேர்காணல் குறிப்பு) இளவரசன் துரைசாமி பிரிட்டிஷாரால் பினாங்கு கொண்ட வரப்பட்டதற்கும் பின் இங்கிருந்து அவன் சென்றதற்குமான ஆவணங்கள் பிரிட்டிஷாரிடம் உள்ளது. எனவே, அவன் மட்டும் உயிரோடு விடப்பட்டு, பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டான் எனும் பேருண்மையை விளக்கிக் காட்டவே நாவலுக்கு அவனை மையமாக் கொண்ட பெயரையும் சூட்டியுள்ளார் நாவலாசிரியர்.*

*இளவரசன் துரைசாமி மட்டும் எப்படி உயிரோடு விடப்பட்டான் என்பதற்கும் தக்கச் சான்றுகளை நாவலின் கதைப்போக்கில் காட்டிச் சென்றுள்ளார் நாவலாசிரியர். மருது சகோதரர்களின் நற்குணங்களுமு நல்வினைகளுமே இதற்குக் காரணம் என்கிறார். மருது*

சகோதரர்களுள் சின்ன மருது வெள்ளையரான மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ் அவர்களுடன் நெருங்கிய நட்பும் தொடர்பும் கொண்டிருந்தார். தவிர, சின்ன மருது பல மொழிகள் தெரிந்தவராகவும் இருந்தார். உறுதுமொழி தெரிந்திந்ததால் மைசூரின் திப்பு சுல்தானோடும் ஆங்கில மொழி அறிந்திருந்ததால் தென்னாட்டில் கிழக்கிந்தியக் கம்பெனியில் (EIC) பணியிலிருந்த மேஜர் வெல்ஷ் துரை அவர்களோடும் நல்ல தொடர்பும் நட்பும் கொண்டிருந்தார். இந்த நட்புறவே இளவரசன் துரைசாமியின் உயிரைக் காப்பாற்றி, நாடு கடத்தப்படும் தண்டனையாகக் குறைப்பதற்குக் காரணமாயிற்று. மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் இளவரசனுக்காகப் பரிந்து பேசி அவன் உயிரைக் காப்பாற்றிய வரலாற்று உண்மை நாவலின் காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று ராணி வேலுநாச்சியாரின் மகளின் கணவன் வெங்கண் பெரிய உடையணனும் போர்னியோவிற்கு நாடு கடத்தப்பட்ட உண்மைச் செய்தியையும் நாவலில் புதியதாக வெளிப்படுத்தியுள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இதற்குமுன் இவ்வரலாற்றுச் செய்தி எந்த வரலாற்று ஆசிரியராலும் குறிப்பிடப்படவில்லை என்கிறார் நாவலாசிரியர். (நேர்காணல் குறிப்பு) எனவே, நாவலாசிரியர் நாவலின் கதையின் மையமாக அல்ல மையப்புள்ளியாக சிவகங்கையின் வரலாற்றையும் அதில் மருது சகோதரர்களின் வீரதீரப் போராட்டங்களையும் எடுத்துக்கொண்டு அவற்றிற்குத் தொடர்புடைய தென்னாட்டின் பிற சமஸ்தானங்கள் / பாளையங்கள், அவற்றின் ஆட்சியாளர்கள் எனப் பல்வேறு தொடர்புடைய சரியான வரலாற்றுச் செய்திகளை நாவல் முழுவதும் கொடுத்துக்கொண்டே போகின்றார். நாவலின் நாவலாசிரியர் தந்துள்ள வரலாற்றுச் செய்திகள் ஏராளம். இவ்வளவு வரலாற்றுச் செய்திகளையும் மையக்கதையோடு மிகப்பொருத்தமாக இணைத்துக் கொண்டுள்ளார். அவை எதுவும் மையக் கதைக்குத் தொடர்பற்றோ பொருத்தமற்றோ அல்லது வலிந்து சேர்க்கப்பட்டதாகவோ காணப்படாமல் கதைக்குப் பொருத்தமாக உள்ளன. இது நாவலின் கதையமைப்பிற்கு சரியான இறுக்கத்தன்மையையும் செறிவையும் தந்து நாவலின் கதைப்பின்னலைச் சிறக்கச் செய்துள்ளன. எனவே, இந்நாவல் மருது சகோதரர்களின் அரசியல் வாழ்வு பற்றிய கதையாக இருந்தாலும், அக்காலகட்டத்தினுடைய தென்னாட்டின் அரசியல், சமூக வரலாறுகள் கதையோடு இணைக்கப்பட்டுச் சுவை குன்றாமல் சொல்லப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின் இவ்வரலாற்று நாவல் தென்னாட்டின் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் வரலாற்றுக் களஞ்சியமாக அமைந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நாவல் இலக்கியத்தில் விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட மையக்கதையை மட்டும்தான் அல்லது செய்திகளை மட்டும்தான் காட்டிச்செல்ல வேண்டும் என்கிற கட்டாயமில்லை. விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட மையக்கதையை விட்டு விலகி, கதாசிரியர் தாம் விரும்புகின்ற செய்திகளையும் கதைக்கு அவ்வளவாகத் தொடர்பில்லாத பிறவற்றையும் விளக்கிச் செல்வதற்கு நாவல் இலக்கியத்தில் இடம் உண்டு. நாவல் இலக்கியம் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கின்றது. இதனை நாவல் இலக்கியத்தில் விலக, வளர்த்தல் பண்புகள் என்பர். இந்நாவலின் ஆசிரியர் பண்பட்ட ஓர் எழுத்தாளராதலாலும் ஏற்கெனவே பல நாவல்களை எழுதியுள்ள அனுபவத்தாலும் இவர் நாவல் இலக்கியத்தின் போக்குகளை முழுமையாக உணர்ந்துள்ளார் எனலாம். இதனால் நாவலின் மையக்கதையான மருது சகோதரர்களின் வரலாற்றை மட்டும் நாவலின் காட்டிச் செல்லாமல் அதிலிருந்து விலகி, தென்னாட்டில் அப்போதிருந்த மைசூர் சீரங்கப்பட்டணத்து திப்பு சுல்தானனைப்பற்றியும் பாஞ்சை கட்டபொம்மனின் வீரவரலாற்றையும் ராமநாதபுரத்தின் வரலாற்றையும் மையக்கதையோடு கொண்டுவந்து பொருத்தமாக இணைத்து வளர்த்துச் சென்றுள்ளார். இவ்வாறு எந்தக் கதையையும் தனித்து

விட்டுவிடாமல் மையக்கதையான மருது சகோதரர்களின் கதையோடு பொருத்தமாக இணைத்துக் கொண்டுள்ளார். இதனால் நாவலின் கதைப்பின்னல் செறிவாக உள்ளது. எனவே, இந்நாவலில் விலகல், வளர்த்தல் பண்புகள் நாவலாசிரியரின் நோக்கத்திற்குச் சிறப்பாகக் கைகொடுத்துள்ளது எனலாம்.

இவ்வாறு நாவலின் கதையமைப்பில் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை நாவலாசிரியர் காட்டிச் செல்வதன் நோக்கம என்ன என்று பார்க்கும்போது தென்னாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் எவ்வாறு தங்களின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் அநீதியான வழிகளில் பரப்பினர் என்ற அவர்களின் அநியாய வரலாற்றையும் அவற்றைத் தடுத்து, தங்களின் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்கு தென்னாட்டுச் சமஸ்தானங்கள் மேற்கொண்ட வீரப்போராட்டங்களையும் உள்ளபடியே விளக்கிக் காட்டுவதுதான் முக்கிய நோக்கமாக அவருக்கு இருந்துள்ளது. நாவலாசிரியர் இவ்வரலாற்றுப் படைப்பை இந்தப் புதிய நூற்றாண்டில் எழுத வேண்டிய தேவையும் அவசியமும் என்ன, அதன் மூலம் (உலகத்) தமிழர்களுக்கு எதனை வலியுறுத்த வருகின்றார் என்று பார்க்கும்போது தமிழினத்திடம் காணப்படும் பலவீனங்கள், சீர்கேடுகள், குறைபாடுகள், இழிகுணங்கள் போன்றவற்றால்தான் அன்றிலிருந்து இன்றுவரை அந்நியச் சக்திகளிடம் தோற்று, மண்டியிட்டு அடிமையாகிப் போகும் அவலநிலையை உணர்த்துவதற்காக இந்நாவலை எழுதியிருப்பாரோ என எண்ணத் தோன்றுகின்றது. தமிழர்களின் மத்தியில் ஒற்றுமையின்மை, விழிப்புணர்ச்சியின்மை, தூரநோக்குப் பார்வையின்மை, சுயநலப்போக்கு, இனவுணர்வும் சமுதாயவுணர்வும் அற்றுவிட்ட நிலை, காட்டிக்கொடுக்கும் இழிகுணம், பணத்திற்காக மாற்றாரிடம் கைக்கூலிகளாக இருந்து சொந்த இனத்தையே வஞ்சிக்கும் போக்கு, அடிமைப்புத்தி போன்ற செல்லரித்துப்போன குணங்களால்தான் தமிழினம் தன் நிலையில் தாழ்ந்து வீழ்ச்சி கண்டது. இவற்றின் விளைவுகளால்தான் தமிழ் மக்கள் பதினெடடாம் நூற்றாண்டு முதல் உலகின் பல நாடுகளுக்கும் கூலிப்பட்டாளங்களாகத் தாய்த் தமிழகத்தை விட்டு வெளியேறும் அவலநிலை ஏற்பட்டது. இக்குறைபாடுகள் இன்னும் தமிழினத்தில் புரையோடிப் போனநிலையில் காணப்படவே செய்கின்றது என்பது நாவலாசிரியரிரின் கருத்து. ஆக, இந்நாவலின் வழி தமிழர்கள் தங்களின் மத்தியில் காணப்படும் குறைகளைப் போக்கி, ஒற்றுமையுடன் வாழ்ந்தால்தான் இழந்த பழம்பெருமைகளை மீட்டு, பேரோடும் புகழோடும் இன்றைய நிலையில் வாழ முடியும் என்ற செய்தியினை மறைமுகமாக உணர்த்துகின்றார் நாவலாசிரியர். எனவே, இந்நாவல் கடந்த காலத்தைப்பற்றிப் பேசினாலும், நிகழ்காலத்திற்கும் தேவையான கருத்துகளையும் சிந்தனைகளையும் கொண்டுள்ள ஒரு கலைப்படைப்பாகவே அமைந்துள்ளது. ஆக, இனத்தின் மீது கொண்ட பற்றே நாவலாசிரியரை இந்நாவலைப் படைக்கத் தூண்டியுள்ளது எனலாம்.

பொதுவாக, தென்னிந்திய வரலாறு குறிப்பாகத் தமிழகத்தின், தமிழ் மக்களின் வரலாறு இதுநாள் வரையில் முழுமையாக எழுதப்படவில்லை என்பது வரலாற்றாசிரியர், இனப்பற்றார் பலரும் சொல்லிவரும் குற்றச்சாட்டு ஆகும். இதற்குக் காரணம் இந்திய வரலாற்றை எழுதியவர்கள் நீண்ட நெடுங்காலமாக வட இந்தியாவை மையமாகக் கொண்டு எழுதியதாலும் அவ்வாறு எழுதும்போது சமஸ்கிருத நூல்களின் துணைகொண்டு, ஆசிரியர்களின் மனநிலைக்கு ஏற்ப அந்நோக்கில் எழுதியதாகவும் அதனால், தென்னிந்திய / தமிழக வரலாறு சரியாகவும் முறையாகவும் எழுதும்நிலை இன்றுவரை ஏற்படவேயில்லை என்றும் கூறப்பட்டுகின்றது. இதனால் பல்வேறு சிறப்புகள் நிறைந்த தமிழகத்தின் வரலாறு இன்னும் முழுமையாக எழுதப்படவில்லை. இம்முயற்சியில் தமிழகத்தில் உள்ளவர்கள் மட்டும்தான் ஈடுபட வேண்டும் என்கிற

கட்டாயம் எதுவுமில்லை. பூமிப்பந்தில் எங்கேனும் வாழ்கிற இனஉணர்வுடைய எந்தத்தமிழனும் (அயலகத் தமிழனும்) இம்முயற்சியில் ஈடுபடலாம். வரலாற்று அறிவும் உண்மையான இன, சமுதாய ஈடுபாடும் இருக்கிற யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்பதற்கேற்ப இந்நாவலாசிரியரின் இந்நாவல் சரியானதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. எனவேதான் ஆங்கிலேயர் தமிழகத்தில் தங்களின் செல்வாக்கினைப் பரப்ப மேற்கொண்ட முயற்சியின்போது நிகழ்த்திய கொடுஞ்செயல்களையும் அவற்றால் ஏற்பட்ட தமிழர்களின் போராட்டங்களையும் பாதிப்புகளையும் முழுமையாகக் கதை இலக்கியத்தில் பதிவு செய்ய வேண்டும் எனும் அவருடைய நோக்கமே இந்நாவல் உருபெறக் காரணமாயிற்று. தவிர, இவர் வரலாற்றுத்துறையில் தோய்ந்த அறிவும் பரந்த அனுபவமும் உடையவர். இவர் நல்ல இலக்கியவாதி மட்டுமல்ல; சிறந்த வரலாற்று ஆசிரியரும் ஆவார். மலேசிய, தமிழக, உலக வரலாறுகளில் ஆழ்ந்த அறிவும் நல்ல பயிற்சியும் உள்ளவர். அதனால் ஏராளமான வரலாற்று ஆவணங்களைப் புரட்டிப்பார்த்து, தமக்குக் கிடைத்த உண்மைத் தகவல்களைத் திரட்டி இவ்வரலாற்று நாவலைச் சிறப்பாக உருவாக்கியுள்ளார். இவர் தமிழக வரலாற்றை வைத்து மட்டும் இந்நாவலை எழுதவில்லை. மாறாக, மலேசியச்சூழலில் தமிழ் மக்களின் வரலாற்றுத் தரவுகளை வைத்து ஏற்கெனவே அமுதசுரபிகள், அரிக்கேன் விளக்குகள் போன்ற வரலாற்றுப் பின்புலமுடைய நாவல்களையும் உருவாக்கியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. சொந்த இனத்தின் வரலாறு எழுதப்படாமல் போய்விடக் கூடாது எனும் இனம் சார்ந்த அக்கறையே இவரை இவ்வரலாற்று நாவல்களை எழுதியதற்கான முதன்மைக் காரணம் எனலாம். இறந்த காலத்தை எண்ணிப் பார்க்காதவன் நிகழ்காலத்தில் யதார்த்தத்தை உணர்ந்து எதிர்காலத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கான தகுதியை இழந்து விடுகின்றான் என்பர். (இராசகோபாலன்.தி., ப.40) தன் முன்னோர் எப்படி வாழ்ந்தனர் என்பதனைத் தெரிந்து கொள்ளும்போதுதான் தன்னுடைய வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது எனும் உண்மை புலப்பட்டுத் தன் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வு எவ்விதமாக அமைய வேண்டும் என்பதற்கு ஒரு தெளிவு ஏற்படும். எனவே, வரலாற்று நாவல் எழுதுவது நம்முடைய பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து கொள்வதற்கே ஆகும். இதன்வழி நம்முடைய பலவீனத்தைக் களையவும் பழம்பெருமைகளை மீட்டுருவாக்கம் செய்யவும் வரலாற்று நாவல்கள் துணைசெய்கின்றன. இந்நாவலாசிரியர் இந்நாவலை எழுதுவதற்கு இதுவும் ஒரு நோக்கமாகக் காணப்படுகின்றது. எனவே, இவ்வரலாற்று நாவலின் வாயிலாகக் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் தமிழ் இனத்தின் உண்மையான வரலாற்றைச் சரியாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## கதையின் தொடக்கமும் முடிவும்

நாவலாசிரியர் சிவகங்கையை மையமாகக் கொண்டு, சிவகங்கையின் வீழ்ச்சியான கி.பி.1801-லிருந்து கதையைத் தொடங்குகின்றார். அதற்கான காரணத்தைப் பார்க்கும்போது தென்னாட்டில் சிவகங்கையே இறுதியாகப் பிரிட்டிஷாரின் பிடிக்குள் வந்தது. தொடர்ந்து போராடி இறுதியாகத் தோல்வி கண்டவர்கள் மருது சகோதரர்கள் ஆவர். அதனால்தான் சிவகங்கையை மையமாகக் கொண்டு நாவலின் கதையை அங்கிருந்து நகர்த்துகின்றார் நாவலாசிரியர். இவ்வாறு அமையும் இக்கதை பதினைந்து வயதான இளவரசன் துரைசாமி பினாங்கிற்கு நாடு கடத்தப்படுவதற்காகத் தூத்துக்குடி தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதிலிருந்து தொடங்குகின்றது. இவ்வாறு தொடங்கி, படிப்படியாக வளர்க்கப்பட்டுள்ள கதை **102** அத்தியாயங்கள் வரை செல்லுகின்றது. இவற்றுள் அத்தியாம் **1** முதல் **12** வரையிலான கதையானது மருது சகோதரர் தோற்பது, அவர்களிருவரும்

தூக்கிலிடப்படுவது, அவர்களின் வாரிசான இளவரசன் துரைசாமி தூத்துக்குடி தடுப்புமுகாமில் சிறை வைக்கப்படுவது, இளவரசனைக் கள்ளத்தனமாக இரவு நேரத்தில் அவனுடைய ஆருயிர் நண்பன் மயிலழகன் என்பவன் வந்து சந்தித்து விட்டுப் போவது என விரிந்து செல்கிறது. அத்தியாயம் 12-இல் இளவரசன் துரைசாமி சிவகங்கையின் பழைய வரலாற்றை நினைவுகூர்ந்து பார்ப்பதாகப் பின்னோக்கில் கடந்தகாலக் கதை அதாவது அவர்களின் போராட்ட வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது. அத்தியாயம் 12-க்குப் பிறகும் கதை துரைசாமியின் விழிவழியாகவே நகர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு பின்னோக்கில் விரிந்து செல்லும் சிவகங்கையின் கதை அத்தியாயம் 101 வரை விரிந்து சென்றுள்ளது. பின்னோக்கில் சொல்லப்பட்டுள்ள கதையில் சிவகங்கை சமஸ்தானம் தோன்றிய வரலாறு, அதன் ஆட்சியாளர்கள், சிவகங்கை அரசில் ஏற்பட்ட உட்பூசல்கள், பிரிட்டிஷ் போன்ற ஆதிக்கசக்திகளின் ஊடுருவல்கள், சிவகங்கையோடு தோழமை கொண்டுள்ள பாளையங்கள், மருது சகோதரர்களின் போராட்டங்கள், பெரிய மருது மன்னராக்கப்படுதல், ராணி வேலுநாச்சியாரின் வீரச்செயல்கள், அரியணைக்காக நடந்தேறிய போராட்டங்கள், காட்டிக் கொடுத்த இனத்துரோகிகள், அவர்களின் காட்டிக் கொடுக்கும் படலங்கள், ஆதரவு சமஸ்தானங்களும் பாளையங்களும் பிரிட்டிஷாரால் அநியாயமுறையில் பறிக்கப்படுதல், இறுதியாக சிவங்கையின் வீழ்ச்சி, மருது சகோதரர்கள் தூக்கிலிடப்படுதல், துரைசாமி பினாங்கிற்கு நாடு கடத்தப்படுதல் என உண்மை வரலாறு சிறிதும் சுவை குன்றாலும் பரபரப்போடும் விறுவிறுப்போடும் சொல்லப்பட்டுள்ளன. இறுதி அத்தியாயமான 102-இல் துரைசாமியும் போராட்ட வீரர்களும் பினாங்கிற்குக் கொண்டு செல்லப்படுதல், அங்கு அவர்களின் தாய்நாட்டு ஏக்கம், பின்னர் ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குப்பின் நாடு திரும்புதல், திரும்பிய சில நாள்களிலேயே துரைசாமி இறத்தல் என வரலாற்று நிகழ்வுகள் காட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் கதாசிரியரின் நோக்கம் இளவரசன் துரைசாமியின் பினாங்கில் வாழ்ந்த வாழ்க்கையை விளக்குவது அல்ல; மாறாக, அவனுக்கு அவ்வாறு நேர்ந்ததற்கான காரணகாரியத்தையும் அக்கால அரசியல் நிலவரங்களையும் விளக்குவதே ஆகும்.

## இந்நாவலின் கதைமாந்தர்கள்

இவ்வரலாற்று நாவலில் மூவகையான மாந்தர்கள் காணப்படுகின்றனர். அவர்கள்:-

ஆ. உண்மை மாந்தர்கள் - இவர்கள் இன்றளவிலும் பரவலாகப் பலரால் உள்ளூர் அளவிலும் உலக அளவிலும் நன்கறியப்பட்டவர்கள் ஆவர். அவ்வகையில் மருது சகோதரர்கள், ராணி வேலுநாச்சியார், மன்னர் முத்துவடுக நாதர், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, ஹைதர் அலி, திப்பு சுல்தான், தீரன் சின்னமலை, ஆற்காடு நவாப், மருதநாயகம், பூலித்தேவன் போன்ற உள்ளூர்த் தலைவர்கள் மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ், கலெக்டர் ஜாக்ஸன், லூஷிங்டன் துரை, மேஜர் பானர்மென், பிரெஞ்சு ஜெனரல் டுப் ரே போன்ற ஐரோப்பியர்கள் உண்மையில் வாழ்ந்த மனிதர்கள் ஆவர். இவர்கள் இந்நாவலில் கதைமாந்தர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் வரலாற்றாசிரியராலும் பொதுமக்களாலும் நன்கறியப்பட்ட மனிதர்கள் ஆவர். இவர்களின் குணாதிசயங்கள் எல்லாராலுமு அறியப்பட்டுள்ள ஒன்று. எனவே இவர்களின் குணாதிசயங்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல், உள்ளபடியே காட்டும் வகையில் இவர்கள் படைக்கப்பட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆ. உண்மையான வரலாற்று மாந்தர்களாயிருப்பினும் அவர்கள் வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை. முதற்பிரிவினரான உண்மை மாந்தர்களின் பெற்றோர், கணவன்

/ மனைவி, பிள்ளைகள், வாரிசுகள், படைத்தலைவர்கள், அமைச்சர்கள், புலவர்கள் போன்றோர் வரலாற்றில் வாழ்ந்த உண்மை மாந்தர்தான். ஆனால், வரலாறு அவர்களின் பெயர்களை அவ்வளவாகச் சுட்டவில்லை அல்லது அறவே சுட்டப்படவில்லை எனலாம். அவ்வகையில் பெரிய மருதுவின் மனைவி ராக்காத்தாள், சின்ன மருதுவின் மனைவி வைரத்தாள், ராணி வேலுநாச்சியாரின் மருமகன் வெங்கண் பெரிய உடையணன், சிவகங்கை அரியணைக்கு உரிமை கொண்டாடிய படமாத்தூர் கௌரி வல்லப உடையணத் தேவர், அரண்மனைப் புலவர் முத்துவேலு கவிராயர் போன்றோரும் உண்மையில் வாழ்ந்த மாந்தர்களே. இருப்பினும், இவர்கள் வரலாற்றில் அவ்வளவாக அல்லது அறவே குறிப்பிடாதவர்களாக உள்ளனர். இவர்கள் தங்களின் பாத்திர இயற்பிற்கேற்ப இந்நாவலில் வந்து போகின்றனர்.

இ. முற்றிலும் கற்பனை மாந்தர்கள் ஆவர். இவர்கள் முழுக்க முழுக்கக் கற்பனையாகப் படைக்கப்பட்ட மாந்தர்கள் ஆவர். வெறும் உண்மை மாந்தர்களை மட்டும் கொண்டு ஒரு வரலாற்று நாவலை எழுதிவிட முடியாது. அப்படி எழுத முற்பட்டால், அது வெறும் வரலாற்று நூலாகவே அமைந்துவிடும். அதனால், அதில் கதைச்சுவையும், இலக்கியச்சுவையும் இல்லாமல் போய்விடும். கதைச்சுவைக்கும் கதையின் தடையில்லா ஓட்டத்திற்கும் இலக்கிய நயத்திற்கும் கற்பனை மாந்தர்கள் தேவைப்படுகின்றனர். வரலாற்று மாந்தர்களோடு கற்பனைமாந்தர்களும் கலந்து படைக்கப்பட்டு அவர்கள் உண்மை மாந்தர்களோடு கொள்ளும் தொடர்புகளும் கலநதுகொள்ளும் நிகழ்ச்சிகளும் ஒரு படைப்பிற்கு வரலாறு சார்ந்த தகுதிப்பாட்டையும் கதை இலக்கியம் எனும் அந்தஸ்தையும் கொடுக்கின்றது. வரலாற்று நாவலில் உலாவரும் கற்பனைமாந்தர்கள் வெறும் கதையோட்டத்திற்கு உதவுவது மட்டுமல்லாமல், கதாசிரியர் காட்டவிரும்பும் வரலாற்றுக் காலத்த உள்ளவாறே முழுமையாக உருவாக்கி, வெளிப்படுத்திக் காட்டுவதற்கு உதவும் கருவிகளாகவும் திகழுதல் வேண்டும். இதன் அடிப்படையிலேயே இந்நாவலாசிரியரும் படைப்பில் கற்பனையாகப் பல மாந்தர்களைப் படைத்து உலவ விட்டுள்ளார். இவர்கள் கதை எழுந்த வரலாற்றுக் காலத்தின் சகல பண்புகளும் பெற்று விளங்கும் வகையிலும் படைக்கப்பட்டுள்ளனர். இதன்வழி இக்கற்பனை மாந்தர்கள் அந்தக் காலத்திற்கேயுரியவர்களாகப் பொருந்திக் காணப்படுகின்றனர். தவிர, உண்மையில் வாழ்ந்த மாந்தர்கள் இயங்குவதற்கும் செயற்படுவதற்கும் ஏற்ற நிலையில் பொருத்தமாக நாவலில் இக்கற்பனை மாந்தர்கள் உள்ளனர். அவ்வகையில் தளபதி வேலப்பன், அவர் மகன் மயிலழகன், ரத்தின வியாபாரி சொக்கநாதர், அவர் மகள் கயல்விழி, கயல்விழியின் அத்தை சுபத்ரா, ஒற்றன் கஜராஜன், கருத்தான், பொற்கொல்ர வேலாயுதம், அவர் புதல்வன் சண்முகவேல், பரமானந்த அடிகளார் போன்றோர் கற்பனைப் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டு கதை இயல்பாக இயங்குவதற்குப் பெரிதும் உதவுகின்றவர்களாக உள்ளனர்.

## நாவலின் மொழிநடை

ஒரு படைப்பின் வெற்றிக்கு அடிப்படையான கூறுகளுள் மொழிநடையும் ஒன்று. அதிலும் வரலாற்று நாவலின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றுவது கதாசிரியர் கையாண்டுள்ள மொழிநடையே ஆகும். இன்றைய நிலையில் சமூக நாவல்களில் கையாளப்படும் மொழிநடை மிகுதியும் வட்டாரப் பண்பினைக் கொண்ட மொழிநடையும் தலித்திய மொழிநடையும் ஆகும். ஆனால், இவை வரலாற்று நாவல்களுக்கும் வரலாற்று நாயகர்களுக்கும் பொருந்தா. ஏனெனில் அரண்மனையை ஒட்டிய பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், நடைமுறை, செயல்பாடு ஆகியன மிக உயர்வாகவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் மதிப்பாகவும் பார்க்கப்படும் நிலை உள்ளதால், உயர்நிலையான

இலக்கிய நடையே வரலாற்று நாவல்களில் மொழிநடையாகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழில் வரலாற்று நாவல் எழுதிய நாவலாசிரியர்களுள் பலரும் மேற்குறித்த மொழிநடையையே பயன்படுத்தியுள்ளனர். இந்நாவலாசிரியரும் அதன் அடியொற்றியே இலக்கிய நடையையே சிறப்பாகக் கையாண்டுள்ளார். எனினும், அந்நடை தமிழறிந்த அனைவரும் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான சொல், சொற்றொடர் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளார். இந்நடை படிப்போரைக் கவரும் தன்மைகொண்ட பண்பட்ட நடை எனில் மிகையில்லை. கதைமாந்தர்களின் உணர்வுநிலைகளை வாசகர்களும் புரிந்து அவ்வுணர்வுகளை அடையும் அளவிற்குத் தம் ஆற்றொழுக்கான நடையால் நாவலாசிரியர் வாசகர்களைக் கவர்ந்து விடுகின்றார்.

நாவலின் சில இடங்களில் கதைமாந்தர்கள் தம் கோபவுணர்ச்சிகளைக் காட்டும் இடங்களில் கதாசிரியர் தம்மையுமறியாமல் அங்கு வெளிப்பட்டு விடுகின்றார். அவ்வகையில் கதாசிரியர் தம் கோபத்தைக் கதைமாந்தர்களின் மீது ஏற்றிக்காட்டி நிற்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

*‘‘தமிழ் மன்னர்களுக்கிடையே ஒற்றுமை இல்லாததையும் காழ்ப்புணர்ச்சியையும் பிரிட்டிஷார் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்களே எனும் எண்ணம் ஏற்பட்ட போது தமிழன் எனும் ரீதியில் துப்பாஷ் பெரியசாமிப்பிள்ளை நெஞ்சில் ரத்தம் வடிந்தது. அப்போது அவர் மனம் பிரிட்டிஷாரைத் திட்டவில்லை. அருகில் இருந்தே குழிபறிக்கும் இனத்துரோகிகளைச் சாட்டையால் அடிக்க வேண்டும் போலிருந்தது அவருக்கு.’’ (சந்திரகாந்தம்.ப., ப.167)*

இவ்விடத்தில் துப்பாஷ் பெரியசாமிப்பிள்ளை நம் கண்களுக்குத் தென்படவில்லை. மாறாக, கதாசிரியர்தான் அவர் உருவில் நம் கண்களுக்குத் தென்படுகின்றார். பிறிதோர் இடத்தில்,

*‘‘அண்ணா, படமாத்தூர் கௌரி வல்லபர் ஏதோ ஒரு சதித்திட்டத்தில் ஈடுபடுகிறார். நாம் சந்தேகித்து சரியாகத்தான் இருக்கிறது. நம்மை அழிக்க அந்நியர் காலடியை நக்கிக் கொண்டிருக்கிறார்... என்ற சின்ன மருது இடுப்பில் தொங்கிய உடைவாளைத் தொட்டுப்பார்த்துக் கொண்டார்.’’ (சந்திரகாந்தம்.ப., ப.ப.176 - 168)*

என்று கூறும்போதும் கதாசிரியரின் கோபத்தையும் அதே வேளையில் அவருடைய இன, மான உணர்வையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

## முடிவுரை

தமிழில் வரலாற்று நாவல்கள் என்ற பெயரில் பல ராஜாராணிக் கதைகள் வெளிவந்துள்ளதாகவும் அவற்றுள் ஆய்வாளர்களால் வரலாற்று நாவல்களாக ஏற்கப்பட்டவை ஏறத்தாழ **250** தான் என்றும் இவற்றுள் மிகுதியானவை அற்புத வரலாற்று நாவல்களும் (Historcial Romances) அரை வரலாற்று நாவல்களும் (Semi Historical Novels) கணிசமானவை என்றும் குறிப்பிடுவர் ஆய்வாளர். *(இராசகோபாலன்.தி., ப.1)* ஆனால் இந்நாவல் உண்மையிலேயே வரலாற்று நாவல் (Historcial Novels) எனும் தகுதியை அடைந்துள்ளது. அந்த அளவிற்கு இப்படைப்பில் வரலாற்றுச் செய்திகளைச் சரியாகவும் துல்லிதமாகவும் நாவலாசிரியர் தந்துள்ளார். உண்மை வரலாற்றுச் செய்திகளுக்கு ஏற்ப நேர்த்தியாக ஒரு கதையையும் உருவாக்கி, அதனை உண்மையின் அடிப்படையில் அற்புதநவிற்சி இல்லாமல் தந்திருக்கும் நாவலாசிரியரின் நேர்த்தியான முயற்சி சிறப்பிற்கும் பாராட்டுக்கும் உரியது.

## Bibliography

Rajagopalan, T. (1993). *Varalâ__u Navalka7il Varala__uc Ceytika7.* Chennai: PR Litto Graphic.
Puvannan. (1988). *KalkiyiI Varalâ__u Nâvalka7*. Chennai: Vanathi Publication.
Chandragantham, P. (2008). *Â7appi_anta Marutu MaintaI*. Chennai: New Century Book House.
Sandhu, K.,S. (1966). *Tami and Other Indian Convicts in the Straits Settlement*. An unpublished article presented in First International Tamil Research Conference.